

# மக்கள் ஆட்சி

ஆசிரியர்

க. சந்தானம்

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு — அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—148

# மக்கள் ஆட்சி

(ஆங்கில, அமெரிக்க, பாரத அரசியல் முறைகளின்
விமர்சனம்)

ஆசிரியர்
க. சந்தானம்

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—April 1967

B.T.P. No. 148

© Bureau of Tamil Publications

**DEMOCRACY**

K. SANTHANAM

**Price Rs. 4-25**

PRINTED BY
KUMARAN PRESS,
MADRAS-1.

# அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வியமைச்சர்)

தமிழ்நாடு அரசாங்கம், சில ஆண்டுகளுக்கு முன்னர்க் கல்லூரித் தமிழ்க் குழுவொன்றை நிறுவி அதன்மூலம் கல்லூரி மாணவர்கட்குத் தேவையான பல தமிழ் நூல்களை வெளியிட்டு வந்தது. தமிழை ஆட்சி மொழியாக அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பிறகு, தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடுகின்ற முறையில், இன்னும் மகத்தான அளவில் தமிழ் நூல்கள் வெளிவரவேண்டும் என்ற கருத்தில் தமிழ் வெளியீட்டுக் கழகம் 1962-ல் நிறுவப்பெற்றது.

உலகின் பிற பகுதிகளிலுள்ள மக்களின் அறிவு வளர்ச்சிக்குக் குறையாமல் தமிழ் மக்களும் அறிவு வளர்ச்சி பெறவேண்டுமானால். பிற மொழியிலுள்ள நூல்களைப் படிக்க முடியாதவர்கள் தமிழின் மூலமே எல்லாவற்றையும் கற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும். இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே தமிழ் வெளியீட்டுக் கழகம் கல்லூரி மாணவர்க்குரிய நூல்களை வெளியிடுவதுடன், பொதுமக்களுக்கும் பயன்படுகின்ற முறையில் வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், விஞ்ஞானக் கலைகள் ஆகிய பல துறைகளிலும் பல்வேறு நூல்களை வெளியிட முனைந்துள்ளது.

அத்தகைய முயற்சிகளுள் ஒன்றாக 'மக்கள் ஆட்சி' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 148ஆவது வெளியீடாக வருகிறது.

கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து, இதுவரை 183 நூல்கள் தமிழ் வெளியீட்டுக் கழகத்தால் வெளியிடப்பெற்றுள்ளன. இந் நூல்களை வாங்கிப் படிப்பதன்மூலம் தமிழ் மக்கள் மேலும் வளர்ச்சி பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

**இரா. நெடுஞ்செழியன்**

# முன்னுரை

'ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன' என்றதோர் பழமொழி தமிழில் உள்ளது. அரசாங்கங்களின் அக்கிரமத்தால் வெறுப்படைந்து, அதைத் தடுப்பதற்குப் பிரஜை களுக்கு வல்லமையோ, உரிமையோ இல்லை என்ற மனமுடைந்த ஒருவர் இதைப் பிறப்பித்திருக்கவேண்டும். இது இக்காலத்திற்குத் தகுந்ததன்று. முக்கியமாக மக்கள் ஆட்சிக்குச் சிறிதும் பொருந்தாது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் நமது குடும்ப விவகாரங்கள்—ஏன் உணவு, உடை கூட—பெரிதும் பாதிக்கப்படு கின்றன. அக்கிரமமான அரசாங்கத்தை மாற்ற ஜனநாயகத்தில் நேரடியான வழியுண்டு.

பாரத மக்கள் அனைவரும் அரசியலில் பங்கெடுத்துக்கொள்ள நமது அரசியல் திட்டம் முறை வகுத்திருக்கிறது, ஆனால், ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை வாக்களித்துவிட்டால்மட்டும் போதாது. அரசியல் முறைகளை நமது சடங்குகள்போல் பாவித் தால் அவற்றின் பலன்கள் கிட்டமாட்டா. அரசியல் தத்துவங்க ளோடு சேர்த்து, சட்டங்கள், முறைகளை உணரும்பொழுதே ஜனநாயகம் பயன்படும்.

கல்லூரி மாணவர்கள், அரசியல்வாதிகள், முடிவில் மக்கள் அனைவரும் நமது அரசியல் பிரச்சினைகளைப்பற்றிச் சிந்திக்க உதவ வேண்டுமென்ற கருத்துடன் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. நமது அரசியல் திட்டத்தை அதற்கு மூலாதாரமான பிரிட்டிஷ், அமெரிக்க அரசியல்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதே இதற்கு நல்ல வழியாகும். பாரத ஜனநாயகமும் அவ்விரண்டு சிறந்த மக்கள் ஆட்சிகள்போல் நிலைபெற்று விளங்கவேண்டுமென்று எல்லா பாரத தேசபக்தர்களும் விரும்புகின்றனர். அவர்களுக்கு இந்நூல் சிறிது உதவுமென்று நினைக்கிறேன்.

இவ்வித நூல்கள் கல்லூரிகள், சர்வகலாசாலைகளில் பணி புரியும் ஆசிரியர்களால் எழுதப்படவேண்டியவை. அதற்கு வேண்டிய சாவகாசமும், நூல்நிலையமும், மற்ற வசதிகளும் அவர் களுக்கு எளிதில் கிடைக்கும். தமிழ் வெளியீட்டுக் கழகத்தார் என்னை ஒரு நூல் எழுதக் கேட்டபொழுது இவ்வசதிகள் இல்லாமை யால் சற்றுத் தயங்கினேன். இந்நூலைத் தொடங்கியபின் வேறு பல அலுவல்கள் குறுக்கிட்டு முடிப்பதற்குத் தாமதமாயிற்று.

அரசியலைப் பெரும்பாலும் அனுபவத்தாலுணர்ந்து அதன் பின் அதன் கொள்கைகள், முறைகள், சூட்சமங்களை நூல்கள் வாயிலாக ஓரளவு கற்றதனுல், புதிய மாணவர்களுக்கும், மற்றவர் களுக்கும் எனது நடைமுறை எளிதாகவிருக்குமென்ற நம்பிக்கை யுடன் இதைத் தமிழ்நாட்டுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

க. சந்தானம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் ... ... ... | 1 |
| 2. | சரித்திர பீடிகை ... ... ... | 11 |
| 3. | ஆட்சி உரிமை ... ... ... | 25 |
| 4. | அற வேர்கள் ... ... ... | 34 |
| 5. | அதிகாரப் பிரிவினை ... ... ... | 46 |
| 6. | ஜனாதிபதி ... ... ... | 52 |
| 7. | மத்திய சட்டமன்றங்கள் ... ... | 64 |
| 8. | சட்டமன்றங்களின் நிர்வாகம், நியமங்கள், சிறப்புரிமைகள் ... ... ... | 74 |
| 9. | சட்டம் இயற்றுதல் ... ... ... | 80 |
| 10. | சட்டமன்றங்களும் படை விவகாரங்களும் ... | 85 |
| 11, | சட்டமன்றங்களின் கமிட்டிகள் ... ... | 92 |
| 12. | சட்டமன்றங்களின் இதர பணிகள் ... | 98 |
| 13. | இரு நிர்வாக முறைகள் ... ... | 103 |
| 14. | நிர்வாக இயந்திரம் ... ... ... | 113 |
| 15. | அரசாங்க ஊழியர்கள் .. ... ... | 118 |
| 16. | தேசியப் பாதுகாப்பு ... ... ... | 127 |
| 17. | நீதி பரிபாலனம் ... ... ... | 131 |
| 18. | நியாயாலயங்கள் ... ... ... | 136 |
| 19. | ஐக்கிய அரசியல் ... ... ... | 143 |
| 20. | ஐக்கிய இராஜ்ய அதிகாரப் பிரிவினை ... | 148 |
| 21. | வரி, நிதி விபாகம் ... ... ... | 159 |
| 22. | இராச்சியங்கள் ... ... ... | 166 |
| 23. | ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள் ... ... | 171 |
| 24. | பொருளாதாரம் ... ... ... | 179 |
| 25. | கல்வி ... ... ... ... | 191 |
| 26. | சுகாதாரம், வைத்தியம் ... ... | 198 |
| 27. | சமூகப் பாதுகாப்பு ... ... ... | 205 |
| 28. | அரசியல் கட்சிகள் ... ... ... | 212 |
| 29. | தேர்தல் ... ... ... ... | 222 |
| 30. | ஒற்றுமை வேற்றுமைகள் ... ... | 235 |
| | கலைச்சொற்கள் ... ... ... | 240 |
| | பொருள் குறிப்பு அகராதி ... ... | 244 |

# 1. அறிமுகம்

அரசாங்கம் எப்பொழுது தோன்றிற்று, எங்கே ஆரம்பமாயிற்று, எவ்வாறு உதித்தது என்ற கேள்விகளுக்குச் சரியான விடை கூறுவதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. இன்றும் சிற்சில காடுகளிலும் மலைப்பிரதேசங்களிலும் வாழும் ஆதிமனித சமூகங்களைப்பற்றிய ஆராய்ச்சிகளிலிருந்து சிறிதளவு ஊகிக்கலாம். ஆனால், இந் நூலுக்கு அது அவசியமில்லை. பல குடும்பங்களடங்கிய சமூகமாக மனிதன் வாழத் தொடங்கிய காலத்திலிருந்தே அரசாங்கம் அவசியமாயிற்றென்பதை எவரும் மறுக்க முடியாது. போரினாலும், வல்லரசுகளின் கொடுமையாலும் மறைந்த ஆதிமனித ஜாதிகள் பல. மற்றும் நல்ல ஆட்சியின்றிச் சிதறி நசித்துவிட்டன.

இப் புவியில் பல பாகங்களில் மனித சமூகம் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ச்சிபெற்று வந்திருக்கின்றது. ஆதலால், எவ்வித ஆட்சி முறையும் ஏதேனுமோரிடத்தில், எப்பொழுதாவது வழக்கிலிருக்கும். சமூகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவன், பரம்பரையான அரச வம்சங்கள், ராணுவ பலத்தைக்கொண்ட எதேச்சாதிகாரி இவர்கள் மூலமே பெரும்பாலான சமூகங்கள் பண்டைக் காலங்களில் ஆளப்பட்டிருக்கின்றன. ஆயினும் பிரபுக்களின் குழுக்கள் மூலமாகவும், பொதுமக்கள் நேரடியாகவும் பிரதிநிதிகள் மூலமாகவும் நடைபெற்ற அரசியல் முறைகளையும் சரித்திரங்களில் காண்கிறோம். வியாபாரத்தால் பெரும்பாலும் வாழுமிடங்களில் பணக்காரர்களின் ஆதிக்கங்களும் ஓங்கியிருந்திருக்கின்றன. ஆதலின், இதுவரையில்லாத முற்றிலும் புதியதோர் அரசியல் முறையைத் தோற்றுவிப்பது சாத்தியமன்று.

ஒரு சமூகத்தின் சம்பிரதாயம், மதம், பொருளாதாரம் முதலியவற்றைத் தழுவியே அரசியல் முறையும் இருக்குமென்பது திண்ணம். ஆடுமாடுகளையே செல்வமாகக் கொண்டு ஊரூராகத் திரிந்து வாழும் கூட்டங்களுக்கு அதிகக் கட்டுப்பாடமைந்த

அரசாங்கம் பொருந்தாது. கடுமையான நிபந்தனைகள் விதித்தால் கலைந்துபோய்விடும். அதற்கு மாருக, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதேசங்களில், நில உரிமைகள், விவசாயத்திற்கு அவசியமான மாடு முதலிய சொத்துகள் முதலியவற்றைப்பற்றி விரிவான சட்டதிட்டங்களும், அவற்றை அமல் செய்வதற்கு வேண்டிய வரி விகிதங்களும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் அத்தியாவசியமாகும். வியாபாரம் ஓங்கியிருக்கும் நாடுகளில் நாணயச் செலாவணியும், அளவுகளின் கட்டுப்பாடுகளும், ஒப்பந்தம், கடன் முதலியவற்றின் சட்டங்களும் முக்கியத்துவம் பெற்றிருக்கும்.

மேலும் பண்டைச் சமூகங்களில், சமூகத்தில் மதம், பொருளாதாரம், அரசியல், கலாசாரம் அனைத்தும் ஒன்றுசேர்த்து ஒரே அதிகாரத்திற்குட்பட்டிருந்தன. பெரும்பாலும் அரசனே மத குருவாகவும் இருந்தான். பாரதத்தைப்போல் சமய குருக்களும், அரச வம்சத்தினரும் வெவ்வேறு வலுவான பரம்பரையான ஜாதிகளாகவிருந்த நாடுகளில்மட்டுமே மதமும் அரசியலும் வேறுபட்ட அதிகாரங்களுக்குட்பட்டிருந்தன.

கிரீஸ், ரோம் முதலியவிடங்களில் தோன்றிய ஜனநாயகங்களிலும் இதே சர்வாதிகார ஆட்சி நடைபெற்றது. தங்கள் நகரிலுள்ள வாலிபர்களைப் பரம்பரையான மதக் கோட்பாடுகளிலிருந்து பிறழச் செய்வதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ஏதென்ஸ் மகாஜனக் கூட்டத்தால் சாகரதர் மரண தண்டனை விதிக்கப்பட்டு விஷமருந்தி மாண்டார்.

பழங்கால மக்கள் ஆட்சிகளின் முக்கிய அம்சங்களாவன: ராஜ்யத்தின் விஸ்தீர்ணம் ஒரு நகரமாகவோ அல்லது சிறிய பிரதேசமாகவோ இருந்தது, அரசியலில் பங்கெடுத்துக்கொள்ள குறிப்பிட்ட குடும்பத்தினருக்கே உரிமையிருந்தது; பெண்களுக்கு அரசியலில் பங்கில்லை; அரசாளும் குடிமக்களுக்கு விவசாயமும் இதர தொண்டுகளும் செய்யப் பல அடிமைகளோ பண்ணையாட்களோ இருந்தனர்; உரிமையுள்ள குடிமக்கள் பொதுக்கூட்டம் கூடி எல்லா முக்கிய அரசாங்க முடிவுகளையும் நேரிடையாகச் செய்தனர்; ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்குத் தனியாக ஊதியம் பெறும் சைனியமிருக்கவில்லை; வயதுவந்த குடிமக்கள் அனைவரும் ஆயுதம் தாங்கிக் காவல்புரியக் கடமைப்பட்டிருந்தனர். பணத்திமிரினாலோ, குடிமக்களின் சோம்பலாலோ ஒரு நிரந்தரமான சைனியம் ஏற்பட்டபொழுது, எதேச்சாதிகாரிகள் தோன்றி ஜனநாயகத்தைக் கவிழ்த்து சாம்ராஜ்யமாகச் செய்தனர். ரோமாபுரியின் சரித்திரமே இதற்குப் போதிய சான்றாகும்.

உலகப் பெரு மதங்கள் தோன்றி வளர்ந்த கால முதற்கொண்டு மதத்திற்கும் அரசியலுக்கும் பிணக்கு உண்டாயிற்று. புத்த, கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்களின் போக்குகள் வெவ்வேருகவும். கவர்ச்சிகரமாகவும் இருந்தன.

புத்த மதம் அறவழி யொன்றையே போதித்ததால், அது சீன, ஜப்பான், திபெத், இலங்கை முதலிய நாடுகளில் பெருவாரியாகப் பரவியபோதிலும் அங்குள்ள அரசாங்கங்களுக்கும், மக்களுக்கும் எவ்விதத் தொல்லேயும் கொடுக்கவில்லை. ஒரே குடும்பத்தில் சிலர் புத்த மதத்தையும், மற்றவர்கள் தங்கள் பரம்பரையான சமயத்தை யும் தழுவி வாழ்வதில் எவ்விதக் கஷ்டமுமில்லை. பலர் தங்கள் பூர்வீக மதங்களோடு, புத்தர் போதனைகளையும் ஏற்றுக்கொண் டனர். புத்த பிட்சுக்கள் பழைய சமயங்களைக் கண்டித்தோ அவற்றை விட்டாலொழிய நல்வழி இல்லை என்றோ பிரசாரம் செய்ய வில்லை.

கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்கள் இதற்கு முற்றிலும் மாறுபட்டன. ஏசு கிறிஸ்துவும் மகம்மது நபிகளும் தெய்வத்தின் தனி தூதர் களென்றும், பைபிள், கொரான் நூல்களே உண்மைத் தத்துவங் களைப் போதிக்கின்றனவென்றும், இந்த உண்மைகளையும், தத்துவங்களையும் ஏற்காதவர்கள் நரகத்தில் வீழ்வார்கள் என்றும் அம் மதங்கள் போதித்தன. தங்கள் மதத்திற்குப் புறம்பானவர் களுக்கு நற்கதி கிடையாததால் அவர்களைத் தம் மதத்தில் சேர்த்துக் கொள்வதற்கு முயல்வது தமது கடமையென்று கிறிஸ்தவர், முகம் மதிய மத குருக்கள் நம்பினர். அவ்வாறே பிரசாரம் செய்ய எல்லா நாடுகளுக்கும் பிரசார கோஷ்டிகளை அனுப்பினர்.

கிறிஸ்தவ மதம் பாலஸ்தீனில் பிறந்தபோதிலும், அது ஐரோப் பாவிலேயே வேரூன்றி வளர்ந்தது. முதலில் ரோமாபுரியின் சக்கர வர்த்திகள் அதை நசுக்கிவிடுவதற்காகக் கொடிய முறைகளைக் கையாண்டனர்; ஆனால், பாமர மக்களிடையே கிறிஸ்தவ மதம் பரவி, மத வெறி பிடித்தவர்கள் எவ்விதத் தண்டனையையும் பொருட் படுத்தாமல் அதைப் பரப்பினர். முடிவில் கான்ஸ்டன்டைன் என்ற சக்கரவர்த்தி கிறிஸ்தவ மதத்தைத் தனது ராஜ்ய மதமாக ஏற்றுக் கொண்டு, அரசியல் அதிகாரத்தைக்கொண்டு தனது சாம்ராஜ்யம் முழுதும் அதை நிலைநாட்டினர். கிறிஸ்தவ மத குருக்களும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள பழைய மதங்களை அழிக்கத் தீவிர முயற்சி செய்து, பலாத்காரத்தை உபயோகிக்கத் தயங்கவில்லை. அந்த நாடுகளிலுள்ள பழைய மதங்களும் உயர்ந்த தத்துவங்கள் பொதிந்து மக்களின் பக்திக்கு ஏற்றவையாக இருக்கவில்லை

ஆதலால், ஐரோப்பா முழுதும் கிறிஸ்துவமயமாயிற்று. ஐரோப்பியர்கள் குடியேறிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய பிரதேசங்களிலும் அம் மதமே ஊர்ஜிதமாயிற்று.

ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் கிறிஸ்தவ மதப் பிரசாரகர்கள் உலகெங்கும் பரவி ஆங்காங்கு பள்ளிகளையும் ஆஸ்பத்திரிகளையும் நிறுவி மக்களிடம் தம் மதத்தைப் பரப்ப முயன்றனர். எந்த நாடுகளில் ஐரோப்பிய சாம்ராஜ்யங்கள் ஆக்கிரமித்து அரசாண்டனவோ, அங்கெல்லாம் அரசியல் அதிகாரமும் மதப் பிரசாரத்திற்கு உதவி புரிந்தது. ஆதலால், எல்லா நாடுகளிலும் கிறிஸ்தவ சமூகங்கள் ஏற்பட்டன. ஆயினும், இஸ்லாம், புத்த, இந்து மதங்கள் நிலைபெற்றிருந்த நாடுகளில் பெருவாரியாகப் பரவவில்லை.

ஆரம்பத்தில் இஸ்லாம் மதத்தின் செல்வாக்கும், போக்கும் மிகுந்திருந்தன. அரசியலும், மதமும் ஒன்றுகவே பிணைக்கப்பட்டு எல்லா முஸ்லீம் மக்களும், அரசர்களும் மத்திய கிலாபாத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தனர். முதலில் ஐரோப்பாவிலிருந்த கேந்திரஸ்தலம், பின்னர் துருக்கிக்குப் போய்ச் சேர்ந்தது. முதல் உலக மகா யுத்தத்திற்குப் பின் இது மறைந்தது.

ஆனுல், இஸ்லாம் தோன்றி இரண்டு மூன்று நூற்ருண்டுகளுக்குப் பின்னர் முஸ்லீம் அரசர்கள் காலிபாவின் அரசியல் அதிகாரத்தை நிராகரித்து சுதந்திர மன்னர்களாயினர்.

போப்பாண்டவரின் தர்மாதிகாரம் நீண்டகாலம் நிலைபெற்றிருந்தது. அவருடைய சர்வாதிகாரத்தை எதிர்த்து பிராடஸ்டெண்ட் கூட்டத்தினர் தோன்றி மனிதனின் மனச்சாட்சிக்கும் கடவுளின் கட்டளைகள் அடங்கிய கிறிஸ்தவ வேதத்திற்கும் நடுவில் எம் மனிதனும் உலக குருவாக உரிமையில்லையென்று பறைசாற்றித் தமது சமயங்களைப் பல நாடுகளில் நிலைநாட்டினர். போப்பின் அதிகாரத்திற்குட்பட்ட ரோமன் கத்தோலிக் ஸ்தாபனங்கள் ஏராளமான சொத்துகளைச் சம்பாதித்து வரி கொடுக்க மறுத்ததால், பல மன்னர்கள் புதிய சமயங்களை ஏற்றுத் தம்மை விடுவித்துக்கொண்டனர்.

அவ்வாறே இஸ்லாம் மதத்திலும் சுன்னி, ஷியா என்ற பிரிவுகள் தோன்றி அதன் ஒற்றுமையைக் குலைத்து வேகத்தையும் குறைத்தன.

இம் மதங்கள் சார்பிலும் அவற்றின் பிளவு சமயங்களுக்குள்ளும் நடைபெற்ற போர்களுக்கும் கொடுமைகளுக்கும் எல்லை

யில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்பாவில் விஞ்ஞானம் வளர்ந்து அமெரிக்க ஃபிரெஞ்சு அரசியல் புரட்சிகள் வெற்றிபெற்ற பின்னரே மதக் கொடுமைகள் குறைந்து, எம் மனித னுக்கும் தனக்குவந்த மதத்தைத் தழுவி அதன்படி கடவுளை வழி பட உரிமையுண்டு என்ற பழைய இந்து மதக் கொள்கை பரவி யது. அது இன்று எல்லா நாடுகளிலும் முற்றிலும் ஏற்படவில்லை. ஆனால், மதவேற்றுமைகளின் காரணமாகப் போருக்கும் கொடுமை களுக்கும் இக்காலத்திய சூழ்நிலையில் இடமில்லை.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் விஞ்ஞானம் வளர்ந்து நீராவி, மண்ணெண்ணெய், மின்சாரம் முதலிய இயற்கை சக்திகளால் இயங்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டன. அதன் பலனாக மனிதனின் உற்பத்தி சக்தி திடீரென்று பன்முறை பெரு கிற்று. நூல் நூற்கும் ஆலைகளில், ஒவ்வோர் விசைக்கதிரும் இருபது முப்பது கைராட்டையில் நூற்கும் நூலைக் கொடுத்தது. அவ்வாறே இயந்திர நெசவில் ஒவ்வோர் தறியும் பத்துப் பதி னைந்து நெசவாளிகள் கைத்தறிகளில் நெய்யும் துணியைத் தயா ரித்தது. எல்லாத் துறைகளிலும் புதிய யந்திரங்கள் ஏராளமான சாமான்களை உற்பத்தி செய்து வியாபாரம் பன்முறை பெருகு வதற்கு வழியுண்டாயிற்று. இந்தச் சாமான்களையும், மக்களையும் ஏற்றிச் செல்லும் வாகனங்களும் புரட்சிகரமாக மாறின. ரயில், நீராவிக் கப்பல்கள், மோட்டார், ஆகாயவிமானம் முதலிய சாத னங்கள், பழைய மாட்டு வண்டிகள், குதிரை வாகனங்களைவிடப் பன்மடங்கு துரிதமாகவும், ஏராளமான சாமான்களையும் ஆசாமி களையும் ஒரே காலத்தில் வெகு தூரத்திற்கு ஏற்றிச் செல்லலாயின. தபால், தந்தி, டெலிபோன் முதலிய சாதனங்களின்மூலம் தூரத்தி லுள்ள இடங்களுக்குள் வியாபாரத்திற்கும், மற்றப் பணிகளுக்கும் செய்திகள் பரிமாற்றம் விரைவாகவும் சுலபமாகவும் சாத்தியமாயின.

இந்த யந்திரங்களின் மூலம் விவசாயத்திலும் பெரு மாறுதல் கள் ஏற்பட்டன. உழுவதற்கும், அறுவடை செய்வதற்கும் திறமை யான யந்திரங்கள் தோன்றின. நிலங்களின் செழிப்பை அதிகரித்து மாசூல்களை விருத்தி செய்வதற்கு விஞ்ஞான ஆராய்ச்சி செய்யப் பட்டு, பலவித ரசாயன உரங்கள் தயாராயின. இக் காலத்தில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஜனத்தொகை தீவிரமாக அதி கரித்து வந்ததற்கு இந்த விவசாயப் பெருக்கு மிகவும் உதவிற்று. ஆயினும், பண்டங்கள் உற்பத்தியைப்போல் விவசாயம் முற்றிலும் யந்திரமயமாகிவிடவில்லை. பல ஐரோப்பிய நாடுகளில் சிறு குடியான வர்கள் சமீப காலம் வரை பழைய கலப்பைகளையும், குதிரைகளையும், மாடுகளையும் கொண்டே விவசாயத்தை நடத்தி வந்தனர்.

இவ்விதம் ஜனத்தொகையும், தொழிலும், செல்வமும் பெருகவே, அரசாங்கத்தின் பணிகளும் பெருகி வளர்ந்தன. பெரிய பிரதேசங்களை ஒரு கேந்திரத்திலிருந்து அரசாளுவதும் சுலபமாயிற்று. யந்திரங்களின் உபயோகத்தைக் கட்டுப்படுத்துவது, தொழிலாளிகளைப் பாதுகாப்பது, போக்குவரத்துச் சாதனங்களைச் சரிவர அமைத்து இயங்குவது போன்ற புதிய அரசியல் பணிகளுக்காக ஆயிரக் கணக்கில் சர்க்கார் சேவகர்கள் நியமிக்கப்பட்டனர்.

இப் பணிகள் புரிவதற்கும், இயந்திர சாலைகளில் தொழில் கொடுப்பதற்கும் விஞ்ஞான தேர்ச்சியும், தொழில்நுட்பப் பயிற்சியும், மற்றப் பொது அறிவும் இன்றியமையாததாயிற்று. ஆதலால் எல்லா மக்களுக்கும் ஆரம்பக் கல்வி கட்டாயமாக்கப்பட்டு, புத்தி கூர்மையுள்ளவர்களுக்கும் திறமைசாலிகளுக்கும் உயர்தரப் படிப்புக்குப் பொதுச் செலவில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. விஞ்ஞான ஆராய்ச்சியும், புதிய இயந்திரங்களை உருவாக்கும் சாலைகளும் முற்போக்குக்கு ஆதாரமாயின. அவற்றிற்கு வேண்டிய ஆராய்ச்சிக் கூடங்களும், பயிற்சி சாலைகளும் அமைக்கப்பட்டன. முன்னிராத, பல புதிய தொழில்கள் தோன்றின.

புதிய யந்திரத் தொழிற்சாலைகளுக்கு ஏராளமான முதல் தேவையாயிற்று. அது தனிநபர்களால் சேகரிக்க முடியவில்லை. பலர் சேர்ந்து முதல் சேர்த்துத் தொழிற்சாலைகளை அமைப்பதற்காகக் கம்பெனிச் சட்டம் இயற்றப்பட்டது. வியாபாரம் செவ்வனே நடைபெறுவதற்குப் பல சிக்கலான சட்டங்கள் செய்யவேண்டியிருந்தது. முன்போல் தங்க, வெள்ளி நாணயங்களால் பொருளாதாரத்தைச் சமாளிக்க முடியவில்லை. காகித நாணயமும், பாங்குகளும் தோன்றின. இவற்றைப் பரிசீலிப்பதும் சமூகத் தேவைகளுக்காக ஒழுங்கான வரி முறையைக் கையாளுவதும் அரசாங்கத்தின் முக்கிய அலுவல்களாயின.

இக் காரணங்களால், அரசாங்கம் என்ற பெயரும், சில அடிப்படையான பணிகளும் பொதுவாக இருந்தபோதிலும் பண்டைக் கால அரசாங்கங்களுக்கும் இக் காலத்திய அரசியலுக்கும் மலைக்கு மடுவுக்குமுள்ள வித்தியாசமிருக்கின்றது.

1917ஆம் வருஷத்தில் வெற்றிபெற்ற ருஷியப் புரட்சி அரசியலின் நோக்கங்களிலும் போக்குகளிலும், புதிய பெரு மாறுதல்களைத் தோற்றுவித்தது. ருஷியாவிலும், அதன் வழியைப் பின்பற்றிய இதர பொதுவுடைமை நாடுகளிலும், நிலம், முதல் போன்ற உற்பத்தி சாதனங்களில் தனியார் உரிமை நிராகரிக்கப்பட்டு அவை சமூகச்

சொத்துகளாயின. நாட்டின் செல்வமும் வருமானமும் எல்லா மக்களுக்கும் பொதுவானது என்ற தத்துவம் அரசியலுக்கு அடிப் படையாயிற்று. அடித்தளத்தில் கொடிய வறுமையும், உச்சியில் கணக்கில்லாத வருமானமும் உல்லாச வாழ்க்கையும் அடியோடு ஒழிக்கப்பட்டன. நன்கு தொழில் புரிவதற்கு ஊக்கமளிக்க ஊதியங் களிலும் வீடு முதலிய வசதிகளிலும் ஓரளவு ஏற்றத்தாழ்வுகள் அங்கீகரிக்கப்பட்டன.

பொதுவுடைமை முறையை ஏற்காத முதலாளித்துவத்தின் மேல் அமைக்கப்பட்ட பொருளாதாரமுள்ள அமெரிக்கா முதலிய நாடுகளிலும் நல்வாழ்வுக்குப் போதிய ஊதியம், முதியோருக்கும், துரதிர்ஷ்டத்தால் சம்பாதிக்க முடியாமல் தவிப்போருக்கும், அனு தைக் குழந்தைகளுக்கும், தொழில் புரியத் தயாராகவிருந்தும் வேலையில்லாமல் திண்டாடுபவர்களுக்கும் அரசாங்கம் பொதுப் பணத்திலிருந்து போதிய உதவி செய்யவேண்டும் என்ற கொள்கை ஏற்கப்பட்டு அமலில் இருக்கின்றது. கல்வி, சுகாதாரம், உயர்தர ரஸ்தாக்கள், பொது உத்தியான வனங்கள், நூல் நிலையங்கள் முதலிய சமூக சேவைகளுக்கும், இக் காலத்திய நுட்பமான ஆயுதங்கள் தாங்கிய பெரும் படைகளுக்கும் அதிக வரிகள் விதிப்ப தால் இந்த தேசங்களிலும் மக்களின் செல்வ நிலை பொதுவுடைமை நாடுகளைப்போலவே வேறுவிதமாக மாறிவந்திருக்கின்றது. இப் பொழுது ருஷ்யாவிலுள்ள தொழிலாளியைவிட அமெரிக்கத் தொழி லாளிகளுக்கு ஊதியம் அதிகம். அமெரிக்காவில் சில கோடீசு வரர்கள் இருப்பது உண்மையே. ஆயினும் அவர்கள் ஆயிரத்தில் ஒருவரே. மீதியுள்ளவர்களின் வருமான ஏற்றத்தாழ்வு ருஷ்யாவி லுள்ளதைவிட அதிகமில்லை. வருமான வரி, வாரிசு வரி, நன் கொடை வரி, சுங்கவரி போன்ற பலவித வரிகளால் பெரிய வருமா னங்களிலும் சொத்துகளிலும் பெரும்பாகம் அரசாங்கத்தால் வசூலிக்கப்பட்டுப் பொதுத் துறைகளில் செலவழிக்கப்படுகின்றன.

ஆதலால் அமைப்பிலும், பெயரிலும், அதிகார தோரணையிலும் பெரும் வித்தியாசங்கள் இருந்தபோதிலும் இக் காலத்திய அரசியல் களுக்குள் இருக்கும் ஒற்றுமைகள், அவற்றிற்கும் பழைய காலத்து அரசியல்களுக்குமுள்ள வேற்றுமைகளைக் காட்டிலும் அதிகமே. சிக்கலான சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள், பல்லாயிரக்கணக் கான சேவகர்கள் கொண்ட அதிகாரவர்க்கம், கடுமையான வரிகள், ஏராளமான பணச் செலவு இவையனைத்தும் எல்லா இக் காலத்திய அரசியல்களுக்கும் பொதுவான அம்சங்கள்.

ஆயினும், அவைகளுக்குள்ளிருக்கும் வேற்றுமைகளைப் பொருட்படுத்தலாகாது என்று கூறுவதும் முற்றிலும் தவறாகும்.

இக்காலத்திய அரசியல்களை மூன்று வகைகளாக வகுக்கலாம். ஒன்று மக்கள் ஆட்சி. மற்ற இரண்டு வகைகளும் சர்வாதிகார ஆட்சிமுறைகள். பொதுவுடைமைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சொத்தில்லாதோர் சர்வாதிகாரமொன்று; இதற்கு எதிராகச் சொத்தும் அந்தஸ்தும் உள்ளோர் ஆதரவில் சைனிய பலத்தால் இயங்கும் சர்வாதிகாரம் மற்றொன்று. இவற்றை இடதுசாரி வலதுசாரி சர்வாதிகாரமென்று கூறலாம். இவை தம்மைச் சர்வாதிகாரமென்று சொல்லிக்கொள்ளுவதில்லை. பொதுவுடைமை சர்வாதிகாரங்கள் தம்மைப் பொதுமக்கள் ஜனநாயகமென்று பெயர் சூட்டிக் கொள்ளுகின்றன. ருஷியா, சீனு, கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, செக்கோஸ்லொவகியா முதலிய தேசங்களில் இவ்வித சர்வாதிகாரம் நடைபெற்று வருகின்றது.

வலதுசாரி சர்வாதிகாரம் தன்னை தேசீய சோஷலிஸம் (அபேத வாதம்) என்று பாராட்டிக்கொள்ளுகின்றது. ஹிட்லரின் நாஜி முறை, முசோலினியின் ஃபாஸிஸ்ட் முறை இதனைச் சேர்ந்தது. இப்பொழுது ஸ்பெயின், போர்ச்சுகல், பர்மா, பாகிஸ்தான் தேசங்களிலும், பல ஆஃப்ரிக்க ராஜ்யங்களிலும் வெறும் இராணுவ சர்வாதிகாரமே நடந்து வருகின்றது.

மக்கள் ஆட்சிகளுக்குள் பல முறைகளுண்டு. ஆனல், அவற்றிற்கெல்லாம் சில முக்கிய பொதுவான அம்சங்களுண்டு. அவையாவன: பிரஜைகள் தங்கள் மனம்போனவாறு சிந்திக்கவும், சிந்தனைகளைப் பேசவும், பிரசாரம் செய்யவும் தடையற்ற உரிமை இருக்கவேண்டும். அரசாங்கத்தின் கொள்கைகளையும் போக்குகளையும் குறைகூறவோ கண்டிக்கவோ உரிமையில்லாவிட்டால், அவ் வரசியல் எவ்விதப் போர்வை அணிந்துகொண்டாலும் சர்வாதிகாரமேயாகும்.

இரண்டாவதாக ஒரேவிதக் கொள்கைகளோ, லட்சியங்களோ கொண்ட மக்கள் ஓர் சங்கமாகவோ, கட்சியாகவோ சேர்ந்து தங்கள் அபிப்பிராயங்களைப் பரப்பும் உரிமை அத்தியாவசியமானது. அரசாங்கத்திற்குப் பெருவாரியான மக்களின் ஆதரவு இருக்கும்பொழுது சிறுபான்மையோர் இவ்விதம் கூடிப் பிரசாரம் செய்து தங்களுக்குப் பெரும்பாலோரின் ஆதரவைத் தேடும் சுதந்திரம் மக்கள் ஆட்சியின் அடிப்படையான தத்துவமாகும்.

எல்லாச் சட்டதிட்டங்களும், வரிகளும் மக்களின் பிரதிநிதிகள் ஆமோதித்துச் சட்டமாக்கியபின்னரே அதிகாரிகளால் அமல்

செய்யப்படவேண்டும். எந்த அதிகாரியும் சட்ட வரம்பிற்கு உட்பட்டே தனது பணி ஆற்றவேண்டும்.

பிரதிநிதிகள் பொதுமக்களால் எவ்வித நிர்ப்பந்தமுமின்றி இரகசிய வாக்கு முறையால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அத் தேர்தல் குறிப்பிட்ட காலத்தில் முடிவுபெற்று மீண்டும் நடைபெற வேண்டும். பழைய அங்கத்தினர்களை மீண்டும் சட்டசபைகளுக் கனுப்பவும் அவர்களை நிராகரித்துப் புதிய அங்கத்தினர்களை அனுப்பவும் வாக்காளர்களுக்கு உரிமையிருப்பது அவசியம்.

சட்டசபைகளால் செய்யப்பட்ட சட்டதிட்டங்களைப்பற்றிய சந்தேகங்களைத் தீர்க்கவும், அவை சரிவர அமல் செய்யப்படு கின்றனவா என்று தீர்மானிக்கவும் நிர்வாக அதிகாரிகளுக்குக் கீழ்ப்படாத நீதித்துறைக்கு அதிகாரம் இருக்கவேண்டும்.

ஆதலால் பேச்சு, கட்சி சுதந்திரம், சட்டத்திற்குட்பட்ட அதி காரம். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுக் காலவரையறை யுள்ள சட்டசபை, சட்டத்திற்குப் பிறழாமல் பார்த்துக்கொள்ள சுதந்திரமான நீதித்துறை இந் நான்கும் மக்கள் ஆட்சிக்கு இன்றி யமையாத தத்துவங்கள். இவற்றில் ஒன்றில்லாமலிருந்தாலும், அது சரியான ஜனநாயகமாகாது. இவையனைத்துமுள்ள அரசி யலில் வேறு எவ்வித மாறுபாடுகளிருந்தாலும் மக்கள் ஆட்சியே யாகும்.

தற்சமயம் உலகில் பல நாடுகளில் மக்கள் ஆட்சி உலவி வருகிறது. இந் நூலில் பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, பாரதம் இம் மூன்று மக்கள் ஆட்சிகளின் ஒற்றுமை, வேற்றுமை கள் ஆராயப்படுகின்றன. உலகிலேயே இம் மூன்றும் மிகவும் முக்கியமான ஜனநாயகங்களாக இருப்பதுமட்டுமன்றி, இம் மூன்றிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இக் காலத்திய மக்கள் ஆட்சிக்கு பிரிட்டனே வழிகாட்டியாகும். மக்கள் ஆட்சியின் தத்துவங்களை நன்கு விவாதித்து, அவற்றின்பேரில் எழுத்துமூலம் அரசியல் அமைப்பை உருவாக்கியதும் முதன்முதலாகப் பல ராஜ்ய கள் கொண்ட நிலைபெற்ற ஐக்கிய ஆட்சிமுறையை நிறுவியதும் அமெரிக்க ஐக்கிய நாடு. இந்திய அரசியலமைப்பு, ஆங்கில அரசியல்முறை அமெரிக்க ஐக்கிய அரசியல் அமைப்பு இரண் டையும் தழுவித் தயாரிக்கப்பட்டது.

இம் மூன்று அரசியல்முறைகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் மக்கள் ஆட்சியின் தத்துவங்களும், நடைமுறைகளும்

பாரத மாணவர்களின் மனத்தில் தெளிவாகப் பதியும் என்ற உத்தேசத்தோடு இந் நூல் எழுதப்பட்டிருக்கிறது. கலாசாலை மாணவர்களுக்காக உருவாகியபோதிலும், அரசியலில் ஆர்வமுள்ள அனைவருக்கும் பயன்படுமாறு அமைக்கப்பெற்றிருக்கிறது. பாரதத்தில் மக்கள் ஆட்சி வலிமையுற்று, என்றும் நிலைத்திருப்பதற்கு அவசியமான பொதுஜன மனப்பான்மையை உருவாக்குவதற்குப் பயன்படுமென்பது ஆசிரியரின் நம்பிக்கையும், பிரார்த்தனையுமாகும்.

## 2. சரித்திர பீடிகை

ஓர் அரசியல் முறையை நன்குணர்வதற்கு அதன் முன் சரித்திரத்தை ஓரளவு அறிவது அவசியம். இங்கிலாந்தின் சரித்திரத்திற்கும் அமெரிக்க, பாரத சரித்திரங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால், பிரிட்டிஷ் அரசியல் முறையின் வரலாறு முக்கியமானது.

இந்நூலின் பொருளுக்கு ஆதாரமான முதல் சம்பவம் கி.பி. 1215-ல் ஜான் மன்னரிடமிருந்து ஆங்கிலப் பிரபுக்கள் பெற்ற மாக்ன கார்டா என்ற மாபெரும் உறுதிமொழியாகும். அக்காலத்திய, மற்ற ஐரோப்பிய நாடுகளைப்போல், இங்கிலாந்திலும் படைமானியத் தனியரசுமுறை வழங்கி வந்தது. அதாவது நாட்டின் பல பாகங்களில் நிலவரி பெற்று அதனைக்கொண்டு குதிரை வீரர்களையும். காலாட்களையும் சேர்த்துப் பயிற்சி கொடுத்து அரசனுக்கு வேண்டும்பொழுது இப் படைகளுடன் உதவி செய்யவேண்டும் என்ற நிபந்தனையுடன் பிரபுக்கள் அதிகாரம் வகித்து வந்தனர். அரசனுக்குச் சொந்தமாகவும் ஏராளமான நிலம் ஒதுக்கி வைக்கப்பட்டு அதன் வருமானத்தைக் கொண்டு அரச குடும்பமும், மன்றங்களும் நடைபெற்று வந்தன. பிரபுக்கள் பலதரப்பட்டவர்களாக இருந்தனர். நமது நாட்டில் சிற்றரசர்கள், பாளையக்காரர்கள், ஜமீன்தார்கள்போல் அங்கே டியூக், ஏர்ல், பாரன் என்ற பெயர் வகித்தனர். அரசனது கட்டளைப்படி நடப்பது அவர்களின் கடமையாகவிருப்பினும், அவர்களைக் கட்டுப்படுத்திப் பக்தியுடன் அரசனுக்குப் பணிவிடை செய்வது மிகவும் கடினமாகவிருந்தது. பெரிய பிரபுக்களுக்கு வலுமிக்க கோட்டைகளும் படைகளுமிருந்ததால் பலாத்காரத்தை விட அவர்களைப் பிரித்து ராஜதந்திரத்தைக்கொண்டு ஆளுவதே சுலபமாகவிருந்தது.

ஜான் என்னும் மன்னன் பிரபுக்களிடம் அக்கிரமமாகவும், எதேச்சாதிகாரத்துடனும் நடந்துகொண்டதால் அவர்கள் ஒன்று

கூடி பயமுறுத்தி இந்த உறுதிமொழியை வாங்கிக்கொண்டனர். அதன்படி நியாயவிசாரணையின்றி எவரையும் சிறையில் வைக்கவோ, தண்டிக்கவோ கூடாதென்று அரசனது ஆணைக்கு வரம்பு விதிக்கப்பட்டிருந்தது. அச் சமயம் இதனால் பொது மக்களுக்கு அதிக இலாபமில்லை; ஆயினும் மன்னனுக்கு முழு எதேச்சாதிகாரமில்லை, அதற்கு வரம்புகள் உண்டு என்ற அடிப் படையான தத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் பிற்காலத்தில் மிகவும் பயன் பட்டது.

மன்னன், பிரபுக்கள், பொதுமக்கள் இம் மூன்றுக்குமுள்ள வேறுபாடுகளும் சச்சரவுகளும் வளர்ந்துவந்தன. சில காலங் களில் மன்னன் மக்கள் உதவியைக்கொண்டு பிரபுக்களை அடக்கி யாள முயன்றான். அவ்வாறே பிரபுக்களும் கொடுங்கோல் மன்னர் களுக்கு எதிராகக் குடிமக்களின் ஆதரவை நாடினர். இப் பூசல் களின் பலனாகப் பிரபுக்கள் சபை, மக்கள் சபை என்ற இரண்டு அங்கங்கள் கூடிய ஓர் பார்லிமெண்ட் என்ற பாராளுமன்றம் உருவாயிற்று. அதற்குச் சட்டபூர்வமாக எவ்வுரிமையுமில்லை. ஆனால், வழக்கமும், சம்பிரதாயமும் அதற்குச் செல்வாக்கும் வலிமையும் அளித்தன. மக்கள் சபையில் சாதாரண நிலச் சுவான்தார்கள், நகர வணிகர்கள் இவர்களின் பிரதிநிதிகள் இருந்தனர்.

அடுத்த முக்கிய சம்பவம் பதினேழாம் நூற்றாண்டில் முதல் சார்லஸ் என்ற அரசரிடம் பிரிட்டிஷ் பாராளுமன்றம் அளித்த உரிமை விண்ணப்பமாகும். பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அரசன் வரி விதிக்கலாகாதென்றும், நியாய விசாரணை யின்றி எப் பிரஜையும் சிறைப்படுத்தப்படக்கூடாதென்றும் அது கேட்டுக்கொண்டது. மேலும், எப் பிரஜையின் சொந்தக் கட்ட டத்திலும் சிப்பாய்களைக் கட்டாயமாகக் குடிவைக்கலாகாதென்றும் போர்க்காலச் சட்டங்களைச் சமாதான காலங்களில் அமல் செய்யக் கூடாதென்றும் வேண்டிக்கொண்டது. இவ் விண்ணப்பத்தை நிராகரித்ததன் பலனாக சார்லஸ் மன்னனுக்கு எதிராகக் கலகம் செய்து அவரைத் தோற்கடித்து அவருக்குச் சிரச்சேதத் தண்டனை விதிக்கப்பட்டது.

அவருக்கடுத்தாற்போல கிராம்வெல் என்ற சேனாதிபதியின் எதேச்சாதிகாரம் சில காலம் நடைபெற்றது. அதை மக்கள் வெறுத்தனர். ஆதலால், அவர் இறந்தவுடன் மன்னர் ஆட்சி மீண்டு முதல் சார்லஸின் புத்திரர் இரண்டாவது சார்லஸ், அவருக்குப்பின் இரண்டாவது ஜேம்ஸ் அரசரானார்கள். ஜேம்ஸ்

மிகவும் முரட்டுத்தனமாகவும் எதேச்சாதிகாரத்துடனும் நடந்து கொண்டதால், 1689ஆம் ஆண்டில் பார்லிமெண்ட் ஓர் உரிமைப் பட்டியலை அங்கீகரித்தது ; அதை ஏற்காததால் அவரை நாட்டை விட்டுத் துரத்திவிட்டது. அவருக்குப் பின் அவரது சகோதரியின் புருஷன் வில்லியம் என்பவரை ஹாலண்டிலிருந்து வரவழைத்து முடிசூட்டினர். அவர் அரசரானவுடன் 1701ஆம் வருஷத்தில் ஓர் முடிவான ஏற்பாட்டுச் சட்டம் இயற்றப்பட்டு அதில் உரிமைப் பட்டியலிலுள்ள கோரிக்கைகள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டன.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் மெதுவாகவும், ஒவ்வோர் சமயம் தடைப்பட்டும் பிறகு முற்போக்கடைந்தும் வளர்ச்சி பெற்றது. முதலில் அதில் பிரபுக்கள் சபையே மேலோங்கியிருந்தது. அதுவும் அரசனுக்குப் புத்திமதி கூறவே உதவிற்று. ஓரளவு நியாயஸ்தல மாகவும் பணி செய்தது. அரசனுக்குப் பணமுடை உண்டாகிப் புதிய வரி விதிக்கவேண்டுமாயின் சிறிய நிலச்சுவான்தார்கள், நகரங்களிலுள்ள வியாபாரிகள் இவர்களின் பிரதிநிதிகள் அழைக் கப்பட்டு அவர்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டது. நாளடைவில் இவ்விரண்டு சபைகளும் வலுவடைந்து சட்டம் செய்யவும் வரி விதிக்கவும் உரிமைகளைப் பெற்றன. முதலில் பிரபுக்கள் சபையின் ஓர் பாகமாக இருந்த சாதாரண பிரதிநிதிகள் தனியாகப் பிரிந்து மக்கள் சபை அமைந்தது.

அரசனுடைய எதேச்சாதிகாரத்தை எதிர்க்கவேண்டிய காலத் தில் இரு சபைகளும் ஒத்துழைத்தன : எதேச்சாதிகாரம் மங்கி, பாராளுமன்றத்திற்கு முக்கிய அதிகாரங்கள் கூடவே, இரு சபை களுக்கும் போட்டி உண்டாயிற்று. பிரபுக்கள்சபை சமூக சீர்திருத்தங்களை எதிர்த்துப் பிற்போக்கான டோரிக் கட்சியை ஆதரித்து வந்தது. மக்கள் சபையில் சீர்திருத்தக்காரர்கள் பெரும்பாலரானபொழுது, அது செய்யும் சட்டங்களை நிராகரிப் பதும், மற்றும் தடைகள் செய்வதுமே பிரபுக்கள் சபையின் முக்கிய அலுவலாயிற்று. யந்திர சகாப்தம் தோன்றி வளர்ச்சி பெறவே நாட்டின் செல்வம் பேரளவில் தொழிற்சாலை அதிபர்கள், வியாபாரி களிடமே குவிந்தது. வரி விதிப்பதும், செலவுகளை அனுமதிப் பதும் மக்கள் சபையின் தனி உரிமையாயிற்று. பிரபுக்களின் ஆதிக்கம் குறைந்து, அவர்களுக்கு அரசியலில் பற்றுக் குறைந்தது. சில பிரபுக்களின் குடும்பங்கள் 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் அரசியலில் தலைமை வகித்துவந்தபோதிலும், பிரபுக்கள் சபை செல்வாக்கு இழந்து, 1911ஆம் வருஷத்தில் பிரபுக்கள் சபை மக்கள் சபையால் இயற்றப்பட்ட சட்டத்தை ஈராண்டு தடுத்து வைக்கலாமென்றும், அதன்பின் மக்கள் சபை மீண்டும் வற்புறுத்

தினுல் அது சட்டமாகிவிடும் என்றும் விதி செய்யப்பட்டது. 1949ஆம் வருஷத்தில் இது ஓர் ஆண்டுக்குக் குறைக்கப் பட்டது.

1832ஆம் வருஷம் வரையில் மக்கள் சபைக்குப் பிரதிநிதிகள் அனுப்பும் வாக்காளர்கள் மிகக் குறைவாகவும் தொகுதிகள் எவ் வித நியமமுமின்றியும் இருந்தன. சில பிரபுக்கள் பிரதிநிதிகளில் பெரும்பாலரைத் தம் இஷ்டப்படி நியமித்து வந்தனர். 1832-ல் இதை மாற்றி 2 பவுன் நிலவரி செலுத்தும் நிலச்சுவான்தார்கள், ஆண்டுக்கு 50 பவுன் குத்தகை கொடுக்கும் குடியானவர்கள், நகரங்களில் வருஷத்திற்கு 50 பவுன் வீட்டு வாடகை கொடுப் போர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. தொகுதி களும் ஒழுங்காகச் சீரமைக்கப்பட்டன. இச் சீர்திருத்தமான உடனேயே வயதுவந்தவரனைவருக்கும் வாக்குரிமை அளிக்க வேண்டுமென்ற இயக்கம் தோன்றி நாடெங்கும் பிரசாரம் செய்யப் பட்டது. 1867ஆம் ஆண்டில் இது ஓரளவு வெற்றியடைந்து மிகவும் குறைந்த சொத்துரிமையுள்ள மனிதர்களனைவரும் வாக்குரிமை பெற்றனர். அப்பொழுதும் பெண்களுக்கு அது வழங்கப்படவில்லை. அதனுல், ஆங்கிலப் பெண்கள் பெரிய கிளர்ச்சி செய்து, சில சமயங்களில் பலாத்காரச் செயல்களைக் கூடக் கையாண்டனர். பலர் சிறை சென்றனர். முடிவில் 1918-ல் அவர்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

இவ்வாண்டு நிறைவேறிய சட்டத்தின்படி இங்கிலாந்தில் குறைந்தது ஆறு மாதம் குடியிருந்து 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் இதே மாதிரி உரிமை வழங்கப்பட்டது. அவர்கள் பொதுமக்கள் சபையில் அங்கத்தினர்களாகவும் உரிமை பெற்றனர். அடுத்த வருஷத்தில் பெண்கள் எல்லா அலுவல் களையும் ஆண்களைப்போல் செய்ய உரியவர்களானுர்கள். 1949ஆம் வருஷத்தில் மக்கள் பிரதிநிதிச் சட்டத்தால் பெண்கள் ஆண்களைப்போலவே வாக்குரிமை பெற்று எல்லா விதத்திலும் சமத்துவம் எய்தினர். குடியிருப்பு முதலிய நிபந்தனைகளும் நீக்கப் பட்டன. ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னுல் குறிப்பிட்ட தேதியில் வசிக்கும் 21 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டு தேர்தலில் பங்கெடுத்துக்கொள்ளத் தகுதியுள்ளவர்களானுர்கள்.

பிரிட்டிஷ் காபினெட் அல்லது மந்திரிசபை முறையும் மிக மெது வாகவே உருவாயிற்று. முதலில் சில பிரபுக்கள் அரசனின் அந்தரங்க

சபையாக (பிரிவி கௌன்சில்) நியமிக்கப்பட்டு ஆலோசனைக் குழுவாகப் பணி செய்தனர். அரசன் ஆணைப்படி நிர்வாகத்திற்கு உதவினர். நியாய விசாரணைக்கும் அந்தக் குழு பயன்பட்டது. பாராளுமன்றம் வலுவடையவே அதன் தலைவர்களும் அந்தரங்க சபையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சபையின் எண்ணிக்கை அதிகரிக்கவே, அதில் சிலரைச் சிறிய சபையாக அமர்த்தி நிர்வாகம் செய்யப் பட்டது. பாராளுமன்றம் வலுவடைந்து சட்டங்களைச் செய்யவும், வரிகளை விதிக்கவும், செலவுகளை அனுமதிக்கவும் உரிமை பெற்ற பொழுது அதன் தலைவர்களே இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டு காபினெட் என்ற பெயருடன் மந்திரிசபையாயிற்று. முதலில் அதில் பெரும்பாலோர் பிரபுக்களாகவிருந்தனர். மக்கள் சபையின் செல்வாக்கு ஓங்கவே சென்ற நூற்றுண்டின் இறுதியில் மக்கள் சபைத் தலைவர்கள் பிரதம மந்திரியாவதும், மந்திரி சபையில் பெரும்பாலோர் மக்கள் சபையினராக இருப்பதும் வழக்கமாயிற்று.

இந்த மந்திரிசபை அரசனின் ஆணையிலிருந்து விலகி, பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாளியானதும் மற்றேர் முக்கிய மாற்றமாகும்.

ஆங்கில அரசியலில் இரு கட்டுப்பாடான கட்சிகள் 19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து போட்டிபோட்டு வந்தன. அவை விக், டோரி என்று அப்பொழுது அழைக்கப்பட்டன. இந் நூற்றுண்டின் தொடக்கத்தில் முற்போக்கு (லிபரல்), சாவதான (கன்சர்வடிவ்) கட்சிகள் என்ற பெயருடன் வழங்கின. முதல் உலக மகா யுத்தத்திற்குப் பின் தொழில் கட்சி வலுப்பெற்று முற்போக்குக் கட்சி தேய்ந்துபோயிற்று. இப்பொழுது சாவதான கட்சியும் தொழிற் கட்சியுமே அரசாங்கத்தை வகிக்க ஒவ்வோர் பொதுத் தேர்தலிலும், போட்டியிட சக்தியுள்ளவை.

பிரிட்டிஷ் நீதி பரிபாலனமும் சாவகாசமாகவும் பன்முறைகளிலும் வளர்ச்சிபெற்று வந்திருக்கிறது. குடிகளின் பண்டைய உரிமைகள், மதகுருக்களின் நியாயமுறை, அரசன் செய்த விதிகள் இம் மூன்று வகைகளிலும் சட்டங்கள் உருவாகி, நியாயாலயங்களும் பிளவுபட்டு இருந்தன. இந்த நூற்றுண்டிலேதான் அவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுச் சீர்படுத்தப்பட்டன. இதைப்பற்றிப் பின்னர் கூறப்படும்.

பிரிட்டிஷ் அரசியல்முறை வழக்கத்தாலும், சம்பிரதாயத் தாலுமே பல நூற்றுண்டுகளில் உருவானதென்று மேற்கூறியவற்றி

லிருந்து தெளிவாகும். இன்றும் அந்த முறையை முழுதும் விளக்கும் சட்டம் எதுவுமில்லை. வாக்குரிமை, தொகுதிகள், மந்திரிகள், பாராளுமன்ற அங்கத்தினர்கள் ஆகியோரின் சம்பளங்கள், மானியங்கள் முதலிய சில அம்சங்களே சட்டபூர்வமாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன. கூட்டு ராஜ்யம் (யுனைடெட் கிங்கடம்) என்று இப்பொழுது பெயருள்ள பிரிட்டன் இங்கிலாந்து, ஸ்காட்லண்டு, வேல்ஸ், வடக்கு அயர்லாந்து கூடியது. தெற்கு அயர்லாந்து பலாத்காரமாகப் பல நூற்றுண்டுகள் இணைக்கப்பட்டிருந்து முதல் உலக யுத்தத்திற்குப்பின் பிரிக்கப்பட்டு சுதந்திர ராஜ்யமாக இருக்கின்றது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் வரலாறு மிகவும் சுலபமானது. பதினேழாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் பல ஐரோப்பிய தேசங்களிலிருந்து வட அமெரிக்காவுக்குப் பலர் குடியேறினர். அப்பொழுது அங்குமிங்கும் சிற்சிலவிடங்களில் மேற்கு இந்தியர் என்று கூறப்பட்ட ஆதி மக்களின் ஜாதிகள் வசித்துவந்தன. ஆயினும் பெரும்பாலும் ஜனத்தொகையில்லாத பரந்த கண்டமாகவிருந்தது. மதக் கொடுமையிலிருந்து தப்பவும், புதிய பிழைப்புக்கு வழி தேடவும், ஐரோப்பியர் குடியேறினர். இங்கிலாந்திலிருந்து முதன்முதலாக மே மலர் என்ற கப்பலில் 1620ஆம் ஆண்டில் வந்திறங்கினர். அடுத்த 270 வருஷங்களுக்குத் தடையின்றி பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து இப் புதுக் குடிவெள்ளம் பெருகி வந்தது. தங்கள் கட்டுப்பாட்டினுலும் திறமையாலும் ஆங்கிலக் குடிமக்கள் ஆதிக்கம் பெற்றனர். வட பாகத்திலுள்ள கானடா என்ற ஒரு பாகத்தில் ஃபிரெஞ்சுக் குடிகள் பெரும்பாலராக இருந்தனர். மீதி வட அமெரிக்கா முழுதும் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திலேயே இருந்தது.

அமெரிக்க ஆசிரியர் காமி என்பவர் தனது நூலில் பின்வருமாறு இதை வர்ணிக்கிருர்; 'ஸ்பெயின், ஃபிரெஞ்சு யாத்திரீகர்களே ஆதியில் வட அமெரிக்காவின் பெரும் பரப்பை உணர்ந்தனர். தங்கள் தாய்நாடுகளைப் பன்முறை விழுங்கக்கூடிய கண்டமென்று கண்டனர். ஆனுல், இங்கிலாந்திலிருந்து குடியேறிய மக்களே அரசியலில் ஓங்கி விளங்கினர். அவர்களின் சிறிய தாய்நாட்டைத் துறந்து ஒரு மாபெரும் தேசத்தில் புகுந்தனர். புதிதாகத் தாமடைந்த காடு மிகுந்து பரந்து கிடக்கும் அதன் விஸ்தீர்ணத்தைக் கண்டதும் தங்கள் பழைய நாடு மிகவும் சிறியதும் ஜன நெருக்கமுள்ளதும், புழுங்கும் சமூகக் கட்டுப்பாடுகள் நிறைந்ததுமென்று அறிந்தனர். 1700ஆம் ஆண்டுக்குள் கடற்கரையோரப் பகுதிகளையும், நீர்வசதியுள்ள உட்புறங்களையும், காடுவெட்டிச்

சீர்திருத்தி வளமான பிராந்தியங்களாக்கிவிட்டனர்; கிழக்கு பாகத்தில் தற்போதைய மெயின் இராச்சியத்திலிருந்து ஜார்ஜியா வரையில் வசப்படுத்திக்கொண்டனர். மேற்கிலுள்ள மலைப் பிரதேசங்களுக்குள் புகத் தொடங்கினர். அதுவரையில் ஆதிக்கம் பெற்ற பிரதேசங்கள் மட்டும் தமது தாய்நாட்டைவிடப் பரந்ததாக இருந்தது.

இக் குடிமக்கள் தங்களுக்கு அனுபவமுள்ள தாய்நாட்டின் நகர ஆட்சி முறைகளையும் புதிய நாட்டில் ஏற்படுத்தினர். முதன்முதலில் வர்த்தகக் கம்பெனி முறையில் நிர்வாகம் செய்தனர். பின்னர் ஆங்கில அரசாங்கத்தாரால் குடியேற்று மாகாணங்களாக மதிக்கப் பட்டு அவர்களின் மேல் அதிகாரத்திற்குட்பட்டு நிர்வகிக்கப் பட்டன. 1732-ல் பதின்மூன்று குடியேற்று மாகாணங்கள் வரையறுக்கப்பட்டன. அவற்றில் 8 மாகாணங்கள் ஆங்கில அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கவர்னர்களின் ஆட்சியிலும், இரண்டு குடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளாலும், மற்ற மூன்று வியாபாரக் கம்பெனி முறையிலும் இருந்தன. சொத்துள்ளவர் களின் பிரதிநிதிகள் கொண்ட சட்டசபைகள் எல்லா மாகாணங் களிலும் நிறுவப்பட்டிருந்தன.

இம் மாகாணங்கள் வளர்ச்சி பெறவே, பல்லாயிரம் மைலுக் கப்பாலுள்ள ஆங்கில அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருக்க மனக் கசப்பு அதிகரித்து வந்தது. முக்கியமாகச் சுங்கக் கட்டணங்களையும் வரிகளையும் அந்த அரசாங்கம் விதிப்பதை விரும்பவில்லை. ஆதலால், பிரிட்டிஷ் ஆதிக்கத்தைப் புறக்கணித்துப் புரட்சி செய்ய ஆரம்பித் தனர். 1776-ல் பின்வரும் சுதந்திரப் பேரறிவிப்பைப் பறை சாற்றினர். இது உலக சரித்திரத்தில் ஒரு முக்கிய சம்பவமாயிற்று. அதன் வாசகம் பின்வருமாறு:

'எல்லா மனிதரும் இறைவனுல் சமமாகப் படைக்கப்பட்டிருக் கின்றனர். பிறக்கும்பொழுதே சில தவிர்க்கவொண்ணுத அடிப் படையான உரிமைகளைக் கடவுளிடமிருந்தே பெறுகின்றனர். அவற்றுள் உயிரும், சுதந்திரமும், நன்மையை நாடுவதும் மூல மானவை. இந்த உண்மைகள் சுயம்பிரகாசமானவை என்று உறுதி கொண்டோம்.'

இவ் வுரிமைகளை மதித்துப் பாதுகாக்கவே அரசாங்கங்கள் குடி களின் சம்மதத்தின்பேரில் அமைதல் வேண்டும். இந்த இலட்சியங் களைப் பொருட்படுத்தாத அரசாங்கத்தை மாற்றவும் அகற்றவும் மக்களுக்கு முழு உரிமை உண்டு. அவ்வாறே தங்கள் பாதுகாப்

புக்கும், நலனுக்கும் தகுந்த தத்துவங்களின் அடிப்படையில் புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தவும் அவர்களுக்குச் சுதந்திர முண்டு.

புரட்சிக்காரர்கள்மீது ஆங்கில அரசாங்கம் போர் தொடுக்கவே, அது ஐந்தாண்டு நடைபெற்று, சுதந்திர இயக்கத்தின் வெற்றியில் முடிந்தது. சண்டை ஆரம்பத்திலிருந்த அதில் ஈடுபட்டிருந்த பதின் மூன்று மாகாணங்களும் தங்களை இராச்சியங்களாக்கிக்கொண்டு, ஒரு கூட்டரசியல் அமைப்பை வகுத்துக்கொண்டு, ஒரு கண்டக் காங்கிரஸ் என்ற பொது மத்திய சட்டசபையை உருவாக்கி, அதன் மூலம் போரை நடத்திக்கொண்டுவந்தன. அந்த அமைப்பின்படி மத்திய அரசாங்கத்திற்குத் தனியான நிர்வாகமோ, படைப்பலமோ, வரிவிகிதமோ, அதிகார வர்க்கமோ இல்லை. எல்லாக் காரியங் களுக்கும் இராச்சியங்களின் உதவியை எதிர்பார்க்கவேண்டி யிருந்தது. சில இராச்சியங்கள் சரிவர ஒத்துழைக்காவிட்டால் அவற்றைத் தனக்குட்படுத்த அதிகாரமில்லை.

ஆதலால், போர் முடிந்து சமாதானம் ஏற்பட்டவுடன், இந்த அமைப்பை மாற்றி ஐக்கிய அரசாங்கத்தை ஏற்படுத்தவேண்டு மென்று பல தலைவர்கள் விரும்பினர். 1787ஆம் ஆண்டின் ஆரம் பத்தில், காங்கிரஸ் சபை, ஓர் அரசியல் அமைப்புச் சீர்திருத்த சபை யைக் கூட்டத் தீர்மானித்தது. அதில் 55 பிரதிநிதிகள் கூடி, 1787 செப்டம்பர் 20ஆம் தேதி ஓர் புதிய அரசியல் அமைப்பைத் தயார் செய்து சமர்ப்பித்தனர். அது இராச்சியங்களின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டது. அதே ஆண்டில் டிலாவார் என்ற இராச்சியம் அதை ஏற்றுக்கொண்டது. கடைசியாக 1789 நவம்பர் 21-ல் வட கரோலினா ஒப்புக்கொண்டது. அதை ஒப்புக்கொள்ளும் பொழுது அடிப்படையான உரிமைகள் சேர்க்கப்படவேண்டு மென்று இராச்சியங்கள் கோரின. அதன்படியே புதிய அரசியல் திட்டம் அமலுக்கு வந்தபொழுது அவைகளும் பத்துத் திருத்தங் களாகச் சேர்க்கப்பட்டன. அதன் பின்னர் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆனால், 1791-ல் உருவான அமைப்பே பெரும் பாலும் அமலில் இருக்கின்றது. ஒரே அரசியல் அமைப்பு இவ்விதம் 175 வருடங்கள் தொடர்ந்து அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசிய லுக்கு ஆதாரமாக இருந்துவந்ததன் பலனாக, அந் நாட்டின் சமூக, செல்வ, சக்தி வளர்ச்சிகள் உலகனைத்தும் பிரமிக்கும்படியாக ஓங்கியிருக்கின்றன. வழக்கங்களும் சம்பிரதாயங்களும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் போக்கில் அதிகப் பங்கெடுக்கவில்லை. அமைப்பைச் சட்டபூர்வமாகத் திருத்துவதாலும், அதன் உத்தம நீதிமன்றத்தின் தீர்ப்புகளாலுமே விரிவடைந்திருக்கிறது.

ஆயினும், வழக்கம், சம்பிரதாயம் இவைகளுக்கு அதில் அடியோடு இடமில்லை என்றும் கூறமுடியாது. அரசியல் கட்சிகளைப் பற்றியும் அவற்றின் செயல்முறைகளைப்பற்றியும் அமைப்பில் குறிப்பிடப்படவில்லை. ஆனால், இரு பெரிய அரசியல் கட்சிகள் தோன்றி, ஒழுங்காகப் போட்டியிட்டுக் குழப்பமின்றி அரசியலை நடத்திவந்திருப்பது சம்பிரதாயங்களின் செல்வாக்கைத்தான் பொறுத்திருக்கிறது. ஆரம்பத்தில் மக்கள் தேர்தல் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துப் பின்னர் அவர்கள்மூலம் தலைவரைத் தேர்ந்தெடுத்தனர். இன்று வாசகம் மாருமலிருப்பினும் மக்களே நேரில் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஓர் அபேட்சகருக்கு ஓர் இராச்சியத்தில் பெரும்பாலோரின் வாக்குக் கிடைத்தால், அவருக்கு அந்த இராச்சியத்தின் எல்லாத் தேர்தல் பிரதிநிதிகளும் வாக்குக் கொடுத்ததாகக் கணக்கிடப்படுகின்றது. இன்றும் பல வழிகளில் சம்பிரதாயத்தைக்கொண்டே மத்திய இராச்சிய அரசாங்கங்களின் ஒத்துழைப்பு வளர்ந்துவந்திருக்கின்றது.

இந்திய அரசியல் வரலாற்றை 1858ஆம் ஆண்டிலிருந்து சுருக்கமாகக் கூறுவது போதுமானது. அவ்வாண்டில் கிழக்கு இந்தியக் கம்பெனியிடம் இருந்த அதிகாரத்தை ஆங்கில அரசுக்கு மாற்றி, இந்தியா பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் சேர்க்கப்பட்டது. 1,600 வருடம் ஒரு பட்டா பெற்று, கிழக்கு இந்தியக் கம்பெனியார் இங்குவந்து, அப்பொழுது நிலவிய அரசியல் குழப்பத்தைப் பெருக்கி, பலவித சாணக்கிய நீதிகளைக் கையாண்டு, பாரதத்தின் பெரும் பிரதேசங்களுக்கு அதிபதியான சரித்திரத்தை இங்கு விவரிக்கத் தேவையில்லை.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய சட்ட சபைகள் விதி என்று பார்லிமெண்டில் ஒரு சட்டம் நிறைவேற்றினர். அதன்படி ஒவ்வொரு மாகாணத்திலும் கவர்னருக்கு ஆலோசனை கூற முக்கிய உத்தியோகஸ்தர்களும் சில கனவான்களும் கொண்ட சபை அமைக்கப்பட்டது. சட்டங்கள் செய்யப்படுமுன் அச் சபைகளில் ஆலோசிக்கப்பட்டன. ஆனால், முடிவு செய்யும் அதிகாரம் பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடமே இருந்தது. 1909ஆம் வருடத்தில் ஒரு புதிய சட்டம் இயற்றப்பட்டு, மாகாணச் சட்டசபைகளில் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. அவர்களில் பெரும்பாலோர் கணிசமான சொத்துள்ள வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், உத்தியோகஸ்தர்களான அங்கத்தினர்களும், கவர்னரால் நியமிக்கப்பட்ட கனவான்களும் சேர்ந்து பெரும்பான்மையில்

இருந்தனர். ஆதலால், சட்டங்களை நிராகரிப்பதற்கோ, அரசாங்கத்திற்கு விரோதமாகத் தீர்மானம் செய்வதற்கோ அவகாசமில்லை.

இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற ஒரு மத்திய சட்ட சபையும் அதே முறையில் அமைக்கப்பட்டது. அதில் கோபால கிருஷ்ண கோகலே போன்ற சில பிரமுகர்கள் அங்கத்தினர்களாகித் திறமையாக நாட்டின் குறைகளை எடுத்துரைத்தனர்.

இந்த ஏற்பாடுகள் பாரத மக்களுக்குத் தங்கள் நாட்டின் அரசியலில் பங்கு கொடுக்கவேண்டும் அல்லது சுயராச்சியத்திற்கு அவர்களைத் தயார்செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடு செய்யப்படவில்லை. மக்களின் உணர்ச்சிகளை ஓரளவு அறிந்துகொள்ள வேண்டும் என்பதே அவற்றின் நோக்கம். அதனோடு, பாரத மக்களுள் இருந்துவரும் சமூகப் பிரிவுகளுக்கு இடமளித்து, அவைகள் எளிதில் மறையாமலிருப்பதற்கு இச் சபைகள் உதவின. 1909ஆம் ஆண்டுச் சட்டத்தில் முதன்முதலாக முஸ்லீம்களுக்குத் தனிச் சமூகப் பிரதிநிதித்துவம் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. இம்முறையின் பலனாக 1947-ல் பாரதம் பிளவுபட்டு, பாகிஸ்தான், பாரதம் என்ற இரு தனி நாடுகளாகவேண்டியிருந்தது.

முதல் உலக யுத்த காலத்தில் தேசியப் பிரசாரம் தீவிரமாயிற்று. லோகமான்ய திலகர் பர்மா சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு இந்தியா வந்து சேர்ந்தார். மகாத்மா காந்தியும் தென்ஆஃப்ரிக்காவில் தன் சீரிய பணியை முடித்துக்கொண்டு தாய்நாடு திரும்பினார். சென்னையில் பிரம சபைத் தலைவரான அன்னிபெசன்ட் அரசியலில் புகுந்து, பாரதத்திற்குக் குடியரசு ஆட்சி அளிக்கப்பட வேண்டுமென்று ஒரு சங்கமேற்படுத்தி, பலமாகக் கிளர்ச்சி செய்தார். பிரிட்டனுக்கும் பாரதத்தின் உதவி தேவையாக இருந்தது. கெய்சரின் ஏகாதிபத்தியத்தை ஒழித்து எல்லா நாடுகளுக்கும் சுய நிர்ணய உரிமையை அளிப்பதே தமது உத்தேசமென்று நேச நாடுகளின் சார்பில் அமெரிக்கத் தலைவர் வில்ஸன் பறைசாற்றினார். இவற்றின் பலனாக, ஆகஸ்டு 20, 1917-ல் இந்திய மந்திரியாக இருந்த மான்டேகு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் குடியாட்சி நிலையங்களைப் படிப்படியாக அதிகரித்து, பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் ஓர் நித்திய பாகமாக இந்தியாவில் பொறுப்பாட்சி வளர்ப்பதே எமது உத்தேசம் என்ற உறுதிமொழியை அளித்தார். உடனே அவர் இங்கு வந்து, அப்பொழுது இந்தியாவில் அரசப் பிரதிநிதியாக இருந்த செம்ஸ்போர்டு பிரபுவோடு நாடெங்கும் சுற்றி, இந்தியத் தலைவர்களோடு கலந்து, ஓர் சீர்திருத்தச் சட்டம் அடங்கிய அறிக்

கையைப் பார்லிமென்டுக்குச் சமர்ப்பித்தார். ஆனால், உலகப் போர் முடிவில் இந்தியப் புரட்சிக் கட்டங்களை அடக்குவதற்காக ரௌலட் என்ற நீதிபதியின் தலைமையில் ஒரு கமிட்டி சிபாரிசு செய்த அடக்கு முறைச் சட்டத்தை இந்திய சட்டசபையில் கொண்டுவந்தார்கள். அது மனித உரிமைகளையும் பத்திரிகைச் சுதந்திரத்தையும் புறக் கணிப்பதாக இருந்ததால், காந்தியடிகள் அதற்கெதிராகப் பிரசாரம் செய்து, முடிவில் ஓர் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தார். அதற்கு ஆதரவாகச் செய்யப்பட்ட கிளர்ச்சிகளை அரசாங்கம் தடுக்கவே, ஆமதாபாத், பம்பாய் முதலிய இடங்களில் பொதுமக்கள் கலவரமும், போலீஸார் அடக்குமுறையும் பெருகின; பஞ்சாபில் ஜாலியன்வாலாபாக் என்ற இடத்தில் ஒரு பெருங் கூட்டத்தில் டயர் என்ற தளபதி முரட்டுத்தனமாகச் சுட்டுப் பல மக்களைக் கொன்றார். மற்றும், பல அட்டூழியங்கள் செய்யப்பட்டன. இதன் காரணமாக, மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கையின்பேரில் 1919-ல் நிறைவேற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டத்தைக் காங்கிரஸ் மகாசபை எதிர்க்க முடிவு செய்தது.

அச் சீர்திருத்தத்தில் மாகாண சட்டசபைகளில் பெரும் பாலோர் சுமாரான சொத்துரிமையுள்ள வாக்காளர்களால் தேர்ந் தெடுக்கப்படவேண்டுமென்றும், மாகாண அரசாங்க அலுவல்களை இரண்டாக வகுத்துக் கல்வி, சுகாதாரம், ஸ்தல ஸ்தாபனங்கள் முதலிய அடங்கிய வகுப்பைச் சட்டசபைக்குப் பொறுப்புள்ள மந்திரி களிடம் ஒப்புவிப்பது என்றும் ஏற்பாடாகியிருந்தது.

காந்தியடிகளின் தலைமையில் காங்கிரஸ் சபை நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தால் இந்தச் சீர்திருத்தம் பலனற்றதாகி விட்டது. இந்திய அரசியல் பிரச்சினையைத் தீர்க்க சைமன் பிரபுவின் தலைமையில் பிரிட்டிஷ் பார்லிமென்டின் அங்கத்தினர் கூடிய ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. அதில் இந்தியர் எவரு மில்லாததால், எல்லா அரசியல் கட்சிகளாலும் நிராகரிக்கப்பட்டு, அது சென்றவிடமெல்லாம் வேலைநிறுத்தம் செய்யப்பட்டது. முடிவில் அது சில நிபந்தனைகளுடன் முழு மாகாணப் பொறுப்பாட்சி அளிக்கவேண்டுமென்று சிபாரிசு செய்தது.

அதற்கு எதிராகக் காங்கிரஸ் மகாசபையின் சார்பில் ஒரு சீர்திருத்த சட்டத்தின் நகல் தயார்செய்து, அதை ஏற்க மறுத்து விட்டதால், சத்தியாக்கிரகப் போர் நடத்த முடிவு செய்யப்பட்டது. இவற்றையெல்லாம் கண்டு குழப்பமடைந்து, பிரிட்டிஷ் அர சாங்கத்தார் 1930-ல் முதலாவது வட்டமேசை மகாநாட்டைக் கூட்டினர். அதற்கு மதவாதிகளும், சுதேச மன்னர்களும், மற்றும் சிலரும் சென்றனர். அதே சமயத்தில் உப்பு சத்தியாக்கிரகப் போர் இங்கு ஆரம்பமாகப் பல்லாயிரம் தேசத் தொண்டர்கள் சிறை புகுந்தனர்.

1931-ல் அரசர் பிரதிநிதி இர்வின் பிரபுவும் காந்தியடிகளும் சந்தித்து, காந்தி-இர்வின் ஒப்பந்தம் செய்துகொண்டு, காங்கிரசின் தனிப் பிரதிநிதியாக காந்தியடிகள் இரண்டாம் வட்டமேசை மகாநாட்டுக்குச் சென்றார். அதனால் பலனேற்படவில்லை. அவர் இந்தியா திரும்பியதும், சத்தியாக்கிரக இயக்கம் திரும்பவும் ஆரம்ப மாயிற்று. அடக்குமுறையும் மிகவும் கொடுமையாகப் பிரயோகிக் கப்பட்டது.

இச் சமயம் இந்தியா மந்திரி சாமுவேல் ஹோரர் என்பவர் ஓர் புதிய சீர்திருத்த சட்டத்தைப் பார்லிமென்டில் சமர்ப்பித்து, அதன் மீது நீண்ட விவாதம் நடைபெற்று, முடிவில் 1935 இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேறியது. அது, சைமன் அறிக்கையின் சிபார்சின்படி, மாகாண ஆட்சியும், மத்திய அரசாங்கத்தில் பிரிட் டிஷ் பிரதேசப் பிரதிநிதிகள், சுதேச சமஸ்தானங்களின் பிரதிநிதி கள் அடங்கிய ஒரு கூட்டாட்சியும் பல நிபந்தனைகளுக்குட்பட்டு நிறுவப்படவேண்டுமென்று திட்டம் வகுக்கப்பெற்றிருந்தது.

மாகாண சட்டசபைகளுக்கு 1937-ல் தேர்தல் நடைபெற்றது. பல மாகாணங்களில் காங்கிரஸ் பிரதிநிதிகள் பெரும்பாலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதலில் மந்திரிசபை அமைக்கக் காங்கிரஸ் தலைவர்கள் விரும்பவில்லை. ஆனால், அரசப் பிரதிநிதி யிடம் மந்திரிசபைகளின் முடிவுகளில் கவர்னர்கள் தலையிடுவ தில்லை என்ற உறுதிமொழி பெற்று, சென்னை, பம்பாய், உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசங்களில் காங்கிரஸ் மந்திரிசபை களும், வங்காளம், பஞ்சாப், அசாம் மாகாணங்களில் முஸ்லீம் களும் மற்றவர்களும் உள்ள மந்திரிசபைகளும் பொறுப்பேற்றன. மத்திய அரசாங்கத்தில் சுதேச மன்னர்கள் கூட்டாட்சியை விரும்பாமல், வேண்டுமென்றே காலதாமதம் செய்தனர்.

இந் நிலையில் 1939-ல் இரண்டாவது உலகப் போர் தொடங் கியது. எந்த இந்தியத் தலைவர்களையும் கலக்காமல், இந்தியாவை யுத்தத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் புகுத்தினர். இதை எதிர்த்துக் காங்கிரஸ் மந்திரிசபைகள் பதவியைத் துறந்து, 1940-ல் தனியார் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. அடுத்த வருடம் போர் தீவிரமாகவே, பாரதத்திற்கு யுத்த முடிவில் குடிநாட்டு சுயாட்சி அளிப்பதாகவும், போரில் இந்திய அரசியல் தலைவர்கள் ஒத்துழைக்கவேண்டுமென்றும் சமாதானப் பேச்சுகள் நடைபெற்றன. ஆனால், பலனில்லை. 1942-ல் காந்தியடிகள் 'இந்தியாவைவிட்டு வெளியே போ' என்ற பேரியக்கத்தை ஆரம் பிக்க தேசபக்தர்கள் ஆயிரக்கணக்கில் மீண்டும் சிறைப்பட்டனர்.

இரண்டாவது உலகப் போர் முடிவில் பிரிட்டனில் ஒரு பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதில் யுத்த காலத்தில் பிரதமராக இருந்து பெரு வெற்றி பெற்ற சர்ச்சில் தலைமை பூண்ட கன்செர்வெடிவ் கட்சி தோல்வியுற்றுத் தொழிற் கட்சி வெற்றி பெற்றது. அட்லி தலைமையில் புதிய மந்திரிசபை அமைக்கப் பட்டது. தனது கட்சியின் பலநாட் கொள்கைகளைக் கடைப் பிடித்து, இந்தியாவிற்கு சுதந்திரமளிக்கவேண்டுமென்ற நோக்கத் துடன், மந்திரிகள் குழுவொன்று இந் நாட்டிற்கு அனுப்பப்பட்டது.

அதற்குப் பிரபு பெத்விக் லாரென்ஸ் தலைமை வகித்தார். சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் என்ற நிதி மந்திரியும், கடற்படை மந்திரி பிரபு அலெக்சாண்டரும் அங்கத்தினர்கள். அவர்கள் இந்தியத் தலைவர்களுடன் கலந்து 1946-ல் ஓர் அறிக்கை விடுத்தனர். அதன்படி பாரதம் ஓர் ஐக்கிய அரசாங்கமாக்கப்பட்டு, அந்த அரசாங்கம் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, போக்குவரத்துச் சாதனங்கள் ஆகிய முக்கிய மூன்று துறைகளிலும் பணியாற்றவேண்டுமென்றும், மற்ற அதிகாரங்களனைத்தும் இராச்சிய அரசாங்கங்களுக்கு உரியனவாக இருக்குமென்றும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. இந்தியாவுடன் சேர்ந்து இருக்கமுடியாது. முஸ்லீம் பிரதேசங்களைப் பிரித்துச் சுதந்திரமான ஓர் தனியரசு ஏற்படுத்தவேண்டுமென்று முஸ்லீம் லீக் பெரிய கிளர்ச்சி செய்துவந்தது. அதைத் திருப்தி செய்வதற்காக இராச்சியங்களை மூன்று தொகுதிகளாகப் பிரித்து, வடமேற்கிலும் கிழக்கிலும் முஸ்லீம்கள் பெரும்பாலான தொகுதிகளாகவும் மீதி பாகங்கள் ஒரு தொகுதியாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு கூட்டு அரசாங்கம் ஏற்பட்டு, இராச்சியங்களின் சில பொது அலுவல்களை அது கவனிக்கவேண்டுமென்றும் திட்டத்தில் கூறப்பட்டிருந்தது. பாரதத்தின் புதிய அரசியலை உருவாக்கப் பத்து இலட்சத்திற்கு ஒருவர் வீதம் மாகாண சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், சுதேச மன்னர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளும் சேர்ந்த ஓர் அரசியல் நிர்ணயசபையை அமைத்தல், அது தொகுதிகளாகப் பிரிந்து, தொகுதிகளுக்கும் இராச்சியங்களுக்கும் அரசியல் முறை வகுத்தல், இவ் வேலை பூர்த்தியாகும் வரையில் காங்கிரஸ், லீக் தலைவர்கள்கூடிய ஒரு தாற்காலிக பாரத மந்திரிசபை அமைத்தல் என்பவை மற்ற முக்கிய அம்சங்களாகவிருந்தன. முதலில் இத் திட்டத்தைக் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் முஸ்லீம் லீக் நிர்வாக சபையும் ஏற்றுக்கொண்டன. அரசியல் நிர்ணய சபைக்கு 1946 செப்டம்பரில் தேர்தல்கள் நடைபெற்றன.

ஆனால், அந்தச் சபை கூடுவதற்கு முன் தொகுதிகளைப்பற்றித் தீவிர அபிப்பிராயபேதங்கள் ஏற்பட, முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த பிரதிநிதிகள் அதில் கலந்துகொள்ள மறுத்தனர்; மந்திரிசபையில் ஒத்துழைக்கவும் முதலில் லீக் தலைவர் ஜின்னு மறுத்தார். ஆனால், பின்னர் அதற்குத் தமது சகாக்களை அனுப்பி, உள்ளிருந்து முட்டுக்கட்டை போட ஏற்பாடு செய்தார். அந்த மந்திரிசபை நாட்டில் இந்து-முஸ்லீம் வேற்றுமை அதிகரிப்பதற்கே காரணமாக இருந்தது. இரண்டு சமூகங்களுக்குமிடையே பல இடங்களில் கொடிய கலகங்கள் ஏற்பட்டபொழுது, அவற்றைத் தடுக்க முடியவில்லை.

பாரதத்தைப் பிரித்து, இரண்டு தனி அரசுகளாக்குவதொன்றே வழியென்று காங்கிரஸ் தலைவர்களுக்குப் புலப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் அவ்வாறே எண்ணினர். முஸ்லீம் லீக்கோ இதையே கோரியது. ஆதலால், மேற்கில் சிந்து, எல்லைப்புற மாகாணம், பஞ்சாபின் மேற்கு பாகங்கள் அடங்கிய பிரதேசங்களும், கிழக்கில் வங்காளத்தின் கிழக்கு பாகமும், அஸ்ஸாமில் ஒரு ஜில்லாவும் சேர்ந்து பாக்கிஸ்தான் என்ற பெயரில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள ஒரு தனி அரசு அமைக்கப்பட்டது.

மீதி மாகாணங்கள், 'இந்தியா' என்ற பழம் பெயரில் தனி அரசாக்கப்பட்டது. இவ்வாறு செய்து, இவ்விரண்டு அரசுகளுக்கும் குடிநாட்டு அந்தஸ்து அளித்து, பிரிட்டிஷ் சாம்ராச்சியம் 1947 ஆகஸ்டு 15ஆம் தேதி தனது அரசுரிமையைத் துறந்தது. அன்று முதற்கொண்டு பாரத அரசியல் நிர்ணய சபையே இந்திய பார்லிமென்டாகவும் பணிபுரிந்து, ஜவஹர்லால் நேருவின் தலைமையில் மந்திரிசபை அதற்குட்பட்டு ஆட்சிபுரியலாயிற்று.

சுதேச மன்னர்களின் இராச்சியங்களுக்கும் சுதந்திரம் அளிக்கப்பட்டது. ஆனால், இந்தியாவுக்குட்பட்ட இராச்சியங்களை வெகு சாமர்த்தியமாகவும் துரிதமாகவும் இணைத்து, மன்னர்களுக்குத் தாராளமான மானியங்களும் சலுகைகளும் அளித்து, ஓர் கட்டுப்பாடுள்ள நாடாக்கி, உள்நாட்டு மந்திரியான சர்தார் படேல் பாரதத்திற்கு ஒரு புதிய வாழ்வளித்தார்.

பிரிவினைக்குப்பின் பாரதம், பாக்கிஸ்தான் இவற்றின் வடக்கு, மேற்கு எல்லைப்புறங்களில் பெரிய இந்து முஸ்லீம் கலகங்கள் மூண்டு, இலட்சக்கணக்கான இந்துக்களும் சீக்கியர்களும் பாக்கிஸ்தானில் உள்ள வீடு, நிலம் முதலிய சொத்துகளை இழந்து, இந்தியாவிற்கு ஓடிவந்தனர். இந் நாட்டிலிருந்து ஏறக்குறைய அதே எண்ணிக்கையுள்ள முஸ்லீம்கள் பாக்கிஸ்தானில் அடைக்கலம் புகுந்தனர். இக் குழப்பத்தில் பல்லாயிரம் பேர் இருபுறத்திலும் மாண்டனர்.

இந்து-முஸ்லீம் கலகங்கள் தீவிரமாக இருந்தபொழுது, பாக்கிஸ்தானில் இந்துக்கள், சீக்கியர்மீது செய்யப்படும் கொடுமைகளுக்காக இந்திய முஸ்லீம்கள்மீது வஞ்சம் தீர்க்கக்கூடாது, அவர்களைச் சகோதரர்களாகவே பாவித்துப் பாதுகாக்கவேண்டுமென்று மகாத்மா காந்தி ஓயாமல் பிரசாரம் செய்துவந்தார். இதைப் பொறுக்காமல், 1948 ஜனவரி 30ஆம் தேதி அவர் பிரார்த்தனையில் இருக்கும்பொழுது, ஒரு வெறிபிடித்த இந்து வாலிபன் சுட்டுக் கொன்றுவிட்டான்.

இவ்விதம் கொடிய சம்பவங்களால் பாரதம் தவித்துக்கொண்டிருந்த சமயத்திலும், அரசியல் நிர்ணய சபை தனது பணியை இடைவிடாது தொடர்ந்து செய்து, 1949 நவம்பர் 26ஆம் தேதி இந்திய அரசியல் திட்டத்தை முடித்து, எல்லா அங்கத்தினர்களும், அதன் வாசகங்களடங்கிய புத்தகத்தில் கையெழுத்திட்டனர். அந்த அரசியல் அமைப்பு 1950 ஜனவரி 26ஆம் தேதி அமலாயிற்று. அதனால், பாரதம் ஒரு சுதந்திரக் குடியரசாயிற்று. ஆண்டுதோறும் ஜனவரி 26ஆம் தேதி குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

# 3. ஆட்சி உரிமை

இந்திய அரசியல் அமைப்புப் பின்வரும் வாசகத்துடன் தொடங்குகிறது: 'பாரத மக்களாகிய நாம் பாரதத்தை ஒரு பூரண சுய ஆட்சியுள்ள குடியரசாக்க முடிவு செய்திருப்பதால்.'

அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தை முதன்முதலில் ஏற்பாடு செய்த பதின்மூன்று இராச்சியங்களின் பிரதிநிதிகள் செய்த பிரசித்திபெற்ற பிரகடனம் அடியிற் கண்டவாறு:

'மக்களின் சம்மதத்தின்பேரிலேயே அவர்கள்மீது ஆட்சிபுரிய அரசாங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆட்சியின் நியாயமான அதிகாரங்கள் மக்களாலேயே வழங்கப்பட்டிருக்கின்றன. பொது மக்களின் நலன்களை எவ்வித ஆட்சியும் புறக்கணிக்குமேயாகில், அதனை மாற்றியோ, அகற்றியோ, வேறு ஆட்சியை நிறுவ மக்களுக்கு முழு உரிமை உண்டு.

பாரத அமைப்பில் கூறப்பட்டது அயல் நாடுகளுக்கெதிரான அரசுரிமை. அமெரிக்க ஐக்கிய நாட்டின் அமைப்பிலே நாட்டிற்குள் உலவும் உரிமை வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. எல்லாச் சுதந்திர தேசங்களுக்கும் வெளிப்புற அரசுரிமை பொதுவானது. ஆனால், உட்புற அரசுரிமையோ அரசியலமைப்பைப் பொறுத்திருக்கும். இவ்விரண்டு அம்சங்களையும் தனியாக ஆராய்வது அவசியமாகும்.

மற்ற எந்த வெளிநாட்டின் அரசும் தன்மீது எவ்வித அதிகாரத்தையும் செலுத்த உரிமை இல்லை என்பதே வெளிப்புற அரசுரிமை. எந்த சுதந்திர ஆட்சியும் வெளிவிவகாரங்களில் தன் விருப்பப்படியே நடந்துகொள்ள அதிகாரமுண்டு என்று வாதிக்கிறது.

மற்றோர் ஆட்சியின் போக்கு இதற்குத் தடையாக இருப்பின், எந்த ஆட்சியும் எதிர் ஆட்சிக்குத் தலைவணங்கச் சம்மதிக்காது. இரண்டும் மற்றுமோர் பொதுவான உலக அதிகாரத்திற்கும் கீழ்ப் படியமாட்டா. தகராறுகளைச் சமநிலையில் வாதித்து ஒத்துப்போக வேண்டும்; அல்லது இரண்டு அரசும் ஒப்பி ஒரு மத்தியஸ்தர்மூலம் தீர்த்துக்கொள்ளவேண்டும். இவ்விரண்டிலும் தீராவிட்டால், போர் புரிந்து வெற்றிபெறும் ஆட்சியின் நிபந்தனைகளுக்குத் தோல்வியுற்ற ஆட்சி பணிந்துபோகவேண்டும். நாடுகளின் அரசுரிமை, போரையே தனது அதிகாரத்தின் முடிவான ஆயுதமாகக் கருது கின்றது. இதைப்பற்றி ஒரு பிரபல ஆசிரியர் ஃப்ரீட்மன் பின்வரு மாறு எழுதுகிறார்:

'இவ்வித அரசுரிமை அடிப்படையான அரசியல், பொருளா தார, சைனிய சக்திகளைப் பொறுத்திருக்கின்றது. பேரரசுகளும், சிற்றரசுகளும், வல்லரசுகளும், வலிமையற்ற அரசுகளும் என்று மிருக்கின்றன. ஆனால், நமது காலத்தைப்போல் எப்பொழுதும் இவற்றில் ஏற்றத்தாழ்வுகள் மலைக்கும் மடுவுக்கும்போல் இருந்த தில்லை. இப்பொழுது வெகு சில அரசுகளே உண்மையான அரசுரிமை பெற்றிருக்கின்றன; மற்ற அரசுகள் இவ் வல்லரசு களின் தயவிலேயே வாழவேண்டியிருக்கின்றன. இவ்வுண்மை வெட்டவெளிச்சமாகத் தற்சமயம் காணப்படுகிறது.'

ஆதலால், மற்ற அரசுகளுக்கு எதிராகப் பூரண அரசுரிமை வாக்களவில் வாதிக்கப்பட்டபோதிலும், அதன் உண்மையான அளவு மற்ற அரசுகளின், முக்கியமாக நாட்டைச் சுற்றியுள்ள அரசுகளின் சைனிய, பொருளாதார பலத்தைப் பொறுத்திருக் கிறது. பாரதத்திற்கும் சீன பாக்கிஸ்தான் அரசுகளுக்கும் சமீப காலத்தில் ஏற்பட்ட தகராறுகளே இதற்குப் போதிய சான்றாகும்.

காஷ்மீரத்தைப்பற்றியே இந்தியா, பாக்கிஸ்தான் இரண்டுக்கு முள்ள முக்கியத் தகராறு. 1947 ஆகஸ்டு 15ஆம் தேதி இந்தியா பிரிக்கப்பட்டு இரண்டு தனி நாடுகளாக்கப்பட்டபொழுது காஷ்மீரம் இரண்டிலும் சேரவில்லை. வேண்டுமானால் இரண்டில் ஒன்றில் சேரலாம் அல்லது தனி இராச்சியமாகக்கூட இருக்க உரிமையுண்டு என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கூறிவிட்டது. அப்பொழுது காஷ் மீரத்தின் அரசு ஓர் இந்து மகாராஜாவிடமிருந்தது. அவர் முதலில் தனி இராச்சியமாகவே இருக்க விரும்பி, பாகிஸ்தான் இந்தியா

இரண்டின் புதிய அரசாங்கங்களோடு முன்னிருந்த தொடர்புகள் நீடித்திருக்க ஒப்பந்தம் செய்துகொண்டார். பாகிஸ்தானுக்கு இது பிடிக்கவில்லை; மறைமுகமாக பலாத்காரத்தைக் கையாண்டு, காஷ்மீரத்தைப் பாகிஸ்தானோடு இணைக்க விரும்பியது. அதற்காக எல்லைப்புறவாசிகளில் முரடர்களைத் தூண்டிவிட்டு, அவர்களுக்கு ஆயுதங்கள் கொடுத்து காஷ்மீரத்தின்மீது படையெடுக்க ஏற்பாடு செய்தது. இந்து மன்னன் பெரும்பாலான முஸ்லீம்களை அக்கிரமமாக நடத்துவதாகச் சாக்குச் சொல்லி, அவர்கள் பெரும் எண்ணிக் கையில் புகுந்து, போகுமிடமெல்லாம் கொள்ளையடித்து அட்டூழியங்கள் செய்தனர்.

இராச்சியத்தின் தலைநகரான ஸ்ரீநகருக்கு 250 மைல் தூரத்திலுள்ள பாராமுல்லாவை அடைந்து, அதைக் கொள்ளையடிக்கும்பொழுது காஷ்மீர் மகாராஜா திகிலடைந்தார்.

மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய காஷ்மீர தேசீய மகாநாட்டையும் அதன் தலைவரான ஷேக் அப்துல்லாவையும் கலந்து ஆலோசித்து, அவர்களின் சம்மதத்துடன் இந்தியாவிடம் உதவி கோரினார். காஷ்மீரம் இந்தியாவோடு இணைந்தாலன்றி அவ்வித உதவியளிப்பது சாத்தியமில்லை என்று அறிந்தவுடன் அப்படியே இணைவதற்குச் சம்மதித்தார்.

உடனே பாரத சைனியம் விமானமூலம் ஸ்ரீநகர் சேர்ந்து கொள்ளைக்காரர்களைத் துரத்தியது. தமது சூழ்ச்சி பலிக்கவில்லை என்று கண்டவுடன், பாகிஸ்தான் அரசாங்கத்தார் தமது சைனியத்தை அனுப்பி, அந்த இராச்சியத்தின் மேற்கு பாகத்தை ஆக்கிரமித்துக்கொண்டனர். இரண்டு நாடுகளுக்கும் கொடிய போர் மூளும் நிலையில், பிரிட்டிஷ் கவர்னர்-ஜெனரலான மௌன்ட்பாட்டன் பிரபுவின் ஆலோசனையின்பேரில், உலக ஐக்கிய நாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு சபைக்கு பாகிஸ்தான் ஆக்கிரமிப்பைப்பற்றி பாரத சர்க்கார் புகார் செய்தனர். அதன் தீர்மானத்திற்கு இணங்கி, இரு சைனியங்களும் தாம் இருந்த இடத்திலேயே இருப்பதற்கும், அந்த எல்லையைக் கண்காணிப்பதற்காகப் பாதுகாப்புச் சபையின் பார்வையாளர் நியமிக்கப்படுவதற்கும் ஒப்புக்கொண்டனர். பின்னர் இரு நாடுகளுக்குமுள்ள தகராறைப்பற்றி ஆலோசிக்கப்பட்டபோது, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பைப்பற்றி அதிகக் கவனம் செலுத்தாமல், காஷ்மீரம் இந்தியாவோடு இணைந்ததற்கு அதன் மக்களின் சம்மதம் நேரடியான வாக்களிப்பால் உறுதியிட வேண்டும் என்று பாதுகாப்புச் சபை தீர்மானித்தது. இதற்கு முன் நிபந்தனையாக இரு சைனியங்களும் ஜம்மு காஷ்மீரத்தைவிட்டு

அகலவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. இது சாத்தியமில்லா மல்போகவே, வாக்கெடுப்புப் பிரச்சினை அமலாகவில்லை. இதற்கு மத்தியில், அந்த இராச்சியத்தின் அரசியல் திட்டத்தைத் தயாரிக்க ஓர் அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டு, அதன் முடிவின்படி மற்ற பாரத இராச்சியங்களைப்போல் ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது.

இவ்விதம் காஷ்மீரம் இந்தியாவின் ஒரு பாகமாக உறுதியாவதைக் கண்டு வெறிபிடித்து, பாகிஸ்தான் 1965-ல் மீண்டும் ஓர் இரகசியப்படை தயாரித்து, உள்நாட்டுக்கலகம் செய்ய அனுப்பியது. அது பலிக்காமல்போகவே, தனது சைனியத்தை அவர்களுக்குச் சாதகமாக அனுப்பியது. உடனே பாரத சைனியம் லாகூர் பிரதேசத்தில் நுழைந்து வெற்றியுடன் முன்னேறியது. இப் போர் முற்றிவிடுவதற்கு முன், மீண்டும் பாதுகாப்புச் சபை குறுக்கிட்டு, யுத்தத்தை நிறுத்தி, இரு சைனியங்களும் தங்கள் பழைய எல்லைகளுக்குத் திரும்பவேண்டுமென்று தீர்மானித்தது.

இதையொட்டி ருஷியத் தலைவர் கோசிஜினின் அழைப்பிற்கிணங்கி, பாகிஸ்தான் தலைவர் ஆயூப்கானும் பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும் தாஷ்கண்டில் சந்தித்து, இனி இத் தகராறைத் தீர்க்க பலாத்காரம் உபயோகிப்பதில்லை என்றும், சைனியங்கள் பாதுகாப்புச் சபை தீர்மானப்படி பழைய எல்லைகளுக்குப் பின்செல்லவேண்டுமென்றும் காலவரையறுத்து ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் எல்லைகள் நிச்சயமாக வகுக்கப்படவில்லையென்றும், தனக்குட்பட்ட திபெத்தின் பாகங்களை பிரிட்டிஷ் சாம்ராச்சியம் பலாத்காரமாக வசப்படுத்திக்கொண்டதென்றும் சாக்குச் சொல்லி, 1962ஆம் ஆண்டில் சீன அரசாங்கத்தார் இந்தியாவின் வட எல்லையில் பரந்த தேசத்தை ஆக்கிரமித்துப் பிடித்துக்கொள்ளத் தொடங்கினர். அக் கூற்றை மறுத்து, பாரத அதிகாரிகள் அதை எதிர்க்கவே, இரு நாடுகளுக்குமிடையே போர் தொடங்கியது. அதற்குப் போதிய தயாரிப்பு இல்லாமையால் பாரதத் துருப்புகள் பின்வாங்கவே, சீனர்கள் அஸ்ஸாம் இராச்சியத்தின் ஒரு பகுதியைக்கூடச் சிறிதுகாலம் தம் வசமாக்கிக்கொண்டிருந்தனர். ஆனால், அவ்விடங்களைக் காலிசெய்துவிட்டு எல்லைப் புறத்தில்மட்டும் ஆயிரக்கணக்கான சதுர மைல்கள் பரவியுள்ள பிரதேசத்தில் தமது சைனியத்தை நிறுத்தி வைத்திருக்கின்றனர். பல ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் கூடி மத்தியஸ்தமாகக் கூறிய யோசனைகளை பாரதம் ஏற்றுக்கொண்டபோதிலும், சீனா அங்கீகரிக்க

வில்லை. இப்பொழுதும் போர் நிறுத்தப்பட்டிருந்தும், சமாதான மில்லை. திடீரென்று சண்டை ஆரம்பமாகக்கூடும்.

இவ்விரண்டு உதாரணங்களிலிருந்து, வெறும் சட்டபூர்வமான அரசுரிமை போதிய சைனிய பலத்தால் தாங்கப்பட்டாலொழிய அதிகப் பிரயோஜனமில்லை என்பது தெளிவாகும். தற்காலத்திய ஆயுத முற்போக்கினால், அமெரிக்க ஐக்கிய நாடு, ருஷியா இரண்டுமே தமது அரசுரிமையைத் தனியாகப் பாதுகாக்க வல்லமை யுள்ளன. மீதி நாடுகளுக்கு அது சாத்தியமில்லை. இதனால், உலக ஐக்கிய நாட்டு சங்கத்திற்குப் புதிய செல்வாக்குக் கிடைத் திருக்கிறது. எந்தப் பிரச்சினையில் இவ்விரண்டு வல்லரசுகளும் சேர்ந்து டிமுவு செய்கின்றனவோ, அந்த அளவே உலக சங்கமும் அமல் செய்ய முடியும். ஆனால், அவை ஒத்துப்போகும் பிரச்சினைகள் வெகு குறைவாகவும், ஒத்துப்போகாமல் முரண் படும் பிரச்சினைகள் பெரும்பாலாகவும் இருப்பதால், உலக சமா தானம் தத்தளித்துக்கொண்டேயிருக்கின்றது.

ஒரு நாட்டின் அரசுரிமை, ஒப்பந்தங்களாலும், சர்வதேசப் பிரதி நிதிகள் கூடிச் செய்யும் முடிவுகளாலும் பல துறைகளில் வரையறுக் கப்பட்டிருக்கும். தபால் தந்தி, விமானப் போக்குவரத்து, ஆகாச வாணிப் பிரசாரம் முதலிய துறைகளில் அவ்வித ஒப்பந்தங்கள் நிலவி வருகின்றன.

ஆதலால், பிற நாடுகளுடன் தொடர்பில், தெளிவாக உள்ள அரசுரிமை இல்லையென்றும், அதை அதிகம் வற்புறுத்துவதால் உல கத்திற்கு அபாயமென்றும் எல்லா அறிவாளிகளும் ஒப்புக்கொள்ளு கின்றனர். ஓர் உலக அரசாங்கம் உருவாகி, அதில் எல்லா நாடு களும் அங்கத்தினர்களாகி, சமாதானத்தைப் பாதுகாக்கவும் தகராறு களைத் தீர்க்கவும் அதற்குச் சட்டப்படி உரிமையும், அதை அமல் செய்யப் போதிய சைனிய செல்வ சாதனங்களும் அதற்குக் கிடைத் தாலொழிய, இந்தக் குழப்பமான நிலை தீராது. அவ்வித அரசாங்கம் சமீபத்தில் உருவாகும் என்று எண்ணுவதற்கிடமில்லை. நாடுகளுக் கிடையில் இருந்துவரும் பகைகளும், ஏற்றத் தாழ்வுகளும், அசூயை களும் பேரளவு குறையும்வரையில், அவ்வப்போது தாற்காலிகமாக வழிகளை நாடித் தனது சுதந்திரத்தை ஒவ்வோர் நாடும் பாதுகாக்க வேண்டும்.

உள்நாட்டு அரசுரிமையைப்பற்றி இப்பொழுது சிந்திப்போம். சர்வாதிகாரமுள்ள அரசனோ, ஏதேச்சாதிகாரியோ ஆனாலும், நாட்டில் அரசுரிமை முற்றிலும் அந்த அரசனிடத்திலோ, ஏதேச்

சாதிகாரியினிடத்திலோ இருக்கிறதென்று கூறலாம். நடவடிக்கையில் இது முற்றிலும் உண்மையாகாது. அரசன் சமூகத்தின் பழக்க வழக்கங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் பணிந்தே போகவேண்டும். பாரதத்தில் தர்மசாஸ்திரங்களை அனுசரிக்காத மன்னனுக்கெதிராக மக்கள் புரட்சி செய்தனர். ஐரோப்பாவில் அரசன் மத ஸ்தாபனங்களோடு விரோதம் கொண்டால் அது அவனை ஆபத்தில் வீழ்த்தும். எதேச்சாதிகாரி தனது சைனியத்தின் ஆதரவையும், ஒரு கட்சித் தலைவனாகவிருந்தால் அதன் விருப்பத்தையும் நாடவேண்டும். சமீப காலத்தில் குருஸ்சேவ், பென்பெல்லா, நிக்ருமா முதலிய எதேச்சாதிகாரிகளின் கதி இதற்கு உதாரணமாகும். சுகர்னோவின் தற்போதைய நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது. சர்வாதிகாரிகளின் ஆட்சியில், மக்களின் மனோபாவங்களும் உணர்ச்சிகளும் பத்திரிகைகள் வாயிலாகவோ, பொதுக்கூட்டங்கள் மூலமாகவோ வெளிப்படுவதில்லை; உள்ளே புகைந்துகொண்டு திடீரென்று புரட்சியில் பிரதிபலிக்கின்றன.

மக்கள் ஆட்சியில், அரசுரிமை எங்கிருக்கின்றது என்பதை நிச்சயிப்பது சுலபமன்று. முடிவில் அது பொதுமக்களிடமே இருக்கின்றது என்று கூறவேண்டும். ஆனால், அந்த அரசுரிமை, நடவடிக்கையில் அரசியல் அமைப்பு அல்லது சம்பிரதாய முறைகளிலேயே அமல் செய்யப்படவேண்டும். அதன் போக்கைப் பின்வரும் முக்கியப் பிரச்சினைகளில் ஆராய்ந்தால் அதன் தன்மை விளங்கும்:

1. அரசியல் அமைப்பை மாற்றுதல் ;
2. போரும் சமாதானமும்;
3. சட்டம் இயற்றுதல்; 4. நிர்வாகம்; 5. நியாயம்.

பிரிட்டனில் எழுத்துமூலம் வரையறுக்கப்பட்ட அரசியல் அமைப்பில்லை. அது சம்பிரதாயமூலமாகவே நடைபெறுகின்றது. தத்துவ ரீதியில் பார்ப்போமானால், எல்லா அரசுரிமையும் பரம்பரையாக ஆண்டுவரும் மன்னன் வசமிருக்கிறதென்று கூறலாம். ஆனால், பல நூற்றாண்டுகளின் அரசியல் வரலாற்றின் பலனாக, அவனுக்கு உண்மையாக எள்ளளவும் அரசுரிமை இல்லை. எல்லா அதிகாரங்களும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திடமே குவிந்திருக்கின்றது. பாராளுமன்றத்தின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதால் பிரிட்டிஷ் பொதுமக்களிடமே அது இருக்கிறது என்று வாதிக்கலாம். ஆனால், அவர்கள் தேர்தலில் பங்கெடுத்துக்கொள்வதைத் தவிர, மேற்கூறிய எந்த முக்கிய அரசியல் விவகாரத்திலும் நேரில் பங்கெடுத்துக்கொள்ளவோ, முடிவு செய்யவோ வழியில்லை. பொதுத் தேர்தல் காலத்தில் போட்டியிடும் இருபெருங் கட்சிகளும்,

தமது கொள்கைகளையும் திட்டங்களையும் பிரகடனம் செய்து, மக்களின் ஆதரவைத் தேடுகின்றன. தேர்தல் முடிந்தபின், வெற்றி பெற்ற கட்சி தனது உறுதிமொழிகளின்படி செயல்புரியாவிட்டால், அடுத்த தேர்தலில் அதைத் தோற்கடிப்பதைத் தவிர தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய மக்களுக்கு வேறு வழியில்லை. பார்லிமென்டு எவ்விதச் சட்டமும் செய்யலாம். சாதாரணமாக அது நியாய பரிபாலனத்தில் தலையிடுவதில்லை. ஆனால், நியாயங்களை மாற்றியமைப்பதற்கும், நீதிபதிகளை நீக்குவதற்கும் அதற்கு உரிமையுண்டு. பிரபுக்களைக் கொண்ட மேல்சபையின் ஒரு குழுவே சர்வோத்தம நீதிமன்றமாகவும் இருக்கின்றது.

பார்லிமென்டின் அரசுரிமைக்கு இரண்டு வரம்புகளிருக்கின்றன. பெரும்பாலருள்ள கட்சி ஆட்சி புரிவதால், அக் கட்சியின் தலைவர்களடங்கிய நிர்வாக சபை (காபினெட்) விரும்பியபடியே பார்லிமென்ட் பணி புரியவேண்டும். காபினெட்டின் முறைகளையோ, அது கோரும் சட்டங்களையோ, விரும்பும் செலவுகளையோ நிராகரித்தால், ஆட்சி குலைந்து வேறு ஆட்சி ஏற்பட வேண்டும் அல்லது பார்லிமென்டு கலைக்கப்பட்டுப் பொதுத்தேர்தல் நடைபெறவேண்டும். ஆதலால், அரசுரிமை முதலில் ஆட்சி புரியும் நிர்வாக சபையிடமே இருக்கிறது என்று கூறுவதில் தவறில்லை. ஆனால், காபினெட்டை நிராகரிப்பதற்குப் பார்லிமென்டுக்கு அதிகாரமிருப்பதால் நிரந்தரமாக அது பார்லிமென்டிடம் இருக்கிறது என்பதே சரி.

ஆளுங் கட்சியில் பிளவு ஏற்பட்டு, அதன் பெரும்பான்மை குன்றிவிட்டால், புதிய காபினெட் ஏற்படுத்தலாமா அல்லது பார்லிமென்டைக் கலைக்கவேண்டுமா என்று முடிவு செய்வதில் மன்னனுக்கு ஓர் அளவு பொறுப்பு இருக்கிறது. ஆனால், இந்த அதிகாரம் மிகவும் அரிய சந்தர்ப்பங்களிலேதான் உதவும்.

அமெரிக்க ஐக்கிய நாடு, பாரதம் இரண்டிற்கும் எழுத்துமூலம் வரையறுக்கப்பட்ட அரசியல் அமைப்புகள் இருக்கின்றன. அவற்றின் ஆரம்பத்தில் பொதுமக்களிடமே அரசுரிமை உள்ளது என்பது தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அமெரிக்க அமைப்பில், 'அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களாகிய நாங்கள் ஒரு சிறந்த ஐக்கிய அரசாங்கம் ஏற்படுத்துவதற்காக இந்த அரசியல் அமைப்பை உருவாக்கி நிறுவியுள்ளோம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்திய அமைப்பிலோ, 'பாரத மக்களாகிய நாங்கள் இந்த அரசியல் அமைப்பை ஏற்று, சட்டமாக்கி, எமக்கே கொடுத்திருக்கிறோம்' என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆயினும், அமெரிக்க திட்டத்தை உருவாக்கிய சபையோ, இந்திய திட்டத்தை நிறுவிய நிர்ணய சபையோ பொதுமக்களின் நேர் வாக்கால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. பதின்மூன்று இராச்சியங்களின் பிரதிநிதிகள் கூடி அமெரிக்கத் திட்டத்தை வகுத்தனர். பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்த மாகாணங்களின் சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக்கொண்டே அரசியல் நிர்ணய சபை இந்திய அமைப்பை உருவாக்கியது. தத்துவரீதியில் பொது மக்களின் பிரதிநிதிகளால் செய்யப்படாவிட்டாலும், இரண்டு அரசியல் அமைப்புகளும் மக்களின் முழு ஆதரவைப் பெற்றன என்பதில் ஐயமில்லை.

இரண்டு அமைப்புகளும் ஐக்கிய அரசாங்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனால், இவற்றிற்குள் ஒரு முக்கிய வேற்றுமையுண்டு. அமெரிக்க அரசியல் அமைப்பு மத்திய அரசாங்கத்தின் நிர்மாணத்தையும், அதன் அதிகாரங்களையும் பணிகளையுமே கூறுகிறது. அதன் அங்கங்களான இராச்சியங்களின் அரசியல் அமைப்பைப்பற்றி எவ்விதக் குறிப்புமில்லை. ஒவ்வோர் இராச்சியமும் தனது அமைப்பை உருவாக்க உரிமை பெற்றுள்ளது.

இந்திய அரசியல் அமைப்பிலோ மத்திய, இராச்சிய அரசியல் அமைப்புகள், அவற்றின் அதிகாரங்கள், உரிமைகள், பணிகள் முதலிய எல்லா விவரங்களும் உறுதியாகவும் விரிவாகவும் விதிக்கப்பட்டிருக்கின்றன.

எவ்விதப் பிரச்சினையும் நேரில் மக்களின் வாக்கால் தீர்மானிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை இரு அமைப்புகளிலும் இல்லை.

இவ்விரண்டு அமைப்புகளுக்குமுள்ள மற்ற முக்கிய வேற்றுமைகளாவன: அமெரிக்கத் திட்டத்தின்படி அதிபர் நான்கு வருடத்திற்கொருமுறை தேர்ந்தெடுக்கப்படுவர். மக்கள் சபை இரண்டு வருடத்திற்குப் பிறகு கலைந்து புதிய தேர்தல் நடைபெறும். மேல் சபையாகிய செனட்டுக்கு ஒவ்வோர் இராச்சியத்தின் மக்களும் இரண்டு பிரதிநிதிகளை 6 வருட காலத்திற்குத் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால், அந்தச் சபையின் மூன்றில் ஒரு பாகம் இரண்டு வருடத்திற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டு, எப்பொழுதும் முற்றிலும் கலைக்கப்படாமல் ஒரு நிரந்தர சபையாக இருக்கும். இராச்சியங்களிலும் கவர்னர், சட்டசபைகள் இவ்விதமே அமைந்திருக்கின்றன. ஆகவே, மத்திய அரசாங்க நிர்மாணத்தில் மக்களுக்கு மூன்று விதங்களில் நேரடியான பங்கு உண்டு. இராச்சிய அரசாங்கங்களிலோ பல உயர் அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்படுவதால், பல்விதங்களில் மக்கள் பங்கெடுத்துக்கொள்கின்றனர்.

பாரதத்திலோ மத்திய லோகசபை, ராஜ்ய மக்கள் சபை (அசெம்பிளி) இவற்றின் தேர்தல்களில்மட்டுமே மக்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நேரடியான உரிமையுண்டு. மேல் சபைகளும் பாரத ஜனுதிபதியும் சட்டசபை அங்கத்தினர்களாலும். மற்றும் குறுகிய தொகுதிகளாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அமெரிக்க ஐக்கிய அரசியல் அமைப்பை இரு முறைகளில் திருத்தியமைக்கலாம். அதன் காங்கிரசின் இரு சபைகளும் மூன்றில் இரண்டு பங்குகொண்ட பெரும்பாலரால் அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் குறைந்தது முக்கால்வாசியான ராஜ்யங்களின் சட்ட சபைகள் அத் திருத்தங்களை ஏற்கவேண்டும்; அல்லது, மூன்றில் இரண்டு பங்கு ராஜ்யங்களின் விண்ணப்பத்தின்பேரில் ஓர் அரசியல் திருத்த மகாநாடு (கன்வென்ஷன்) கூட்டி, அதன் முடிவை நாலில் மூன்று பங்கு ராஜ்யங்கள் ஏற்கவேண்டும். இரண்டாவது முறை இதுவரை கையாளப்படவில்லை.

பாரத அரசியல் அமைப்பின்படி, பார்லிமெண்டின் இரு சபை களும் தனியாகத் தனது மொத்த அங்கத்தினர்களில் பெரும்பால ராலும், விவாதத்தின்போது பிரசன்னமாகியிருக்கும் அங்கத்தினர் களில் மூன்றில் இரண்டு பங்கு நபர்களாலும் ஆதரிக்கப்பட்டால், அமைப்பு விதிகளில் திருத்தம் செய்யலாம். 368ஆவது விதியில் குறிப்பிட்ட சில விதிகளுக்குமட்டும், அதனுடு ராஜ்ய சபைகளில் பெரும்பான்மை அத் திருத்தத்தை ஆதரிக்கவேண்டும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில், காங்கிரசின் இரு சபைகளின் சம்மதத்தின்பேரிலேயே போர் தொடுக்கலாம். பிரசிடெண்டும் செனட் சபையும் சேர்ந்து சமாதானமும் ஒப்பந்தங்களும் செய்யக் கூடும்.

இந்தியாவில், பிரிட்டிஷ் சம்பிரதாயங்களை அனுசரித்து, மத்திய நிர்வாக சபை, ஜனுதிபதியின் பெயரில் போர் தொடுக்கவும். சமாதானம் செய்யவும், ஒப்பந்தங்களுக்குச் சம்மதிக்கவும் அதி காரம் பெற்றிருக்கின்றது. ஆனுல், பார்லிமெண்டின் சம்மதத்தைக் கூடிய சீக்கிரம் பெறவேண்டும். இல்லாவிட்டால், அதற்கு ஆபத்து ஏற்பட்டுவிடலாம்.

மற்றும் சட்டமியற்றுதல், நிர்வாகம், நியாயம் வழங்குதல் இவற்றில் பல வேற்றுமைகளுண்டு. அவை நூலின் அந்தந்தப் பகுதிகளில் குறிப்பிடப்படும்.

பொதுவாக அமெரிக்கப் பொதுமக்களுக்குப் பாரத மக்களைக் காட்டிலும் அதிகமான அரசுரிமையுள்ளதென்று கூறத்தகும்.

# 4. அற வேர்கள்

மக்கள் ஆட்சிக்கு மூன்று தளங்கள். அற வேர்கள் கொண்ட அடித்தளம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அதற்கு மேலுள்ள அரசியல் அமைப்பும் முறைகளுமே தெளிவாகத் தோன்றும். மேலும், அவை பல பாகங்களாக விரிந்தும் சிக்கலாகவும் இருப்பதால், அவற்றைப்பற்றி ஆராய்வதும், விவரிப்பதும், விவாதிப்பதும் ருசிகரமாகவிருக்கும். ஆதலால், அவற்றின்மீதே அரசியலைப்பற்றிச் சிந்திப்போர்களும், அதில் ஈடுபடுவோர்களும் அதிகக் கவனம் செலுத்துவதில் ஆச்சரியமில்லை.

ஆயினும், ஓர் மக்கள் ஆட்சி நிலைத்து நிற்பதற்கும், நன்ருகச் செயல் புரிவதற்கும் அதன் அற வேர்களே மூல காரணங்களாவன.

எந்த மனித சமூகத்திற்கும் முக்கிய அம்சம் அதன் தனி மனிதர்களே. மற்றச் சமூக ஸ்தாபனங்களும் ஏற்பாடுகளும் அவர்களின் நலத்திற்காகவே நிறுவப்படுகின்றன. ஆதலால், அவை சமூகத்திலுள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயது வந்தோர், முதியோர் ஆகிய அனைவரின் சக்திகளைத் திரட்டியும் குணங்களைப் பெருக்கியும், ஒற்றுமையை வளர்த்தும் நலம் புரியுமளவே பயனுள்ளவையாகும். இதற்கு மாருக, வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் எந்த அமைப்பும் முறையும் தீயவையே.

மனிதத் தன்மையை ஓங்கச் செய்யும் குணங்களாவன: 1. சுயமரியாதை, 2. சுதந்திரம், 3. சமத்துவம், 4. தீமைகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் பாதுகாப்பு. மக்கள் ஆட்சியில் எவருக்கும் விலக்கின்றி எல்லாப் பிரஜைகளுக்கும் இவை உரியவாக இருக்கவேண்டும். நாட்டின் பிரஜையல்லாது, வேறு நாடுகளிலிருந்து வந்திருப்பவர்களுக்கு இவ் உரிமைகள் எல்லாம் மறுக்கப்படவேண்டுமென்பது நியாயமில்லை. ஆனல், பிரஜைகள் அரசாங்கத்திற்கும் அதன் சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டிருப்

பதால், அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சில வேற்றுமைகள் தவிர்க்க முடியாதன.

எழுத்துமூலம் வரையறுக்கப்பட்ட பல அரசியல் அமைப்புகளில் அடிப்படையான பிரஜா உரிமைகள் விதிகளாக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடு, பாரதம் இரண்டின் அமைப்புகளில் இந்த மூல உரிமைகள் வெவ்வேறு வாசகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பிரிட்டனில் எழுத்துமூலமான அரசியல் அமைப்பு இல்லாததால், இவ்வுரிமைகளும் வெளிப்படையாகப் பிரகடனம் செய்யப்படவில்லை. ஆனால், பரம்பரையாக வந்திருக்கும் பொதுச் சட்ட சம்பிரதாயங்களில் பல முக்கிய உரிமைகள் ஆதார விதிகளாகப் பிரிக்கப்பட்டு நியாயஸ்தலங்களால் அமல் செய்யப்படுகின்றன.

அரசியல் அமைப்பில் விதிக்கப்பட்டிருக்கும் உரிமைகளைச் சாதாரண சட்டங்களால் மாற்றமுடியாது. அமைப்பைத் திருத்தும் முறையிலேயே அவைகளை மாற்றக்கூடும். அமெரிக்க ஐக்கிய நாட்டின் அமைப்பில் முதன்முதலில் சேர்க்கப்பட்ட விதிகள் இதுவரையில் சிறிதும் மாற்றப்படவே இல்லை. பாரத அமைப்பில் சிற்சில திருத்தங்கள் செய்யப்பட்டபோதிலும், பெரிய மாறுதல்கள் இன்றி இவ் உரிமைகள் நிலைத்திருக்கின்றன. அமைப்பைத் திருத்தும் முறை சுலபமாக இருந்தால், இவ் உரிமைகளைக் குறைப்பதும் எளிதாக இருக்கும். ஆனால், அவை நிலைத்து நிற்பது முடிவில் மக்களின் மனப்பான்மையைப் பொறுத்திருக்கிறது.

அமெரிக்க, பாரத அமைப்புகளில் உள்ள மூல உரிமைகளைக் கவனிப்போம்.

மனித சுயமரியாதையைக் காக்கும் உரிமைகளாவன: 1. நேரிலோ, மறைமுகமாகவோ மனிதரை அடிமைப்படுத்தி, அவர்களைச் சொத்தாக மதிப்பதை அடியோடு தடுப்பது; 2. மதம், ஜாதி, நிறம், வகுப்பு, பிறவி போன்ற காரணங்களால் மனிதருக்குள்ள ஏற்றத் தாழ்வை நிராகரிப்பது; 3. சமமான பிரஜா உரிமை; 4. ஒரேவிதமான வாக்குரிமை.

ஆதி முதற்கொண்டு, அமெரிக்க ஐக்கிய நாட்டில், ஐரோப்பியர்களுக்குள் சம அந்தஸ்து இருந்தது. செல்வத்தைப்பற்றிய வேற்றுமைகளே உலவிவந்தன. ஆனால், வெள்ளை நிறமல்லாத ஆஃப்ரிக்கர்களை அடிமைப்படுத்தி, அவர்களை வாங்கியும் விற்றும் சொத்தாக பாவிக்கும் வழக்கம் பல காலம் வழங்கிவந்தது.

பிரசிடென்ட் லிங்கன் தலைமையில் ஒரு பெரும் உள்நாட்டுப் போர் நடைபெற்று வெற்றியடைந்த பின்னரே, இம் முறை ஒழிக்கப் பட்டது. ஐக்கிய நாட்டின் அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தம் 1865ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டது. அதன் வாசகம் பின்வருமாறு : 'குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டு நீதிபதியால் தண்டிக்கப்பட்டாலொழிய, எம் மனிதனும் அடிமையாகவோ, அவனது விருப்பமின்றிக் கட்டாயப் பணியாளாகவோ இந்த ஐக்கிய அரசாங்கத்திலோ, அதன் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத் திலோ இருக்கலாகாது. இந்த நீதியை காங்கிரஸ் தகுந்த சட்டம் செய்து அமல் செய்யவேண்டும்.'

பாரதத்தில் என்றும் நேரடியான அடிமைகள் இருந்ததில்லை. ஆனால், தீண்டாமை வழக்கத்தாலும், பண்ணையாள்கள் போன்ற முறைகளாலும் கோடிக்கணக்கான மக்கள் ஏறக்குறைய அடிமை களாகவே கருதப்பட்டனர். ஆதலால், இந்திய அரசியல் அமைப்பில் 17ஆவது விதி, 'தீண்டாமையும், அதை எவ்விதமாக அனுசரிப்பதும் அடியோடு விலக்கப்படவேண்டும். அவ்விதம் தீண்டாமையை அனுசரிப்போர் குற்றம் செய்தவராவர். சட்டப்படி தண்டனைக்காளாவர்' என்றும், 23ஆவது விதியில், 'மனிதர்களை வியாபாரம் செய்வதும், அவர்களிடமிருந்து சம்பிரதாயமாகவோ வேறு கட்டாயமாகவோ, சேவை பெறுவதும் முற்றிலும் தடுக்கப் பட்டிருக்கிறது. இந்த விதியை மீறுவது குற்றமாகித் தண்டனைக் குரியதாகும்' என்று கண்டிப்பான தடைகள் செய்யப்பட்டிருக் கின்றன. ஆனால், பொதுப்பணிக்குக் கட்டாயமாக வேலை வாங்குவது ராஜ்யத்தின் உரிமையாகும். அவ்வாறு செய்யும் பொழுது மதம், ஜாதி, வகுப்பு இவைகளைக் கொண்ட வேற்றுமை கள் கூடா.

அமெரிக்க அரசியல் அமைப்பில் இவ்வித வேற்றுமை களைத் தடுத்து விதி செய்யப்படவில்லை. நீக்ரோ என்ற கறுப்பு சாதியாரைப் பல வேற்றுமைகளுக்காளாக்கியதனால் பெரும் அபிப்பிராய பேதங்கள் இருந்துவந்திருக்கின்றன. 14ஆவது திருத் தப்படி, 'இந்த ஐக்கிய நாட்டில் பிறந்தோம்; அதன் குடிக ளாகச் சேர்க்கப்பட்டவர்களும் அதன் பிரஜைகளாவர். அவர்கள் வசிக்கும் ராஜ்யத்தின் பிரஜைகளுமாவர். எந்த ராஜ்யமும் பிரஜைகளின் உரிமைகளையோ, சுதந்திரங்களையோ குறைக்க லாகாது. உயிர், சுதந்திரம், சொத்து எதுவும் நியாயமான சட்ட முறைப்படியல்லாமல் பாதிக்கப்படக்கூடாது. எந்தப் பிரஜைக்கும் சட்டங்களின் சமமான பாதுகாப்புக் கிடைக்காமல் தடுக்கலாகாது' என்று கண்டிப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. இத் திருத்தம்,

அடிமைப் பிரச்சினையில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகம் தீர்ந்தபின், 1868ஆம் ஆண்டில் செய்யப்பட்டது. வெள்ளையர்களைப் போலவே நீக்ரோக்களுக்கும் எல்லாப் பிரஜா உரிமைகளும் இருக்க வேண்டும் என்பது அதன் நோக்கம். ஆனால், இரண்டாவது உலக யுத்தம் வரையில், இத் திருத்தம் வேற்றுமைகளைத் தடுக்கவில்லை; சமமான வசதிகளை ஏற்படுத்துவதையே அது வற்புறுத்துகிறதென்று கருதப்பட்டது. இதைப்பற்றி ஓர் ஆசிரியர் பின்வருமாறு கூறியிருக்கிறார்: 'பல வருடங்களுக்கு ரயில்வே நிலையங்களில் கறுப்பு மனிதர்களுக்கு ஒதுக்கியிருக்கும் இடங்கள் வெள்ளையர்களின் அறைகளைப்போல் சுத்தமாகவும், சுகமாகவும் இல்லை என்பது சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை. நீக்ரோப் பள்ளிக்கூடங்களின் தளவாடங்கள் வெள்ளை மாணவர்களின் கல்விக்கூடங்களிலிருந்து தூக்கி எறியப்பட்டவை என்பதும் கவனிக்கப்படவில்லை. நீக்ரோக்களுக்காக நிறுவப்பட்ட கல்லூரிகளில் சமமான தரத்தில் கல்வி போதிக்கப்படவில்லையென்பதையும் ஒப்புக்கொள்ளவில்லை.' சமீப காலத்தில் இவ்வித வேற்றுமைகளுக்கெதிராகப் போர் இயக்கம் தோன்றிப் பெரு வெற்றி பெற்றிருக்கிறது. ஐக்கிய அரசாங்கமும், உத்தம நீதிமன்றமும் அவைகள் அரசியல் அமைப்புக்கு முரணானவை என்று முடிவு செய்து, அவற்றைத் தடுப்பதற்கு முயன்று வருகின்றன. ஆயினும், சில ராஜ்யங்களில் இந்த நிறவெறி இன்றும் தாண்டவமாடிக்கொண்டுதான் இருக்கின்றது. சிறிது காலத்தில் அதுவும் மறையுமென்று எதிர்பார்க்கலாம்.

பாரத அரசியல் அமைப்பிலோ 15ஆவது விதியில் 'அரசாங்கம் மதம், ஜாதி, நிறம், பால், பிறப்பிடம் முதலிய எவ்விதத்திலும் பிரஜைகளுக்குள் வேற்றுமை பாராட்டக்கூடாதென்றும்; கடைகள், சாப்பாட்டு விடுதிகள், ஓட்டல்கள், பொதுக் கலைக் காட்சிகள், கிணறுகள், குளங்கள், ஏரிகள், ஸ்நானகட்டங்கள் முதலிய பொது வசதிகளில் பொதுப் பணத்தின் உதவியை நாடும் எந்த ஸ்தாபனமும் இவ் வேற்றுமைகளை அனுசரிக்கலாகாது' என்றும் கண்டிப்பாக விதிக்கப்பட்டுள்ளது.

பிரஜா உரிமைகளைப்பற்றிய விதிகள் நாட்டுக்கு நாடு மாறி இருக்கின்றன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அடங்கிய எல்லா நாடுகளின் மக்களும் பிரிட்டிஷ் பிரஜையின் முக்கிய உரிமைகளைப் பெறுவார்களென்ற கொள்கை பல காலம் கையாளப்பட்டு வந்தது. ஆனால், அதன் கீழிருந்த நாடுகள் சுதந்திரம் பெறத் தொடங்கியபின் இப் பொது உரிமைகள் மறைந்து தனித்தனியாக விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்பொழுது பிரிட்டிஷ் கூட்டரசு என்று ஓர் தெளிவற்ற ஸ்தாபனம் இருந்தும் பொதுவான பிரஜா உரிமைக

வில்லை. பாரத அரசாங்கம் இந்தக் கூட்டாட்சியிலடங்கிய நாடுகளின் மக்களுக்கு அத் தேசங்களுடன் குறிப்பிட்ட உரிமைகளைப் பரிமாறிக்கொள்ளலாம் என்ற அதிகாரம் பெற்றிருக்கிறது.

இம் மூன்று அரசியல்களிலும், நாட்டில் பிறந்தவர் எவரும் பிரஜையாவர் என்ற விதி இருக்கின்றது. வெளிநாட்டின் தூதரகத்தில் வேலை செய்வோர், சட்டத்தைமீறி நாட்டில் புகுவோர் குழந்தைகளுக்கு இவ் உரிமை சேராது. நாட்டின் பிரஜை வெளிநாட்டிலிருக்கும்போது, அவருக்குப் பிறக்கும் குழந்தைக்கும் அந் நாட்டின் பிரஜா உரிமையுண்டு. ஆனால், பிறந்த நாட்டின் பிரஜா உரிமையைத் துறக்கவேண்டும். பாரத அரசியலமைப்பில் அது அமலுக்கு வந்த தேதியில் பாரதத்தில் இருந்தவர்களுக்கும் பாகிஸ்தானிலிருந்து சரணார்த்திகளாக வந்தவர்களுக்கும் உரிமை வழங்கப்பட்டு, அதற்குப்பின் பார்லிமென்டின் சட்டத்தின்மூலம் அவ் உரிமை வழங்கப்படுமென்று விதிக்கப்பட்டுள்ளது. அதை அனுசரித்து 1955ஆம் வருஷம் சட்டம் செய்யப்பட்டது. அதன்படி, பிறப்பு, குலம், பதிவுசெய்தல், பிரஜையாக ஏற்றுக்கொள்ளப்படுதல் என்ற முறைகளில் பிரஜா உரிமைகள் பெறுவதற்கு விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மற்ற நாட்டின் பிரஜையில்லாமல், இந்த நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் வசிப்போர் அனைவருக்கும் சமமான பிரஜா உரிமை வழங்கப்பட்டிருப்பதால், அவர்களின் சுயமரியாதைக்கு எவ்விதக் குறைவுமில்லை என்று கூறலாம்.

பொதுத் தேர்தல்களில் வாக்குரிமை பெற்றிருப்பதும் மனித கௌரவத்திற்கு ஓர் அறிகுறியாகும். ஆதிகாலம் முதற்கொண்டு, அறிவாளிகள் அரசியல் ஓர் சிக்கலான விவகாரம், அதில் போதிய அறிவில்லாதவர்கள் பங்கெடுக்கலாகாது, அவ்வாறு பங்கெடுப்பதால் பல தீமைகள் உண்டாகும் என்று வாதாடிவந்திருக்கின்றனர். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காவிலும், ஃபிரான்சிலும் புரட்சிகள் ஏற்படும்வரையில் சமத்துவ வாதத்திற்கு இடமே இல்லாமலிருந்தது. எங்கும் அரசாங்கம் மன்னர்களாலும், ஏதேச்சாதிகாரிகளாலும், பிரபுக்களாலும் நடைபெற்று வந்தது. ஆனால், இப் புரட்சிகளுக்குப்பின் மக்களில் எவர் பங்கெடுத்துக்கொள்ள உரிமை பெறலாம் என்ற பிரச்சினை தீவிரமாக வாதிக்கப்பட்டது. பிரிட்டனில் சொத்தின் அடிப்படையில் வாக்குரிமை வழங்கப்பட்டு, உரிமைக்கு அவசியமான சொத்து படிப்படியாகக் குறைக்கப்பட்டு முடிவில் வயதுவந்தவரனைவருக்கும் வாக்களிக்கப்பட்டது. அமெரிக்க ராஜ்யங்களில் முதலில் சொத்தின் ஆதாரத்தில் வாக்குரிமை வழங்கப்பட்டபோதிலும், இது மிகவும் குறைவாகவே இருந்தது. கறுப்பு நீக்ரோக்களை விலக்குவதற்காகப் பலவிதக் கல்வி நிபந்தனை

கள் செய்யப்பட்டன. முடிவில் அனைவருக்கும் வாக்களிக்கப் பட்டது. ஆனால், வெகு காலம் பெண்களுக்கு இரு நாடுகளிலும் வாக்குரிமை வழங்கப்படவில்லை. முதல் உலக யுத்தத்திற்குப் பின்னரே இது கொடுக்கப்பட்டது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில், வாக்குரிமையளிக்கப்படும் விதிகள் ராஜ்ய அரசாங்கங்களால் செய்யப்பட்டு வந்தன. இதனால் பலவித ஏற்றத்தாழ்வுகளும் வேற்றுமைகளும் ஏற்பட்டதால், 1926ஆம் வருஷம் 19ஆவது திருத்தம் செய்யப்பட்டு அனை வருக்கும் ஒரே முறையில் அது வழங்கப்பட்டது. இன்றும் அந்த உரிமைக்குத் தகுந்த வயதைப்பற்றிச் சட்டங்களுக்குள் வேற்றுமை கள் இருக்கின்றன. பொதுவாக 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இவ்வுரிமை இருந்தாலும், மூன்று ராஜ்யங்களில் 18 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு அது வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் அமைப்பு 1947–1949-ல் நிறுவப்பட்டதால், இந்த வேற்றுமைகள் எதற்கும் இடமின்றி, 21 வயதுக்கு மேற் பட்ட ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமையுண்டு. இதை மாற்றவோ, புதிய நிபந்தனைகள் செய்யவோ ராஜ்ய சட்டசபை களுக்கு அதிகாரமில்லை. ஆனால், குற்றம் செய்வோர், தேர்தல்களில் தீய முறைகளைக் கையாளுவோர் போன்றவர்க்கு சில பொது விதி விலக்குகள் செய்யப் பார்லிமென்டுக்கு அதிகாரமுண்டு. அவ் வாறே சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

எழுதப் படிக்கத் தெரியாமலும், அரசியல் அறிவு சிறிதுமில்லாத கோடிக்கணக்கான ஆண்களுக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுப்பதால் மனித கௌரவம் பாதுகாக்கப்படுகிறதென்பதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? அது அரசியலைக் குலைக்கும் வழி என்று கூறுவதே சரியானதல்லவா என்று வினவலாம். அரசியல் நிர்ணய சபையிலும் சிலர் இவ்வாறு விவாதித்தனர். ஆனால், இது குறுகிய நோக்கத்தால் கூறப்படும் எதிர்ப்பாகும். வயதுவந்தவர் களுக்கு வாக்குரிமை கொடுத்து அவர்கள் பொதுத் தேர்தலில் பங்கெடுத்துக்கொள்வதே அரசியல் அறிவைப் புகட்டி அதனில் உணர்ச்சி உண்டாக்குவதற்குச் சிறந்த உபாயமாகும். பொது மக்களுக்குக் கட்டாயக் கல்வி, இலவச வைத்தியம், நாட்டுப்புறங் களில் நல்ல ரோடுகள், பாலங்கள் முதலிய வசதிகளை ஏற்படுத்து வதில் சட்டசபைகளுக்கும், மந்திரிசபைகளுக்கும் ஆவல் ஏற்படு வதற்கும் அதுவே நல்ல தூண்டுகோலாகும். சென்ற 19 வருஷங் களின் பாரத சரித்திரம் இதற்குச் சான்றாகும். மற்றத் துறைகளில் முற்போக்கு எப்படியிருந்தாலும் கல்வி, வைத்தியம் முதலிய

பொதுஜன வாழ்க்கை வசதிகளில் தீவிரமான முன்னேற்றமிருக்கிறது. அடுத்துப் பத்து வருஷங்களுக்குள் இந்தியாவில் பள்ளிக்குப் போகாத குழந்தைகளே இருக்கமாட்டார்களென்பது உறுதி. பதினன்கு வயது வரையில் இலவசமாகவே கல்வி போதிக்கப்படும் என்பது நிச்சயம். மற்றப் பொது வசதிகளும் எல்லாக் கிராமங்களுக்கும் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. கல்வி வளர்ந்து, வாழ்க்கைத் தரம் உயரும்பொழுது வாக்குரிமையின் பலன்களும் அதிகரிக்கும்.

ஏன் 21 வயது வரையில் வாக்குரிமை வழங்கலாகாது, 18 வயதிற்கோ அதற்கும் குறைவாகவோ பல வாலிபர்கள் முதியோர்களைவிட அறிவாளிகளாக இருக்கக்கூடாதா என்றும் கேட்கலாம். எந்த வயதைக் குறிப்பிட்டாலும் அதற்கு இந்த ஆட்சேபணை பொருந்தும். ஆனல், குறிப்பிட்ட வயது வந்ததும் தனக்கு உரிமை தானகவே கிடைத்துவிடும் என்ற விதியிருக்கும்வரையில், வயதைப்பற்றிய நிபந்தனையால் எவ்வித கௌரவக் குறைவும் ஏற்படாது.

ஜனநாயகம் ஒன்றிலேயே அடிப்படையான மனித சுதந்திரங்கள் நிச்சயமாக நிலவக்கூடும். மற்ற அரசியல்களில் அதிகாரிகளின் மனப்பான்மையைப் பொறுத்தே சுதந்திரங்கள் கூடியும் குறைந்தும் இருப்பன.

இந்திய அரசியல் அமைப்பின் 19ஆவது விதியில் விரிவாகக் கீழ்க்கண்ட சுதந்திரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன: 1. பேச்சுப் பிரசார சுதந்திரம்; 2. சமாதானமாக, ஆயுதம் தாங்காமல் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளும் சுதந்திரம்; 3. சபைகளும், சங்கங்களும் அமைக்கும் சுதந்திரம்; 4. பாரதத்தில் எங்கும் தடையின்றிப் பிரயாணம் செய்யும் சுதந்திரம்; 5. பாரதத்தின் எந்த பாகத்திலும் குடியேறி வசிக்கும் சுதந்திரம்; 6. சொத்தைப் பெறுவதற்கும், அனுபவிப்பதற்கும், அதை விற்றும், இதர வகைகளில் வினியோகிப்பதற்கும் சுதந்திரம்; 7. விரும்பிய தொழிலை நடத்துவதற்கும், பணி செய்வதற்கும், வியாபாரம் நடத்தவும் சுதந்திரம்.

இந்தச் சுதந்திரங்கள் அனைத்தும் அமெரிக்க அரசியல் அமைப்பில் ஓரிடத்தில் சேர்த்து விதிக்கப்படவில்லை. ஆனல், அதன் திருத்த விதிகளில் 1, 4, 9 விதிகள் ஏறக்குறைய இந்தச் சுதந்திரங்களைக் குறிப்பிடுகின்றன. முதல் திருத்தம் கூறுவதாவது: ‘ஒரு மதத்தைச் சட்டபூர்வமாக ஸ்தாபிக்கவோ,

அல்லது அதை அனுசரிப்பதைத் தடுக்கவோ, பேச்சு, பத்திரிகை களின் சுதந்திரங்களைக் குறைக்கவோ, மக்கள் சமாதானமாகக் கூடுவதைத் தடுக்கவோ, தங்கள் குறைகளைப்பற்றி மக்கள் விண்ணப்பம் செய்வதற்கு இடையூறு செய்யவோ காங்கிரசுக்கு உரிமையில்லை' என்று 5ஆவது திருத்தம் அரசாங்கத்தின் நடை முறையை வகுப்பதாகத் தோன்றினும் அது முக்கிய சுதந்திரங் களைப் பாதுகாப்பதாகும். அதன் வாசகம் பின்வருமாறு: 'நியாயமான சட்ட முறைப்படி அல்லாது, எவரது உயிர், சுதந் திரம், சொத்து எதுவும் பறிமுதல் செய்யப்படக்கூடாது. பொது நலத்திற்காக நியாயமான ஈடுகொடுக்காமல் தனி நபரின் சொத்தை எடுத்துக்கொள்ளலாகாது'.

9ஆவது திருத்தம் கூறுவதாவது: 'இந்த அமைப்பில் சில உரிமைகள் கூறப்பட்டிருப்பதால், பரம்பரையாக மக்கள் அனு பவித்துவரும் மற்ற உரிமைகள் மறுக்கப்பட்டதாகவோ, பாதிக்கப் பட்டதாகவோ அர்த்தம் செய்துகொள்ளக்கூடாது.' அதாவது, இங்கிலாந்திலிருந்து குடியேறும்போது அங்கு உலவி வந்த பொதுச் சட்டத்தின்கீழுள்ள உரிமைகளை அமெரிக்காவிலும் அனுபவித் தனர். அவைகளைப் பொதுவாக இத் திருத்தம் நிலைநிறுத்தியது.

இந்திய அரசியல் அமைப்பில் சுதந்திரங்கள் விரிவாகவும், தெளிவாகவும் குறிப்பிடப்பட்டிருப்பதால், பாரத பிரஜைக்கு அவை அதிக அளவில் கூடியிருப்பதாக எண்ணுவது தவறு. உண்மை இதற்கு நேர்மாறாகும். அமெரிக்க அரசியல் அமைப்பில் குறிப் பிட்ட உரிமைகளுக்கு எவ்வித நிபந்தனைகளுமில்லை. மத்திய பாராளுமன்றமான காங்கிரசோ, ராஜ்யங்களின் சட்டசபைகளோ, தங்கள் சட்டங்களால் அவைகளைக் குறைக்கமுடியாது. நாட்டின் அவசியத்தையும் நலனையும் பாதுகாப்பதற்காக உத்தம நீதிமன்றத் தால் சில வரம்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, எல்லாவற்றிலும் முக்கியமான பேச்சு சுதந்திரத்திற்குப் பின்வரும் எல்லைகள் கோலப்பட்டிருக்கின்றன. சட்டத்தையோ, சம்பிரதாய மான முறைகளையோ, மீறுவதற்காக இந்தச் சுதந்திரத்தைப் பயன் படுத்தலாகாது. யுத்த காலங்களில் நாட்டிற்கு அபாயத்தைத் தடுக்கவேண்டுமளவில் பேச்சு சுதந்திரம் கட்டுப்படுத்தப்படக் கூடும். ஆனால், இந்த விதங்களில்கூட ஏற்பட்ட தடைகள் நியாயமானதா என்று நியாயஸ்தலங்கள்மூலம் தீர்ப்புப் பெறுவதற்கு பிரஜைக்கு உரிமையுண்டு.

இந்திய அமைப்பிலோ, நாட்டின் பாதுகாப்பிற்காகவும், மற்ற நாடுகளுடன் நட்புறவுகளைப் பாதிக்காமலிருப்பதற்கும், அமைதிக்

கும், அறத்திற்கும், ஒழுக்கத்திற்கும், பேச்சு சுதந்திரத்திற்கும் நியாயமான வரம்புகளைச் சட்டபூர்வமாகப் பார்லிமென்டும் ராஜ்ய சட்டசபைகளும் விதிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படியே அமைதி, ஒழுக்கம் இவைகளைப் பாதுகாக்க சங்கங்கள் அமைக்கும் சுதந்திரத்திற்கும் எல்லைகள் குறிப்பிடலாம். 4, 5, 6 சுதந்திரங்கள், பொது மக்களின் நலத்திற்காகவும், ஆதிவாசிகளின் நன்மைக்காகவும் கட்டுப்படுத்தப்படலாம். 7ஆவது சுதந்திரத்திற்குத் தொழிலுக்கு வேண்டிய தகுதிகள் பெறவேண்டுமென்றும், நாட்டின் நலத்திற்காகவும், எத் தொழிலும், வியாபாரமும் ஒருசிலரின் ஏகபோகமாகிவிடாமலிருப்பதற்கும் நிபந்தனைகளை ஏற்படுத்தலாம்.

இந்த வரம்புகளெல்லாம், ஐக்கிய நாட்டில் உத்தம நீதிமன்றத்தால் செய்யப்பட்ட கட்டுப்பாடுகளை ஒட்டியே இருக்கின்றன என்று சிலர் வாதிக்கின்றனர். இது சரியன்று. இங்கு எவ்வித அபாயமுமில்லாத காலங்களில்கூட சுதந்திரங்களைக் கட்டுப்படுத்திச் சட்டங்கள் செய்யப்படலாம். அவைகள் நியாயமா என்று மட்டுமே இந் நாட்டின் நியாயாலயங்கள் தீர்ப்பு கூறக்கூடும். அவசியமா என்று ஆலோசிக்க முடியாது. 35ஆவது விதியின்கீழ் பாரத ஜனாதிபதி அபாய பிரகடனம் செய்தால், அது ரத்தாகும் வரையில் எல்லாச் சுதந்திரங்களும் செல்லுபடியாகமாட்டா. அவற்றை மீறிச் சட்டம் செய்யப் பார்லிமென்டுக்கு உரிமையுண்டு.

மதத்தைப் பொறுத்தவரையில் அமெரிக்க ஐக்கிய நாடு, பாரதம் இரண்டிலும் அரசாங்கத்திற்கும் மதத்திற்கும் எவ்வித நேர்த் தொடர்புமில்லை. அரசாங்கம் எம் மதத்திற்கும் உதவியோ, சலுகைகளோ அளிக்கக்கூடாது. பிரஜைகள் தமது விருப்பப்படி மதத்தை அனுசரிக்கலாம். இந்திய அரசியல் திட்டத்தில் அரசாங்க உதவிபெறும் கல்விக்கூடங்கள் கட்டாயமாக மத போதனை செய்யக்கூடாதென்றும் அரசாங்கத்தால் நடத்தப்படும் நிறுவனங்களில் எவ்வித மதபோதனையும் செய்யலாகாதென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டனிலோ, அரசாங்கமே கிறிஸ்தவ மதத்தின் ஓர் கிளையைச் சார்ந்திருக்கிறது. போப்பாண்டவரைத் தலைவராகக் கொண்ட ரோமன் கத்தோலிக்கக் கிளையிலிருந்து பிரிந்து, இரு கிளைகளுக்கும் பல காலம் கொடிய பகையும் போரும் நடைபெற்றன. இன்றும் பிரிட்டனில் மன்னர்களும் ராணிகளும் கத்தோலிக்கக் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்திருக்கக்கூடாது. பிராடஸ்டென்ட் வகுப்பில் கூட சில தீவிரமான உப கிளைகளைச் சேர்ந்திருக்கக்கூடாது.

ஆயினும், அரசாங்க மதம் ஒன்றிருக்கிறது, அரசாங்கத்தால் அம் மதத்தைச் சேர்ந்த ஓர் அதிகார வர்க்கம் பராமரிக்கப்படு கிறது என்பதைத் தவிர, வேறு எவ்வித மதக் கொடுமைகளோ வேற்றுமைகளோ இப்பொழுது சட்டமூலமாகவோ வாழ்க்கை முறையிலோ இல்லை என்று கூறலாம். எம் மதத்தையும் சேராத வர்களும் எல்லா மதங்களும் மூடக் கொள்கைகளென்போரும் பலர் இருக்கின்றனர்.

சமத்துவம் சுதந்திரத்தைப் போலவே ஓர் அடிப்படையான கொள்கையாகும். ஜாதி வித்தியாசங்களையோ, பிரபுக்கள், கண்ணியவான்கள், சாதாரண மக்கள் என்ற பிரிவினையின்பேரில் அமைக்கப்பெற்ற சமுதாயத்தில் எவ்வித சமத்துவமும் இருக்காது. இந்திய அரசியல் அமைப்பில், சட்டபூர்வமாக ஜாதிக்கும் பிறப் புக்கும் எவ்வித உரிமையும் சலுகையும் இருக்கக்கூடாதென்று மிகவும் கண்டிப்பான விதிகள் இருக்கின்றன. தீண்டாதவர்களுக் கும், கீழ் ஜாதியோர் என்று அவமதிக்கப்படுவோருக்கும் பாதுகாப்பு கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், சட்ட அரசியல் அல்லாத சமூக வாழ்க்கையில் வர்ணாசிரம தர்மம் ஓரளவு இருந்து தான் வருகிறது. அது நாளடைவில் கல்விப் பெருக்காலும், அறிவின் வளர்ச்சியாலுமே மறையும். தடையற்ற கலப்பு மணமே பூரணமான சமூக சமத்துவத்திற்கு நல்ல அறிகுறியாகக் கருத லாம். இருபது வருஷத்திற்கு முன் இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது அவ்வித விவாகங்கள் தாராளமாகவே நடைபெற்று வருகின்றன. அவ்விதக் கலப்பு மணத்தைக் கண்டிப்பதும், தம்பதி களைப் பலவித சமூக விலக்குக்குள்ளாக்குவதும் இப்பொழுதில்லை. உறவினர்களாலகூடச் சிறிது காலத்திற்குப்பின் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆயினும், இவ்விதச் சமூகத் தொடர்புகள் சர்வசாதாரணமாகும்வரையில் வர்ணாசிரம சம்பிரதாயங்களின் சக்தி நீடித்திருக்கும்.

பிரிட்டன், அமெரிக்காவில் இவ்வித வேற்றுமைகள் இல்லை. ஆனால், பிரிட்டனில் குடிப்பிறப்புக்கு இன்றும் செல்வாக்கு இருக் கின்றது. இரண்டு நாடுகளிலும் செல்வத்தையொட்டி ஏற்றத் தாழ்வுகள் இந் நாட்டைக் காட்டிலும் அதிகமாகவே இருக் கின்றன.

சட்டத்திற்கு முன்பாக எல்லா மனிதரும் சமம் என்ற கொள்கை மூன்று தேசங்களிலும் ஏற்கப்பட்டு, நியாயாலயங்களால் அமல் செய்யப்படுகின்றன. இந்திய அரசியல் அமைப்பின் 14ஆவது விதிப்படி : 'இந்திய எல்லைக்குள் எம் மனிதனுக்கும்

சட்டத்திற்கு முன் சமத்துவத்தையும் சட்டத்தின் பாதுகாப்பைச் சம அளவிலும் அரசாங்கம் மறுக்கலாகாது'. இந்தச் சமத்துவம் பிரஜைகளுக்கு மட்டுமன்று. இந்த நாட்டில் நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ வசிப்போர் அனைவருக்கும் உரியதாகும். அமெரிக்க அமைப்பின் 14ஆவது திருத்தம் பின்வருமாறு: 'எந்த ராஜ்யமும் தனது அதிகாரத்திற்கு உட்பட்ட எம் மனிதனின் உயிர், சுதந்திரம், சொத்து எதனையும் நியாயமான சட்டமுறைப்படியில்லாமல் பறிமுதல் செய்யலாகாது; அனைவருக்கும் சமமாகச் சட்டங்களின் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும்' என்று கட்டளையிட்டிருக்கிறது.

பிரிட்டனிலும் பொதுச் சட்ட சம்பிரதாயங்கள் இந்தச் சமத்துவத்தை அளிக்கின்றன.

தத்துவ ரீதியில் சட்டத்தின்முன் சமத்துவத்தை அமல் செய்ய ஓர் பட்சபாதமில்லாத நியாயமுறை அவசியம். இதுவும் இம் மூன்று அரசியலிலும் இருக்கின்றது. ஆனால், செல்வத்தின் ஏற்றத் தாழ்வுகளினால் சமத்துவத்தை நடைமுறையில் அனுபவிப்பதற்குப் பல தடைகள் இருக்கின்றன.

வாழ்க்கை வளர்ச்சிக்கும், அதைப் பயனுள்ள முறையில் நடத்துவதற்கும், சமமான வழிகள் எல்லா மனிதருக்கும் அளிக்கப்படவேண்டுமென்பது இம் மூன்று மக்கள் ஆட்சிகளுக்கும் ஓர் அடிப்படையான கொள்கை, இந்திய, அமெரிக்க அரசியல் அமைப்புகளில் இது எழுத்துமூலமாக விதிக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசியல் சம்பிரதாயங்களாலும் இது ஆதரிக்கப்படுகிறது. ஆனால், உரிமையைக் கொள்கையளவில் ஏற்பதற்கும் அதைத் தினசரி வாழ்க்கையில் வழங்குவதற்கும் நடுவில் அகன்ற அகழி இருக்கிறது. அனைவருக்கும் சமமான கல்வி வசதிகள் ஏற்பட்டு, எல்லா உத்தியோகங்களும் தொழில்களும் தொகுதியொன்றைப் பொறுத்தே வழங்கப்பட்டாலொழிய, இந்த வாழ்க்கை வசதி சமத்துவம் உண்மையில் ஏற்படாது. இதை நன்குணர்ந்தே ஏழைகளுக்கு இலவசக் கல்வியும், உயர்தரக் கல்விக்கு மானியங்களும் கொடுக்கப்படுகின்றன. அரசாங்க உத்தியோகங்களுக்கு ஆள் சேர்ப்பது பரீக்ஷைகள்மூலமாகவும் பட்சபாதமற்ற உயர்தரக் குழுவின் வாயிலாகவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஆயினும், செல்வ ஏற்றத் தாழ்வுகள் அதிகமாக இருக்கும் எந்தச் சமூகத்திலும் எவ்விதச் சமத்துவமும் பூர்ணமாக நிலவுவது சாத்தியமில்லை. இந்த நோக்கில், பொதுவுடைமை நாடுகளில்

சமத்துவத்திற்கு அதிக இடமிருக்கிறது. ஆனால், அங்கும் எதேச் சாதிகாரமும், அதிகார வர்க்கமும் மக்களுக்குள் புதிய பலவித ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்குகின்றன. செல்வ ஏற்றத்தாழ்வு கள் இக் காலத்தில் தனியார் சொத்துள்ள நாடுகளில் கடுமையான வரி விகிதங்கள் வாயிலாக நியாயமான வரம்புகளுக்குள்ளாக்கப் பட்டு வருகின்றன.

எம் மனிதக் குழந்தையும் தனது பிறப்புரிமையாகப் பலவித சக்திகளைக்கொண்டே பிறக்கின்றது. அவைகள் சமமாக இருப்ப தில்லை. உடல், மனம், புத்தி, உணர்ச்சிகள் இவற்றின் தாரதம்மி யங்களை வளர்த்து, ஒவ்வொருவரும் தனது சக்திகளைப் பெருக்கி, சமூகத்தின் விசித்திரத்தையும், பெருமையையும் அதிகரிக்கக் கூடுமாறு எல்லாச் சமூக அமைப்புகளுமிருக்கவேண்டும். அவை களின் வளர்ச்சிக்குள்ள தடைகளை நீக்கி வசதிகளைப் பெருக்குவதே அரசியல் அமைப்புகளின் முக்கிய நோக்கமாகும்.

சரியான பாதுகாப்பும், சமாதானமும் இருந்தாலொழிய சமூக மும், அதன் பிரஜைகளும் வளர்ச்சிபெற முடியாது, வெளிநாட்டு ஆக்கிரமிப்பு ஏற்படாதபடியும், உள்நாட்டுக் கலகங்களும் குழப்பங் களும் சம்பவிக்காதவாறும் பாதுகாப்பது எந்த அரசியலுக்கும் முதற் பணி. பின்னர் எல்லா மக்களுக்கும் கல்வி, சுகாதாரம், தொழில், ஆபத்தில் உதவி, முதுமையில் ஆதரவு போன்ற இன்றி யமையாத பாதுகாப்புகளைப் போதுமான அளவில் வகுத்து நிலைநிறுத்தும் சமூகமே முழு வளர்ச்சி பெற்றுப் பிரகாசிக்கும்.

# 5. அதிகாரப் பிரிவினை

ஓர் அரசியலின் அதிகாரங்களைச் சட்டம், நிர்வாகம், நியாயம் என்று வகுக்கலாம். சர்வாதிகாரமுள்ள அரசர் ஆட்சியிலும் எதேச்சாதிகாரிகளின் அரசியலிலும் இவ்வதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்திருக்கும். இக் குவியலே அரசியலின் கொடுமைகளுக்கு மூலாதாரமென்றும், அவைகளைப் பிரித்து வெவ்வேறு சுதந்திரமான அதிகாரிகளிடம் ஒப்புவிப்பதால் அரசியலில் நேர்மையும், நியாயமும் ஓங்குமென்றும் பல அரசியல் தத்துவ ஞானிகள் பிரசாரம் செய்தனர். அவர்களில் பிரிட்டனில் லாக், ஃபிரான்சில் மான்டெஸ்கியூ என்ற ஞானிகள் குறிப்பிடத் தக்கவர்கள். சட்டத்தையும் நிர்வாகத்தையும் பிரிக்கவேண்டுமென்று லாக் வாதித்தார். அது போதாது; சட்டம், நிர்வாகம், நியாயம் இம் மூன்றும் தனித்தனி சுதந்திர விபாகங்களாக்கப்படவேண்டுமென்று மான்டெஸ்கியூ பிரசாரம் செய்தார்.

சுதந்திரப் போரை வெற்றியுடன் நடத்தி, புதிய அரசியல் அமைத்த அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைவர்கள் இந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் முறையை வகுத்தனர்.

இம் மூன்று அதிகாரங்களின் முக்கியத்துவம் என்றும் ஒரே மாதிரி இருந்ததில்லை. ஆதி, மத்திய காலங்களில் சட்டமியற்றுவது ஒரு முக்கிய அரசியல் பணியாகக் கருதப்படவில்லை. சில அரசியல் விவகாரங்களைத் தவிர, மற்றத் துறைகளில் பழக்க வழக்கங்களையே ஆதாரமாகக் கொண்டு நியாயாலயங்கள் வழக்குகளைத் தீர்த்தன. ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவ மதம் ஐரோப்பாவில் பெரும்பாலும் ஓங்கியிருந்த காலங்களில் புதிய சமூகச் சட்டங்களை இயற்றுவதற்குப் போப்பாண்டவருக்கும் அவர் ஆதிக்கத்திலுள்ள மத ஸ்தாபனத்துக்குமே உரிமையுண்டென்று நம்பப்பட்டது. பாரதத்தில் ரிஷிகளும், ஞானிகளுமே தர்ம கிரந்தங்களின்மூலம் சட்டங்களை நிர்ணயித்தனர். பெரும்பாலும் அவர்கள் பரம்பரையாக வந்திருக்கும் பழக்க வழக்கங்களை ஒழுங்காகத் தொகுத்து, முரண்பாடுகளை

நீக்கி, அவசியமான இடங்களில் ஒன்றிரண்டு புதிய நியமங்களைப் புகுத்தி தர்மத்தை நிலைநாட்டினர்.

விஞ்ஞானம் வளர்ந்து, இயந்திரத் தொழில் பெருகிப் பொருளாதாரம் பலவிதமாகப் படரத் தொடங்கியதும், நாட்டின் நலனைப் பாதுகாக்கவும், புதிய சமூகம் ஒழுங்காக அமையவும் புதிய சட்டங்கள் இன்றியமையாதனவாயின. நீராவியில் இயங்கும் இரயிலும், பெரும் கப்பல்களும் விரிவான சிக்கலான நியமங்களுக்குட்பட்டே நடைபெறவேண்டும். இல்லையேல், பேராபத்துகள் விளையும், ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் சேர்ந்து பெரிய இயந்திரங்களைக்கொண்டு பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கும் அவ்வித சட்டங்கள் அவசியம். புதிய பொருளாதாரத்திற்கு வேண்டி காகித நாணயம், பாங்கிகள், கம்பெனிகள் முதலிய ஏற்பாடுகள் நாட்டிற்குப் பொதுவான, தெளிவான, சட்டங்கள் மூலமாகவே செய்யப்படக்கூடும். ஆதலால், இக் காலத்தில் சட்டம் செய்வதே அரசியலின் முக்கிய பாகமாகிவிட்டது.

சட்டத்தைப் போலவே, நிர்வாகத்தின் பரப்பும் பெரிதும் விரிவடைந்து, அதன் போக்கும் மிகவும் சிக்கலாகிவிட்டது. முன் காலங்களில் வெளிநாட்டிலிருந்து ஆக்கிரமிப்பைத் தடுத்து உள் நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்துவதே நிர்வாகத்தின் முக்கிய அம்சங்களாகவிருந்தன. அல்ப வரி வசூல் செய்வதுமுண்டு. சில நாடுகளில் வரிவசூல் இல்லாமலே அரச குடும்பத்தினர் சொத்துகளிலிருந்தே அரசாங்கச் செலவு செய்யப்படுவதும் உண்டு. யுத்த காலங்களில் விசேஷ வரிவசூல் செய்வதற்காகவே பிரிட்டனில் மக்கள் பிரதிநிதிகளைக் கூட்டிச் சம்மதம் கேட்க வேண்டியிருந்தது. அதிலிருந்தே 'பிரதிநிதித்துவமின்றி வரி வசூல் கூடாது' என்ற கூக்குரல் மக்கள் ஆட்சியின் முதல்படியாயிற்று. இக் காலத்திலோ நிர்வாகத்தின் பணிகள் மிகவும் விரிவடைந்திருக்கின்றன. கல்வி, சுகாதாரம், வீட்டு வசதிகள், மருத்துவாலயங்கள், மோட்டார் போக்குவரத்துக்குரிய சாலைகள், இரயில், மோட்டார் முதலிய போக்குவரத்து வசதிகள் அரசியல் நிர்வாகத்தின் பொறுப்புகளாகிவிட்டன. அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின்கீழ் 80 இலக்ஷம், பாரதத்தில் 40 இலக்ஷம், பிரிட்டனில் 20 இலக்ஷம் சர்க்கார் ஊழியர்கள் இப்பொழுது இருக்கின்றனர். நாட்டின் வருமானத்தில் 20-லிருந்து 40 சதம் வரையில் வரியாக வசூலிக்கப்பட்டு நிர்வாகங்களால் செலவிடப்படுகின்றன.

நியாயம் வழங்குவதே முற்காலத்திய அரசாங்கங்களின் முக்கிய பணியாக இருந்தது. அரசனே தினந்தோறும் தர்பார் நடத்தி

மக்களின் வழக்குகளைத் தீர்ப்பது வழக்கம் என்று பழங்கதைகளில் படித்திருக்கின்றோம். ஆனால், அரசனின் தலைநகரில் மட்டுமே இது சாத்தியமாகும். மற்ற இடங்களில் நியாயாதிபதிகளை நியமித்து நியாயம் வழங்குவதே அரசாங்கத்தின் முதல் கடமையாகவிருந்தது.

எவரையும் விசாரிக்காமல் தண்டிக்கக்கூடாது, சிறைப்படுத்தலாகாது என்றுதான் பிரிட்டனில் ஜனநாயகம் ஆரம்பமாயிற்று. அரசனால் நியமிக்கப்படும் நீதிபதிகளிடம் நம்பிக்கையின்றிப் பொது மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஜூரிகளின் முடிவுகளைக் கொண்டே நீதிபதிகள் தீர்ப்பளிக்கவேண்டுமென்ற விதி பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் இன்றும் வழக்கத்திலிருக்கிறது. நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் வழக்கம் அமெரிக்க ராஜ்யங்களில் அவற்றின் முக்கிய அரசியல் அமைப்புகளிலேயே புகுத்தப்பட்டிருக்கிறது.

நியாயம் வழங்குவதைவிட, சட்டமியற்றுவதும், நிர்வாகம் நடத்துவதும் பெரிய அம்சங்களாகிவிட்டபோதிலும் நியாய பரிபாலனத்தின் முக்கியத்துவமோ அவசியமோ சிறிதும் குறைந்துவிடவில்லை. அதுவும் பெருகியிருக்கிறதென்றே கூறவேண்டும். அரசியல் அமைப்பின்படி நிர்வாகம் நடைபெறவும், புதிய சட்டங்களின் போக்குகளை நிர்ணயம் செய்து அமல் செய்வதும், விரிவடையும் நிர்வாகத்தால் மக்களின் உரிமைகளும், நலன்களும் பாதிக்கப் படாமல் பாதுகாக்கவும், நியாயாலயங்களின் எண்ணிக்கை பெருகி, நீதிபதிகளின் தரமும் மிகவும் உயர்ந்திருக்கிறது. சட்டங்களை நன்கு கற்று அவற்றைப் பட்சபாதமின்றி அமல் செய்வதற்குச் சாதகமாக வக்கீல் தொழில் ஓர் பிரபலத் தொழில் துறையாகி, அரசியல் வளர்ச்சியிலும் வழக்கறிஞர்களின் பங்கு மிகவும் சிறப்பாகவிருந்திருக்கின்றது.

இம் மூன்று துறைகளிலும் பணி நேர்மையாகவும், திறமையுடனும், தாமதமின்றியும் நடைபெறுவது அத்தியாவசியமாகும். இவைகளைத் தனித்தனியாகப் பிரித்துச் சுதந்திர அதிகாரிகளிடம் ஒப்புவிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் அமைப்பு உருவாகியிருக்கின்றது. அதன் முதல் விதிப்படி சட்டம் செய்யும் பணி இரண்டு சபைகளடங்கிய காங்கிரசிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது. இவற்றின் அங்கத்தினர்கள், அதிகாரங்கள் முதலிய விவரங்கள் பின்வரும் அத்தியாயங்களில் விளக்கப்படும். இங்குக் கூறவேண்டியது பின்வரும் குறிப்புகளே. 'ஒவ்வோர் சபைக்கும் தனது அங்கத்தினர்களின் தேர்தல்களையும் அவற்றின் முடிவுகளையும் தகுதிகளையும் விசாரித்து

முடிவு செய்ய உரிமையுண்டு. செனேட், அல்லது பிரதிநிதி சபை அங்கத்தினர் ஐக்கிய அரசாங்கத்தின் கீழோ, அதன் அதிகாரத்திற் குட்பட்ட எந்த உத்தியோகத்திற்குமோ நியமிக்கப்படக்கூடாது. அவ்வித உத்தியோகஸ்தர் எவரும் காங்கிரஸ் அங்கத்தினராகவும் கூடாது. ஆதலால், அந் நாட்டு ஜனாதிபதியோ, இதர நிர்வாகி களோ மற்ற அரசாங்க சேவகர்களைப் போலவே, காங்கிரசிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கின்றனர். இதற்கு விதிவிலக்கு உப ஜனாதிபதி ஒருவரே. இவர் செனேட் சபைக்குத் தலைவர் பதவி வகிப்பார். எந்தத் தீர்மானத்திலும் சாதாரணமாக அவருக்கு வாக்கில்லை. சாதகமாகவும், எதிராகவுமுள்ள வாக்குகள் சரிசமானமாக இருக்கும் பொழுது அவருக்கு முடிவு செய்யும் வாக்குண்டு.

அதேமாதிரி, அமைப்பின் இரண்டாவது விதி ஜனாதிபதியின் தலைமையில் நிர்வாகத்தின் முறை வரையறுக்கப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி-பிரசிடென்ட் நான்கு வருஷங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் படுவார். எல்லா நிர்வாக அதிகாரமும் அவரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு அவரே மற்ற உயர்தர நிர்வாகிகள், நீதிபதிகள், வெளிநாட்டுத் தூதர்கள் முதலிய எல்லா அதிகாரிகளையும் நியமிப்பார்.

நியாய பரிபாலனம் ஓர் உத்தம நீதிமன்றத்திடம்—சுப்ரீம் கோர்ட்டிடம்—அளிக்கப்பட்டிருக்கின்றது. அதன் நீதிபதிகளை செனேட் சபையின் அனுமதியுடன் பிரசிடென்ட் நியமிக்கவேண் டும். நியமிக்கப்பட்ட பின் அவர் வாழ்நாள் முழுதும் நீதிபதியாகப் பணிபுரியலாம். அவரைத் தண்டிப்பதற்கோ, வேலையிலிருந்து நீக்குவதற்கோ பிரசிடென்டுக்கு அதிகாரமில்லை. ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதி பெரும் குற்றம் செய்தால் பிரதிநிதி சபைமூலம் குற்றஞ்சாட்டப்பட்டு செனேட் சபை அதை ஏற்றுக்கொண்டால் பதவியிலிருந்து விலக்கப்படுவார். அரசியல் அமைப்பைப்பற்றிய எவ்விதப் பிரச்சினையையும், காங்கிரஸ் செய்யும் சட்டத்தின்கீழ் விளையும் வழக்குகளையும் இதர நாடுகளுடன் ஏற்படும் ஒப்பந்தங்கள் பற்றிய அபிப்பிராய பேதங்களையும், ராஜ்யங்களுக்கு நடுவில் தோன்றும் தகராறுகளையும் தீர்த்து முடிவுகூறும் அதிகாரம் சுப்ரீம் கோர்ட்டுக்கு உரியதாகும்.

தத்துவ ரீதியில் ஆலோசித்தால், பிரிட்டனின் அரசியல் இதற்கு நேர்மாறானது. சட்டம், நிர்வாகம், நியாயம் அனைத்தும் அரசரிடம் குவிந்திருக்கிறது. ஆனால், பல நூற்றாண்டுகளின் சம்பிரதாய வளர்ச்சியின் பயனாக நியாயம் ஓர் சுதந்திர பாகமாகி

யிருக்கிறது. இன்றும் சட்டப்படி பிரபுக்கள் சபையே உத்தம நீதி மன்றமாகும். ஆனால், இந்த அதிகாரம் உயர்நீதிபதிகளடங்கிய ஓர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

சட்டம், நிர்வாகம் இரண்டும் பிரிட்டிஷ் அரசியலில் இரண்டறக் கலந்தே இருக்கிறது. பார்லிமென்டு எச் சட்டமும் செய்யலாம். நிர்வாகத்தை வகிக்கும் மந்திரிசபை பார்லிமென்டின் அங்கத்தினர்களைக் கொண்டது. பெரும்பாலோர் மக்கள் சபை மெம்பர்களாக இருக்கவேண்டும். இவர்கள் பெரும்பான்மைக் கட்சித் தலைவர்களாகவிருப்பதனால், சட்டங்களை இயற்றுவதிலும் அவர்களே தலைமை வகிக்கின்றனர். நிர்வாகத்தினர் போக்கைப் பரிசீலனை செய்வதும், அதன் ஊழல்களைக் கண்டிப்பதும் பார்லிமென்டின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும்.

இந்திய அரசியல் அமைப்பில் நியாயத்துறை அமெரிக்க ஐக்கிய நாட்டைப் பின்பற்றியும், நிர்வாக சட்டத் துறைகள் பிரிட்டிஷ் சம்பிரதாயங்களை அனுசரித்தும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இந்த நாட்டிலும் உத்தம நீதிமன்றம்–சுப்ரீம் கோர்ட்–நிர்வாகத்தின் அதிகாரத்திற்குட்படாமல் சுதந்திரமாக இருக்கிறது. அதன் நீதிபதிகளை நியமிப்பதில் பிரதம நீதிபதியைக் கலந்தே ஜனாதிபதி நியமிக்கவேண்டும். அவர் 65 வயது வரையில் பணி புரிவார். நடுவில் அமெரிக்காவைப்போல் சட்டசபைமூலம் குற்றவாளியென்று தீர்மானம் செய்யப்பட்ட பின்னரே அவரைப் பதவியிலிருந்து விலக்கலாம். ராஜ்யங்களின் உயர்தர நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கும் இதே நியமங்களுண்டு. 65-க்குப் பதிலாக 62 வயது வரையில் அவர்கள் பதவி நீடிக்கும்.

பாரத நீதிபதிகள் முற்றிலும் சுதந்திரமாகவிருக்கப் போதிய பாதுகாப்புகள் இல்லை என்றே கூறவேண்டும். பதவி துறந்தபின் வேறு அரசாங்கப் பதவிக்கோ, அல்லது ஊதியமுள்ள பணிகளுக்கோ அவர்களை நியமிக்கலாகாது என்ற நியமமில்லை. ஓர் உயர்தர நீதிமன்றத்தின் பிரதிநிதி இப்பொழுது மத்திய மந்திரி சபையில் அங்கம் வகிக்கிறார். நீதிபதிகள் மதிநுட்பமுள்ளவர்கள், பதவி முடிந்தபின் உபயோகமான பணிபுரிவதால், பதவியிலிருக்கும்பொழுது முறை தவறி நடக்கமாட்டார்கள் என்று வாதிக்கலாம். ஆனால், அவர்களும் மனிதர்களென்பதை மறக்கலாகாது. பின்னர் வரக்கூடியதைப்பற்றிச் சிறிதும் சிந்திக்கமாட்டார்கள் என்று நினைப்பது தவறு. அரசாங்கத்திற்கெதிராகக் கொண்டு வரப்படும் வழக்குகளைப் பட்சபாதமின்றித் தீர்ப்பதே உயர்தர, உத்தம நீதிபதிகளின் மிகப் பொறுப்புள்ள பணியாகும். சுதந்திர

மனப்பான்மையை மறைமுகமாகப் பாதிக்கும் எவ்வித வழக்கத்தையும் அறவே தவிர்ப்பது வருங்காலத்தில் நீதிபரிபாலனம் நேர்மையுடனிருப்பதற்கு அத்தியாவசியமானது.

பொதுவாக, பாரத பார்லிமென்டுக்கும், மத்திய மந்திரி சபைக்கும் உள்ள பிணைப்பு பிரிட்டிஷ் அரசியலைப் போலவே உள்ளது. ஆயினும், தற்சமயம் ஒரு முக்கிய வேற்றுமை இருக்கின்றது. ஒரே கட்சி நீடித்துப் பெரும்பான்மையாக இருந்துவருவதால், மத்திய மந்திரிசபை பிரிட்டிஷ் நிர்வாகத்தைப்போல் நேரில் பார்லிமென்டுக்கு உட்பட்டதாகவும் இல்லை. பார்லிமென்டுக்கு வெளியிலிருந்து அமெரிக்க நிர்வாகத்தைப்போல அதன் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டதாகவுமில்லை. சட்டம் செய்வதற்கும், நிர்வாகம் நடத்துவதற்கும் ஏறக்குறைய எதேச்சாதிகாரமுள்ளதாகவே இருக்கின்றது.

அரசியல் அமைப்பு எப்படியிருப்பினும், அதிகாரப் பிரிவினையைப் பயன்படாமல் செய்யும் பல போக்குகள் இக்காலத்திய அரசியலில் தோன்றியுள்ளன. சட்டங்கள் மிகவும் சிக்கலானவைகளாக இருப்பதால், பல துறைகளில் உப விதிகளின் மூலமாக அவற்றை விளக்கவும் விரிவுபடுத்தவும் நிர்வாக அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இதனால், நியாயாலயங்களின் அதிகாரம் சிறிது சிறிதாக நிர்வாகிகளிடம் மாற்றப்படுகிறது. இதை முற்றிலும் தடுக்க முடியாதென்றுணர்ந்து அமெரிக்கக் காங்கிரஸ் 1946-ல் நிர்வாக முறை விதி என்ற சட்டம் செய்தது. அதன்படி, உப விதி செய்யும் அதிகாரி தான் செய்யப்போகும் உப விதிகளைப்பற்றி நன்கு விளம்பரம் செய்து அவற்றால் பாதிக்கப்படுவோரின் ஆட்சேபணைகளை நன்கு ஆலோசிக்க வேண்டும். இந் நாட்டில், அவ்வித உப விதிகள் பார்லிமென்டில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், அதன் அங்கத்தினர்கள் அவைகளைப்பற்றி ஆலோசிக்க உரிமையுண்டு என்றும் விதி செய்வது வழக்கம். ஆனால், மற்ற அலுவல்களையே கவனிக்கப் போதிய அவகாசமும், விருப்பமும் இல்லாத பார்லிமென்டு மெம்பர்கள் இந்த உப விதிகளைச் சாதாரணமாக ஆராய்வார்களென்று எதிர்பார்க்க முடியாது. ஏதாவது ஓர் உப விதியைப்பற்றிப் பத்திரிகைகளிலோ, வியாபார சங்கங்களிலோ பலத்த எதிர்ப்பு ஏற்பட்டால் அப்பொழுது கவனிக்கப்படலாம் என்ற எண்ணத்துடனேயே அவ்வித விதி செய்யப்படுகிறது.

...APPA'S C...

# 6. ஜனதிபதி

**எந்த** அரசாங்கத்திற்கும் ஓர் ஜனதிபதி அவசியம். மக்கள் ஆட்சியில் ஜனதிபதி இருவகைப்படுவர். அரசாங்க ஆடம்பரங்களுக்கும், மரியாதைகளுக்கும், கௌரவப் பணிகளுக்கும் நாட்டின் பிரதிநிதியாகவிருந்து, அரசாங்க அதிகாரத்தை மந்திரிகளிடமே ஒப்புவிக்கப்படும் முறை ஒன்று. இது பிரிட்டனிலும், பாரதத்திலும் இப்பொழுது வழங்கி வருகின்றது. பிரிட்டனில் ஜனதிபதி பரம்பரையாக வரும் அரச வம்சத்தைச் சேர்ந்தவர். முதலில் எல்லா அதிகாரங்களும் அவரிடம் குவிந்திருந்தன. படிப்படியாக அவை அனைத்தும் அவரிடமிருந்து பார்லிமென்டுக்கு மாற்றப்பட்டு இப்பொழுது பிரிட்டனில் அரசுக்கு ஓர் உற்சவ மூர்த்தியாகவே இருந்துவருகிறார்.

இதற்கு மாறாக, அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனதிபதி அரசாங்கத்தின் முக்கிய நிர்வாகி. அவருக்கு பிரிட்டிஷ், பாரத ஜனதிபதிகளின் கௌரவப் பணிகளும் உண்டு. ஆனால், அது ஒரு சிறு பாகமே. நாட்டின் அரசாங்கத்தை நிர்வகிக்கும் பொறுப்பே அவர் பதவியின் முக்கிய அம்சமாகும்.

எல்லா ஜனதிபதிகளுக்குமுள்ள கௌரவப் பணிகளாவன. சட்ட மன்றங்களால் ஆமோதிக்கப்படும் மசோதாக்கள் ஜனதிபதி கையெழுத்திட்ட பிறகே சட்டங்களாகின்றன. வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் தூதர்களுக்குப் பிரமாண பத்திரம் அவர்தாம் வழங்கவேண்டும். அவ்வாறே, அயல் நாடுகளிலிருந்து வந்திருக்கும் தூதர்களின் பிரமாண பத்திரங்களை அவரே ஏற்கவேண்டும். மந்திரிகள், உயர்நீதிபதிகள், காரியதரிசிகள் போன்ற முக்கிய உத்தியோகஸ்தர்களின் நியமன பத்திரங்களில் அவர் கையெழுத்தும் முத்திரையும் இருக்கவேண்டும். நாட்டின் முக்கிய தேசிய விழாக்களிலும், கொண்டாட்டங்களிலும் சாதாரணமாக அவரே தலைமை வகிப்பது வழக்கம்.

பிரிட்டன், பாரத தேசங்களில் ஒவ்வோர் ஆண்டும் பார்லி மென்ட் முதலில் கூடும்பொழுது, இரு சபைகளையும் சேர்ந்து ஜனுதிபதி பிரசங்கம் செய்வார். அதில் வரப்போகும் வருஷத்தில் அரசாங்கத்தின் புதிய நீதி முறைகளும், முக்கியமான திட்டங் களும் குறிப்பிடப்படும். உண்மையில் அந்தப் பிரசங்கத்தின் சாரமான பகுதிகள் மந்திரி சபையால் தயாரிக்கப்பட்டு ஜனுதிபதி மூலம் வெளியிடப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய அரசியலில் காங்கிரசுக்குச் செய்திகள் அனுப்பவும், மசோதாக்களையும் செலவினங்களையும் விவரித்து ஆதரவு கோரவும் ஜனுதிபதிக்கு உரிமையுண்டு.

பார்லிமெண்டில் நிறைவேற்றப்படும் மசோதாக்களை அங்கீ கரித்துச் சட்டங்களாக்கவும் நிராகரிக்கவும் பிரிட்டிஷ், பாரத ஜனுதிபதிகளுக்கு அதிகாரமுண்டு. ஆனுல், அது மந்திரிசபை யின் விருப்பப்படியே பிரயோகிக்கப்படுவதால், சாதாரணமாக எம் மசோதாவும் நிராகரிக்கப்படுவதில்லை. ஒரு மசோதா நிறை வேறிய பின்னர் மந்திரிசபை கவிழ்ந்து மற்ருேர் மந்திரி சபை பதவியேற்று அச் சபை விரும்பினுல் மசோதாவுக்கு ஜனுதிபதி அங்கீகாரத்தை மறுப்பார்.

அமெரிக்க அரசியலமைப்பின் 1ஆம் விதி 7ஆம் பிரிவு பின்வருமாறு: பணத்தைப்பற்றிய எம் மசோதாவும் மக்கள் பிரதிநிதி சபையிலேயே முதலில் பிரயோகிக்கப்படவேண்டும். ஆனுல், செனேட்டிற்கு அப் பிரேரணைகளை மாற்ற அதிகாரமுண்டு. இரண்டு சபைகளும் ஒத்து ஒரு மசோதாவை ஒரே விதத்தில் நிறைவேற்றினுல், அது ஜனுதிபதியிடம் அளிக்கப்படவேண்டும். அதை அவர் அங்கீகரித்தால் கையெழுத்திடுவார். இல்லையேல், தமது ஆட்சேபணைகளுடன் அது ஆரம்பமான சபைக்கு அனுப்பி விடலாம். அவருடைய சந்தேகங்களையும், ஆலோசனைகளையும் கவனித்து முடிவு செய்யவேண்டும். மசோதாவை மாற்றக் கூடாது என்று மூன்றில் இரண்டு பாகங் கொண்ட பெரும்பான்மை யால் தீர்மானிக்கப்பட்டால், அது மற்ற சபைக்கு அனுப்பப்படும். அங்கும் அதே பெரும்பாலரால் ஆமோதிக்கப்பட்டால், ஜனுதிபதி யின் ஆட்சேபணைகள் நிராகரிக்கப்பட்டவையாகும். மசோதா சட்டமாகிவிடும்.

ஆதலால், அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனுதிபதிக்கு எம் மசோதாவையும் முற்றிலும் நிராகரிக்க அதிகாரமில்லை. ஆயினும், புனராலோசனைக்கனுப்புவதாலும், இரண்டாவது முறை தீர்மானத்திற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை

அவசியமானதாலும், ஜனுதிபதியின் விருப்பத்திற்கு விரோதமாக எச் சட்டத்தையும் செய்துவிடுவது காங்கிரசுக்கு எளிதல்ல.

பாரத அமைப்பில் 111 விதி கூறுவதாவது : ஒரு மசோதா பார்லிமென்டின் இரண்டு சபைகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பின். அது ஜனுதிபதியிடம் அனுப்பப்படும். அவர் அதை அங்கீ கரிக்கவில்லையென்று கூறிவிடலாம். இல்லையேல் திருத்தங்களைக் குறிப்பிட்டு அவற்றைப்பற்றி ஆராயும்படி பார்லிமென்டுக்குத் திருப்பி அனுப்பிவிடலாம். பார்லிமென்டின் சபைகள் அவை களைப்பற்றி ஆலோசித்துத் திருத்தங்களை ஏற்ரே, நிராகரித்தோ மசோதாவை மீண்டும் நிறைவேற்றினுல், ஜனுதிபதி தமது அங்கீ காரத்தை மறுக்கலாகாது,

இம் மூன்று ஜனுதிபதிகளின் சில தனிச் சிறப்புகளைப்பற்றிக் கவனிப்போம். பிரிட்டனின் வரம்புக்குட்பட்ட பரம்பரையான, அரச வம்சம் ஜனுதிபதியாக இருந்துவருகின்றது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட‘ பிரிட்டன்-1965’என்ற பிரசுரத்தில் அடியிற் கண்ட குறிப்புகள் காணப்படுகின்றன :

‘இக் கூட்டு இராஜ்யத்தில் அரச வம்சமே மிகவும் புராதனமான நிறுவனமாகும் சென்ற ஆயிரம் ஆண்டுகளில், அதன் தொடர்பு ஒரே தடவை அறுக்கப்பட்டது. நேர் வாரிசுகளுக்குப் பட்டம் கிடைக்காதபொழுதும் வம்ச பரம்பரை முரண்படவில்லை. தற்சமயம் ஆளும் எலிசபெத் இராணியார் இங்கிலாந்தை கி. பி. 829-ல் ஒற்றுமைப்படுத்திய எக்பர்ட் என்ற சாக்சன் அரசருக்கும், கி. பி. 1005-34 ஆண்டுகளில் ஸ்காட்லாண்டில் ஆண்ட இரண்டாவது மால்கம் என்பவருக்கும் சந்ததியாவார்.

1953-ல் இயற்றப்பட்ட ‘அரச பட்டங்கள்’ சட்டத்தின்படி எலிசபெத் இராணியின் பட்டப்பெயர்களாவன : கடவுள் கிருபை யால் இரண்டாவது எலிசபெத் பெரிய பிரிட்டன். வடக்கு அயர் லாந்து, மற்றுமுள்ள இராஜ்யங்களுக்கும் பிரதேசங்களுக்கும் இராணி; பிரிட்டிஷ் கூட்டுச் சமுதாயத்திற்குத் தலைவி; சமயத்தின் காவலாளி; கானடா, ஆஸ்திரேலியா, நியூசிலாண்டு இராஜ்யங் களுக்கும் அவளே இராணியாதலின், அந்த இராஜ்யங்களின் பெயர்கள் பிரிட்டன், அயர்லாந்துக்குப் பதிலாக வேண்டிய சந்தர்ப் பங்களில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

பட்டத்திற்கு உரிமையுள்ள வரிசைக்கிரமம் பார்லிமென்டின் சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. முதலில் கிரமப்படி பிள்ளைகள்,

பிள்ளைகளில்லாவிட்டால் வயதுப்படி பெண்கள் வாரிசுகளாகின்றனர். ஆண்கள் பட்டத்திற்கு வந்தால் அவர்களுடைய மனைவியர் இராணிகளாகின்றனர். பெண்களின் புருஷர்கள் அரசர்களாவதில்லை.

இராணியை அரசாங்கத்தின் மனித மூர்த்தியாக மக்கள் கருதுகின்றனர். சட்டப்படி அவள் நிர்வாகத்தின் தலைவி; சட்ட மன்றத்தின் ஒரு முக்கிய அங்கம். நீதி பரிபாலனத்தின் உத்தமாதிகாரி. எல்லா சைனியங்களுக்கும் முக்கிய சேனுதிபதி: மத ஸ்தாபனத்தின் லௌகீகத் தலைவி. ஆனால், நடைமுறையில் பல நூற்றாண்டுகளாக பிரிட்டிஷ் அரசியல் படிப்படியாக மாறி இப்பொழுது அரசியல் அதிகாரங்கள் மிகவும் குறைந்து மந்திரிகளின் ஆலோசனையின்படியே நடக்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள். கிரீடம் வகிக்கிருள்: ஆளுவதில்லை. பிரிட்டனின் எல்லா அலுவல்களும் இராணியின் பெயரிலேயே நடைபெறுகின்றன.

இச் சூழ்நிலையில், சமீப காலத்திய சட்டங்கள் அரசரின் மூலமாக இல்லாமல், நேரில் மந்திரிகளுக்கே அதிகாரமளிப்பதாகவிருக்கின்றபோதிலும், இராணி நேரில் பல பணிகளில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும்.

பார்லிமென்டைக் கூட்டுவதும், கூட்டத்தை முடிப்பதும், அதைக் கலைப்பதும் இராணியின் பெயரிலேயே. சாதாரணமாக முதல் கூட்டம் இராணியின் பிரசங்கத்தோடு ஆரம்பமாகும். இராணி ஊரில் இல்லாவிட்டால், இது லார்ட் சான்ஸலர் என்ற பிரபுக்கள் சபைத் தலைவரால் அவள் சார்பில் படிக்கப்படும். பார்லிமென்டில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு அவள் அங்கீகாரம் அளிக்க வேண்டும். நியாயத்திற்கு அவள் மூலாதாரமானதால், குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்களின் தண்டனையைக் குறைக்கவும், முற்றிலும் தள்ளுபடி செய்யவும் அவளுக்கு உரிமையுண்டு. கௌரவங்களின் உற்பத்தி நிலையமானதால், பலவிதப் பட்டங்களை அவளே அளிக்கவேண்டும். எல்லா முக்கிய உத்தியோகஸ்தர்களும் அவள் பெயரிலேயே நியமிக்கப்படுகின்றனர். மந்திரி சபையில் ஒரு மந்திரியைச் சேர்த்துக்கொள்ள அவள் அனுமதி வேண்டும். மந்திரி சபையை அமைப்பதும் அவளே. வெளிநாட்டு விவகாரங்களில், நாட்டின் அரசியல் தலைவி என்ற தர்மத்தால் மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவும், பிரதேசங்களைத் தியாகம் செய்யவும், அவைகளை ஏற்கவும் அவளுக்கு அதிகாரமுண்டு.

இராணியின் மாளிகைகளைப் பராமரிக்கவும், அவளுடைய ஊழியர்களுக்காகவும் ஆண்டுதோறும் போதிய பணத்தை பார்லி மென்ட் அனுமதிக்கிறது. இராணி, அவளது குடும்பத்தினர், அரச பதவிக்கு வரக்கூடிய இதர வாரிசுகள் அனைவருக்கும் தகுந்தவாறு சொந்தச் செலவுகளுக்கு மான்யங்கள் வழங்கப்படுகின்றன.

பிரிட்டனுக்கு நேர்மாருக, அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் ஜனுதிபதி (பிரசிடென்ட்) சாதாரண பிரஜையே. நான்கு வருஷங்களுக்கு ஒரு முறை 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் அனைவர்களின் வாக்கால் தேர்ந்தெடுக்கப்படுகிருர், இரண்டு முறையே ஒருவர் இப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். ஜனுதிபதி அகால மரணமடைந்தால், உப ஜனுதிபதி மீதிப் பதவிக் காலத்திற்கு ஜனுதிபதியாகிருர். நடுக்காலப் பதவியைத் தவிர்த்து, இருமுறை தேர்ந்தெடுக்கப்படலாம். பதவிக் காலம் முடிந்ததும் மீண்டும் ஒரு சாதாரண பிரஜையாகிவிடுகிருர்.

அமெரிக்கப் பிரசிடென்ட் ஒரு கட்சித் தலைவரென்ற முறையிலேயே தேர்ந்தெடுக்கப்படுகிருர். ஜனுதிபதியான பிறகும் தமது கட்சிக்குத் தலைமைவகிக்கிருர். ஆயினும், அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்கள் அனைவருக்கும் தாம் பிரதிநிதி, அவர்களுடைய முக்கிய நிர்வாகி என்பதை மறப்பதில்லை. ஓர் ஆசிரியர் கூறுகிருர் : 'தமது பதவியின் காரணத்தால் பிரசிடென்ட் ஓர் அரசியல்வாதி, தத்துவஞானி, சட்டம் இயற்றுவோன், நீதிபதி, போர்த்தொழில் நிபுணர், ராஜதந்திரி, வெளிநாட்டுக் கொள்கைகளை நிர்ணயிப்பவர், பொருளாதார நிபுணர், கையெழுத்திடும் இயந்திரம், நாட்டின் கலாசாரத்தின் மூர்த்தியாவார்.'

அமெரிக்கப் பிரசிடென்டின் தேர்தலைப்பற்றிய நியமம் அதன் அரசியலமைப்பின் இரண்டாவது விதியிலும், திருத்த விதி 12-லும் அடங்கியிருக்கிறது. அவற்றின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு :

'அமெரிக்க ஐக்கிய நாட்டின் நிர்வாக அதிகாரம் பிரசிடென்டிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு அவர் பதவி வகிப்பார். உப பிரசிடென்டோடு பின்கண்ட முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்.'

ஒவ்வோர் இராஜ்யமும் மக்கள் சபையிலும், செனேட்டிலும் தனக்குள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்குச் சமமாகப் பிரசிடென்டின் தேர்வுக்காகத் தனிப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர்.

ஆனால், மக்கள் சபையிலோ, செனேட்டிலோ அங்கத்தினராக இருப்போரும் அரசாங்கத்திடமிருந்து ஊதியம் பெறுவோரும் தனிப் பிரதிநிதிகளாவதற்குத் தகுதியற்றவர்கள்.

இத் தனிப் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் இராஜ்யத்தில் கூடி பிரசிடென்ட், உப பிரசிடென்ட் இருவருக்கும் வாக்களிப்பார்கள். எப் பிரதிநிதியும் ஒரே இராஜ்யத்தில் வசிக்கும் பிரசிடென்ட், உப பிரசிடென்டுக்கு வாக்களிக்கலாகாது. இருவரும் வெவ்வேறு இராஜ்யவாசிகளாகவிருக்கவேண்டும். பிரசிடென்ட், உப பிரசிடென்ட் இருவருக்கும் தனித்தனிச் சீட்டுகளில் வாக்களிக்க வேண்டும். முடிவில் பிரசிடென்ட் அபேட்சகர்களுக்கு உள்ள வாக்குகளுக்கும், உப பிரசிடென்ட் அபேட்சகர்களின் வாக்குகளுக்கும் தனித்தனியான வாக்குக் குறிப்புகளடங்கிய பத்திரங்களைத் தயாரித்துக் கையெழுத்திட்டுத் தலைநகருக்கு அனுப்ப வேண்டும். செனேட் பிரசிடென்ட், செனேட் மக்கள் சபை அங்கத்தினர்களின் முன்னிலையில் இப் பத்திரங்களைப் பிரித்து, வாக்குகளைக் கணக்கிடவேண்டும். மொத்த வாக்குகளில் பாதிக்கு மேல் பெறும் அபேட்சகர் பிரசிடென்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராவார். அவ்விதம் ஒருவரும் பாதிக்குமேல் வாக்குகளில் வராவிட்டால், மிகவும் அதிகமாக வாக்குள்ள மூன்று அபேட்சகர்களுக்கு ஒருவரைப் பிரதிநிதி சபை வாக்கெடுப்புமூலம் தீர்மானம் செய்யும். வாக்குகளைக் கணக்கெடுப்பதில் ஒவ்வோர் இராஜ்யத்தின் வாக்குகள் அனைத்தும் அவற்றின் பெரும்பாலான வாக்குகளைப் பெற்றவருக்கே மொத்தமாக அளிக்கப்படும். இதற்கு மூன்றில் இரண்டு பங்கு இராஜ்யங்களின் வாக்குகள் அவசியம். அவற்றுள் பெரும்பான்மையால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இப்பொழுதும் பிரதிநிதிகள்மூலம் பிரசிடென்டின் தேர்வு ஆசாரத்திற்கு முன்போலவே இருக்கும்பொழுதும், உண்மையில் பொதுமக்களின் நேர்வாக்காலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார். எந்த இராஜ்யத்தில் ஓர் அபேட்சகருக்குப் பெரும்பாலான வாக்குகள் கிடைக்கிறதோ அதன் பிரதிநிதித்துவம் முழுவதும் அவருக்குக் கிட்டியதாகக் கணக்கெடுக்கப்படுகிறது. இம் முறையில், மக்கள் பிரதிநிதி சபைக்கு அங்கத்தினர்கள் அதிகமாகவிருக்கும் மக்கள் குழுமிய இராஜ்யங்களுக்கு அதிகம் பங்கு கிடைக்கிறது. மிகவும் ஜனத்தொகை குறைவாகவிருக்கும் இராஜ்யங்களுக்கும் ஒரு விதச் சலுகை ஏற்படுகிறது. ஏனெனில், எல்லா இராஜ்யங்களுக்கும் இரண்டு செனேட் மெம்பர்களே இருப்பதால் மக்கள்தொகை எவ்வளவு குறைந்தாலும் இப் பிரதிநிதித்துவம் குறைவதில்லை.

இம்மாதிரி பிரசிடென்டைத் தேர்ந்தெடுப்பதில் பல குறைகள் ஏற்படுகின்றன. இரண்டு அபேட்சகர்களுக்கு ஏறக்குறைய சமமாக ஆதரவு இருந்தபோதிலும், முடிவில் சிறிது அதிகமான ஆதரவுள்ளவருக்கு மிக அதிக வாக்குகளும் எதிரிக்கு அதிகக் குறைந்த வாக்குகளும் கிடைக்கின்றன. உதாரணமாக, ஓர் இராஜ்யத்திற்கு 30 பிரதிநிதிகள் இருந்து ஒருவருக்கு 16 வாக்குகளும் மற்றவருக்கு 14 வாக்குகளும் கிடைத்தால், முதல் அபேட்சகருக்கே 30 வாக்குகளும் சேர்ந்துவிடுகின்றன. மேலும், ஓர் ஐக்கிய அரசாங்கத்தின் மக்கள்சபைத் தேர்வில் இராஜ்யவாரியாகக் கணக்கெடுப்பது சரியான முறையன்று. ஆயினும், இம் முறை வெகுகாலமாகப் பழக்கத்திலிருப்பதால் அதை மாற்றுவது சுலபமன்று.

பிரசிடென்ட் ஆவதற்கு முன்னும் ஒரு சாதாரண பிரஜை, பதவியைத் துறந்தபின்னரும் ஒரு சாதாரண பிரஜை. ஆனால், பதவியிலிருக்கும்பொழுது, அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாதிபதி உலகிலேயே மிக்க செல்வாக்குள்ள மனிதருள் சிறந்தவராகின்றார். தமது நாட்டில் அவருடைய அதிகாரம் மிகுந்தது. வெளிநாடுகளுக்கு உதவியளிக்க அவரிடம் சைனிய பலமும், செல்வ சாதனமும், மற்ற எல்லா அரசாங்கங்களைவிடப் பன்மடங்கு அதிகம். ஆதலால், பிரசிடென்டின் சொந்த அலுவல்கள்கூட உலகெங்கும் பத்திரிகைகள் பெரும் தலைப்புகளுடன் பிரசுரிக்கும் செய்திகளாகின்றன.

நாட்டின் ஜனாதிபதியாகவும், முக்கிய நிர்வாகியாகவுமிருப்பதால் பிரசிடென்டின் அலுவல்களும், அதற்கு வேண்டிய அலுவலர்களும் அதிகமாகவிருப்பதில் ஆச்சரியமில்லை. 1956-ல் அவரது சொந்த நிர்வாக நிலையத்தில் 1,185 பேர்கள் பணி செய்தனர்; சாதாரண தினங்களில் 4,000 கடிதங்களும், பெரும் சம்பவங்கள் நேரிடும்பொழுது 20,000 கடிதங்களும் அந் நிலையத்தில் பட்டுவாடா செய்யப்படுகின்றன. பிரசிடென்ட் நேரிலேயே பல கடிதங்களுக்கும் பத்திரங்களுக்கும் கையெழுத்திட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்டபின், நான்கு வருஷங்களுக்கு அவரைப் பதவியிலிருந்து சாதாரணமாக அசைக்கமுடியாது. அவர் பெரிய குற்றம் செய்தால் பெருங் குற்றச்சாட்டு (இம்பீச்மென்ட்) முறையில்தான் அவரை நீக்க முடியும். முதலில் மக்கள் பிரதிநிதி சபை ஆராய்ந்து அவரைக் குற்றவாளி என்று மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் தீர்மானம் செய்யவேண்டும். அக் குற்றச்

சாட்டை செனேட் சபை விசாரித்து, அதுவும் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்கால் உறுதிப்படுத்தவேண்டும். அப்பொழுது செனேட் கூட்டத்திற்கு உத்தம நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி தலைமை வகிப்பார். இதே முறையில்தான் உப ஜனுதிபதி, உத்தம நீதிமன்றத்தின் நீதிபதிகள், மற்றும் சில பெரும் பதவி வகிப்போர்கள் தங்கள் பதவியிலிருந்து நீக்கப் படலாம். இதுவரையில் 1868-ல் ஆண்டிரு ஜான்சன் என்ற பிரசிடென்ட் ஒருவரே இவ்விதம் குற்றம் சாட்டப்பட்டார். செனேட் சபையில் ஒரு வாக்குக் குறைவால் அது நிறைவேற வில்லை. ஆதலால், பிரசிடென்டைப் பதவியிலிருந்து நீக்குவது என்பது அநேகமாக இயலாது என்றே கூறலாம்.

தமது அதிகாரத்தில் இந்திய ஜனுதிபதி பிரிட்டனின் அரசியைப்'போலவும், நியமனம், பதவி நீக்குதல்களில் அமெரிக்க பிரசிடென்டைப் போலவும் இருக்கிறுர். அவர் இந்தியப் பிரஜை யாக இருக்கவேண்டும். 35 வயதுக்குக் குறையாமலிருக்க வேண்டும். லோக சபையின் ஏதேனுமோர் தொகுதியில் வாக் காளராக இருக்கவேண்டும். மத்திய இராஜ்ய அரசாங்கங்களின் ஊதியம் பெற்ற சேவகராகவிருக்கலாகாது. அவரது சாதாரண பதவிக் காலம் 5 வருஷங்கள். அமெரிக்க பிரசிடென்டைப்போல் இரு முறையே தேர்ந்தெடுக்கப்படலாம் என்ற நியமமில்லை. ஆனுல், இந்த நாட்டின் அரசியல் சூழ்நிலையில் அதற்கு மேல் எவரும் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள் என்று எண்ண இடமுண்டு.

பார்லிமென்டின் இரண்டு சபைகளின் மெம்பர்கள், இராஜ்யங் களில் மக்கள் சபை மெம்பர்கள் சேர்ந்து இந்திய ஜனுதிபதியைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர் தொகுதியாவர். ஆனுல், அனை வருக்கும் ஓரேவித வாக்கில்லை. மொத்த வாக்குகளில் பாதி பார்லி மென்டின் அங்கத்தினர்களுக்குரியது. அதை லோகசபை, இராஜ்ய சபை மெம்பர்களின் எண்ணுல் வகுத்துக் கிடைக்கும் ஈவு ஒரு பார்லிமென்டின் அங்கத்தினரின் வாக்காகக் கணக்கிடப்படும். மீதிப் பாதி வாக்குகள் ஜனத்தொகையின் வீதாசாரப்படி இராஜ்யங் களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டு அது அந்த இராஜ்யத்தின் மக்கள்சபை அங்கத்தினர்களுக்குச் சமமாக அளிக்கப்படும். தேர்தல் இரகசிய வாக்குச் சீட்டுகள்மூலம், மாற்றக்கூடிய தனி வாக்கு முறைப்படி நடைபெறும். இம் முறையில் எவரேனும் ஒருவருக்கு முடிவில் மொத்தத்தில் பாதிக்குக் குறையாத வாக்குகள் கிடைத்தே தீருமாதலால், மறு தேர்தல்களுக்கு அவசியமில்லை.

அமெரிக்கப் பிரசிடென்டை தேசத்துரோகம் போன்ற பெரிய குற்றங்களுக்கே நீக்கலாம். இந்திய ஜனுதிபதியை அரசியல்

அமைப்பைப் புறக்கணித்த குற்றத்திற்காக விலக்கலாம். ஆனால், அதே மாதிரியான குற்றச்சாட்டு முறைப்படியே நீக்கமுடியும். இங்கு ஏதாவது ஒரு பார்லிமென்ட் சபையில் மூன்றில் இரண்டு வாக்கால் குற்றச்சாட்டு தீர்மானிக்கப்பட்டு, இரண்டாவது சபையால் விசாரிக்கப்பட்டு அதே பெரும்பான்மையால் உறுதிப்படுத்தப் படவேண்டும். சென்ற 17 வருஷங்களில் இவ் விதிகளைப் பிரயோகிக்க எவ்வித அவசியமும் ஏற்படவில்லை.

பாரத அரசியல் அமைப்பின் வாசகப்படி இந்திய ஜனாதிபதிக்கும் அமெரிக்க பிரெசிடென்டின் அதிகாரமுண்டு என்று எண்ணக் கூடும். 53 விதிப்படி அவரே நிர்வாகத்தின் தலைவராவார். 53ஆவது விதியில் அவரே ஐக்கிய பாரதத்தின் எல்லாப் படைகளுக்கும் உத்தம அதிபதி என்று கூறப்பட்டிருக்கிறது. அமெரிக்கப் பிரசிடென்ட் பெரிய உத்தியோகஸ்தர்களை செனேட்டின் அனுமதியின் பேரிலேயே நியமிக்கலாம். அவ்வித நிபந்தனையின்றி நீதிபதிகளையும், மற்றவர்களையும் பாரத ஜனாதிபதி நியமிக்கலாம். மற்ற அரசியல் தலைவர்களைப்போலவே, இந்திய ஜனாதிபதியும் குற்றவாளிகளின் தண்டனைகளைக் குறைக்கவும், மன்னிக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்.

ஆனால், உண்மையில் இவ் விதிகள் அலங்கார வாசகங்களே. இந்திய அரசியல் அமைப்பில் 390 விதிகளும், கணக்கற்ற உப விதிகளுமிருந்தபோதிலும், ஜனாதிபதிக்கும் மத்திய மந்திரி சபைக்குமுள்ள தொடர்புகளை விளக்குவது 74ஆவது விதியொன்றே. அதன்படி ஜனாதிபதிக்கு எல்லாத் துறைகளிலும் ஆலோசனை சொல்ல ஒரு மந்திரிசபை இருக்கவேண்டும். அதன் பிரதம மந்திரியை ஜனாதிபதி நியமிப்பார். மற்ற மந்திரிகளை பிரதம மந்திரியின் ஆலோசனையின்பேரில் நியமிப்பார்; மந்திரிசபை கூட்டாக லோக சபைக்குப் பொறுப்பாக இருக்கும்; ஜனாதிபதிக்கு மந்திரிசபை என்ன ஆலோசனை கூறிற்று என்பதைப்பற்றி நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ எந்த நியாயாலயமும் விசாரிக்கக் கூடாது என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் சம்பிரதாயங்களையொட்டியே, மந்திரிசபை நிர்வாகம் செய்யவேண்டும்; அதன் முடிவுகள் ஜனாதிபதியின் பெயரால் அமல் செய்யப்படவேண்டும் என்ற முறை 1950-லிருந்து வழங்கி வருகின்றது. அதே சம்பிரதாயத்தை அலட்சியம் செய்து ஒரு ஜனாதிபதி உத்தரவு போட்டால் என்னவாகுமென்பதைச் சட்ட ரீதியாக முடிவுசெய்ய முடியாது. அவரை நீக்கப் பெருங்குற்றச் சாட்டுக் கொண்டுவரப்படலாம். இரண்டு சபைகளிலும் அதற்கு

வேண்டிய மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாவிட்டால் ஓர் அரசியல் முட்டுக்கட்டை ஏற்பட்டுவிடும். வருஷாந்திரச் செலவுகளுக்குப் பார்லிமென்டின் அனுமதியின்றிப் பணம் கிடைக்காது. ஆனுல், அவ்வித சந்தர்ப்பம் சமீபகாலத்தில் நேரிடாது என்று நம்பக்கூடும். இதுவரையில் பதவி வகித்த டாக்டர் ராஜேந்திரபிரசாத், டாக்டர் ராதாகிருஷ்ணன் இருவரும் பிரிட்டிஷ் சம்பிரதாயத்தைக் கடைப்பிடித்து வரம்புக்குட்பட்ட (அதாவது மந்திரி சபையின் முடிவை ஏற்கும்) அரசியல் தலைவர்களாகவே பணி செய்து வந்திருக்கின்றனர்.

அரசியல் அமைப்பின் வாசகத்திற்கும் பிரிட்டிஷ் சம்பிரதாயங்களுக்குமுள்ள முரண்பாடுகளைப்பற்றி அரசியல் நிர்ணய சபையின் ஆலோசகரும் அரசியல் தத்துவ ஞானியுமான திரு. பி. என். ராவ் அவர்கள் 1957, மே. 14-ந் தேதி சென்னை 'ஹிந்து' பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதினுர். அதில் சட்டப்படி ஜனுதிபதிக்குச் சொந்த அதிகாரமுண்டு என்ற வாதத்தையும், பிரிட்டிஷ் அரசியல் சம்பிரதாயங்களையொட்டி அவ்வித அதிகாரமில்லை என்ற வாதத்தையும் நன்கு விளக்கி, இரண்டாவது வாதமே நியாயமானது என்ற முடிவுக்கு வந்தார். நேர் அதிகாரமில்லாமலிருந்தாலும் ஜனுதிபதிக்கு அதிகச் செல்வாக்கும், மந்திரிசபைக்கு நல்ல வழிகாட்டச் சந்தர்ப்பங்களுமிருக்குமென்று பின்வருமாறு கூறினுர்:

"இதனுல் இந்திய ஜனுதிபதி ஒரு வெறும் விக்கிரகம் என்று முடிவு செய்யலாகாது. பிரிட்டிஷ் அரசனைப்போலவே, தன்னைக் கலந்து ஆலோசிக்கவேண்டுமென்று வற்புறுத்தவும், உற்சாக மூட்டவும், எச்சரிக்கை செய்யவும் அவருக்கு உரிமையுண்டு. மந்திரிகளின் ஆலோசனைகளை ஆராயாமல் உடனே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயமில்லை. எந்த யோசனைக்கும் தமது ஆட்சேபங்களைத் தெரிவித்து மந்திரிசபை புனராலோசனை செய்யும்படி வற்புறுத்த உரிமையுண்டு. கடைசியாக, மந்திரிசபை முடிவை ஏற்கவேண்டும். சட்டப்படி அதிகாரங்கள் குறையவே பிரிட்டிஷ் அரசருக்கும் பிரபுக்கள் சபைக்குமுள்ள செல்வாக்கு அதிரித்து வருவதை நாம் காண்கிருேம். பாரதத்திலும் அவ்விதமே நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம். ஏனெனில், 'நற்புத்தியின் போதனைகள் அதிகாரத்தின் நிர்ப்பந்தமில்லாதபொழுதே நன்கு பயன்படும்' என்று முதியோர் கூறியது உண்மையே. பிரிட்டிஷ் அரசரைப்போலவே, இந்திய ஜனுதிபதியும், சட்டபூர்வமான அதிகாரத்தை நாடாமல், கட்சிச் சண்டைகளில் கலக்காமல், சமநிலையில் தர்மத்தின் பலத்தைக்கொண்டே சேவை செய்ய

வேண்டுமென்பதைக் காட்டிலும் ஒளிமயமான வருங்காலப் போக்கைக் கற்பனை செய்வது இயலாததாகும்.''

பாரதம், அமெரிக்க ஐக்கிய நாடு இரண்டிலும் ஓர் உப ஜனாதிபதி இருக்கிறார். இங்கு அவர் பார்லிமென்டின் இரு சபை களின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அமெரிக்கா பிரசிடென்டோடு கூட்டாகப் பொதுமக்களின் வாக்குகளால் நிய மிக்கப்படுகிறார். இருவரும் தங்கள் பதவியின் காரணமாகச் சட்ட மன்றத்தின் மூத்த சபையின் தலைவராகின்றார்.

ஆனால், இவர்களுக்குள் இரண்டு முக்கிய வித்தியாசங்களுண்டு. அமெரிக்க பிரசிடென்ட் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந் தாலும், வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்யும்பொழுதும் அவருடைய பதவியை உப ஜனாதிபதி வகிப்பதில்லை. இந்தியா வில் ஜனாதிபதி அவரிடம் ஒப்புவித்துவிடுகிறார். பிரசிடென்ட் தமது நான்கு வருஷ காலத்தின் நடுவில் இறந்தாலோ இராஜிநாமாச் செய்தாலோ மீதிக் காலத்திற்கு வைஸ் பிரசிடென்ட், பிரசிடென் டாகிவிடுகிறார். இங்கு அப்படியில்லை. தாற்காலிகமாக ஜனாதிபதி யாகப் பணி செய்யலாமேயொழிய, புதிய ஜனாதிபதி அரசியல் அமைப்பின் விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அமெரிக்காவில் புதிய பிரசிடென்டின் தேர்தலும் பதவியேற்றலும் குறிப்பிட்ட தேதிகளில் நிரந்தரமாக நடைபெறுகின்றன. இது காறும் இடைக்காலத்தில் இந்திய ஜனாதிபதியின் பதவி காலி யாகாததால், பொதுத்தேர்தலுக்குப் பிறகு அவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். துர்ப்பாக்கியவசமாக அது நடுவில் காலியானால், ஜனாதிபதியின் பதவிக் காலமும் லோக சபையின் காலமும் பிரிந்து விடும். பொதுத்தேர்தலுக்கு மூன்று நான்கு வருஷங்கள் பிந்தித் தேர்ந்தெடுக்கப்பட்டு அடுத்த பொதுத் தேர்தலுக்கு ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு முன் புதிய ஜனாதிபதி பதவிக்கு வரக்கூடும், அப்பொழுது ஆளும் கட்சியின் ஆதரவு அவருக்கு ,இல்லாமலும் அவருடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பு மந்திரி சபைக்கு இல்லா மலும் இருக்கக்கூடும்.

பிரிட்டனில் உப அரசரோ அரசியோ இருக்க முடியாது. அவர் தமது பொறுப்புகளைக் கவனிக்க முடியாத காலங்களில், அவரது சார்பில் சில அரச பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு, அரசரின் பத்திரமூலம் குறிப்பிட்ட அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன. அரசர் வயது வராத இளைஞராகவோ, முற்றிலும் பணிபுரிய முடியாமற்போய்விட்டாலோ, அவருடைய சார்பில் ஓர் அதிபதி (ரீஜென்ட்) சட்டபூர்வமாக நியமிக்கப்படுவார். எலிசபெத்

இராணிக்குப் பதிலாக அவரது கணவர் எடின்பரோ கோமகன் அவசியமானல் ரீஜெண்டாக இருக்கவேண்டுமென்று ஒரு சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்திய ஜனதிபதியின் பதவிக் காலம் வரையறை இல்லை. ஒவ்வோர் ஐந்து வருஷங்களுக்கு முடிவில் மீண்டும் அப் பதவிக்குப் போட்டியிடலாம். பிரசிடேன்ட் ரூஸ்வெல்ட் நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டபின் இரண்டே தடவைதான் அமெரிக்க பிரசிடெண்ட் பதவி வகிக்கக்கூடும் என்ற சட்டம் செய்யப்பட்டது. பாரதத்திலும் ஒரே ஜனதிபதி பன்முறை தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்த நிபந்தனை அவசியமாகலாம். ஆனல், இவ்வித சந்தர்ப்பம் சீக்கிரம் ஏற்படாது என்று எண்ண இடமிருக்கிறது.

# 7. மத்திய சட்டமன்றங்கள்

இம் மூன்று அரசியல்களிலும் சட்டப்படி முடிவான அதிகாரத்தைச் சட்டமன்றங்களும் ஜனாதிபதியும் சேர்ந்து வகிக்கின்றனர். ஆனால், நாம் ஏற்கெனவே கண்டபடி சட்டங்களை இயற்றுவதில் பாரத, அமெரிக்க ஜனாதிபதிக்கோ, பிரிட்டிஷ் அரசருக்கோ சிறிதளவே பங்குள்ளது. அது சட்டமன்றங்களுக்கே உரித்தானது என்றால் மிகையாகாது.

அமெரிக்க, இந்திய அரசியல்கள் ஐக்கிய ஆட்சிகளாதலால், இரண்டு நாடுகளிலும் மத்திய சட்டமன்றமும், ராஜ்ய சட்டமன்றங்களும் இருக்கின்றன. இவற்றின் அதிகாரங்கள் அரசியல் அமைப்பால் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை மீறினால் சட்டம் தவறென்றும் அமல் செய்யமுடியாது என்றும் நிர்ணயிக்க நியாயாலயங்களுக்கும், முக்கியமாக உத்தம நீதி மன்றத்திற்கும் உரிமையுண்டு.

பிரிட்டன் தனி அரசாதலால் அங்கே ஒரு சட்டமன்றமே இருக்கின்றது. அதற்கு வரம்பின்றிச் சட்டம் செய்ய அதிகாரமிருக்கின்றது. ஆயினும், வடக்கு அயர்லாந்தில் மக்கள் சபை, செனேட் என்ற இரண்டு சட்டசபைகள் கூடிய மன்றம் இருக்கின்றது. சானல் தீவுகள், பெய்லிவிக்ஸ், மான் தீவுகளிலும் பழைய காலத்திலிருந்து சட்டசபைகள் இருந்துவருகின்றன. அவை பார்லிமென்டுக்குக் கீழ்ப்பட்டவை; பார்லிமென்டின் சட்டங்களுக்குட்பட்டவை.

இந்த அத்தியாயத்தில் மத்திய சட்ட மன்றங்களே வர்ணிக்கப்படுகின்றன. பாரத, அமெரிக்க ஐக்கிய அரசியல்களின் ராஜ்ய சட்டமன்றங்களைப்பற்றிப் பின்னர் சுருக்கமாக ஆராயப்படும்.

மூன்று நாடுகளிலும் மத்திய சட்டமன்றங்களுக்கு இரண்டு சபைகளுண்டு. பிரிட்டனில் மக்கள் சபை, பிரபுக்கள் சபை;

அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிரதிநிதிகள் சபை, செனெட்; பாரதத்தில் லோகசபை, இராஜ்யசபை.

மூன்றிலும் கீழ்ச்சபைகள், வயதுவந்த வாக்காளர்களால் தனித் தொகுதிகளில் நேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்டவை; ஆனால், இவற்றுள் குறிப்பிடத்தக்க சில வேற்றுமைகள் இருக்கின்றன.

பிரிட்டனின் மக்கள் சபையில் இப்பொழுது 630 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். அவற்றுள் 511 பேர்கள் இங்கிலாந்துக்கும், வேல்சுக்கு 36 பேர்களும், ஸ்காட்லாந்துக்கு 71 அங்கத்தினர்களும், வடக்கு அயர்லாந்துக்கு 12 பிரதிநிதிகளுமிருக்கின்றனர். அவ்வப்போது தொகுதிகளில் அவசியமான மாறுதல்கள் செய்வதற்கு இந்தப் பாகங்களுக்கு நிரந்தர எல்லைக் கமிஷன்கள் இருக்கின்றன. 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்பெண் அனைவரும் வாக்காளர்கள். ஆனால், குற்றத்திற்குத் தண்டனைப்பட்டவர்களுக்கும், தகுதியற்றவர்களென்று சட்டத்தால் குறிப்பிடப்பட்டவர்களுக்கும் வாக்கில்லை. ஒரு தொகுதியில் வசிப்பதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு இவ்வுரிமையுண்டு. இரகசியமாக வாக்களிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இடங்களில்மவாக்காளர்கள் நேரில் தமது வாக்குகளைக் கொடுக்க வேண்டும். ஆனால், சைனியத்திலிருப்போர்கள், வெளிநாடுகளில் அரசாங்கப் பணிபுரிவோர்கள், அவர்களுடைய மனைவிகள் போன்ற சிலருக்குப்பிறர்மூலம்வாக்குப்போடஉரிமையளிக்கப்பட்டிருக்கிறது.

பிரபுக்கள் சபை அங்கத்தினர்கள், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்துகளில் கிறிஸ்தவ திருச்சபையில் பணி செய்வோர்கள், அவ்வாறே ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் பாதிரிமார்கள் மக்கள் சபைக்கு அபேட்சகர்களாக நிற்கலாகாது. நீதிபதிகள், அரசாங்க அலுவலர்கள், வேறு நாடுகளின் சட்டசபை அங்கத்தினர்கள், மற்றும் சட்டத்தில் குறிப்பிட்ட சில பொது ஸ்தாபன ஊழியர்களுக்கும் மற்றும் சிலருக்கும் அபேட்சகராவதற்கு உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு சபைகளுக்கும் முன் காலத்திய சச்சரவுகளின் சின்னமாக, இன்றும் பிரபுக்கள் சபையில் அங்கம் வகிக்கத் தகுதியுள்ளவர்களுக்கு மக்கள் சபைக்கு வாக்குக் கூட இல்லை. பிரபுக்களும் சீமாட்டிகளும் தங்கள் பட்டங்களைத் துறந்து, மக்கள் சபைக்கு வாக்காளர்களாகவும், அபேட்சகர்களாகவும் உரிமைபெற 1958-ல் ஒரு சட்டம் செய்யப்பட்டது.

1911-ல் செய்த ஒரு சட்டப்படி, மக்கள் சபையின் காலம் 5 ஆண்டுகள். ஆனால், அதற்குள் கலைக்கப்படலாம். தனது கால

வரையறையை நீடிப்பதற்குப் பார்லிமென்டுக்கு அதிகாரமுண்டு. ஆனால், யுத்தம் போன்ற மிகவும் நெருக்கடி காலங்களில் மட்டுமே அவ்வாறு செய்வது தகும் என்ற சம்பிரதாயம் வேரூன்றியிருக்கிறது.

அமெரிக்கக் காங்கிரசின், பொதுமக்கள் பிரதிநிதி சபையில் 435 இடங்களிருக்கின்றன. இந்த ஸ்தானங்கள் ஜனத்தொகையின் ஈவுப்படி இராச்சியங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஓர் இராஜ்யத்தில் அதன் தொகுதிகள் சமமான ஜனத்தொகையுள்ளதாக இருக்கவேண்டுமென்ற நிபந்தனை இல்லை. எல்லாம் தனித் தொகுதிகளே. இராச்சிய அரசாங்கங்களில் இஷ்டப்படி சில தொகுதிகளில் அதிக வாக்காளர்களும், மற்றவைகளில் குறைவானவர்களும்இருக்கின்றனர். ஆதியில், கிராமத் தொகுதிகளிலேயே குடியானவர்கள் செல்வாக்கு அதிகமாகவிருந்தபடியால், இன்றும் நகரவாசிகளின் எண்ணிக்கையின் ஈவுக்குக் குறைவாகவே பிரதிநிதிகள் பங்கீடு செய்யப்பட்டிருக்கின்றனர். அவ்விதத் தொகுதிகளில் 150,000-லிருந்து 800,000 வரையில் ஜனத்தொகை வேறுபட்டிருக்கின்றது. புதிய ஜனத்தொகைக் கணக்கெடுத்தவுடன் இராச்சியங்களின் பிரதிநிதித்துவமும் அதையொட்டி மாற்றப்படுகிறது.

வாக்காளர்களின் தகுதிகளும் இராச்சிய அரசாங்கங்களால் விதிக்கப்படுவதால் வேறுபட்டிருக்கின்றன. 15ஆம் திருத்தப்படி, அவ்விதத் தகுதிகள் ஜாதி, நிறம் முன்னுளில் அடிமைக்குடும்பமா என்ற காரணங்களைக் கொண்டு பட்சபாதகமாக இருக்கலாகாதென்று கட்டளையிடுகிறது. 19ஆம் திருத்தம் ஆண், பெண் என்ற வித்தியாசமும் பாராட்டலாகாதென்று விதிக்கிறது. இவ்விரண்டு விதிகளுக்குட்பட்டுப் படிப்பு, வாசம் முதலிய தகுதிகள் பலவாருக இருக்கின்றன. சாதாரணமாக வாக்காளரின் குறைந்த வயது 21 ; ஆனால், சில இராச்சியங்களில் 18 வயதுக்கு மேல் வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

பிரதிநிதி சபையின் அங்கத்தினர் குறைந்தது 25 வயதிருக்க வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாட்டின் பிரஜையாக ஏழு வருஷங்களாவது இருந்திருக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் இராச்சியத்தில் வசிப்பவராக இருக்கவேண்டும் என்ற நியமங்கள் அரசியலமைப்பிலேயே விதிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறே, ஐக்கிய அரசாங்கத்தின்கீழ் ஊதியம் பெறும் அலுவலர்கள் இரண்டு சட்டசபைகளிலும் அங்கத்தினராக முடியாது. ஐக்கிய நாட்டிற்கெதிராகப் புரட்சியோ, கலகமோ செய்தவர்களும், எதிரிகளுக்கு உதவி

செய்தவர்களும் காங்கிரசில் மெம்பர்களாக இருக்கலாகாது. ஆனால், இரண்டு சபைகளும் மூன்றில் இரண்டு பங்கு வாக்கால் இந்தத் தடையை நீக்கலாம்.

பல அம்சங்களில், பாரதத்தின் லோக சபையே மிகவும் நேர்மையுடன் அமைக்கப்பட்ட பிரதிநிதி சபையாகும். இந்திய அரசியல் அமைப்பின் 81, 82ஆம் விதிகள் பின்வருமாறு :

81. (1) 331 விதிக்குட்பட்டு, லோகசபையின் அங்கத்தினர்களின் விவரம் ;

(ஏ) இராச்சியங்களில் பிரதேசத் தொகுதிகள்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவோர் 500-க்கு மேற்படாத பிரதிநிதிகள் ;

(பி) ஐக்கிய அரசாங்கத்தின் கீழுள்ள பிரதேசங்களுக்குப் பார்லிமென்டின் சட்டப்படி 25-க்கு அதிகமின்றி வழங்கப்படும் பிரதிநிதிகள் ;

(2) (i) (ஏ) உபவிதியை அனுசரிக்க :

(ஏ) ஒவ்வோர் இராச்சியத்திற்கும் ஜனத்தொகை விகிதப்படி கூடியவரையில் சமமான பிரதிநிதிகள் ஒதுக்கப்படவேண்டும்.

(பி) ஒவ்வோர் இராச்சியமும் தனக்களிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சாத்தியமானவரையில் சமமான ஜனத்தொகையுள்ள பிரதேசத் தொகுதிகளாகப் பிரிக்கப்படவேண்டும்.

(3) இந்த விதியில், 'ஜனத்தொகை' என்ற சொல்லுக்குத் தேர்தலுக்குமுன் குடிக்கணக்கெடுக்கப்பட்டுப் புள்ளிவிவரங்கள் பிரசுரிக்கப்பட்டபடியுள்ள தொகையே குறிப்பிடப்படுகிறது.

82. ஒவ்வொரு குடிக்கணக்கு எடுக்கப்பட்டு முடிந்தபின் ஒவ்வோர் இராச்சியத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கையும், அந்த இராச்சியத்தைப் பிரதேசத் தொகுதிகளாகப் பிரிக்கப்படுவதும் பார்லிமென்டு சட்டமூலம் நியமிக்கும் அதிகாரியால் நிர்ணயிக்கப்படவேண்டும். ஆனால், அவ்வித மாற்றங்கள் லோகசபை கலைக்கப்படும்வரையில் இருந்துவரும் பிரதிநிதி விகிதங்களைப் பாதிக்கமாட்டா.

மேலே குறிப்பிடப்பட்ட 334-ஆம் விதி ஆங்கிலோ-இந்தியர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் பொதுத் தேர்தலில் கிடைக்காவிடின், ஜனாதிபதி இரண்டுக்கு மேற்படாத பிரதிநிதிகளை நியமிக்கலாம் என்று கூறுகிறது.

326ஆம் விதியின்படி, இந்தியப் பிரஜையாகவும், 21 வயதுக்குக் குறையாமலும், அரசியல் அமைப்பின்படியோ, சட்டங்-

கள்மூலமாகவோ தகுதியற்றவராக இல்லாத எல்லா மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

லோகசபையின் பிரதிநிதித்துவத்தைப்பற்றியுள்ள வேறு சில குறிப்புகளும் கவனிக்கத்தக்கவை. பாரதத்தில் எங்கேனும் ஒரு லோகசபைத் தொகுதியில் வாக்காளராகவிருந்து, அபேட்சகராக நிற்கத் தகுதியுள்ளவர்கள் வேறு எந்தத் தொகுதிக்கும் அபேட்சகராகப் போட்டியிடலாம். உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த திரு ஏ. பி. ஜெயின் மைசூரில் ஓர் தொகுதியில் போட்டியிட்டு லோகசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. கிருஷ்ண மேனனும் ஆசாரிய கிருபளானியும் பம்பாயிலுள்ள தொகுதிக்குப் போட்டியிட்டனர்.

தேர்தலைப்பற்றிய எல்லா ஏற்பாடுகளும் பார்லிமெண்டின் சட்ட மூலமாகவே வரையறுக்கப்படும். மத்திய, இராச்சிய சட்ட மன்றங்களுக்கும் ஜனாதிபதி, உப ஜனாதிபதி பதவிகளுக்கும் தேர்தல்கள், வாக்காளர் பட்டியல் தயார் செய்வது, தேர்தல் முறைகளை வகுத்து அவைகளைக் கண்காணிப்பது போன்ற எல்லா அலுவல்களுக்கும் பொறுப்பாக ஒரு தேர்தல் கமிஷன் நியமிக்க அரசியல் அமைப்பிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் விவரங்கள் 324ஆம் விதியில் கூறப்பட்டுள்ளன. தேர்தல் கமிஷனர் நிர்வாகத்திற்குக் கீழ்ப்படாமல் சுதந்திரமாகப் பணியாற்றுவதற்காக, அவரை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நியமிக்கவேண்டுமென்றும், நடுவில் அவரை நீக்கவேண்டுமானால் உத்தம நீதிமன்றத்தின் நீதிபதிகளை நீக்கும் முறையிலேதான் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், சம்பளம், படி முதலிய பதவி நிபந்தனைகளை நியமிக்கப்பட்டபின் அவருக்கு பாதகமாக மாற்றலாகாதென்றும் விதிக்கப்பட்டுள்ளது.

பல அம்சங்களில் அமெரிக்கப் பிரதிநிதி சபைக்கும் பிரிட்டிஷ் மக்கள் சபைக்கும் மேலாக லோகசபை, மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றது என்று கூறலாம். ஆனால், 330ஆம் விதிப்படி, ஹரிஜனங்கள், ஆதிவாசிகள் இரு கூட்டத்தாருக்கும் லோகசபையில் அவர்களுடைய ஜனத்தொகை வீதாசாரப்படி இடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இம் மாதிரி ஒதுக்கிவைப்பது ஜனநாயகத்திற்குப் பொருந்தாது. பல்லாண்டுகளாகத் தாழ்த்தப்பட்டவர்களைச் சிறிது உயர்த்துவதற்காகவே இச் சலுகை 10 வருடங்களுக்கு முதலில் அளிக்கப்பட்டது. அது மீண்டும் மறு பத்து வருடங்களுக்கு நீடிக்கப்பட்டு, இப்பொழுது 1970 வரையில் இருக்கும். இம் முறையிலிருக்கும் பெருந் தீமை என்னவெனில்,

விசேஷச் சலுகை ஒரு சமூகச் சொத்தாகக் கருதப்பட்டு, அதை நீக்கும்பொழுது பெரும் மனக்கசப்பு உண்டாகும். அது கலவரத்தில்கூட முடியலாம். அரசியல் நிர்ணய சபையில் சர்தார் படேலின் உறுதியாலேயே முஸ்லீம்கள், சீக்கியர் முதலியோருக்கு முன்னிருந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ரத்து செய்யப்பட்டு, பொதுத் தொகுதிகளிலேயே அவர்கள் போட்டியிடவேண்டுமென்று விதிக்கப்பட்டது.

முதல் இரண்டு பொதுத் தேர்தல்களில், ஹரிஜன. ஆதிவாசிகளுக்கு இரண்டு மூன்று பிரதிநிதிகளுள்ள கூட்டுத் தொகுதிகளில், ஒன்று அல்லது இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால், இதனால் தொகுதிகள் மிகவும் பெரியனவாகவும் தேர்தல் நடத்துவது கடினமாகவும் இருந்ததால், எல்லாத் தொகுதிகளும் ஒரு-பிரதிநிதித் தொகுதிகளாகவே பார்லிமென்டின் சட்டத்தால் மாற்றப்பட்டன. ஒவ்வோர் இராச்சியத்திலும், ஜனத்தொகையின் ஈவுப்படி, ஹரிஜனங்களுக்கும் ஆதிவாசிகளுக்கும் தனித் தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றன. இத் தொகுதிகளில் ஹரிஜனங்களும் ஆதிவாசிகளுமே அபேட்சகர்களாக நிற்கலாம். ஆனால், அவர்கள் எல்லா வாக்காளர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

1962-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் லோகசபைக்கு 494 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்த வாக்காளர் எண்ணிக்கை 21·8 கோடி. வாக்குப் பதிவு செய்தவர் 55 சதவிகிதம். பிரிட்டனில் 1964 பொதுத் தேர்தலில் 77 சதவிகிதம் வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. 1960 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் 60 சதவிகிதமே வாக்காளர்கள் கலந்துகொண்டனர். ஆதலால், கோடிக்கணக்கான மக்கள் எழுதப் படிக்கத் தெரியாமலிருக்கும் பாரதத்தின் சாதனை மதிக்கத்தக்கதே.

மூன்று நாடுகளின் மத்திய சட்டமன்றத்தின் மேல்சபைகளின் அமைப்புகள் முற்றிலும் மாறுபட்டவை. பிரிட்டனில் பிரபுக்கள் சபைக்கு நீண்ட வரலாறுண்டு. முதன் முதலில் அரசனின் சர்வாதிகாரத்தை எதிர்த்து, அதற்கு வரம்பு கட்டுவதற்குப் பாடுபட்ட பெருமை அதனைச் சாரும். பின்னர், மக்கள் சபை உருவாகி வலுப்பெற்றபொழுது, இரு சபைகளுக்கும் தீவிரப் போட்டியும் விரோதமும் ஏற்பட்டன. சில காலம் பிரபுக்கள் சபை ஓங்கி நின்றது. ஆனால், படிப்படியாக மக்கள் சபை வலுத்துப் பிரபுக்கள் சபை குன்றியது. பரம்பரையான பிரபுக்களின் வம்சங்களே தங்கள் பிறப்பின் காரணத்தால் பிரபுக்கள் சபையில் அங்கம் வகித்ததே இதற்கு முக்கியக் காரணமாகும். இயந்திர சகாப்தம் தோன்றி, தொழிற்சாலை

களும் வியாபாரமும் செல்வத்தின் பெரும்பாகத்திற்கு ஆதாரமான பொழுது, நிலத்தையே நம்பியிருந்த பிரபுக்களின் செல்வமும் செல்வாக்கும் குறைந்துவிட்டன. மேலும், எவ்விதத் தொழிலும் புரியாமல் குத்தகைப் பணத்திலேயே வாழ்ந்துவந்த இப் பிரபுக்கள் வேட்டையிலும், மற்றும் உல்லாச வாழ்க்கையிலும் ஈடுபட்டுக் காலங்கழித்தனர். சொத்துக்கும் பட்டத்திற்கும் பாத்தியமில்லாத பிரபுக்களின் வம்சத்தில் உதித்த இளைஞர்கள், தொழில், வியாபாரங்களில் சேர்ந்து மக்கள் சபைக்குப் பிரதிநிதிகளானுர்கள். ஆதலால், மக்கள் சபை ஓயாமல் வலுப்பெற்று, பிரபுக்கள் சபை படிப்படியாகத் தனது செல்வாக்கையும் அதிகாரங்களையும் இழந்தது. ஆனுல், மக்கள் சபைக்கு முட்டுக்கட்டையாகப் பல காலம் பிரபுக்கள் சபை சீர்திருத்தங்களை எதிர்த்தும் நிராகரித்தும் வந்தது. இதைச் சமாளிக்க அரசர் புதிதாக ஜீவகாலப் பிரபுக்களை நியமிக்கலானுர். 1911-ல் பிரபுக்கள் சபை மக்கள் சபையின் சட்டங்களை இரண்டு வருஷங்களுக்குத் தடைசெய்யலாமென்றும், முற்றிலும் நிராகரிக்க அதிகாரமில்லையென்றும் சட்டம் செய்யப்பட்டது. 1939-ல் இது ஒரு வருஷமாகக் குறைக்கப்பட்டது.

இப்பொழுது பிரபுக்கள் சபையில் நான்கு வகை அங்கத்தினர் இருக்கின்றனர்: (1) தங்கள் பட்டங்களை 1963 சட்டத்தின்கீழ்த் துறக்காத பரம்பரையான பிரபுக்கள்; (2) அரசரால் நியமிக்கப்பட்ட ஜீவகாலப் பிரபுக்கள்; (3) 1876-ல் இயற்றப்பட்ட சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் உயர் நீதிமன்றப் பிரபுக்கள்; (4) இங்கிலாந்து திருச்சபையின் 25 உயர் மடாதிபதிகள்.

பிரபுக்கள் சபை அங்கத்தினர்களுக்கு ஊதியமில்லை. தினசரி 63 ஷில்லிங்குக்கு மேற்படாமல் பிரயாண, சில்லறைச் செலவுத் தொகைகள் பெறலாம். அதன் தலைவர் உத்தம நீதிபதி (லார்ட் சான்ஸலர்). பல உபதலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். முக்கிய நிர்வாகஸ்தர்கள் பார்லிமென்ட் கிளார்க், காவல்காப்போர்.

அமெரிக்கக் காங்கிரசின் மேல்சபை பிரிட்டனின் பிரபுக்கள் சபைக்கு நேர்மாருனது. முதலில் மன்றத்தின் இரு சபைகளுக்கும் சம அதிகாரமும் அந்தஸ்தும் இருக்குமாறு அமைக்கப்பட்டது. ஆனுல், நாளடைவில் செனெட் சபையே ஓங்கிவிட்டது. இதற்கு மூன்று காரணங்கள். இது சிறிய சபை. ஐக்கிய நாட்டின் ஒவ்வோர் இராச்சியத்திற்கும் இரு பிரதிநிதிகள். மொத்தம் 50 இராச்சியங்களுக்கு 100 பிரதிநிதிகளே. அவர்கள் 6-வருஷ காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனுல், மூன்றில் ஒரு பங்கு இடங்கள் இரண்டு வருஷத்தில் காலியாகின்றன.

ஆதலால், செனெட் என்றும் முற்றிலும் கலைவதில்லை. அது நிரந்தர மான சபையாகும். பல முக்கியப் பிரச்சினைகளில் ஜனாதிபதி செனெட்டின் அனுமதி பெற்றாகவேண்டும்.

பிரதிநிதி சபையின் அங்கத்தினர் 2 வருஷங்களுக்கே தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். சபை அக்கால முடிவில் கலைக்கப்பட்டு, மீண்டும் பொதுத்தேர்தல் நடைபெறும். செலவுத் திட்டங்களும் பணச் சட்டங்களும் பிரதிநிதி சபையிலேயே முதலில் சமர்ப்பிக்கப் படவேண்டும். ஆயினும், எல்லாச் சட்டங்களும் செலவுகளும் செனெட்டின் அனுமதியின்பேரிலேயே உறுதியாக வேண்டியிருப் பதால், இதனால் பிரதிநிதி சபையின் செல்வாக்கு அதிகம் பெருக வில்லை.

முதலில் செனேட்டின் அங்கத்தினர்கள் இராச்சியங்களின் சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், பின்னர் இது மாற்றப்பட்டு, இராச்சியத்தின் வாக்காளர்கள் அனைவரும் நேரில் இவர்களைத் தேர்ந்தெடுக்கும் நியமம் செய்யப்பட்டது.

பாரத மத்திய பார்லிமெண்டின் மேல்சபையாகிய இராச்சிய சபை அமைப்பில் ஓரளவு அமெரிக்க செனெட்டைப்போல் இருக் கிறது. அதன் அங்கத்தினர்கள் 6 ஆண்டுகளுக்குப் பதவி வகிக் கின்றனர். மூன்றில் ஒரு பங்கு இடங்கள் இரண்டு வருஷங்களில் காலியாகின்றன. ஆதலால், என்றும் முற்றிலும் கலையாத நிரந்தர சபையாக இருக்கின்றது. அதை உருவாக்கும் 80ஆம் விதி பின்வருமாறு :

1. இராச்சிய சபை பின்வரும் அங்கத்தினர்களை உடையது:

(ஏ) உப விதி (3)ஐ அனுசரித்து ஜனாதிபதியால் நியமிக் கப்படும் 12 அங்கத்தினர்கள்; (பி) இராச்சியங்களுக்கும் ஐக்கியப் பிரதேசங்களுக்கும் 238-க்கு மேற்படாத பிரதிநிதிகள்.

2. நான்காம் அட்டவணையில் கண்டபடி இராச்சியங்கள், ஐக்கியப் பிரதேசங்களின் பிரதிநிதிகள் பங்கீடு செய்யப்படுவார்கள்.

3. (ஏ) உட்பிரிவின்படி ஜனாதிபதியால் நியமிக்கப்படுவோர் பின்வரும் துறைகளில் அறிவாளிகளாகவும் அனுபவமுள்ளவர் களாகவுமிருக்கவேண்டும் : இலக்கியம், விஞ்ஞானம், கலை, சமூக சேவை.

4. ஒவ்வோர் இராச்சியத்தின் பிரதிநிதிகளும் அதன் மக்கள் சபை அங்கத்தினர்களால் வீதாசாரப் பிரதிநிதித்துவத் தனிமாற்று வாக்குமுறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவர்.

5. ஐக்கியப் பிரதேசங்களின் பிரதிநிதிகள் பார்லிமென்டால் சட்டமூலம் விதிக்கப்படும் முறையால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

## அட்டவணை—4

இராச்சிய சபையில் பிரதிநிதிகள் பங்கீடு. ஒவ்வோர் இராச்சியத்திற்கும் ஐக்கியப் பிரதேசத்திற்கும் அடியிற் கண்ட பட்டியல்படி பிரதிநிதிகள் பங்கீடு செய்யப்படுவர் :

பட்டியல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஆந்திரப் பிரதேசம் | 18 | 11. | பஞ்சாப் | 11 |
| 2. | அஸ்ஸாம் | 7 | 12. | ராஜஸ்தானம் | 10 |
| 3. | பீகார் | 22 | 13. | உத்தரப் பிரதேசம் | 34 |
| 4. | குஜராத் | 11 | 14. | மே. வங்காளம் | 16 |
| 5. | கேரளம் | 9 | 15. | ஜம்மு-காஷ்மீரம் | 4 |
| 6. | மத்தியப் பிரதேசம் | 16 | 16. | நாகாலாண்ட் | 1 |
| 7. | மதராஸ் | 18 | 17. | டெல்லி | 3 |
| 8. | மகாராஷ்டிரம் | 19 | 18. | இமாசலப் பிரதேசம் | 2 |
| 9. | மைசூர் | 12 | 19. | மணிப்பூர் | 1 |
| 10. | ஒரிஸா | 10 | 20. | திரிபுரா | 1 |
| | | | 21. | பாண்டிச்சேரி | 1 |

பின் அத்தியாயங்களில் இராச்சிய சபையின் அதிகாரங்கள் வர்ணிக்கப்படும். லோக சபையைப்போலவே சாதாரண சட்டங்களை இயற்றுவதில் அதற்குச் சம அதிகாரமுண்டு. 249ஆம் விதிப்படி, இராச்சிய சபை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் தீர்மானம் செய்தால், இராச்சிய சட்டமன்றத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இனங்களில் ஒரு வருஷ காலத்திற்குப் பார்லிமென்டு சட்டமியற்றலாம். 312ஆம் விதிப்படி இராச்சிய சபை தீர்மானம் செய்தால், புதிய அகில பாரத சேவக வர்க்கங்களைப் பார்லிமென்டு சட்டமூலம் உருவாக்கலாம். இவ்விதம் அரசியல் அமைப்பில் இராச்சிய சபைக்குத் தனி அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருந்தும், அமெரிக்க செனெட்டிற்கு மாறாக பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையைப்போலவே இராச்சிய சபையும் செல்வாக்குக் குன்றிவருகிறது. இதன் முக்கியக் காரணங்களாவன: இராச்சிய சபையில் இராச்சியங்களின் பிரதிநிதிகள் அவற்றின் மக்கள் சபைகளால் தேர்ந்தெடுக்கப்படுவதால், கட்சிப்பற்று ஒன்றையே கவனித்து, இதர தகுதிகளைக் கவனிக்காமல் கட்சித் தலைவர்களால் நியமிக்கப்படுகின்றனர். லோக சபைக்கே மந்திரிசபை பொறுப்பாளியாக இருப்பதால், இராச்சிய சபையின் கருத்துகள் பெரிதும் கவனிக்கப்படுவதில்லை. இரண்டு சபைகளும்

ஒரே சமயத்தில் கூடுவதால், லோகசபையில் நீண்ட விவாதங்களுக்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட சட்டங்களை அவசரமாக இராச்சியசபைமூலம் அங்கீகாரம் பெற மந்திரிகள் விரும்புகின்றனர். லோகசபையில் பெரும்பான்மையாக இருந்து மந்திரிசபை அமைக்கும் கட்சிக்கு இராச்சிய சபையில் பெரும்பான்மையின்மையோ, மிகவும் குறைந்த பெரும்பான்மையோ ஏற்பட்டால், அப்பொழுது இராச்சிய சபையின் செல்வாக்கு அதிகரிக்கக்கூடும். முக்கியமாக, அதிக அறிவும் அனுபவமுமுள்ளவர்களையே இராச்சிய சபைக்கு அனுப்புவதென்று அரசியல் கட்சிகள் ஒரு சம்பிரதாயம் உருவாக்கினால், அரசியல் நிர்ணயசபை இராச்சிய சபையை ஏற்படுத்தியதன் உத்தேசம் பலிக்கும். இல்லையேல், அதன் செல்வாக்கு மிகவும் குறைந்து, அது ஓர் அனுவசிய சபையாகவே கருதப்பட்டு, பொது மக்களின் மதிப்புக்கு உரியதாகாது.

# 8. சட்டமன்றங்களின் நிர்வாகம், நியமங்கள், சிறப்புரிமைகள்

ஒரு மக்கள் ஆட்சி திறம்பட நடைபெறுவதற்கு, அதன் சட்ட மன்றம் ஒழுங்காகவும், அமைதியுடனும், பட்சபாதமின்றியும் இயங்க வேண்டும். இது எளிதன்று. அதற்கு நல்ல ஏற்பாடுகள் தேவை. அவைகளை நிர்வாகம், நியமங்கள், சிறப்புரிமைகள் என்று வகுக்கலாம்.

சட்டசபைக் கூட்டம் சரிவர நடப்பதற்கு அதன் எல்லா அங்கத்தினர்களும் மதித்துப் பணிந்துபோகும் ஒரு தலைவர் வேண்டும். பொதுத் தேர்தலுக்குப்பின் இத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது அமெரிக்க பிரதிநிதி சபை, பிரிட்டிஷ் மக்கள்சபை, பாரத லோக சபை மூன்றும் செய்யும் முதல் காரியமாகும். அவருக்கு ஆங்கிலத்தில் 'ஸ்பீகர்' என்று பெயர். பெரும்பான்மைக் கட்சியின் அபேட்சகரே தேர்ந்தெடுக்கப்பட்டபோதிலும், பதவியேற்றபின் அவர் கட்சிப் பற்றற்றவர்போல் பணிபுரியவேண்டும். இந்தச் சம்பிரதாயம் பிரிட்டனில் மிகவும் உறுதியாக ஊன்றியுள்ளது. சாதாரணமாக சிறுபான்மைக் கட்சியைக் கலந்தே பெரும்பான்மைக் கட்சியார் பிரிட்டிஷ் மக்கள் சபைத் தலைவரை நியமனம் செய்கிறார்கள். அவருடைய தேர்தல் போட்டியின்றி நடைபெறுவதே வழக்கம். தலைவரானவுடனே, அவர் கட்சியிலிருந்து விலகிவிடுவார். மக்கள் சபை கலைக்கப்படும்பொழுது அவர் அபேட்சகராக நின்றால், அவருக்கு எதிராக அபேட்சகரை எக் கட்சியும் நிறுத்துவதில்லை. இந்த சம்பிரதாயத்திற்கு சமீப காலத்தில் சில விதி விலக்குகள் ஏற்பட்டிருக்கின்றன.

பாரத லோகசபைத் தலைவரும் கட்சி விவகாரங்களில் கலந்து கொள்ளலாகாது என்று முதல் தலைவர் திரு. மாவலங்கர் சம்பிரதாயத்தைத் தோற்றுவித்தார். ஆனால், கட்சியிலிருந்து முற்றிலும் விலகுவது வழக்கமில்லை. சில இராச்சிய மக்கள் சபைகளின்

தலைவர்கள் கட்சி விவகாரங்களில்கூடக் கலந்துகொள்கிருர்கள். பொதுத் தேர்தலில் சபைத் தலைவரை எதிர்க்கலாகாது என்ற சம்பிரதாயம் இங்கு இல்லை.

அமெரிக்கப் பிரதிநிதி சபையின் தலைவர் தமது கட்சியின் பிரதிநிதியாகவே பதவி வகிக்கிருர். ஆனல், பிரசிடென்டும் அவரது நிர்வாகக் குழுவும் அங்கில்லாததால், ஆளுங் கட்சி, எதிர்க் கட்சி இரண்டிற்கும் அதிக வேற்றுமையில்லை. மேலும், பிரதிநிதி சபையின் முக்கிய நடவடிக்கைகளெல்லாம் கமிட்டிகள் மூலம் நடைபெறுவதால், தலைவரின் கட்சிப் பற்ருல் அதிக மனஸ்தாபமோ, பட்சபாதமோ ஏற்படுவதில்லை.

மக்கள் சபைத் தலைவரின் பணி மிகவும் முக்கியமானது. சபைக்குள் அவருக்கு மிகுந்த செல்வாக்கும் அதிகாரமுமுண்டு. சபையின் நியமங்களை அனுசரித்து, சபைக் கூட்டங்களை நடத்துவதும், எவரை எப்பொழுது பேச அனுமதிப்பது, எத் தீர்மானத்திற்கு இடமளிப்பது, எப் பிரச்சினையை நிராகரிப்பது என்ற முடிவுகளுக்கெல்லாம் அவரே தனிப் பொறுப்பாளியாவார். சபை நியமங்களின் போக்குகளை நிர்ணயிப்பதும் அவரே. அவருடைய தீர்ப்புக்கு எந்த அங்கத்தினரும் ஆட்சேபிக்கக்கூடாது. கட்டளைகளை மீறும் அங்கத்தினர்களை வெளியே போகும்படி அவர் உத்தரவிடலாம். பிரிட்டன், பாரதங்களின் மக்கள் சபைகளில் பிரதம மந்திரியுட்பட எல்லா மந்திரிகளும் சாதாரண அங்கத்தினர்களைப் போலவே தலைவரின் முடிவுகளைப் பணிந்து ஏற்கவேண்டும்.

பிரிட்டிஷ் பிரபுக்கள் சபைக்குத் தலைமை வகிப்பவர் உத்தம நீதிபதியான சான்ஸலர் பிரபு. இவர் அரசரால் நியமிக்கப்படுகிருர். அமெரிக்க செனெட்டின் தலைவர் ஜனுதிபதியுடன் தேர்ந்தெடுக்கப்படும் உபஜனுதிபதியே. பாரதத்திலும் உபஜனுதிபதி இராச்சிய சபையின் தலைவராவர்.

பாரத லோகசபை, இராச்சிய சபைகள் உப தலைவர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. அவ்வாறே அமெரிக்க செனெட்டும் ஓர் உப தலைவரை நியமிக்கிறது. பிரிட்டிஷ் மக்கள் சபையில் அதன் முக்கியக் கமிட்டித் தலைவர்கள் தலைவருக்குப் பதிலாக அவசியமான பொழுது பணியாற்றுகின்றனர். தலைவர், உபதலைவர் இல்லாத பொழுது, கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கச் சில அவைத் தலைவர்கள் தலைவர்களால் நியமிக்கப்படுகின்றனர்.

கூட்டங்களுக்கு அங்கத்தினர்களுக்கு அழைப்பு அனுப்புவது, நடவடிக்கைகளுக்கு வேண்டிய அறிக்கைகளும் குறிப்புகளும்

தயார் செய்து அங்கத்தினர்களுக்கு அளிப்பது, கூட்டங்களில் நடைபெறும் விவகாரங்களையும் சொற்பொழிவுகளையும் முழுதும் குறைவின்றிச் சுருக்கெழுத்து நிபுணர்கள்மூலம் எடுத்து நெட்டெழுத்தில் மாற்றிப் பிரசுரிப்பது, அங்கத்தினர்களின் சம்பளங்கள், படிகளைப் பட்டுவாடா செய்வது, காட்சியாளர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கி அவர்களுக்குரிய இடங்களில் அமரவைப்பது போன்ற பல பணிகளுக்கு ஒரு நிர்வாக அமைப்பு அவசியமாகும். அதன் முக்கிய அதிகாரியை பாரதம், அமெரிக்காவில் காரியதரிசி என்றும், பிரிட்டனில் கிளார்க் அல்லது குமாஸ்தா என்றும் அழைப்பது வழக்கம்.

சட்டசபை மெம்பர்களுக்கு உதவிபுரிய ஓர் நல்ல புத்தகாலயமும், வேண்டிய குறிப்புகளைத் தயார் செய்து கொடுக்கும் ஆராய்ச்சி ஆசிரியர்களும் அவசியம். சட்டமன்றத்தின் மொத்தச் செலவு 1963-ல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 14 கோடி டாலர்; இந்தியாவிலோ 1965-66-ல் மூன்று கோடி ரூபாய்.

ஒவ்வோர் சட்ட மன்றமும் தனக்குரிய நியமங்களைச் செய்து கொள்ளும் உரிமை அடிப்படையானது. இந்த உரிமை அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் அமைப்பின் 4ஆவது விதியிலும், இந்திய அமைப்பின் 118ஆம் விதியிலும் தெளிவாக அளிக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் பார்லிமென்டுக்கு அது சம்பிரதாயமாக உண்டு. இந்திய நியமங்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 400 என்றால், சட்டமன்றங்களின் நடவடிக்கைகள் ஒழுங்காக நடைபெறுவது எவ்வளவு சிக்கலானதென்பது விளங்கும்.

லோகசபையின் நியமங்கள் 389, 27 அத்தியாயங்களாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, சில அத்தியாயங்களின் தலைப்புகள்; (2) அங்கத்தினர்களுக்கு அழைப்புப் பிரமாணம் செய்தல், பெயர்ப் பட்டியலில் கையெழுக்திடுதல்; (3) தலைவர், உப தலைவர் தேர்வு, அவைத் தலைவர்கள் நியமனம்; (4) சபைக் கூட்டங்கள்; (5) ஜனாதிபதியின் பிரசங்கமும் செய்திகளும்; (7) கேள்விகள்; (9) ஒத்திவைப்புப் பிரேரணைகள்; (10) சட்டமியற்றுதல்; (11) அரசியல் அமைப்பின் திருத்தம். மசோதாக்கள்; (13) தீர்மானங்கள்; (17) மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்; (18) தலைவர், உபதலைவர்களை நீக்கும் பிரேரபணை; (19) வரவுசெலவு விவகாரங்கள்; (26) பார்லிமென்டின் கமிட்டிகள், இந்த நியமங்களை ஓயாமல் கவனித்துச் சீர்திருத்தம் செய்வதற்குச் சில சட்டசபைகளில் நிரந்தரக் கமிட்டிகளிருக்கின்றன. மற்றச் சபைகள் அவ்

வப்போது தனிக் கமிட்டிகள் நியமித்து, அதன் சிபாரிசுகள் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. தீர்மானங்கள்மூலம் நியமங்கள் மாற்றப்படுகின்றன.

இம் மூன்று சட்டமன்றங்களுக்கும் பொதுவான சில சிறப்புரிமைகளுண்டு. சட்ட சபைகளின் அலுவல்களில் நியாய ஸ்தலங்கள் குறுக்கிடக்கூடாது. ஓர் அங்கத்தினரோ, பிரஜையோ சட்டசபை சரிவர நடக்கவில்லையென்றோ, அதன் போக்கு நியமங்களுக்கு முரண்பாடாக இருக்கிறதென்றோ மனுச்செய்துகொள்ள முடியாது. அவ்வித மனுவை எந்த நீதிபதியும் நிராகரிக்க வேண்டும்.

சட்ட சபைக் கட்டடத்திற்குள் அங்கத்தினரோ, காட்சியினரோ ஒழுங்கீனமாக நடந்துகொண்டால், அவரை வெளிப்படுத்த சபைத் தலைவருக்கு அதிகாரமுண்டு. சபையின் தீர்மானமூலம் குறிப்பிட்ட காலத்திற்கு மெம்பரைக் கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாதென்று தடை விதிக்கலாம்.

அமெரிக்கக் காங்கிரஸின் இரு சபைகளுக்கும், ஒழுங்கீனத்திற்காகத் தமது மெம்பர்களைச் சட்டசபையிலிருந்து நீக்கவும், கூட்டத்திற்கு வராத அங்கத்தினர்களைக் கட்டாயப்படுத்தி வரச்சொல்லவும் அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் பார்லிமெண்டின் சபைகளுக்கு இந்த உரிமை சம்பிரதாயத்தின் வாயிலாக அமலில் இருக்கிறது. பிரிட்டிஷ் மக்கள் சபையின் சிறப்புரிமைகள் அனைத்தும் இந்தியப் பார்லிமெண்டின் சபைகளுக்குண்டு என்று விதிக்கப்பட்டிருப்பதால், லோக சபை, இராச்சிய சபை இரண்டும் மிகவும் ஒழுங்கீனமாக நடக்கும் அங்கத்தினரை நீக்கிவிடலாம். 1957-ல் முத்கல் என்ற மெம்பர் பார்லிமெண்டில் தமது பணிக்காகச் சில பணக்காரர்களிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு, அவரை நீக்க ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அது நிறைவேறுவதற்கு முன்னதாகவே அவர் இராஜினாமா செய்துவிட்டார்.

பிரிட்டிஷ், பாரத பார்லிமெண்டுகளில் கூட்டங்களுக்கு வராத மெம்பர்களைக் கட்டாயமாக ஆஜராகும்படி செய்ய அதிகாரமில்லை. பாரத அரசியல் அமைப்பு 101 (4) விதிப்படி 60 நாட்களுக்குத் தொடர்ந்து ஒரு மெம்பர் கூட்டங்களுக்கு வராமல்போனால், சட்ட சபையின் அங்கீகாரம் பெற்றாலொழிய அவரது இடம் காலியாகு

மென்று விதி இருக்கிறது. ஆதலால், ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் ஏதாவது ஒரு நாள் சில காலம் வந்துவிட்டுப் பின்னர் தமது சொந்த அலுவல்களையே கவனித்துக்கொள்ளுவது பல மெம்பர்களின் வழக்கமாகிவிட்டது. பிரிட்டனில் பெரும்பாலான அங்கத்தினர்கள் சட்டமன்றமிருக்கும் லண்டனிலும் அதற்கு அருகிலும் வசிப்பதாலும், பார்லிமெண்டின் நடவடிக்கைகளில் எவ்வாறு கலந்துகொள்கிறார்கள் என்று வாக்காளர்கள் கவனித்துவருவதாலும், நிர்ப்பந்தம் அவசியமில்லை. இங்கு அது அவசியம் என்று தோன்றுகிறது.

சட்டமன்றங்களில் மெம்பர்களுக்கும் பூரணப் பேச்சு சுதந்திரமுண்டு. அவைகளுக்காக மானநஷ்டத்திற்காகவோ, அக்கிரமமாகப் பழி சாற்றிவிட்டாரென்றோ எவரும் நியாயாலயங்களில் பரிகாரம் தேட முடியாது. ஆனால், சட்டசபைக்கு வெளியிலிருப்பவர்களைப்பற்றி அனாவசியமாகவோ, ஆதாரமின்றியோ அவதூறாகப் பேசுவதைச் சட்டசபைத் தலைவர் தடுக்கலாமென்று நியமங்களிருக்கின்றன. நீதிபதிகளைப்பற்றித் தவறாகச் சட்டசபைகளில் வாதிக்கக்கூடாது என்று பாரத அரசியல் அமைப்பிலேயே விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு மெம்பர் அப்படிப் பேசிவிட்டால், அதைத் தலைவரும் சட்டசபையுமே கண்டிக்கவும் தண்டிக்கவும் செய்யலாமேயொழிய, நீதிபதியோ, உத்தம நீதிமன்றமோ நடவடிக்கைகள் எடுக்க முடியாது.

சட்டசபைக் கூட்டத் தொடர் காலத்தில் அதற்குப் போய் வரும் அங்கத்தினர்களைச் சாதாரணமாகப் போலீஸ் அதிகாரிகள் தடுக்கக்கூடாது என்று அரசியல் அமைப்புக் கூறுகிறது. ஆனால், சில பெரிய குற்றங்களுக்காக அவர்களைக் கைது செய்யலாம். பிரிட்டனிலும் பாரதத்திலும் குற்றச்சாட்டில்லாத விவகாரங்களிலே தான் அவ் விலக்கு உண்டு. குற்றத்திற்காக ஒரு மெம்பர் கைது செய்யப்பட்டால், உடனே சபைத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

சட்டசபைக் கூட்டத்திற்கு வெளியே நடைபெறும் விவகாரங்களில் சாதாரணமாக சட்டசபை நேரில் தலையிடுவதில்லை. அவை நிர்வாகத்தாலும் நியாயாலயங்களாலும் கவனிக்கப்படும். ஆனால், இரண்டு பிரச்சினைகளில் சட்டசபை வெளிவிவகாரங்களில் தலையிட வேண்டியிருக்கிறது. தனது நடவடிக்கைகளைப் பத்திரிகைகள் தாறுமாறாகப் பிரசுரித்தால், அவைகளைக் கண்டிக்க பார்லிமென்டுக்கு உரிமையுண்டு என்பது பிரிட்டிஷ் சம்பிரதாயம். அவ்வாறே ஒரு நபர் சட்டசபையைப்பற்றி அவதூறாகப் பேசினாலும் அவர்மீது

நடவடிக்கை எடுக்க, பொதுவாக பாரதச் சட்டசபைகளுக்கும் இவ்வுரிமைகள் உண்டு. ஆனால், ஒரு சட்டசபை ஒரு நபரைத் தண்டிக்கக் கைது செய்யும் உத்தரவு பிறப்பித்தால், அதை ஆட்சேபித்து அவன் நியாயாலயத்திற்கு மனுச் செய்துகொள்ளலாமா, அந்த மனுவை நியாயாலயம் பரிசீலனை செய்யலாமா என்ற பிரச்சினை சமீப காலத்தில் பாரதத்தில் எழுந்தது. இதில் உத்தரப் பிரதேச மக்கள் சபைக்கும் அந்த இராச்சியத்தின் உயர்நீதிமன்றத் திற்கும் தீவிர அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு, ஜனாதிபதி அதை உத்தம நீதிமன்றத்தின் அபிப்பிராயத்திற்கு அனுப்பினார். பாரதத் தின் அரசியல் அமைப்பு எழுதி வரையறுக்கப்பட்டிருப்பதாலும், அதில் பிரஜைகளின் அடிப்படையான உரிமைகள் விவரிக்கப்பட்டு அவை சட்டசபைகளால் மாற்றத்தகாதவையாக இருப்பதாலும், சட்டசபைக் கூட்டத்திற்கு வெளியில் ஒரு பிரஜை அவதூறு செய் தான் என்னும் நடவடிக்கையைக் கோர்ட்டுகள் பரிசீலனை செய்ய லாம் என்று அபிப்பிராயம் கூறியது. இப்பிரச்சினை இதனோடு முடிந்து விட்டது என்று கூறுவதற்கில்லை. ஏனெனில், பிரிட்டிஷ் மக்கள் சபைக்குள்ள எல்லா உரிமைகளும் இந்திய சட்டசபைகளுக்குண்டு என்ற தெளிவான விதி இருக்கிறது. அந்தச் சபைக்கு எவரையும் கைதுசெய்யவும் தண்டிக்கவும் உரிமையுண்டு. ஆனால், வெகுகால மாக அதை அமல்செய்து எவரையும் சிறைப்படுத்தியதில்லை.

பிரிட்டிஷ் பிரபுக்கள் சபை அங்கத்தினர்களுக்கு ஊதியமில்லை. மக்கள் சபை மெம்பருக்கு வருஷம் 1,750 பவுன் சம்பளம். பாரத பார்லிமெண்டு மெம்பர்களுக்கு மாதம் ரூ. 500 சம்பளமும், கூட்டத் திற்கு ஆஜரான தினங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 31 படியும் ஊதியமளிக்கப்படுகிறது. அமெரிக்கக் காங்கிரஸ் அங்கத்தினருக்கு ஏறக்குறைய ஆண்டுக்கு ஓர் இலட்ச ரூபாய் கொடுக்கப்படுகிறது.

# 9. சட்டம் இயற்றுதல்

சட்டமன்றங்களின் முக்கியப் பணி சட்டங்களை இயற்றுவதே. இக் காலத்தில் சட்டங்களின் எண்ணிக்கைகளும் அவற்றின் விதிகளும் மிகவும் பரந்து அதிகரித்துவருகின்றன. போக்குவரத்து சாதனங்களின் ஏற்பாடுகள் ; தொழிற்சாலைகளின் அமைப்பு, நடைமுறைகள் ; தொழிலாளி முதலாளி தொடர்புகள் ; பலவிதமான வரிகளும் அவற்றை விதிக்கும் முறைகளும்—இவைபோன்ற பல சமூக விவகாரங்கள் சட்டத்தின் மூலமே நிர்ணயிக்கப்படுகின்றன. பிரஜைகளின் பரஸ்பர சம்பந்தங்களும், பிரஜைகளுக்கும் அரசாங்கத்திற்குமுள்ள தொடர்புகளும், சொத்து, பணம், ஒப்பந்தம், கடன் முதலிய சமூக அலுவல்களும் சட்டமூலம் கட்டுப்படுத்தப்படுவது இக் காலத்திய எல்லா அரசாங்கங்களுக்கும் பொதுவானது. இவற்றை அதிகாரிகளின் மனப்போக்கின்படி விட்டுவிட்டால் பெருங் குழப்பமும் கலவரமும் உண்டாகும்.

மக்கள் ஆட்சியில் சட்டமன்றங்கள்மூலம் சட்டம் இயற்றப்படுவதும், அவற்றையே ஆதாரமாகக்கொண்டு அரசாங்கம் நடைபெறுவதும் அடிப்படையான கொள்கைகள். ஒரு சட்டம் இயற்றுவதில் பொதுவான சில படிகள் உண்டு. அவையாவன :

1. அறிமுக வாசகம்: ஒரு சட்டசபையின் அங்கத்தினர் சட்டத்தின் நகலைத் தயார்செய்து, அதை மசோதாவாகச் சபையில் சமர்ப்பிக்கவேண்டும். அந்த மசோதாவின் நோக்கமும், விதிகளும், உபவிதிகளும், அவற்றின் பிரிவுகளும், உட்பிரிவுகளும் தெளிவாக வகுக்கப்பட்டிருக்கவேண்டும். இச் சமயம் சாதாரணமாக எதிர்ப்போ, விவாதமோ, இராது.

2. இரண்டாம் வாசகம்: மசோதாவின் அடிப்படையான கொள்கைகளையும் நோக்கங்களையும்பற்றிய விவாதம், தனி விதிகளின் தன்மைகளும் முரண்பாடுகளும் இச்சமயம் ஆலோசிக்கப்படமாட்டா. இந்த வாசகத்தை சபை நிராகரித்துவிட்டால்,

அந்த மசோதா செத்துவிடும். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அதை மீண்டும் புகுத்தி அறிமுகம் செய்யவேண்டும்.

3. கமிட்டி பரிசோதனை: மசோதாவின் விதிகளைக் கமிட்டி மூலம் நன்கு பரிசோதனை செய்து, அவசியமான திருத்தங்களுடன் திரும்பவும் சபைக்கு அனுப்புதல்.

4. விரிவான பரிசீலனை: கமிட்டியின் அறிக்கையையும், அங்கு செய்யப்பட்ட திருத்தங்களையும் சபை விரிவாக ஆராயும். புதிய திருத்தங்கள் செய்யப்படலாம். ஒரு விதிக்கோ, திருத்தத்திற்கோ எதிர்ப்பு பலமாக இருந்தால், வாக்கெடுத்தாகவேண்டும். முதலில் சாதகமானவர்களையும் எதிர்ப்பாளிகளையும் கைதூக்கச் செய்து முடிவு செய்யலாம். எதிர்ப்பாளிகள் வேண்டினால், தனி வாக்கெடுப்புக்காக சாதகமானவர்கள் ஒருபுறமும் பாதகமானவர்கள் மறுபுறமும் சென்று அங்கு இதற்காகக் காத்திருக்கும் சட்டசபை உத்தியோகஸ்தரிடம் வாக்குப் பதிவு செய்யவேண்டும். பாரத சட்டசபைகளில் தங்கள் இடத்திலிருந்தே வாக்குப் பதிவு செய்வதற்கு மின்சார இயந்திர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் மக்கள் சபையில் அவ்வித நூதன சாதனங்களை அமைப்பதற்கு எதிர்ப்பு இருந்துவருகிறது.

5. மூன்றும் வாசகம்: விரிவான பரிசீலனை முடிந்த பிறகு, மசோதாவைத் திருத்தங்களுடன் அச்சிட்டு மெம்பர்களுக்கு வழங்கி, அது மூன்றும் தடவையாக விவாதிக்கப்படும். அப்பொழுது அதை எதிர்த்தவர்கள் தமது கொள்கைகளை விளக்கவும், மசோதாவை ஆதரிப்போர் தமது ஆதரவை உறுதிப்படுத்தவும் அவகாசமுண்டு.

மூன்றும் வாசகத்தை சபை ஏற்றுக்கொண்டபின், தலைவர் கையெழுத்திட்டு இரண்டாம் சபைக்கு அனுப்புவார். அங்கும் இந்தப் படிகளெல்லாம் கடந்து நிறைவேறினால், மசோதா ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அவர் கையெழுத்திட்டதும் அது சட்டமாகும்.

பிரிட்டிஷ், பாரத சட்டமன்ற முறைகளுக்கும் அமெரிக்கக் காங்கிரஸ் முறைகளுக்கும் ஒரு பெரிய வேற்றுமை உண்டு. மந்திரி சபை சட்டசபைகளின் அங்கத்தினர்களாக இருந்து அவற்றின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளுவதால், பிரிட்டனிலும் பாரதத்திலும் பெரும்பாலான சட்டங்கள் அரசாங்கத்தின் சார்பிலேயே கொண்டுவரப்படுகின்றன. அவற்றிற்கே அதிக நேரம் ஒதுக்கப்

படுகின்றது. மெம்பர்களுக்கு மசோதாவைக் கொண்டுவர அனுமதி இருந்தபோதிலும், இரண்டு வாரத்திற்கு ஒரு நாளே சபையில் அதற்கு நேரம் அளிக்கப்படுகிறது. பிரிட்டிஷ் மக்கள் சபையில் வாரத்திற்கு 2½ மணி நேரமே.

பிரிட்டிஷ் முறைக்கும் பாரத முறைக்கும்கூடச் சில வேற்றுமைகளுண்டு. பிரிட்டனில் இரண்டாம் வாசகத்திற்குப்பின், மசோதா அதற்காக நியமிக்கப்பட்டுள்ள கமிட்டிக்கு அனுப்பப்படுகிறது. அங்கிருந்து வரும் அறிக்கையும் திருத்தங்களும் மக்கள் சபை முழுதும் ஒரு கமிட்டியாக இருந்து பரிசீலனை செய்யப்படுகின்றன, அப்பொழுது சபைத் தலைவர் தலைமை வகிப்பதில்லை. பேசும் நியமங்களும் தளர்த்தப்படுகின்றன. வாதங்கள் முழுதும் பதிவு செய்யப்படுவதில்லை. அவைத் தலைவர், முடிவுகளைமட்டும் பதிவு செய்கிறார்.

பாரத லோகசபை, ராஜ்ய சபைகளில் எல்லா மசோதாக்களையும் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்ற நியமமில்லை. சிக்கலில்லாத மசோதாக்களை சட்டசபை நேரிலேயே இரண்டாம், மூன்றும் வாசகங்களைப் பூர்த்தி செய்துவிடக்கூடும். சிக்கலுள்ள சட்டங்களை இரண்டு சபைகளுக்கும் பொதுவான ஒரு கூட்டுக் கமிட்டிக்கு அனுப்புவது வழக்கம்.

இவ்விரண்டு நாடுகளிலும், ஒரு மசோதா ஒரு சபையிலேயே முதலில் புகுத்தப்படும். அந்தச் சபையில் அது கரையேறிய பின்னரே அடுத்த சபைக்கு அனுப்பப்படும்.

பண மசோதாக்களும், பண விவகாரத்தைப்பற்றிய மசோதாக்களும் பிரிட்டிஷ் மக்கள் சபையிலும், பாரத லோக சபையிலுமே கொண்டுவரப்படலாம். அவற்றைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் விளக்குவோம்.

பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் முதலில் கொண்டுவரப்பட்டு, எல்லாப் படிகளையும் கடந்த மசோதாக்களை மக்கள் சபைக்கு அனுப்பவேண்டும். அங்கு அதை மக்கள் சபை விவாதிக்காமலிருந்துவிடலாம்; அல்லது விவாதித்து நிராகரித்துவிடலாம். மூன்றாவதாக, திருத்தங்களுடன் ஏற்கலாம். மக்கள் சபையின் முடிவைப் பிரபுக்கள் சபை மாற்றமுடியாது.

இதற்கு மாறாக, மக்கள் சபையில் ஏற்கப்பட்ட மசோதாவை பிரபுக்கள் சபை நிராகரித்தாலோ, திருத்தங்கள் செய்தாலோ, அது மீண்டும் மக்கள் சபையில் வாதிக்கப்படலாம். அந்த

மறுபடியும் மக்கள் சபை எவ்விதம் ஏற்றுக்கொள்கிறதோ அவ்விதமே சட்டமாகும். பிரபுக்கள் சபை மக்கள் சபையின் சட்டத்தை ஓராண்டுக் காலம் தடுக்கலாம். அச் சபையால் கோரப்படும் திருத்தங்களை மக்கள் சபை ஏற்கலாம். அவசரமாக ஏற்கப்பட்ட மசோதாக்களை சாவதானத்துடன் பரிசீலனை செய்து, அதன் நன்மை தீமைகளை விளக்கி, திருத்த யோசனைகளைக் கூறி, மக்கள் சபைக்கு உதவுவதே பிரபுக்கள் சபையின் தற்காலத்திய தொழிலாகும்.

பாரதத்தில் சாதாரண சட்டங்களை இயற்றுவதில் லோக சபை, இராஜ்ய சபை இரண்டிற்கும் சம அதிகாரமுண்டு. இரு சபைகளும் ஒரே வாசகத்துடன் ஒரு மசோதாவை ஏற்றுக்கொண்ட பின்னரே அது ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும். மசோதாவை ஒரு சபை ஏற்று மற்ற சபை நிராகரித்தாலோ அல்லது அதன் விதிகளைப்பற்றி முரண்பாடான அபிப்பிராயங்கள் இருந்தாலோ இரண்டு சபைகளும் சேர்ந்து வாதித்து வாக்கெடுத்து முடிவு செய்யப்படும். அப்பொழுது லோகசபையின் தலைவரே தலைமை வகிப்பார். இதுகாறும் ஒரே கட்சியின் பிரதிநிதிகள் இரு சபைகளிலும் பெரும்பாலராக இருந்திருப்பதால், மக்கள் சபை முடிவை இராஜ்ய சபை ஏற்றுவந்திருக்கிறது. ஆயினும், ஒரு தடவை இரண்டும் சேர்ந்து கூடி முடிவு செய்யவேண்டியிருந்தது. எதிர்க் கட்சிகளின் பலம் அதிகரிக்கும்பொழுது இரு சபைகளுக்கும் அபிப் பிராய பேதங்கள் அதிகரித்து, சேர்ந்து கூடி வாக்கெடுக்கும் சந்தர்ப் பங்கள் அதிகரிக்கலாம். ஆனால், அதனால் எவ்விதத் தீங்கும் நேரிடாது. சாதாரண சட்டங்கள் சாவதானமாகவும், இரு சபைகளுக்கும் திருப்தியளிக்கக்கூடியனவாகவும் இருப்பதே நாட்டிற்கு நலமாகும்.

அமெரிக்கக் காங்கிரசில், இரு சபைகளிலும் அரசாங்க மசோதாக்களுக்கும் இதர மசோதாக்களுக்கும் எவ்வித வேற்றுமையுமில்லை. அரசாங்கத்திற்கு வேண்டிய மசோதாக்களை ஆளுங் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் அறிமுகம் செய்ய வேண்டும். எதிர்க் கட்சியினரும் தமது மசோதாக்களைக் கொண்டுவரலாம். அறிமுகமானவுடன் மசோதா அதற்குரிய கமிட்டிக்கு அனுப்பப்படும். அந்தக் கமிட்டி அதை ஏற்றுக் கொண்டாலொழிய அது நிராகரிக்கப்பட்டதாகும். அதை உயிர்ப் பிக்கப் பிரதிநிதி சபையின் பெரும்பாலரான மெம்பர்கள் கையெழுத் திட்டுத் தலைவரிடம் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். இது மிகவும் அபூர்வம். அரசாங்கத்தின் தூண்டுதலால் புகுத்தப் பட்ட சில மசோதாக்களுக்கும் இக் கதி ஏற்படுவதுண்டு.

ஒரே மசோதா பிரதிநிதி சபை, செனேட் இரண்டிலும் ஒரே சமயத்தில் அறிமுகம் செய்யப்படலாம். இரண்டிலும் அதனதன் கமிட்டிகள் பரிசீலனை செய்து அவசியமான திருத்தங்களுடன் சபையின் விவகாரக் கமிட்டிக்கு அனுப்பப்படும். அக் கமிட்டி அதை சபையின் கூட்டத்தின் அலுவல் பட்டியலில் பதிவு செய்த பின்னரே அது விவாதிக்கப்படும்.

செனேட். பிரதிநிதி சபை இரண்டில் ஒன்று, ஒரு மசோதாவை நிராகரித்தால் அது செத்துவிடும். விதிகளைப்பற்றி முரண்பாடு இருந்தால், அவற்றைச் சமரசப்படுத்துவதற்கு இரண்டு சபைகளி லிருந்தும் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு அக் கூட்டுக் கமிட்டியில் விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்படும். ஒரே வாசகப்படி மசோதா இரு சபைகளிலும் நிறைவேறிய பின்னரே அது ஜனாதிபதி யிடம் போகும். அவர் அதை ஏற்றுக் கையெழுத்திட்டால் அது சட்டமாகும். அவர் அதை ஏற்க மறுத்தால், மீண்டும் அதே மசோதாவை இரு சபைகளும் இரண்டில் மூன்று பங்கு பெரும் பான்மையால் ஆதரித்து உறுதிப்படுத்தினால், அது ஜனாதிபதியின் எதிர்ப்பை மீறிச் சட்டமாகும்.

அமெரிக்க ஐக்கிய அரசியலில் சட்டம் செய்வது பிரிட்டன், பாரதங்களில் அரசியல்களைக் காட்டிலும் அதிக சிரமமானதென்பது தெளிவாகும். மேலும், அரசாங்கத்திற்கும் காங்கிரசுக்கும், காங்கிரசில் செனேட்டுக்கும் பிரதிநிதி சபைக்கும் முரண்பாடுகள் தோன்றுவதற்கு இடமுண்டு. இதனால், நல்ல திட்டங்கள் தாமதிக்கப்படலாம். இது அந்த அரசியலின் குறை என்று கூறப் படுகிறது. ஆனால், பிரிட்டிஷ், பாரத அரசியலில் ஆளும் கட்சியின் இஷ்டப்படி சட்டங்கள் எளிதில் நிறைவேற்றப்படுகின்றன. இதனால், பல தீமைகளுமுண்டு. நிதானமாகச் சட்டம் இயற்றப் படுவதே நாளடைவில் நன்மையாகும் என்று நினைப்பதில் தவறில்லை.

# 10. சட்டமன்றங்களும் பண விவகாரங்களும்

இது பொருளாதார யுகம். எந் நாட்டிலும் பொருளாதாரப் பிரச்சினைகளே மிகவும் முக்கியமாகவிருக்கின்றன; அமெரிக்க ஐக்கிய நாட்டின் மொத்த வருமானம் இப்பொழுது சுமார் 70,000 கோடி டாலர். அதில் ஐக்கிய அரசாங்கம் வரிமூலமாக 10,000 கோடி டாலர்—அதாவது 7-ல் ஒரு பாகம்—வசூல் செய்து அரசாங்கச் செலவுகளுக்கும் மற்றப் பொதுப் பணிகளுக்கும் செலவழிக்கின்றது. பிரிட்டனின் மொத்த வருமானம் சுமார் ரூ. 2,400 கோடி பவுன். அதில் 720 கோடி பவுன் அரசாங்கத்தால் வரிகள்மூலம் வசூலிக்கப்பட்டு வினியோகிக்கப்படுகிறது. பாரதத்தின் மொத்த வருமானம் ரூ. 14,000 கோடி. அதில் மத்திய அரசாங்கம் ரூ. 2,000 கோடியும், ராஜ்ய அரசாங்கங்கள் ரூ. 1,000 கோடியும் வரிகளாக எடுத்துச் செலவு செய்கின்றன.

ஆதலால், மக்கள் ஆட்சியில் அரசாங்கத்தின் பண விவகாரங்கள் மக்களின் பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்டிருப்பது மூல தத்துவமாகும். பிரிட்டனில் பிரதிநிதி இல்லையேல், வரியுமில்லை என்ற கூக்குரலுடனேயே ஜனநாயகம் பிறந்தது. இப்பொழுது மக்கள்சபை சட்டமூலம் கொடுக்கும் வரிகளை வசூலித்து, அதே சபை சட்டமூலம் அனுமதிக்கிற இனங்களுக்கே செலவு செய்ய வேண்டுமென்ற சம்பிரதாயம், பிரிட்டிஷ் அரசியலுக்கு அஸ்திவாரமாக அமைந்திருக்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியல் அமைப்பில், முதல் விதி 8ஆவது பிரிவில் வரி விதிப்பதும், கடன்களை அனுமதிப்பதும், செலவுகளை ஆமோதிப்பதும் காங்கிரசின் தனி அதிகாரத்திற்குட்பட்டவையென்று விதிக்கப்பட்டுள்ளது.

பாரத அரசியல் அமைப்பில் 265ஆவது விதி கூறுவதாவது: 'சட்டத்தின் ஆதாரமில்லாமல் எந்த வரியும் விதிக்கவோ, வசூலிக்கவோ கூடாது.'

ஓர் ஐக்கிய அரசாங்கத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் இராஜ்ய அரசாங்கங்களுக்கும் வரி விதிக்க அதிகாரம் பங்கீடு செய்யப்பட்டிருக்கும். இதைப்பற்றிப் பின்னர் விவரிக்கப்படும்.

பிரிட்டனிலும் பாரதத்திலும் பண விவகாரங்களில் மக்கள் சபைக்கும் லோக சபைக்குமே முடிவான அதிகாரமுண்டு. பிரபுக்கள் சபைக்கு அதிகாரமேயில்லை. இராச்சிய சபைக்கு விவாதிக்கவும் சிபாரிசுகள் செய்யவும் அதிகாரமுண்டு. அந்தச் சிபாரிசுகளை லோக சபை நிராகரிக்கலாம்.

பிரிட்டன், பாரதம் இரண்டிலும் வருஷாந்திர வரவுசெலவுகளைப்பற்றியும் வரி விகிதங்களைப்பற்றியும் எடுக்கும் நடவடிக்கைகள் ஏறக்குறைய ஒரேவிதமானவை. ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் அடுத்த வருஷத்தின் (ஏப்ரலிலிருந்து அடுத்த மார்ச்சு 31 வரையில்) வரவுசெலவுகளின் மதிப்பீடுகளையும், புதிதாக விதிக்கக்கோரும் வரி விகிதங்களையும் விரிவாகத் தயார் செய்து மக்கள் சபையிலும், லோக சபையிலும் சமர்ப்பிக்கப்படும். அதில் நடக்கும் வருஷத்திய வரவு செலவுகளும், அதற்கு முந்திய வருஷத்தின் முடிவான கணக்குகளும் சேர்க்கப்பட்டிருக்கும். இந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து, நிதி மந்திரி ஒரு சொற்பொழிவு நடத்துவார். அதில் நாட்டின் பொருளாதார நிலைமையையும், அரசாங்கச் செலவுகளின் போக்குகளையும், புதிய வரிகளின் அவசியத்தையும் விளக்குவார்.

வரவு செலவுகள் இலாகாவாரியாகப் பல இனங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வோர் இனமும் பல உட்பிரிவுகளாக மீண்டும் வகுக்கப்பட்டு விரிவாகக் காண்பிக்கப்படும். அறிக்கைகள் அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்ட சில நாட்களுக்குப் பின், சபையில் அவற்றைப்பற்றிப் பொது விவாதம் பல நாட்களுக்கு நடைபெறும். அப்பொழுது மெம்பர்கள் பொதுவான பொருளாதாரப் பிரச்சினைகளைப்பற்றியும், மற்றும் மக்கள் குறைகளைப்பற்றியும், மனம்போனவாறு பேசுவார்கள்.

பின்னர், மார்ச்சு மாதத்திற்குள் வரவுசெலவு பரிசீலனை முடிவடையாததால் கோரிய தொகைகளில் ஓர் அம்சத்தை இடைக்கால மானியமாக சபை அனுமதிக்கும். இதற்கு ஆட்சேபணை இராது.

பிறகு ஒவ்வோர் இனத்தின் மதிப்பீடும் பிரத்தியேகமாக விவாதிக்கப்படும். லோக சபை இதை நேராகவே விவாதிக்கும். பிரிட்டிஷ் மக்கள் சபை தன்னை ஒரு கமிட்டியாக மாற்றிக்கொண்டு ஆராயும். ஓர் இனத்திற்குக் கோரப்படும் தொகையைக் குறைக்க

எந்த மெம்பரும் திருத்தம் கொண்டுவரலாம்; அதிகரிக்கக் கேட்க லாகாது. பண விவகாரங்கள் சர்க்கார்மூலமாகவே ஆலோசனைக் குக் கொண்டுவரப்படவேண்டும்.

எல்லா இனங்களும் பரிசீலிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டபின் அவையனைத்தையும் ஒரு செலவு மசோதாவாகத் தயார் செய்து சட்டமாகச் செய்யப்படும்.

வரவு செலவு மதிப்பீடுகளைப்பற்றி இராஜ்ய சபையில் பொது விவாதமுண்டு; இனவாரி விவாதமில்லை. செலவு மசோதா லோக சபையில் நிறைவேற்றப்பட்ட பின்னர் அது இராஜ்ய சபையில் விவாதிக்கப்படும். அதற்குத் திருத்தம் செய்யக் கூடாது; வேண்டுமானால் சிபாரிசுகள் செய்யலாம்.

பிரபுக்கள் சபை வரவுசெலவுகளை விவாதிப்பதுகூட வழக்க மில்லை.

செலவு மசோதா சட்டமான பிறகு வரி விகிதங்களைக் கொண்ட நிதி மசோதா விவாதிக்கப்படும். பிரிட்டன், பாரதங் களில் பெரும்பான்மை கட்சியின் மந்திரி சபையால் இது ஆதரிக்கப் படுவதால், எதிர்க் கட்சிகள் புதிய வரி விகிதங்களைப்பற்றி ஆட்சே பிக்கக்கூடுமேயொழிய மாற்ற முடியாது. ஆளும் கட்சியில் பல மெம்பர்கள் புதிய வரிகளை விரும்பாவிட்டாலும், கட்சிக் கூட்டத்தில் முறையிட்டு மந்திரி சபை இஷ்டப்பட்டு மாறுதல்கள் செய்தாலொழிய சட்டசபையில் அரசாங்கத்தின் தீர்மானங்களை யும் சட்டங்களையும் ஆதரித்தே தீரவேண்டும். வரவு செலவுப் பிரச்சினைகளிலோ, வரி விகிதங்களிலோ அரசாங்கத்துக்குத் தோல்வி ஏற்பட்டால் மந்திரி சபை இராஜினுமா செய்யவேண்டும். எதிர்க்கட்சிக்கு ஆளும் பலமில்லாவிட்டால், லோக சபையைக் கலைத்துவிடவேண்டும்; அரசாங்கத்திற்கு எதிராக வாக்குக் கொடுத்தவர்களைக் கட்சியின் சார்பில் அபேட்சகராக நிற்பதற்கு அனுமதிக்கமாட்டார்கள்.

இப் பொறுப்பாட்சி முறையில் செலவுகளைக் குறைத்தோ, வரிகளை மறுத்தோ மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்தைக் கட்டுப் படுத்துவது சாத்தியமில்லை.

அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் நிலைமை வேறு. அங்கும் நிர்வாகம் வருஷாந்திர வரவு செலவு விவரங்களைத் தயார் செய்து பிரதிநிதி சபைக்கு ஜனாதிபதியின் சிபாரிசுகளுடன் அனுப்பும். ஆனால், ஆளும் கட்சியின் பிரதிநிதிகள் கொண்டுவரும் தீர்மானங் களாகவே கருதப்படும். எதிர்க்கட்சியினரும் அத் தீர்மானங்களை

மாற்றியும், புதிய இனங்களைப் புகுத்தியும் தீர்மானங்கள் கொண்டு வரலாம். வரவு செலவுத் திட்டம் பிரதிநிதி சபையின் நிதிக் கமிட்டியால் பரிசோதிக்கப்பட்டு அதன் மாற்றல்களுடன் சபைக்கு அனுப்பப்படும். அங்கு நிறைவேறினால் செனேட்டுக்குப் போகும். முதலில் பண விவகாரங்களைப்பற்றிய தீர்மானங்களும் சட்டங்களும் பிரதிநிதி சபையிலேயே கொண்டுவரப்படவேண்டும் என்ற விதி இருந்தாலும், முடிவில் செனேட் சபையின் ஆதரவின்றி அவைகளை நிறைவேற்ற முடியாது. செனேட் சபையின் நிதிக்கமிட்டி பரிசீலனை செய்து இனங்களை மாற்றித் தீர்மானிக்கலாம். முடிவில் இரண்டு சபைகளின் பிரதிநிதிகளும் கூடி ஒரு சமரச முடிவுக்கு வர வேண்டும். ஜனாதிபதி கோரும் தொகைகளைக் குறைத்து அனுமதிப்பது சாதாரண சம்பவம். கட்சிக் கட்டுப்பாடுகள் அதிகமில்லை. ஆளும் கட்சியின் அங்கத்தினர்களும், அரசாங்கத்திற்கு எதிராகப் பேசுவதும் வாக்குக் கொடுப்பதும் உண்டு. இக்காரணத்தால் அமெரிக்கக் காங்கிரஸ் உண்மையிலேயே அரசாங்கத்தின் பண விவகாரங்களை மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்தி வருகின்றது.

இந் நூற்றாண்டின் ஆரம்பம் வரையில் வரி விகிதம் அரசாங்கத்தின் முக்கிய அலுவல்களுக்கு வேண்டிய தொகைகளை வசூலிக்கும் ஒரே நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருந்தது. அரசாங்க அலுவல்களும் நாட்டின் பாதுகாப்பு, உள்நாட்டு அமைதி, இவ்விரண்டிற்கும் அவசியமான காரியங்களாகவே இருந்தன. ஜனநாயகப் பிரசாரம் வலுத்து, பொது மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதும் சமூக நலங்களை வளர்ப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகக் கருதப்பட்டது. கல்வி, சுகாதாரம் முதலியவற்றிற்காகச் செலவுகள் அதிகரிக்கலாயின. இதற்காகப் புதிய வரிகள் விதிக்கப்பட்டன.

முதல் உலக மகாயுத்தத்திற்குப்பின் சமூக சேவைகள்மட்டும் போதாது. எல்லா மக்களுக்கும் வயோதிகம், வியாதி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற கஷ்டங்களுக்கு நிவாரணமளிப்பதும் அரசாங்கத்தின் கடமையாக எண்ணப்பட்டது. ருஷ்யப் புரட்சி வெற்றிபெற்ற மற்றும் பல நாடுகளில் பொதுவுடைமை ஏற்பட்டதும், வருமானங்கள், சொத்துகள் இவற்றின் ஏற்றத்தாழ்வுகளை நியாயமான வரம்புகளுக்குள் நிலைநிறுத்தி எக் குடும்பமும் வறுமையால் பீடிக்கப்படாமலும் மறுபுறம் எக் குடும்பமும் மிதமிஞ்சி சொத்துகளை சம்பாதித்துச் செல்வத்தால் கிடைக்கும் அதிகாரத்தையும் சலுகைகளையும் அபகரித்துக்கொள்ளக்கூடாதென்றும் பொதுமக்களிடம் அபிப்பிராயம் வளர்ந்துவந்தது. இந்த

நோக்கங்களுக்கெல்லாம் வரி விகிதமும், அரசாங்க வரவு செலவு களும் நல்ல கருவிகளாயின.

தனி அரசியலாதலால், பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு எல்லாவித வரிகளையும் விதிக்கவும் வசூலிக்கவும் அதிகாரமுண்டு. இவற்றுள் முக்கியமான வரி வருமான வரி. இது ஒரு நபரின் வருமானத்தைப் பொறுத்திருக்கிறது. அவனுடைய குடும்பத்தையும் பொறுத்திருக் கிறது. 1,000 பவுன் சம்பாதிக்கும் பிரம்மச்சாரி வருஷத்திற்கு 179 பவுன் வரி செலுத்துகிறுன். மனைவி இருந்தால் 132 பவுன். இரண்டு குழந்தைகள் 11 வயதுக்குக் குறைந்திருந்தால் 51 பவுன்; அவர்கள் 16 வயதுக்குட்பட்டிருந்தால் 36 பவுன்; 16 வயதிற்கு மேற்பட்டுக் கல்லூரியில் படித்தால் 21 பவுன்தான். வருஷத்திற்கு 2,000 பவுனுக்குமேல் வருமானத்திற்கு உபரி வரி உண்டு. 15,000 பவுனுக்குமேல் வருமானத்தில் ஒரு பவுனுக்கு 17 ஷி. 9 பென். அதாவது, 87·9% வரி விதிக்கப்படுகிறது, இந்த விகிதத்தின் பலனுக வரி போக மீதி இருக்கும் வருமானங்கள் பெரும்பாலும் 2,000 பவுனுக்குக் குறைவாகவே இருக்கின்றன. குறைந்தது 600 பவுன், உச்சம் 2,000 பவுனுக எல்லா பிரிட்டிஷ் குடும்பங்களும் மத்தியதரத்தைச் சேர்ந்திருக்கின்றன.

பரம்பரையாகவோ, அதிர்ஷ்டவசமாகவோ சேர்ந்திருக்கும் பெரும் சொத்துகளைக் குறைப்பதற்கு இறந்தோர் சொத்து வரி விதிக்கப்படுகின்றது. 5,000 பவுனுக்குக் குறைந்த சொத்துக்கு இவ் வரி இல்லை. அதற்குமேல் 1 சதவிகிதத்திலிருந்து 80 சதம் வரையில் படிப்படியாக உயருகிறது.

கம்பெனிகளுக்கு 45% வருமான வரியும், இலாப வரியும் விதிக் கப்படுகின்றன. இறக்குமதிமீது சுங்கவரியும் உள்நாட்டுப் பொருள்கள்மீது உற்பத்தி வரியும் விதிக்கப்படுகின்றன. இவற்றி லிருந்து வருமான வரியிலிருந்து கிடைக்கும் தொகைக்குச் சமான மாகப் பணம் வசூலாகிறது.

இதைத் தவிர, கொள்முதல் வரியும் (நமது விற்பனை வரியைப் போன்றது) மோட்டார் வரியுமே முக்கியமான பிரிட்டிஷ் வரிகள். 1963-64-ல் நேர்முக வரிகள்மூலம் (அதாவது வருமான, சொத்து வரிகள்) 371 கோடி பவுன்களும், சுங்கக் கொள்முதல் வரிகள்மூலம் 277 கோடி பவுன்களும், இதர வரிகள்மூலம் 41 கோடி பவுன்களுமாக 689 கோடி பவுன்கள் வரி வசூலாயிற்று. அவற்றின் செலவினங்கள் பின்வருமாறு: அரசாங்க நிர்வாகம் 80 கோடி பவுன்; பாதுகாப்பு 180 கோடி பவுன்; சமூக சேவை, சமூகப் பாதுகாப்பு 420 கோடி பவுன்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் அமைப்பின்படி ஐக்கிய அரசாங்கத்திற்கு எல்லாவித வரிகளும் விதிக்க அதிகாரமுண்டு. முதலில் நேர்முக வரி விதிப்பதற்குத் தடை இருந்தது. பின்னர் 16ஆவது திருத்தத்தால் அது விலக்கப்பட்டது. சொத்தின்பேரில் உள்ள வரிகள் இராஜ்யங்களுக்கு விடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது ஐக்கிய அரசாங்கத்தின் மொத்த வரிவசூலில் 48% வருமான வரி, சொத்து வரி, நன்கொடை வரிமூலமாகவும், 30% கம்பெனிகள்மீது வருமான வரியாகவும், 15% உற்பத்தி வரியாகவும், 7% சுங்க வரி வாயிலாகவும் வசூலிக்கப்படுகிறது.

பிரிட்டனைப் போலவே வருமான வரி வருமானத்திற்குத் தக்கவாறு உயர்ந்துகொண்டேபோகும். வருஷம் 4,000 டாலர் வருமானத்திற்கு 840 டாலரும், 40,000 டாலருக்கு 19,740 டாலரும், அதற்குமேல் படிப்படியாக 85% வரையும் உயருகிறது. வரி செலுத்தியது போக மீதி 20,000 டாலர் வருமானத்திற்கு அதிகமுள்ள குடும்பங்கள் மிகவும் குறைவு. அவ்வாறு ஆண்டுக்கு 3,000 டாலருக்குக் குறைவான குடும்பங்களும் அதிகமில்லை. அதாவது, அமெரிக்கக் குடும்பங்களின் வருமானங்கள் ஆண்டுக்கு 3,000 டாலருக்கும் 2,000 டாலருக்கும் நடுவிலிருக்கின்றன. சராசரி வருமானம் பிரிட்டிஷ் குடும்பத்தைவிட இரண்டு மடங்கு ஆகவும், இந்தியக் குடும்பத்தைவிட 40 மடங்காகவும் இருக்கிறது. முதலாளித்துவ முறையில் செல்வ உற்பத்தி நடைபெற்றாலும் வரிவிகித முறைகளால் செல்வம் நன்கு பங்கீடு செய்யப்படுகின்றது. கூலிகளும் சம்பளங்களும் உயர்ந்திருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும்.

இந்தியாவின் பார்லிமென்டுக்கு அமெரிக்கக் காங்கிரசைப்போல் எல்லா வரிகளையும் விதிக்க அதிகாரமில்லை. சில வரிகள் இராஜ்யங்களுக்குப் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பார்லிமென்டால் விதிக்கக்கூடிய வரிகளிலும் இராஜ்யங்களுக்குப் பங்கு உண்டு. இவை எல்லாம் பின்னர் விவரிக்கப்படும்.

இந் நாட்டு மத்திய அரசாங்கத்தின் முக்கிய வரிகளாவன : தனி நபர்கள்மீது வருமான வரி, கம்பெனிகள்மீது வரி, உற்பத்தி வரி, சுங்க வரி, விவசாய நிலமில்லாத இதர சொத்துகள்மீது வரி. இவற்றுள் நபர்மீது வருமான வரியும், உற்பத்தி வரியும் நிதிக் கமிஷன் சிபாரிசுகளின்படி இராஜ்யங்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். 1966-67 வரவுசெலவு மதிப்புகளில், இருவித வருமான வரிகள்மூலம் ரூ. 600 கோடியும், உற்பத்தி வரி ரூ. 959 கோடியும், சுங்க வரி ரூ. 555 கோடியும், சொத்து வரி ரூ. 14 கோடியும், இதர சில்லறை வருமானங்களும் சேர்த்து ரூ. 2,160 கோடி

வருமானம். அதில் ரூ. 350 கோடி இராஜ்யங்களின் பங்கு. அதுபோக மத்திய அரசாங்க வருமானம் ரூ. 1,806 கோடியாக மதிப்பிடப்பட்டு இருக்கிறது. 1955–56-ல் இது ரூ. 395 கோடியாகவிருந்தது. சென்ற பத்து வருஷங்களில் வரிகள் நான்கு மடங்கு அதிகரித்து இருக்கின்றன.

வருமான வரி விகிதங்களும் பிரிட்டன், அமெரிக்காவைப் போலவே மிகவும் கடுமையாக வருமானத்திற்கேற்ப உயர்ந்திருக்கின்றன. சொந்த சம்பாத்தியத்திற்கு ரூ. 5,000-த்திற்கு 3%லிருந்து 10 இலட்சம் ரூபாய்க்கு 68% வரி விதிக்கப்படுகிறது. சொத்திலிருந்து வரும் வருமானத்திற்கு உச்ச வரி 76%. சொற்ப வருமானங்களுக்கு மனைவிக்காகவும், இரு குழந்தைகள் வரையிலும் சிறிது தள்ளுபடி உண்டு. இந்த வருமானத்தில் பெருமிதமான செலவுகளாவன : பாதுகாப்பு ரூ. 798 கோடி ; நிர்வாகம் ரூ. 110 கோடி ; சமூக சேவைகள் ரூ. 796 கோடி ; பலதரப்பட்ட செலவுகள் ரூ. 75 கோடி; இராஜ்யங்களுக்கு மான்யங்கள் ரூ. 396 கோடி.

இவ்விதம் ஆண்டுதோறும் மூன்று அரசியல்களிலும் வரி விகிதங்களும் அரசாங்கமூலம் செய்யப்படும். செலவுகளும் பெருகிக் கொண்டே போகின்றன. ஓரளவு இது சமூகத்தின் முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. ஆனால், வீண் செலவுகளும் அதிகரித்து வருகின்றன. பிரிட்டன், பாரதம் இவற்றின் பார்லிமெண்டுகள் இதைக் கட்டுப்படுத்தும் சக்தியை இழந்துவிட்டன என்றே கூறலாம். அமெரிக்கக் காங்கிரஸ் அவ்விதம் இழக்கவில்லையாயினும், அங்கும் காங்கிரஸ்மூலம் போதிய கண்காணிப்பு இல்லை என்ற அதிருப்தி வளர்ந்துவருகிறது. செனேட், பிரதிநிதி சபை இரண்டிலும் நிதிக் கமிட்டி பல கிளைக் கமிட்டிகளாகப் பிரிந்து தம் தம் இலாகாக்களின் செலவுகளைப் பரிசீலனை செய்கின்ற போதிலும், பலதரப்பட்ட நிர்வாக அதிகாரிகள்மூலம் செலவு செய்யப்படும் இனங்களின் விவரங்களை அறியவோ, சாவதானமாகப் பரிசீலனை செய்யவோ போதிய அவகாசமில்லை. ஓர் ஆசிரியர் கூறுகிறார் : 'தற்போதைய செயல்முறையில், நிர்வாகக் கிளைகளின் பணிகளைப்பற்றி காங்கிரஸ் நல்லறிவுடன் முடிவு செய்யக் கூடும் என்று நம்புவதற்கில்லை. கோரும் தொகைகளைக் குறைத்தோ, நிராகரித்தோ தீர்மானம் செய்யும்பொழுதுகூட, அது சரியானதென்று நிச்சயித்துவிட முடியாது. அவசியமான திட்டங்கள் பாதிக்கப்படலாம். தனி நபர்களின் விருப்புவெறுப்புகள், பிடிவாதங்கள், தற்செயலாகக் கிடைத்த செய்திகள் இவற்றைக்கொண்டு கிளைக் கமிட்டிகள் முடிவு செய்கின்றன.

# 11. சட்டமன்றங்களின் கமிட்டிகள்

சட்ட சபைகளின் பொதுக் கூட்டங்களின் நடவடிக்கைகள் விரிவாகப் பத்திரிகைகளில் பிரசுரமாகின்றன. ஆதலால், எல்லா முக்கிய அலுவல்களும் அக் கூட்டங்களிலேயே நடைபெறுகின்றன என்று தோன்றக்கூடும். ஆனால், இது தவறு. மிகவும் சிக்கலான பிரச்சினைகளும் காரியங்களும் கமிட்டிகள்மூலமே கவனிக்கப்படுகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் காங்கிரசின் இரு சபைகளும் பெரும்பாலும் தங்கள் பணிகளைக் கமிட்டிகள்மூலமே ஆற்றுகின்றன என்று கூறலாம். பிரதிநிதி சபையிலும், செனேட்டிலும் தனித்தனியாக எல்லா இலாகாக்களுக்கும் நிலையான கமிட்டிகள் இருக்கின்றன. செனேட்டின் கமிட்டிகளாவன: 1. விவசாயமும் வனச் செல்வமும். 2. செலவினங்கள். 3. சைனியம். 4. பாங்கும் நாணயமும்; கொலம்பியா ஜில்லா. 5. பண விவகாரம். 6. அயல் நாட்டு நிதிகள். 7. அரசாங்க நிர்வாகம். 8. உள்நாட்டு விவகாரங்கள். 9. இராஜ்யங்களுக்கிடையிலும், வெளிநாடுகளுடனும் வியாபாரம். 10. நீதி நிர்வாகம். 11. தொழிலாளி, பொதுநலப் பிரச்சினைகள். 12. தபால், தந்தி, அரசாங்க சேவகம். 13. பொதுக் கட்டட வேலைகள். 14. சபையின் விதிகளும் நிர்வாகமும்.

பிரதிநிதி சபையில் இக் கமிட்டிகளும், மேலும் மூன்று கமிட்டிகளும் இருக்கின்றன. எந்த மசோதாவும் அதன் நோக்கத்தைச் சார்ந்த கமிட்டியிடம் அனுப்பப்படும். அக் கமிட்டி அதைத் தள்ளிவிடலாம். இல்லாவிட்டால் சாட்சிகளை விசாரித்து, அப்படியே அல்லது திருத்தங்களுடன் சபையின் விதி நிர்வாகக் கமிட்டிக்கு அனுப்பும், அக் கமிட்டியும் அங்கீகரித்து அதற்கு அவகாசம் அளித்த பின்னரே மசோதா சபையின் பொதுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

செலவினங்களும், வரி விகிதங்களும் இவ்வாறே முடிவு செய்யப்படுகின்றன. ஆதலால் அதற்குரிய கமிட்டியைத் தாண்டி விட்டால், அதிக விவாதமின்றி மசோதாக்களும், செலவினங்களும், வரி விகிதங்களும் பொதுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

இக் கமிட்டிகள் பல கிளைக் கமிட்டிகளாகப் பிரிந்து பணியாற்று கின்றன. வரவுசெலவுத் திட்டத்தை ஆராய்வது இவ்விதமே.

இக் கமிட்டிகளில் கட்சிகளின் வீதாசாரப்படி அவற்றின் அங்கத்தினர்களின் எண்ணிக்கைகளுமிருக்கும். ஆனால், தனக்குரிய அங்கத்தினர்களைக் கட்சிகள் தேர்தல்மூலமாக நியமிப்பதில்லை. வயதில் முதிர்ந்தவர்கள் தமக்கு எந்தக் கமிட்டி வேண்டுமென்று முதலில் தீர்மானம் செய்கின்றனர். மற்றவர்கள் இதர கமிட்டி களுக்கு நியமிக்கப்படுகின்றனர்.

ஒரு கமிட்டியின் தலைவராக அதில் உள்ள பெரும்பாலான கட்சியின் அங்கத்தினர்களில் வயதில் முதிர்ந்தவரே நியமிக்கப் படுகிறார். தேர்தல் கட்சிகளின் பலம் மாறி, சிறுபான்மையினர் பெரும்பான்மையினரானால் புதிய பெரும்பான்மைக் கட்சியின் முதிர்ந்த மெம்பர் தலைவராவார்.

பிரதிநிதி சபையில் அமெரிக்காவுக்குத் துரோகச் செயல்களைப் பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி இருக்கிறது. இதன் விசாரணைகள் உலகப் பிரசித்தி அடைந்திருக்கின்றன. அரசாங்க சேவகத்தில் இருக்கும் பெரிய உத்தியோகஸ்தர்களின் செயல்களையும், தொடர்பு களையும் இது தீவிரமாக விசாரிப்பதால் பொதுவுடைமைவாதிக ளுடனும், மற்றும் தீவிரவாதிகளோடுகூடச் சாதாரண உறவுகளைக் கொண்டாடக்கூட பயப்படுகின்றனர்.

இந்த நிலையான கமிட்டிகளைத் தவிர, அவ்வப்போது தனி பிரச்சினைகளை ஆராய்வதற்குப் பிரத்தியேகக் கமிட்டிகளும் நியமிக் கப்படுகின்றன. அவை தங்கள் வேலை முடிந்தவுடன் கலைந்து விடுகின்றன.

சாதாரணமாகக் காங்கிரசின் இரு சபைகளும் கூட்டுக் கமிட்டிகள் மூலமாக வேலை செய்வதில்லை. ஆனால், சில முக்கியமான பிரச்சினை களை அவற்றின்மூலமாகக் கவனிப்பது நலமென்று சமீப காலத்தில் எண்ணப்பட்டு வருகிறது. அணுசக்தி, பொருளாதாரப் போக்கு, வெளிநாடுகளிலிருந்து குடியிறக்கம் முதலியவைகளை ஆராய் வதற்குக் கூட்டுக் கமிட்டிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன.

பிரிட்டிஷ், பாரத பார்லிமெண்டுகளில் கமிட்டிகளுக்கு அமெரிக்காவைப்போல் முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை.

மந்திரி சபையே பார்லிமென்டில் தலைமை வகித்து நடத்துவதால் தமது அதிகாரங்களைக் கமிட்டிகளோடு பங்கீடு செய்ய விரும்புவதில்லை. திட்டங்கள் பக்குவமாகி அரசாங்கத்தின் உத்தேசங்கள் முடிவாக உருவாகும்வரையில் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளுக்கு அவற்றின் விவரங்களைத் தெரிவிக்க விரும்புவதில்லை. கமிட்டிகளில் பிரதிநிதித்துவ விகிதப்படி எதிர்க் கட்சியினருக்கு இடம் கொடுக்கவேண்டும். 1947-ல் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அதிகாரத்தைக் காங்கிரஸ் தலைவர்களிடம் ஒப்புவித்து, மத்திய சட்டசபையைத் தாற்காலிகப் பார்லிமென்டாக மாற்றினபொழுது எல்லா இலாகாக்களுக்கும் நிலையான கமிட்டிகள் இருந்தன, புதிதாக உருவாகும் திட்டங்களெல்லாம் முதலில் அக் கமிட்டிகளால் ஆலோசிக்கப்பட்டு அவற்றின் சிபாரிசுகளை அடிப்படையாகக்கொண்டே அரசாங்கம் மேல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்தது. இது பிரிட்டிஷ் சம்பிரதாயங்களுக்கு விரோதமென்று அக் கமிட்டிகள் கைவிடப்பட்டன. இது வருந்தத்தக்கதே. ஏனெனில், பிரிட்டனில் இரு கட்சிகள் வலுப்பெற்று மாறிமாறி ஆட்சிக்கு வருவதால் ஆளும் கட்சியின் திட்டங்களை உருவாக்குவதில் எதிர்க் கட்சிக்கு இடமில்லாமலிருப்பதால் பாதகமில்லை; எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்ததும் அத் திட்டங்களைப் புனராலோசனை செய்து திருத்தவும், மாற்றவும் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. இந் நாட்டிலோ, எதிர்க் கட்சிகள் வலுவின்றியும் பல ஆண்டுகளுக்கு ஒரே கட்சி ஆட்சி நடத்திவருவதாலும் திட்டங்களை உருவாக்கும் பொழுது அவைகளுக்குத் தங்கள் புத்திமதிகளைக் கூற அவகாசம் கொடுப்பதால் நாட்டிற்கு நலமாகும். ஒரு திட்டம் அரசாங்கத்தால் முடிவு செய்யப்பட்டுவிட்டால், அதை மாற்றுவது சாத்தியமில்லை. மந்திரிகள்மீது நம்பிக்கைப் பிரச்சினை கிளம்பிவிடும். அக் கமிட்டிகளை நீக்கியதால், எதிர்க் கட்சிகளுக்குமட்டும் நஷ்டமில்லை. பதவி வகிக்காத காங்கிரஸ் மெம்பர்களுக்கும் சேவைக்குரிய வசதிகள் குறைந்துபோய்விட்டன. கமிட்டிகளில் பெரும்பாலோர் அவர்களேயாதலின் அவர்களுக்குண்டான நஷ்டம் அதிகமென்றே கூறலாம். தங்கள் கட்சிக் கூட்டங்களிலோ, மந்திரிகளிடம் நேர்முகமாகவோ அவர்கள் தங்கள் ஆலோசனைகளைத் தெரிவிக்கலாமென்று விவாதிக்கப்படுகிறது. நடைமுறையில் இது பிரயோசனமில்லை. ஒரு கமிட்டி முன் வைக்கப்பட்டாலொழிய திட்டத்தின் விவரங்களும், உருவாகும்பொழுது இலாகாக்களில் அவற்றைப் பற்றிய ஆட்சேப சமாதானங்களும் ஆளும் கட்சி மெம்பர்களுக்குக் கூடக் கிடைப்பதில்லை.

பிரிட்டிஷ் சம்பிரதாயத்தில் இரண்டு முக்கிய கமிட்டிகளிருக்கின்றன. பொதுக் கணக்குப் பரிசோதகக் கமிட்டி ஒன்று.

ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும், பொதுத் தணிக்கை அதிகாரி அரசாங்கத்தின் வரவு செலவுகளை ஆராய்ந்து, தவருகவோ வீணுகவோ செலவு செய்யப்பட்ட இனங்களைக் குறிப்பிட்டு அறிக்கை பார்லிமென்டுக்கு சமர்ப்பிக்கின்ருர். அந்த அறிக்கையில் கண்ட இனங்களைப்பற்றி இக் கமிட்டி இலாகா அதிகாரிகளை விசாரித்துத் தமது முடிவுகளையும் சிபாரிசுகளையும் பார்லிமென்டுக்குச் சமர்ப்பிக்கிறது. அதன்பேரில் மக்கள்சபையின் பொதுக் கூட்டத்தில் விவாதிக்கலாம்.

பிரிட்டனில் இக் கமிட்டி மக்கள் சபை அங்கத்தினர்களைக் கொண்டே அமைக்கப்படுகிறது. சாதாரணமாக 15 மெம்பர்கள், எதிர்க் கட்சி அங்கத்தினரே தலைவராக இருக்கவேண்டுமென்ற வழக்கமிருக்கிறது.

இந்தியாவில் பொதுக் கணக்குக் கமிட்டிக்கு லோக சபையிலிருந்து 15 மெம்பர்களும் இராச்சிய சபையிலிருந்து 7 மெம்பர்களுமிருக்கின்றனர். இது லோக சபையின் கமிட்டி என்றே கூற வேண்டும். இராச்சிய சபையின் ஒத்துழைப்பை வேண்டி அதற்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது மதிப்பீடு கமிட்டி. இதன் வேலை அரசாங்க இலாகாக்களுக்குக் கொடுக்கப்படும் மானியங்கள் எவ்விதம் மதிப்பிடப்படுகின்றன, எவ்வளவு சேவகர்கள் இருக்கின்றனர், இலாகாக்களின் நடைமுறைகள் வீண் செலவுகளுக்கிடமில்லாமல், சிக்கனத்தை நாடியிருக்கின்றனவா என்பவைகளைப்பற்றி ஆராய்வது. இரண்டு நாடுகளிலும் இது மக்கள் சபை, லோக சபைகளின் பிரதிநிதிகள் கொண்டது. அதன் யாதாஸ்துகள் பார்லிமென்டுக்குச் சமர்ப்பிக்கப்படும். பார்லிமென்டின் மெம்பர்களுக்கு நிர்வாகத்தைப் பற்றி விளக்க இவ் வறிக்கைகள் மிகவும் உபயோகமுள்ளவை. எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கு அரசாங்கத்தைக் குறைகூறவும், கண்டிக்கவும் அவை நன்கு பயன்படுகின்றன.

கமிட்டிகளைப்பற்றி பிரிட்டிஷ் பாரத பழக்கங்களில் இரண்டு முக்கிய வேற்றுமைகளுண்டு. சிக்கலான சட்டங்களைப்பற்றி ஆராய லோக சபை, இராச்சிய சபை இரண்டின் மெம்பர்களடங்கிய பிரத்தியேகக் கூட்டுக் கமிட்டிகளை நியமிப்பது வழக்கம். இதனுல் பின்னர் இரண்டு சபைகளுக்கும் நடுவில் முரண்பாடுகளும், அதனுல் ஏற்படும் காலதாமதமும் விலக்கப்படுகின்றன. பிரிட்டிஷ் பார்லிமென்டால் இம்மாதிரிக் கூட்டுக் கமிட்டிகள் சாதாரணமாக அமைக்கப்படுவதில்லை. மக்கள் சபையின் மெம்பர்களைக்கொண்டே பிரத்தியேகக் கமிட்டிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

செலவினங்களை அனுமதிப்பதற்கும், வரி விகிதங்களை ஆராய்வதற்கும், பிரிட்டிஷ் மக்கள் சபை தன்னையே ஒரு கமிட்டியாக மாற்றிக்கொள்ளுகின்றது. அந்த வழக்கம் இந்தியாவிலில்லை.

சட்டசபைகளின் சொந்த நிர்வாகத்திற்காகப் பல கமிட்டிகள் நியமிக்கப்படுகின்றன. உதாரணமாக, லோக சபையில் பின்வரும் கமிட்டிகள் ஆண்டுதோறும் தலைவரால் நியமிக்கப்படுகின்றன.

1. பதவியில்லாத மெம்பர்களின் மசோதாக்கள், தீர்மானங்கள் கமிட்டி, 15 அங்கத்தினர்கள் ;

2. பொதுமக்களின் விண்ணப்பக் கமிட்டி, 15 அங்கத்தினர்களுக்குக் குறையாமல் ;

3. சிறப்புரிமைக் கமிட்டி, 15 அங்கத்தினர்களுக்குக் குறையாமல்;

4. சட்டங்களின் உப விதிப் பரிசீலனைக் கமிட்டி, 15 மெம்பர்களுக்குக் குறையாமல் ;

5. அரசாங்க வாக்குறுதிகள் கமிட்டி, 15 மெம்பர்களுக்கு மேற்படாமல் ;

6. கூட்டத்திற்கு வராத மெம்பர்களைப்பற்றிய கமிட்டி, 15 மெம்பர்கள் ;

7. நியமங்கள் கமிட்டி ; சபையின் நியமங்களைப்பற்றிப் பரிசீலனை செய்து மாறுதல்களுக்குச் சிபாரிசு செய்வது இதன் பணி. சபைத் தலைவரே இதற்கும் தலைமை வகிப்பார்.

8. தினசரி அலுவல் பட்டியல் சிபாரிசுக் கமிட்டி, 15 மெம்பர்களுக்கு மேற்படாமல். சபைத் தலைவரே தலைமை வகிப்பார். அன்றாடம் அலுவல் பட்டியலில் சேர்க்கவேண்டியவைகளைப்பற்றியும், கால விநியோகங்களைப்பற்றியும் தலைவருக்கு ஆலோசனை கூறுவது இதன் வேலை.

இம் மாதிரி கமிட்டிகள் இராஜ்ய சபையிலுமிருக்கின்றன. பிரிட்டிஷ் பார்லிமெண்டின் சபைகளிலுமுண்டு.

இவ்வித உள் நிர்வாகக் கமிட்டிகளுக்கு அங்கத்தினர்கள் தலைவராலேயே நியமிக்கப்படுகின்றனர். ஆனால், பொதுக் கணக்குக் கமிட்டி, மதிப்பீட்டுக் கமிட்டி, சட்டங்களைப் பரிசோதிக்கும் கூட்டுக் கமிட்டிகள் போன்ற பொதுக் காரியக் கமிட்டிகள் தேர்தல் மூலம் அமைக்கப்படுகின்றன. மாற்று விகிதத் தனி வாக்குமுறை அனுசரிக்கப்படுகிறது.

சமீப காலத்தில், அரசாங்கத்தைச் சேர்ந்த தொழிற்சாலைகள், பாங்குகள், வியாபார நிலையங்கள் முதலிய பொருளாதார ஸ்தாபனங்களைப் பரிசீலனை செய்ய லோகசபை, இராஜ்ய சபை இரண்டையும் சேர்ந்த அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு கூட்டுக் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரிக் கமிட்டிகளில் லோக சபைக்கு மூன்றில் இரண்டு பங்கும் இராஜ்ய சபைக்கு ஒரு பங்கும் பிரதிநிதித்துவமளிக்கப்படுகிறது. வருங்காலத்தில் பார்லிமென்ட் மக்களின் நலத்தை நாடி, பயனற்ற திட்டங்களுக்குத் தடையாக இருக்க வேண்டுமாயின் கமிட்டிகளை ஏற்படுத்தியும், அவற்றின் செல்வாக்கைப் பெருக்கியுமே சாதிக்கவேண்டும்.

கமிட்டிகளில் திறம்படப் பணியாற்றுவது சுலபமன்று. பொருளாதார அறிவு வேண்டும். தமது கட்சித் தலைவர்களின் பட்சபாதங்களைப் பொருட்படுத்தாமல் நாட்டின் நலத்தையே நாடும் சுதந்திர புத்தியும் தைரியமும் வேண்டும். சட்டசபையின் பொதுக்கூட்டங்களில் கட்சிக் கட்டுப்பாடு ஓரளவு தவிர்க்க முடியாது. அரசாங்கத்திற்குத் தோல்வியுண்டாக்கி மந்திரி சபை இராஜினுமா செய்யும் நிலைமையை உண்டாக்குவது எதிர்க்கட்சிகளுக்கே தகும். ஆனுல், கமிட்டிகளில் கட்சி நோக்கின்றி ஆலோசனை கூறுவதால் எவ்விதத் தீங்கு மேற்படாது. கமிட்டிகளின் சிபாரிசுகள் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தமாட்டா. தகுந்த காரணங்களைக் கூறி சிபார்சுகளை நிராகரிக்கலாம் அல்லது ஓரளவே ஏற்கலாம். ஆனுல், இலாகாக் காரியதரிசிகளும், பொறுப்புள்ள மந்திரிகளும் அந்தச் சிபாரிசுகளைப்பற்றிப் பன்முறை நன்கு ஆலோசித்தபின்னரே அவற்றை அனுசரிக்காமலிருக்க முடிவு செய்யவேண்டிவரும். இதுவே பெரிய காரிமாகும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின்கீழ் இந்திய மத்திய சபையில் 1937-லிருந்து 1942 வரையில் நான் அங்கம் வகித்தேன். பொதுக் கூட்டங்களில் சர்க்காருக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் ஓயாமல் எதிர்ப்பும் மோதலுமே. ஆயினும், கமிட்டிக் கூட்டங்களில் பிரிட்டிஷ் அதிகாரிகள் காங்கிரஸ் அங்கத்தினர்களின் ஆலோசனைகளை நன்கு கவனித்துப் பலவற்றை ஏற்றுக்கொள்வது வழக்கம். இரயில்வே நிதிக் கமிட்டியில் நான் மெம்பராக இருந்தபொழுது அதன் எல்லாக் கூட்டங்களிலும் எனது யோசனைகளைத் தலைமை வகிக்கும் இரயில்வே நிதி அதிகாரி எப்பொழுதும் நன்கு கவனித்து விவாதிப்பதுண்டு. மற்றக் கமிட்டிகளிலும் காங்கிரஸ் மெம்பர்களின் அனுபவமும் இப்படியே. பதவியில்லாத காங்கிரஸ் மெம்பர்களுக்குப் பார்லிமென்டில் இப்பொழுது அந்தச் செல்வாக்குக் கூட இல்லாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

# 12. சட்டமன்றங்களின் இதர பணிகள்

சட்டமியற்றுதல், வரவுசெலவுகளையும் வரிவிகிதங்களையும் நிர்ணயித்தல் ஆகிய இரண்டு அவசிய அலுவல்களுடன் சட்ட மன்றங்கள் வேறிரண்டு முக்கியப் பணிகளும் ஆற்றவேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் நீதிமுறைகளையும், நிர்வாக நேர்மையையும் பற்றி விவாதம் செய்வதன்மூலம் பொதுமக்களின் அரசியலறிவைப் பெருக்கி மக்கள் ஆட்சியை வலுப்படுத்த வேண்டும். மக்களின் குறைகளை எடுத்துக் கூறுவதற்கும் அவைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்கும் சட்ட மன்றங்கள் சாதனமாக இருத்தல் அவசியமாகும்.

இவ்விரண்டு பணிகளும் பிரிட்டிஷ் பாரத அரசியல்களில் நேர்முகமாகச் சட்டமன்றங்களில் நன்கு ஆற்றப்படுகின்றன. அமெரிக்க அரசியலில் நிர்வாகமும் சட்டமன்றமும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு கடமைகளுக்குப் பொறுப்பாக்கப்பட்டிருப்பதால், இப் பணிகள் வேறு விதங்களில் செய்யப்படுகின்றன.

மந்திரி சபை பார்லிமென்டின் அங்கமாக இருந்துகொண்டு அதற்குத் தலைமை வகிப்பதால், எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் அரசாங்கத்தின் முறைகளையும், செயல்களையும் விவாதிப்பதற்குப் பல அவகாசங்கள் கிடைக்கின்றன. சட்டங்கள் இயற்றும் பொழுதும், வரவு செலவு திட்டங்கள்மீது விவாதம் நடைபெறும் பொழுதும் எதிர்க் கட்சியினர் மட்டுமல்லாமல் ஆளும் கட்சியில் பதவியிலில்லாத மெம்பர்களும் நீதிகளில் உள்ள தவறுகளையும், மக்கள் குறைகளையும், நிர்வாகத்தின் போக்குகளையும்பற்றி விவாதிக்கின்றனர்,

இதைத் தவிர, இப் பணிகளுக்காக நான்கு வழிகளுண்டு. சாதாரணமாக வாரத்தில்முதல் நான்கு நாட்களிலும் சட்டசபை கூடும்பொழுது முதல் ஒரு மணி நேரம் கேள்விகளுக்காக ஒதுக்கி வைக்கப்படுகின்றது. சட்டசபை கூடுவதற்குப் பல வாரங்கள் முன்னதாகவே கேள்விகள் கேட்கக்கூடிய தினங்களின் பட்டியல்

மெம்பர்களுக்கு அனுப்பப்படும். ஒவ்வொரு மெம்பரும் ஒரு தினத் தன்று மூன்று கேள்விகள் கேட்கலாம். சட்டசபை நியமங்களுக்கு முரண்பாடில்லாத கேள்விகளைத் தேதிவாரியாக அச்சடித்து அத் தேதிக்கு மூன்று நாட்கள் முந்தியே மெம்பர்களுக்கு அனுப்புவார் கள். குறிப்பிட்ட தினத்தில் அந்தக் கேள்விப் பட்டியலில் கண்ட வரிசையாக அங்கத்தினர்கள் கேள்விகளைக் கேட்பார்கள். அதற் குப் பொறுப்புள்ள மந்திரியோ துணை அல்லது உதவி மந்திரியோ அரசாங்கத்தின் சார்பில் பதிலளிப்பார். அந்தப் பதில்மீது தலைவரின் அனுமதியின்பேரில் கேள்வி கேட்ட அங்கத்தினரும், மற்ற மெம்பர் களும் கிளைக்கேள்விகளை வினவலாம்.

ஒரு கேள்வி மிகவும் முக்கியமான பிரச்சினையை எழுப்பி அதற்கு அரசாங்கத்தின் பதில் திருப்திகரமாகவில்லாவிட்டால், அதன்மீது தின அலுவல்கள் முடிந்தபின் அரைமணி நேரம் விவாதம் நடை பெறத் தலைவர் உத்தரவிடலாம்.

அவசியமான விவரங்களை அறிவதற்கும், நிர்வாகத்தின் ஊழல் களை விளம்பரம் செய்து திருத்துவதற்கும் கேள்விகள் மிகவும் நல்ல சாதனமாகவிருக்கின்றன. பிரிட்டிஷ் மக்கள் சபையிலும், நமது லோக, இராஜ்ய சபைகளிலும் கேள்வி நேரத்திலேதான் அதிக மெம்பர்கள் கூடுகின்றனர். கேள்விகள் முடிந்ததும் அடுத்த அலுவலில் கவர்ச்சி உள்ளவர்களைத் தவிர மற்றவர்கள் வெளியே போய் பேசிக்கொண்டும், பானங்கள் அருந்திக்கொண்டுமிருப் பார்கள்.

நாட்டில் ஏதாவது கொடிய சம்பவமோ, நெருக்கடியோ ஏற் பட்டால் அதைப்பற்றி விவாதிக்கக் கூட்டத்தை ஒத்திப்போடும்படி ஒரு பிரேரேபணை கொண்டுவரலாம். தலைவர் அதன் அவசியத்தை ஏற்றுக்கொண்டால் பொறுப்புள்ள மந்திரியின் சௌகரியத்தைக் கேட்பார். பிரேரேபணை சம்பவத்தைப்பற்றிப் போதிய தகவல் கிடைக்கவில்லையென்றால் அதை ஒன்றிரண்டு தினங்களுக்கு ஒத்தி வைப்பார். அரசாங்கம் விவாதிக்கத் தயாராகவிருந்தால், சபை யின் விருப்பத்தை வினவுவார். லோக சபையில் 50 மெம்பர்கள் பிரேரேபணையை ஆதரித்தால் அதற்குக் காலம் குறிப்பிடுவார். சாதாரணமாக இரண்டு மணி நேரம் விவாதம் நடைபெறும். ஒவ்வோர் அங்கத்தினரும் குறிப்பிட்ட நிமிஷங்களுக்குத்தான் பேசலாம்.

இதுவும் முக்கிய சம்பவங்களைப்பற்றி அரசாங்கம் தீவிர நட வடிக்கை எடுக்கத் தூண்டுவதற்கு நல்ல வழியே. ஆனால், நமது

மத்திய சட்ட சபைகளில் தினந்தோறும் பல ஒத்திவைப்புப் பிரேரபணைகள் கொண்டுவரப்படுகின்றன. சிறிய சம்பவங்களைப் பற்றிச் சிலர் அனுவசியமாக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இதனுல் பல பிரேரபணைகளைத் தலைவர் நிராகரிக்கவேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ் மக்கள் சபையில் இவை அபூர்வமாக இருப்பதால் அதற்கு மகத்துவமும் அதிகமாகவிருக்கிறது.

தனது நீதிகளுக்குச் சட்டசபையின் ஆதரவைப் பெறுதற்கு அரசாங்கமே தீர்மானம் கொண்டுவருவதுண்டு. எதிர்க்கட்சியினர் கூறும் வாதங்களுக்குச் சரியான சமாதானங்கள் கூறுவதற்கு இது நல்ல வசதியளிக்கிறது. இந்த விவாதங்கள் பத்திரிகைகளில் விவரமாகப் பிரசுரிக்கப்படுவதால் பொது மக்களிடம் தப்பெண்ணங்கள் பரவவிடாமல் தடுப்பதற்கு இம் முறையை மந்திரிகள் கையாளுகின்றனர்.

பதவியில்லாத மெம்பர்கள் தீர்மானங்கள் பிரேரேபிப்பதற்கு வாரத்தில் ஒரு நாள் சிலமணி நேரம் ஒத்திவைக்கப்படுகிறது.

இவ்விதம் பிரிட்டனிலும் பாரதத்திலும் சட்டசபைகள் ஓயாமல் பொதுஜன அபிப்பிராயங்களையும் குறைகளையும் பறைசாற்றும் அரங்கங்களாக இருக்கின்றன. அவற்றில் நடைபெறும் விவாதங்கள் ருசிகரமாயிருப்பதால், சட்டசபைகள் கூடும் காலங்களில் பத்திரிகைகளில் கணிசமான பாகம் மெம்பர்களின் சொற்பொழிவுகளுக்கும் மந்திரிகளின் விளக்கங்களுக்கும் அளிக்கப்படுகிறது.

இது ஒரு விதத்தில் மக்கள் ஆட்சிக்கு அவசியம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. தமது பிரதிநிதிகள் நாட்டின் நிலைமையை நன்கு உணர்கின்றனரா—அதை அரசாங்கத்திற்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றனரா என்பதைப் பொதுமக்கள் அறிவதற்கு நல்ல சாதகமாகும். மந்திரிகளையும், நிர்வாகத்தையும் நன்கு பணிபுரியத் தூண்டவும், தவறுகளுக்கு எச்சரிக்கவும் உதவுகின்றது. ஆனுல், சிக்கலான சட்டங்களுக்கும் நாசூக்கான பிரச்சினைகளுக்கும் கொடுக்கவேண்டிய காலத்தையும் கவனத்தையும் மிதமிஞ்சி வீண் விவாதத்திலும் கட்சிப் போட்டியிலும் செலவழித்துச் சட்டசபையை ஒரு சாதாரணப் பொதுக்கூட்டமாக மாற்றிவிடுவதால் நாட்டின் நலம் பாதிக்கப்படுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் செனேட், பிரதிநிதி சபைகளின் போக்கு வேறுவிதம். அங்கு நிர்வாகத்திற்கும் சட்டமன்றத்திற்கும் அதிகாரப் பிரிவினை ஏற்பட்டிருப்பதால் ஒன்று மற்றொன்

றின் அலுவல்களில் அதிகம் குறுக்கிடக்கூடாது. ஆதலால் நிர்வாகத்தின் செயல்களைப்பற்றிக் கேள்விகளோ, ஒத்திப்போடும் பிரேரேபணைகளோ, தீர்மானங்களோ சபைகளில் இல்லை. சட்டங்களைப்பற்றியும் வரவு செலவு வரி விகிதங்களைப்பற்றியுமே முழு கவனம் செலுத்தப்படுகிறது. அவற்றின் விவாதங்களில் பொது மக்களின் குறைகளைப்பற்றி மெம்பர்கள் குறிப்பிடலாம். அவைகளுக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சமாதானம் கூறினாலும், அது அரசாங்கத்தினர் சார்பில் இருக்கமுடியாது; தனி மெம்பரின் வாதமாயிருக்கும். சாதாரணமாக, ஆளும் கட்சி மெம்பர்களும் அரசாங்கத்தைக் கண்டிப்பதற்குத் தயங்குவதில்லை.

ஆனால், மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு அங்கு வேறு முறைகள் கையாளப்படுகின்றன. ஒவ்வொரு பிரதிநிதியும், செனேட் மெம்பரும் தமது தொகுதியிலுள்ள மக்களின் குறைகளை நிர்வாகத்திடம் தெரிவித்து, சாத்தியமானவரையில் அவைகளுக்குப் பரிகாரம் தேடுவது தமது கடமை என்று நினைக்கிறார். நிர்வாகமும் அந்த மெம்பர்களின் வேண்டுகோள்களை மிகவும் அனுதாபத்துடன் கவனிக்கிறது. இல்லையேல் சம்பந்தப்பட்ட இலாகாவின் மானியங்களைக் குறைத்துவிடக்கூடும் என்ற பயமிருக்கிறது. சட்ட சபைகள் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இல்லாமலிருப்பது சில சமயங்களில் முரண்பாடுகளுக்கு இடமளித்தபோதிலும், இரண்டும் சுதந்திரமாகவும், பரஸ்பர மரியாதையுடனும் நடந்துகொள்ளுவது சாத்தியமாகிறது.

சிறிய குறைகளை மெம்பர்கள் நேரடியாகத் தீர்த்துவைக்க முயலுவதோடு, பெருங் குறைகளைப்பற்றிக் கமிட்டிகள் நியமித்து விசாரிப்பது வழக்கமாகவிருக்கிறது. அந்த விசாரணைக் குழுக்களுக்கு எவ்விதத் தடையும் நிர்வாகத்தால் செய்யமுடியாது. ஜனாதிபதியைத் தவிர எந்த நிர்வாகியும் அவ்விதக் கமிட்டியின் முன்பு வந்து வாக்குமூலம் கொடுக்கவேண்டும். குறுக்கு விசாரணைக்குப் பதில் சொல்லவேண்டும்.

முடிவில், ஜனாதிபதி, உத்தம நீதிபதிகள், சைனியத் தலைவர்கள் முதலானோரைப் பிரதிநிதி சபையில் பெருங் குற்றச் சாட்டுத் தீர்மானம் செய்யப்பட்டு செனேட்டில் அது அங்கீகரிக்கப் பட்டால் பதவியிலிருந்து நீக்கலாம். இதுவரையில் ஒன்பது நீதிபதிகள், இரு நிர்வாகிகள், ஒரு ஜனாதிபதி ஆகியோர்மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, நான்கு நீதிபதிகள் விலக்கப்பட்டனர்.

அமெரிக்கக் காங்கிரஸ் சபைகளின் கூட்டங்கள் பிரிட்டிஷ் பாரத பார்லிமென்டுகளின் கூட்டங்களைப்போல் ருசிகரமாகவும், சொல்

வன்மை மிகுந்ததாகவும் இல்லாதபோதிலும், பொதுமக்களின் செல் வாக்கில் காங்கிரசின் அங்கத்தினர்களுக்குச் சிறிதும் குறைவில்லை. செனேட் மெம்பர் என்ருல் ஜனுதிபதிக்கு அடுத்தாற்போல் பெருமை யான பதவியாகும். ஆறு வருஷம் தொடர்ந்து பதவி வகிப்ப தோடு, உயர்தர நிர்வாகிகளை நியமிப்பதற்கு ஜனுதிபதி செனேட் சபையின் சம்மதம் பெறவேண்டியிருப்பதால், அதன் மெம்பர்கள் அதிக செல்வாக்குப் பெற்றிருப்பதில் ஆச்சரியமில்லை. மக்கள் பிரதிநிதி சபையின் அங்கத்தினர்களுக்குச் சற்றுக் குறைவான செல்வாக்காக இருப்பினும், அவர்களுக்கும் பாரதத்திலும் பிரிட்ட னிலும், பார்லிமென்ட் மெம்பர்களைக்காட்டிலும் அதிக மரியாதை கொடுக்கப்படுகின்றது.

## 13. இரு நிர்வாக முறைகள்

அரசியலின் மற்ற அங்கங்கள் முக்கியமாகவிருப்பினும், பொது மக்களுடன் தினசரித் தொடர்புள்ளது அதன் நிர்வாகமே. நிர்வாகம் திறமையாகவும் நேர்மையாகவுமிருந்தால் நாட்டின் நலம் பெருகும். மக்களுடன் மரியாதையுடனும் சினேகபாவத்துடனும் அரசாங்க சேவகர்கள் நடந்துகொண்டால், ஜனங்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். இதற்கு மாறாக அதிகாரிகள் கடுமையாகவும், லஞ்சம் வாங்குவோர்களாகவும், தமது கடமைகளைப் புரிவதில் அலட்சியமாகவுமிருந்தால் சட்டங்களும் நீதிகளும் எவ்வளவு நேர்மையாக இருப்பினும் மக்கள் துன்புறுவர்.

இக் காலத்தில் அரசாங்கங்களில் லட்சக்கணக்கான நிர்வாகிகள் இருக்கின்றனர். அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் சைனியப் பகுதியில் 35 இலட்சமும், இதர வேலைகளில் 25 இலட்சமும் சேவகர்கள் இருக்கின்றனர். இருவகையிலும் பிரிட்டனில் 20 இலட்சமும், பாரத மத்திய அரசாங்கத்தின்கீழ் 40 இலட்சமும் சேவகர்களிருக்கின்றனர்.

இவர்கள் படிப்படியாகப் பணியின் பொறுப்புகளையொட்டி மேலும் கீழுமாக அணிவகுக்கப்பட்டிருக்கின்றனர். படியை அனுசரித்துச் சம்பள விகிதங்களும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இந்தக் கூட்டங்களின் திறமையும் நேர்மையும் உச்சியில் இருக்கும் நிர்வாகிகளைப் பொறுத்திருக்கும். ஆதலால், தலைமை நிர்வாகம் நன்கமைந்திருப்பது நல்ல அரசியலுக்கு இன்றியமையாதது.

மக்கள் ஆட்சிகளில் தலைமை நிர்வாகம் பல முறைகளில் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஆனால், கொள்கையளவில் இரண்டு முறைகளே அடிப்படையானவை. மற்ற முறைகள் இவ்விரண்டிற்கும் நடுவிலுள்ளவைகளே.

ஒரு முறை பிரிட்டிஷ் பொறுப்பாட்சியெனப்படும்; இரண்டாவது அமெரிக்க ஜனாதிபதி அல்லது பிரசிடென்ட் ஆட்சி, இவ்

இரண்டின் வேற்றுமைகளையும், மேம்பாடு குறைபாடுகளையும் நன்குணர்வது மக்கள் ஆட்சியின் தன்மையை அறிவதற்கு அவசியமாகும்.

பிரிட்டிஷ் பொறுப்பாட்சியில் பொதுமக்களிடமிருந்து அதிகாரம் பார்லிமென்டுக்கும், பார்லிமென்டிடமிருந்து நிர்வாகத்திற்கும் ஒரே சங்கிலித் தொடரில் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், நிர்வாகம் பார்லிமென்டுக்குக் கீழ்ப்பட்டும், பார்லிமென்ட் பொது மக்களின் வாக்குக்குட்பட்டுமிருக்கின்றது.

பிரசிடென்ட் ஆட்சியிலோ சட்டமன்றம், நிர்வாகம் இரண்டும் நேரில் பொதுமக்களிடமிருந்து தமது அதிகாரங்களைப் பெறுகின்றன. தேர்தல் நடைபெற்று நான்கு வருஷங்களுக்கு நிர்வாகம் நிலைபெற்று வழங்கும். ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், பிரதிநிதி சபை, செனேட்டுகளில் எதிர்க்கட்சி பெரும்பான்மையாகவுமிருத்தல் சாத்தியமாகும். ஆதலால், இரு கட்சிகளும் ஒத்து, நாட்டின் அரசாங்கத்தை நடத்தவேண்டுமென்ற மனோபாவம் பரவியிருக்கிறது. தேர்தல் காலங்களில் கட்சிகள் தீவிரமாக எதிர்த்து வாதாடினாலும், தேர்தலுக்குப்பின் சட்டசபைகளுக்குள் கட்டுப்பாடுகள் குறைந்து எப் பிரச்சினையையும் தமது மனச்சாட்சிக்கு ஏற்றவாறு சிந்திக்க அவற்றின் மெம்பர்கள் முயலுகின்றனர். நிர்வாகத்திலும் ஜனாதிபதி எதிர்க் கட்சியில் திறமையானவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதுண்டு.

பிரிட்டிஷ் பொறுப்பாட்சியில் கட்சிக் கட்டுப்பாடுகள் அதிகம். பெரும்பான்மைக் கட்சியின் தலைவரையே மன்னர் பிரதம மந்திரியாக நியமிக்கவேண்டும். மற்ற மந்திரிகளைப் பிரதமரே பொறுக்கியெடுப்பார். ஆனால், தனது கட்சியில் முக்கியமானவர்களையும் செல்வாக்குள்ளவர்களையும் சேர்த்துக்கொள்வது அவசியம். இல்லாவிட்டால் கட்சிக் கட்டுப்பாடு குலைந்து மந்திரி சபை கவிழ்ந்துவிடக் கூடும்.

ஆதலால், பிரிட்டிஷ் பொறுப்பாட்சியில் தலைமை நிர்வாகம் அரசியல்வாதிகளைக் கொண்டே அமைக்கப்படுகிறது. அவர்களனைவரும் நிர்வாக அனுபவமுள்ளவர்களாகவோ, திறமை உள்ளவர்களாகவோ இருக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. கட்சியிலும் பொதுமக்களிடமும் செல்வாக்கிருப்பதே முக்கியமாகும்.

அமெரிக்க பிரசிடென்டுக்கு அதிக அதிகாரமா, பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு அதிகமா என்ற கேள்வி மிகவும் ருசிகரமானது.

வெளித் தோற்றத்திற்கு அமெரிக்க ஜனுதிபதிக்கே அதிகமென்று தோன்றலாம். வெளி உலகுக்கு அவரே தமது நாட்டின் தனிப் பிரதிநிதியாக விளங்குகிருர். பிரிட்டன், பாரதங்களில் அந்த கௌரவம் மன்னருக்கும் ஜனுதிபதிக்கும் சேருகிறது. பிரசிடென்டின் நிர்வாக சபையிலுள்ளவர்கள் அவரால் நியமிக்கப்பட்டு அவருக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள். பொறுப்பாட்சியில் மந்திரி சபையிலுள்ள மந்திரிகள் பிரதமருக்குச் சமமான சகாக்கள். நான்கு வருடங்களுக்குப் பிரசிடென்டின் பதவி நிச்சயம். மந்திரி சபை திடீரென்று கவிழ்ந்துவிடலாம்.

இவையெல்லாம் உண்மையே. ஆனுல், நல்ல பெரும்பான்மையுள்ள, கட்டுப்பாடுள்ள கட்சியின் ஆதரவுள்ள மந்திரி சபையின் தலைவரான பிரதம மந்திரிக்கு அமெரிக்க பிரசிடென்டைக் காட்டிலும் பல விதங்களில் அதிக அதிகாரமுண்டு. பிரசிடென்ட் தமக்கு அவசியமென்று தோன்றிய சட்டங்களை எளிதில் செய்துவிடமுடியாது. பிரதிநிதி சபையிலும் செனேட்டிலும் சிரமப்பட்டு, தாமதமாகத்தான் செய்யமுடியும். பிரிட்டிஷ் பிரதம மந்திரி தமது கட்சி பலத்தைக் கொண்டு ஒரு நாட்டின்மீது போர் தொடரலாம்; சமாதானம் செய்துவிடலாம். பிரசிடென்ட் அவ்விதம் செய்ய முடியாது. முதல் உலக யுத்தத்தின்பொழுது பிரசிடென்ட் வில்சன் சீக்கிரமாகவே நேசநாடுகளுடன் சேரவேண்டுமென்று விரும்பியபோதிலும், காங்கிரசில் தமக்கு ஆதரவு கிடைக்கும் வரையில் காத்திருக்கவேண்டியிருந்தது. தமது சமாதானக் கோரிக்கைகளை செனேட் நிராகரித்ததால் மனமுடைந்து இறந்து போனுர்.

இரண்டாவது யுத்த காலத்திலும், ரூஸ்வெல்ட் மூன்று வருஷம் காத்திருந்து ஜப்பான் அமெரிக்காமீது ஆக்கிரமித்த பின்னரே யுத்தத்தில் புகுந்தார்.

பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியப் பிரதமராக இருந்தபொழுது, அவருக்கு இந் நாட்டில் இருந்த அதிகாரமும் செல்வாக்கும் எந்த அமெரிக்கப் பிரசிடென்டுக்குமில்லை என்பது மிகையல்ல.

பிரிட்டிஷ் நிர்வாகமுறைக்குச் சில உறுதியான சம்பிரதாயங்களுண்டு. மந்திரி சபை கூட்டாகப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அதாவது பார்லிமென்டிலோ, வெளியிலோ எம் மந்திரியும் அரசாங்கத்தின் ஒரு கொள்கையோ, திட்டமோ தமது அபிப்பிராயத்திற்கு விரோதமென்ருே, அதனுல் விளையும் பலாபலன்

களுக்குத் தான் பொறுப்பாளியல்ல என்றே வாதிக்கக்கூடாது. மந்திரி சபைக் கூட்டத்தில் அதற்கு எதிராகப் பேசினாலும், சபையின் முடிவை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு அதை ஆதரிக்கவேண்டும்.

மக்கள்சபையில் ஒரு முக்கியச் சட்டமோ, வரவு செலவினமோ, வரி விகிதமோ நிராகரிக்கப்பட்டால் மந்திரி சபை முழுதும் இராஜிநாமாச் செய்யவேண்டும். சபையின் சார்பாகப் பிரதம மந்திரி இராஜிநாமா செய்தால் போதும்.

பிரதம மந்திரி விரும்பினால் மற்ற மந்திரிகள் எவரும் பிடிவாதம் செய்யாமல் தமது பதவியை இராஜிநாமாச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவரை சபையிலிருந்து விலக்கி உத்தர விட மன்னரிடம் பிரதமர் சிபாரிசு செய்வார். ஆனால், சமீப காலங் களில் அவ்விதச் சிபாரிசு செய்ய அவசியம் நேரிட்டதில்லை.

மந்திரி சபையில் மூன்றுதரப்பட்ட மந்திரிகள் இருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் சேர்ந்து காபினெட் என்று அழைக் கப்படுகின்றனர். அவர்களை எல்லா முக்கியக் காரியங்களையும் விவாதித்து முடிவு செய்வார்கள். காபினெட் கூட்டத்தில் நடை பெறும் விவாதங்கள் இரகசியமானவை. எவரும் அதை வெளியிடக் கூடாது. காபினெட்டின் காரியதரிசி வாதங்களின் சாரமான அம்சங்களுக்கும் முடிவுகளுக்கும் தம் கைப்படக் குறிப்பு வைத்துக் கொண்டு, கூட்டம் முடிந்தபின் அவைகளுக்கு நகல் எடுத்து காபினெட் மந்திரிகளுக்கும், முடிவுகளுக்குச் சம்பந்தமான இதர மந்திரிகளுக்கும் அனுப்புவார்.

சாதாரணமாக, பிரிட்டிஷ் காபினெட்டில் 20 மந்திரிகள் இருப்பார்கள். அவர்களது பெயர்களும் சரித்திரபூர்வமாக வந்திருப்பதால் ஒரே மாதிரியிராது. நிதிமந்திரிக்கு பொக்கிஷ சான்ஸலர் என்று பெயர். சட்ட மந்திரியை சான்ஸலர் பிரபு என்பார்கள். உள்நாட்டு, வெளிநாட்டுத் தொழில், வியாபார, கல்வி, பாதுகாப்பு, சமுதாய நாடுகள் மந்திரிகளுக்கு செக்ரடெரி (காரியதரிசி) என்று பெயர். சபையின் பிரசிடெண்ட் பிரபு, லங்காஸ்டர் ஜமீன் சான்ஸலர், ரகசிய முத்திரைப் பிரபு, ஊதிய அதிகாரி, வியாபார போர்டு பிரசிடெண்ட் என்று இதர காபினெட் மந்திரிகள் அழைக்கப்படுகின்றனர். பிரதம மந்திரியின் இஷ்டப்படி மற்ற மந்திரிகளில் சிலரும் சேர்த்துக்கொள்ளப்படலாம். காபி னெட்டில் இல்லாத இரண்டாந்தர மந்திரிகளை இராஜ்ய மந்திரிகள் அல்லது துணைக் காரியதரிசிகள் (அண்டர் செக்ரடெரி) என்று

கூப்பிடுகிருர்கள். மூன்ருந்தர மந்திரிகளுக்கு ஜுனியர் மந்திரிக ளென்றும், பார்லிமென்டரி செக்ரடெரிகள் என்றும் பெயர்.

இவர்கள் அனைவரும் சேர்ந்து ஏறக்குறைய நூறு நபர்கள் மந்திரி சபையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எல்லோரும் அரசியல்வாதிகள். பார்லிமென்டில் அங்கம் வகிக்கவேண்டும். ஆனுல், தனிக் காரணங்களுக்காக ஒருவரை மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளவேண்டுமானுல், அவரைப் பிரபுவாகச் செய்து பிரபுக்கள் சபை மெம்பர் என்ற யோக்கியதையில் மந்திரியாக் கலாம். பிரதம மந்திரியும், மற்ற முக்கிய மந்திரிகளில் பெரும் பாலரும் மக்கள்சபை அங்கத்தினர்களாகவிருக்கவேண்டும்.

பார்லிமென்டைப் பொறுத்தவரையில் எந்த இலாகாவில் தவறு நடந்தபோதிலும் அதன் நிர்வாகத்தை வகிக்கும் மந்திரியே பொறுப்பு ஏற்கவேண்டும். தனக்குக் கீழிருக்கும் உத்தியோகஸ் தர்கள் புத்தி தடுமாறிவிட்டார்கள் என்று பதில் கூறமுடியாது. மந்திரிகள் பொது வாழ்விலிருந்து வந்தவர்களாதலின் நிர்வாக சூட்சுமங்களை அறியமாட்டார்கள். தங்களுக்குக் கீழுள்ள காரிய தரிசிபோன்ற நிலையான உத்தியோகஸ்தர்களின் புத்திமதியின் பேரிலேயே முடிவு செய்யவேண்டும். ஆனுல், அந்தச் சேவகர்கள் பார்லிமென்டில் வந்து தமது காரியங்களின் காரணங்களை எடுத்துக் கூறமுடியாது. அவைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து, சந்தேக மிருந்தால் இதர மந்திரிகளையோ, பிரதமரையோ ஆலோசித்து, முடிவு செய்யவேண்டும். தமக்குத் தவருன புத்திமதி சொன்ன உத்தியோகஸ்தர்களை மாற்றியோ, வேறு வேலைக்கு அனுப்பியோ தண்டிக்கலாம். ஆனுல், பொறுப்புமட்டும் மந்திரியைச் சேர்ந்தது என்பது திடமான சம்பிரதாயம்.

பாரத நிர்வாக முறை, பிரிட்டிஷ் முறையை அனுசரித்தது. அரசியல் அமைப்பில் பின்வரும் விதிகள் கவனிக்கத்தக்கவை :

74 (1) பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்ட ஒரு மந்திரி சபை இருக்கவேண்டும். அது ஜனுதிபதிக்கு எல்லாக் காரியங் களிலும் ஆலோசனை கூறி உதவும்.

(2) ஜனுதிபதிக்கு மந்திரிகள் ஏதாவது ஆலோசனை கூறினுர் களா, அது என்னவென்று எந்த நியாயாலயமும் விசாரிக்கக் கூடாது.

75 (1) பிரதம மந்திரி ஜனுதிபதியால் நியமிக்கப்படுவார். மற்ற மந்திரிகள் பிரதம மந்திரியின் ஆலோசனையின்பேரில் நியமிக் கப்படுவார்கள்.

(2) ஜனாதிபதியின் விருப்பத்தை அனுசரித்து மந்திரிகள் பதவி வகிப்பார்கள்.

(3) மந்திரிசபை கூட்டாக லோக சபைக்குப் பொறுப்பாளியாக இருக்கும்.

(4) ஒரு மந்திரி, தாம் பதவி ஏற்குமுன், மூன்றாவது அட்டவணையில் குறிப்பிட்ட வாசகப்படி ஜனாதிபதி அவருக்கு விசுவாசப் பிரமாணம் செய்விப்பார்.

(5) பார்லிமென்டின் ஒரு சபையிலாவது தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு மெம்பரில்லாத மந்திரி அக் கால முடிவில் தமது மந்திரி பதவியைத் துறப்பார்.

(6) மந்திரிகளின் சம்பளங்களும் படிகளும் அவ்வப்போது பார்லிமென்டின் சட்டப்படி இருக்கும் அவ்விதச் சட்டம் செய்யப் படும்வரையில் இரண்டாவது அட்டவணையில் கண்டபடி இருக்கும்.

இந்திய அரசியல் சட்டத்தின் வாசகங்களே நம்மைக் கட்டுப் படுத்தும் என்று வாதிப்போர்களுக்கு மேற்கண்ட விதிகளிலிருந்து பாரத மந்திரி சபையின் தன்மை விளங்காது. முதன்முதலாகப் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே பிரதம மந்திரியாக நியமிக்கப் படவேண்டும் என்று விதியில்லை. வாசகப்படி ஜனாதிபதி எவரையேனும் நியமிக்கலாம். ஆனால், வேறொருவரை நியமித்தால் அவரால் அமைக்கப்படும் மந்திரி சபைக்கு லோக சபையில் பெரும் பாலான கட்சி ஆதரவில்லாமல் மந்திரி சபை கவிழ்ந்துவிடும்.

மந்திரி சபையின் முடிவுகளை ஜனாதிபதி ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்று விதிகூறவில்லை. அதற்கு மாறாக மந்திரி சபையின் ஆலோசனையை ஏற்காவிட்டால் நியாயாலயம் மூலமாக ஜனாதிபதியை நிர்ப்பந்தம் செய்யமுடியாது. அவரைப் பெரும் குற்றச்சாட்டுக்குட்படுத்தி விலக்குவதற்குப் பார்லிமென்டுக்கு அதி காரமுண்டு. ஆனால், ஏற்கெனவே கூறியபடி அது விஷப் பரீட்சையாகலாம்.

மூன்றாவதாக, மந்திரிகளை நியமிப்பதற்குமட்டும் பிரதமர் ஆலோசனை கூறலாமென்று விதி கூறுகிறது. விலக்குவதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. இக் காரணத்தால் சில ராஜ்யங்களில் முக்கிய மந்திரி விரும்பும்பொழுது மந்திரிகள் இராஜிநாமா செய்ய மறுத்து, காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கும், பிரதம மந்திரிக்கும் முறையீடு செய்திருக்கிறார்கள்.

உண்மையில் மந்திரிசபையைப்பற்றி அரசியல் அமைப்பில் கண்டிருக்கும் விதிகள் அரைகுறையாகச் சில நிபந்தனைகளையே குறிப்பிட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் பொறுப்பாட்சியின் எல்லாச் சம்பிரதாயங்களும் இங்கும் செயற்படும் என்ற அடிப்படையிலேதான் நமது அரசியல் அமைந்திருக்கிறது. அந்தச் சம்பிரதாயங்களை விதிகளாகச் செய்ய முடியவில்லை. ஏனெனில், எல்லா விதிகளின் உட்கருத்துகளை விளக்கவும், அவற்றை அமல் செய்யவும் நியாயாலயங்களுக்கு அதிகாரமுண்டு, மந்திரிசபையின் நடவடிக்கைகளைப்பற்றிக் கோர்ட்டுகளில் விசாரிக்கப்பட்டால், நிர்வாகம் தடைப்பட்டுப் பொதுமக்களின் அவமதிப்புக்குரியதாகும்.

இந்திய மந்திரிகளிலும் மூன்று தரமிருக்கின்றனர். சாதாரணமாகப் பிரதமருள்பட காபினெட் மந்திரிகள் 15 பேர்களும், இராச்சிய அல்லது துணை மந்திரிகள் 15 பேர்களும், உதவி மந்திரிகள் 15 பேர்களுமிருப்பார்கள். ஒவ்வொரு தரத்திலும் அதிகமாகவும் குறைவாகவும் இருக்கலாம்.

பிரிட்டிஷ் பொறுப்பாட்சி சம்பிரதாயங்கள் இந்தியாவுக்கும் சமமானவையாகிலும், தற்போதைய இந்திய அரசியல் நிலைமையில் அவை ஓரளவே பயன்படும். மந்திரிசபையின் பொறுப்புணர்ச்சி நன்கு கட்டுப்பாடுள்ள இரண்டு கட்சிகளிருக்கும்பொழுதே வலுவுற்றிருக்கும். ஆளும் கட்சியிலிருந்து சிலர் பிரிந்துவிட்டால் பெரும்பான்மை போய்விடுமே என்ற பயமிருக்கும். பொதுமக்களிடம் அதிருப்தி பரவினால் அடுத்த தேர்தலில் தோல்வி ஏற்படும் என்ற அச்சமிருக்கும். இவ்விரண்டுமின்றி, ஒரே கட்சி அச்சமின்றி ஆண்டுவரும் நிலைமை நீடித்தால் மந்திரிசபை ஏறக்குறைய ஏகாதிபத்தியமாகிவிடும். சட்டசபைகளும் மந்திரிசபையின் வசமிருப்பதால், அவற்றின்மூலம் மந்திரிசபையின் போக்குகளுக்கு எவ்விதத் தடங்கலுமேற்படாது.

இந்திய அரசியலில் இது ஒரு பெரும் குறையாகவிருப்பினும், பலமான எதிர்க்கட்சியைச் சட்டமூலமாகவோ, வேறுவிதமாகவோ அமைப்பது சாத்தியமில்லை. அது தானாகவே உருவாகவேண்டும். பிரிட்டனில் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் விக் அல்லது லிபரல் கட்சி 60 வருஷங்களுக்கும், அதன் பின்னர் டோரி அல்லது கன்சர்வேடிவ் கட்சி 50 வருஷத்திற்கும் தொடர்ந்து ஆட்சி புரிந்தன. இந்த நூற்றாண்டிலேதான் தொழிற்கட்சி உருவான பின்னரே இந்த நிலைமை மாறியிருக்கிறது.

பாரதத்தில் இராச்சியங்களிலேயே முதன்முதலில் ஒரு தனிக் கட்சியின் ஆட்சி மாறி வேறு கட்சியோ, அல்லது பல கட்சிகளின்

கூட்டோ ஆளும் நிலை ஏற்படும். இதை வரவேற்கவேண்டும். ஜனாதிபதியின் நெருக்கடி அதிகாரங்களைப் பிரயோகித்து அதைத் தடுப்பது, மக்கள் ஆட்சிமுறை பக்குவமாவதைத் தடுப்பதாகும். இதைப்பற்றிப் பின்னர் ஆராயப்படும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் எல்லா நிர்வாகப் பொறுப்பும், பிரசிடென்டிடமே குவிந்திருக்கிறது. அவரது பொறுப்பும் காங்கிரசுக்கன்று. அவரை நேரில் தேர்ந்தெடுத்த பொதுமக்களுக்கே. சில துறைகளில் அவரது அதிகாரம் கட்டுப்பட்டிருக்கிறது. அவரால் எவ்விதச் சட்டமும் செய்யமுடியாது. அவசரச் சட்டம் கூட காங்கிரஸ் சபையால்தான் நிறைவேற்றப்படவேண்டும். தமது முக்கிய நிர்வாகிகளையும், இதர பெரிய உத்தியோகஸ்தர்களையும் செனேட்டின் அனுமதியின்பேரிலேயே நியமிக்கவேண்டும். போர் தொடங்குவதற்கு காங்கிரசின் ஆதரவும், சமாதானத்திற்கு செனேட்டின் அனுமதியும் வேண்டும். புதிய செலவுகளுக்குப் பிரதிநிதிசபை முதலில் அங்கீகரித்துப் பின்னர் செனேட் சபையும் ஆமோதிக்கவேண்டும்.

இவ்வளவு கட்டுப்பாடுகளுக்குட்பட்டு பிரசிடென்டின் அதிகாரம் மிகவும் குறைவென்று தோன்றலாம். உண்மையில் அப்படியல்ல. புதிய சட்டமோ, அதிகப் பணமோ தேவையில்லாத எல்லாக் காரியங்களிலும் பிரசிடென்டின் அதிகாரத்திற்கு எல்லையில்லை. காங்கிரசில் அதை ஆட்சேபித்து விவாதமோ, தீர்மானமோ செய்யக் கூடாது. நிர்வாக அமைப்பை மாற்றியமைக்கவோ, பெரிய உத்தியோகஸ்தர்களை வேலையிலிருந்து விலக்குவதற்கோ அவரது முடிவை எவரும் தடுக்கமுடியாது.

பிரசிடென்ட் நான்கு வருஷத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அநேகமாக அவரது கட்சி காங்கிரசின் இரு சபைகளிலுமோ, ஒரு சபையிலோ பெரும்பான்மையாகவிருக்கும். ஆதலால், அவசியமான சட்டங்களுக்கும் தேவையான பணங்களுக்கும் காங்கிரசில் சாதாரணமாகத் தீவிர எதிர்ப்பிருக்குமென்று எண்ணக் கூடாது.

மீண்டும் தேர்தலுக்கு நிற்கப்போவதில்லை என்று நிச்சயம் செய்த பிரசிடென்ட் பொதுமக்களின் அபிப்பிராயத்தைக் கவனிக்காமல் தமது இஷ்டப்படி நிர்வாகத்தை நடத்தலாம். இரண்டே முறை ஒருவர் தேர்தலுக்கு நிற்கக்கூடுமாகையால், இரண்டாவது முறை தேர்ந்தெடுக்கப்பட்டபின் பிரசிடென்டின் போக்குக்குத் தடையில்லை.

மேலும், ஒவ்வொரு பிரசிடென்டின் தேர்தலுக்குப்பின், ஆயிரக் கணக்கான உயரிய உத்தியோகஸ்தர்கள் வேலையிலிருந்து விலகி அவர்களுடைய இடங்களில் புதிய பிரசிடென்டின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் நியமிக்கப்படுகின்றனர். இந்த நியமனங்கள் தமது கட்சித் தலைவர்களின் சிபாரிசுகளின்பேரிலேயே செய்யப்படு கின்றன. பிரிட்டிஷ், பாரத அரசியல்களில் மந்திரிகளைத் தவிர வேறு எல்லா நிர்வாகிகளும் நிலையான சேவகத்தைச் சேர்ந்த வர்கள். அவர்களை ஒரு வேலையிலிருந்து சமமான வேறு வேலைக்கு மாற்றக்கூடுமேயொழிய விலக்கவோ, புதியவர்களை நியமிக்கவோ முடியாது.

தமது முக்கிய நிர்வாகிகளை நியமிப்பதில் அவர்கள் அரசியல் வாதிகளாக இருக்கவேண்டுமென்று நிர்ப்பந்தமில்லை. காங்கிரசில் அங்கத்தினர்களாகவோ, இராச்சியங்களின் சட்டசபை மெம்பர்களா கவோ இருக்கலாகாதென்ற நிபந்தனையின் காரணமாக அரசியல் வாதிகளை விலக்கி நிர்வாகத்தில் திறமையுள்ள வழக்கறிஞர்களையும் தொழிலதிபர்களையும், கலாசாலைகளில் பணிபுரியும் பேராசிரியர் களையும் நியமிப்பது வழக்கமாகவிருக்கிறது, அரசியல்வாதிகளில் திறமையுள்ளவர்களை அவர்களது சட்டசபைப் பதவிகளைத் துறக்கச்செய்து நிர்வாகத்தில் சேர்த்துக்கொள்ளலாம். மூன்று முறை பிரசிடென்டாகி இரண்டாவது யுத்தத்தில் நேச நாடுகளின் வெற்றிக்கு முக்கியத் தலைவராக இருந்த ரூஸ்வெல்ட் முதல் யுத்த காலத்தில் நியூயார்க் இராச்சியத்தின் செனேட்டில் மெம்பராக இருந்தார். அப்பொழுது பிரசிடென்டாகவிருந்த வில்சன் அவரைக் கடற்படையின் உதவிக் காரியதரிசியாக நியமித்தார்.

இவ்விதம் அரசியல்வாதி, நிர்வாகி என்ற வேற்றுமை அமெரிக்க நிர்வாகத்தில் இல்லை. அதனுல், பிரசிடென்டின் நிர்வகக்குழு சாதாரண மந்திரிசபையைக்காட்டிலும் நிர்வாகத் தில் அதிக திறமையாகவிருப்பது சகஜமே.

பிரசிடென்டின் தலைமை நிர்வாகத்திற்குச் சாதாரணமாக செக்ரடெரி (காரியதரிசி) என்று பெயர். ஆனுல், சிலர் டைரக்டர் என்றும், அட்மினிஸ்'ரேடர் (நிர்வாகி) என்றும் அழைக்கப்படு கின்றனர். இவை சரித்திரபூர்வமான பெயர் வேற்றுமைகளே. அதிகாரத்தில் வேற்றுமையில்லை. 18 உயர் நிர்வாகிகளிருக் கின்றனர்.

இவர்களுக்குள் அந்நிய, உள்நாட்டு, பொக்கிஷ, பாதுகாப்பு இலாகாக்களின் காரியதரிசிகள் மிகவும் முக்கியமானவர்கள்.

இந்த நிர்வாகிகள் சேர்ந்து ஒரு சபையாவதில்லை. எல்லோரையும் கூட்டிக் கலக்கவேண்டுமென்ற சம்பிரதாயமில்லை. பிரசிடென்ட் இஷ்டப்பட்டால் சிலரைக் கூட்டி ஆலோசனை கேட்கலாம். இல்லையேல் தனித்தனியாக ஒவ்வொரு நிர்வாகிக்கும் உத்தர விடலாம்.

இந்த நிர்வாகிகளோடு அரசாங்கக் காரியங்களைப்பற்றி விவாதிக்கவும் முடிவுசெய்யவும் பிரசிடென்டுக்கு உதவிசெய்ய ஐந்து பிரத்தியேக செயலகங்கள் இருக்கின்றன. அவையாவன, வரவு செலவு திட்டச் செயலகம், பொருளாதார ஆலோசகர் அவை, வெண்மை வீட்டுச் (பிரசிடென்டின் அரண்மனை) செயலகம், நாட்டுப் பாதுகாப்பு அவை; சைனியத் திரட்டுச் செயலகம். இந்தச் செயலகங்களுக்கு எல்லாம் 1966-67ஆம் ஆண்டில் செலவு $3\frac{1}{2}$ கோடி டாலர்.

பிரிட்டன், பாரதங்களில் காபினெட்டுக்கு உதவி செய்ய இம் மாதிரிச் செயலகங்கள் இருக்கின்றன. ஆனால், அவை சிறியவை. ஏனெனில், இலாகாக்களின் நிர்வாகத் தலைவர்கள் மந்திரிகள். மந்திரி சபைக்கு ஆலோசனை கூறத் தனி ஆலோசகர்கள் அவசியமில்லை. மந்திரி சபையில் வராத பல காரியங்களில் பிரதம மந்திரி மற்ற மந்திரிகளின் தீர்மானங்களுக்கு ஆதரவளிக்க வேண்டியிருக்கிறது. அதற்காகப் பிரதம மந்திரிக்கு ஆலோசனை கூறச் சில நிர்வாகிகள் அவசியமாகவிருக்கின்றனர். காலஞ் சென்ற லால்பகதூர் சாஸ்திரியின் காலத்தில் ஒரு காரியதரிசியும், சில உதவிக்காரியதரிசிகளும் கொண்ட ஒரு செயலகம் நிறுவப்பட்டது. ஆனால், அமெரிக்க பிரசிடென்டின் செயலகங்களோடு இது ஒப்பிடக்கூடியதன்று.

# 14. நிர்வாக இயந்திரம்

இக் காலத்திய அரசியல் நிர்வாகம் ஒரு பிரமாண்டமான எந்திரம். இலட்சக்கணக்கான ஊழியர்கள் பலதரப்பட்ட பணிகளைச் செய்யவேண்டும். பல துறைகளில் தலைநகரில் தொடங்கி இரயில், மோட்டார் எட்டாத சிறிய கிராமங்கள் வரையில் ஒழுங்காகக் காரியங்கள் ஓயாமல் நடைபெறவேண்டும். இதற்கு உதாரணமாகத் தபால் நிர்வாகமே போதுமானது. தினந்தோறும் கோடிக்கணக்கான தபால்கள் எல்லா இடங்களிலிருந்தும் அனுப்பப்படுகின்றன. அவற்றிற்கு வேண்டிய கார்டுகள், கவர்கள், அஞ்சல் தலைகள் எல்லாத் தபால் நிலையங்களிலும் குறைவின்றிக் கையிருப்பு வைத்துக்கொள்ளவேண்டும். கிராமங்களிலிருந்து சேவகர் தலைமீது சுமந்து நகர நிலையங்களுக்குத் தபால்களைச் சேர்ப்பிக்க வேண்டும். அங்கே தபால்கள் சேரவேண்டிய இடங்கள்வாரியாகப் பாகுபாடு செய்து அதற்கேற்ற மோட்டார், இரயில், விமான மூலம் அனுப்பவேண்டும், அவ் இடங்களில் அத் தபால்களை விலாசத்திற்குக் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். ஒரு வாரம் தபால் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தால் சமூகத்தின் விவகாரங்கள் மிகவும் தடைப்பட்டுக் குழப்பமுண்டாகும்.

ஆதலால், நிர்வாகம் நன்கு அமைக்கப்பட்டுத் திறமையுடன் நடைபெறுவது இக் காலத்திய நாகரிகத்துக்கு மூலாதாரம். நேர்மையான நிர்வாகத்தின் அறிகுறிகளாவன :

1. அடித்தளத்திலிருந்து நல்ல கோவையாக அமைப்பு இருக்கவேண்டும்.

2. ஒவ்வொரு படியிலும் சேவகர்களின் அலுவல்களும் பொறுப்புகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கவேண்டும்.

3. ஊழியர்கள் தாமதமின்றிச் சுறுசுறுப்புடன் வேலை செய்ய வேண்டும்.

4. மேலதிகாரிகளுக்கும் அவர்கள் கீழுள்ள சேவகர்களுக்கும் ஒருபுறம் கண்டிப்பும் மற்றொருபுறம் சகோதர பாவமும் இருக்க வேண்டும்.

5. திறமையாகப் பணி செய்வோர்களைப்பற்றியும், சோம்பேறிகளைப்பற்றியும் ஓயாமல் கவனித்து, நன்கு பணி புரிவோர்களுக்கு எளிதில் உயர் பதவி கிடைக்கும்படி ஏற்பாடுகள் இருக்க வேண்டும்.

6. இலஞ்சம், பட்சபாதம், அநியாயச் சலுகைகள் அறவே ஒழியவேண்டும்.

அரசாங்கத்தின் அலுவல்களை நன்கு வகுத்து இலாகாக்களாக அமைத்து நிர்வாகம் செய்யப்படுகிறது. பிரிட்டிஷ் பாரத நிர்வாக முறையில் ஓர் இலாகாவுக்குத் தலைமையில் ஒரு மந்திரி இருப்பார். அவருக்குக் கீழ் ஒரு நிலையான காரியதரிசி இருப்பார். ஒரு மந்திரி இரண்டு மூன்று இலாகாக்களை நிர்வகிக்கக்கூடும். ஆனால், சாதாரணமாக ஓர் இலாகாவுக்கு ஒரு காரியதரிசி இருப்பார். இலாகாவைப் பல பிரிவுகளாகவும், ஒவ்வொரு பிரிவும் பல உட்பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டு அந்தந்தப் படிக்குத் தகுந்த உத்தியோகஸ்தர் தலைமையில் நிர்வகிக்கப்படும். உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் அலுவல்கள் 18 பெரிய இலாகாக்களாகவும், 31 செயலகங்களாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றன. இலாகாத் தலைவர்கள் நேரில் பிரசிடெண்டுக்குப் பொறுப்புள்ளவர்கள். அவருக்குக் காரியதரிசி என்றும், டைரக்டர் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. ஒரு காரியதரிசிக்குக் கீழ் ஐந்தாறு உதவிக் காரியதரிசிகள்வசம் இலாகாவின் பிரிவுகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. பிரிவின் பெரும்பாலான பணிகள் உதவிக் காரியதரிசியளவிலேயே பட்டுவாடாச் செய்யப்படும். சில முக்கியப் பிரச்சினைகளே காரியதரிசியின் அனுமதிக்கு அனுப்பப்படும். ஒவ்வொரு பிரிவின்கீழ் உட்பிரிவுகள் அலுவலுக்குத் தகுந்தவாறு அமைக்கப்படும்.

இலாகாக்களைத் தவிரச் செயலகங்கள் ஒரு காரியதரிசியின்கீழ் இல்லாமல் ஒரு குழு அல்லது போர்டின் நிர்வாகத்தில் இருக்கும். கம்பெனிகளைப்போல் இந்த போர்டு மெம்பர்கள் கூடி முடிவு செய்வார்கள். அந்த முடிவைச் செயலகத்தின் உத்தியோகஸ்தர்கள் அமல் செய்வார்கள். உதாரணமாக, வெளிநாட்டு விவகாரங்கள், பொக்கிஷம், பாதுகாப்பு, நியாயம், தபால், உள்நாட்டு விவகாரங்கள், விவசாயம், வியாபாரம், தொழில், கல்வி, சுகாதாரம், செய்தி முதலியவை இலாகாவின்மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. இராஜ்

யங்களுக்குள் வியாபாரம் மத்திய ரிசர்வ் பாங்கு, மின்சார கமிஷன், ஐக்கியப் போக்குவரத்துக் கமிஷன், தேசிய ஊழியர் தொடர்புகள் போர்டு, ஏற்றுமதி இறக்குமதி பாங்கு, டென்னெஸி பள்ளத்தாக்கு ஆதிக்கம் முதலியவை ஒரு குழுவால் நிர்வகிக்கப்படும் செயலகங்களாவன. இவற்றின் நிர்வாகக் குழுக்கள் நேரில் பிரசிடென்டுக்குப் பொறுப்பாளியாகவிருக்கும். அவை காங்கிரசின் சட்டமூலம் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் பிரசிடென்டுகூட, அந்தச் சட்டங்களுக்குட்பட்டே மேற்பார்வையிட வேண்டும்.

பிரிட்டனில் அமெரிக்காவைப்போல் நிர்வாகம் அனைத்தும் இலாகாக்களாகவும் செயலகங்களாகவும் பிரிக்கப்படவில்லை. மந்திரிகளின் அதிகாரத்திற்குட்படாத சில அதிகாரிகள் இருக்கின்றனர். உதாரணமாக, கணக்குப் பரிசோதகர் நேரில் பார்லிமென்டுக்குப் பொறுப்பாளி. தனது அறிக்கையை அதற்கே சமர்ப்பிக்கவேண்டும். அதைப் பொதுக் கணக்குக் கமிட்டி ஆராய்ந்து தனது முடிவுகளைப் பார்லிமென்டுக்குச் சமர்ப்பிக்கும். இம்மாதிரி அதிகாரிகளைத் தவிர, எல்லா நிர்வாகமும் இலாகாக்கள் மூலமாகவே நடைபெறுகின்றது. மந்திரிகளைத் தவிர எல்லா நிர்வாகிகளும் நிலையான அரசாங்க சேவகர்கள். மந்திரிசபை மாறினால் இவர்கள் மாறமாட்டார்கள். மந்திரிகளின் மேற்பார்வைக்குட்பட்டு, தங்கள் பணிகளைப் பட்சபாதமின்றிச் செய்ய வேண்டுமென்பது பிரிட்டிஷ் சம்பிரதாயம். ஏறக்குறைய ஐம்பது இலாகாக்கள் இருக்கின்றன. அமெரிக்காவையும் இந்தியாவையும் போல் பிரிட்டன் ஐக்கிய அரசாங்கமாக இல்லாததால், ஐக்கிய, இராஜ்ய அரசாங்கங்களின் எல்லாப் பணிகளும் பிரிட்டனில் ஒரே நிர்வாகமாக ஆற்றப்படுகின்றன.

இந்திய நிர்வாகமும் பிரிட்டிஷ் முறையிலேயே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், சில வேற்றுமைகள் இருக்கின்றன, பிரிட்டிஷ் ஆட்சியில் உயர் நிர்வாகிகளுக்கும் அவர்களுக்குக் கீழுள்ள பணியாளர்களுக்கும் அந்தஸ்திலும், சம்பளத்திலும், செல்வாக்கிலும் பெரிய ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. ஆதலால், எல்லா உத்தரவுகளும் ஐ.சி.எஸ். அதிகாரிகளின் அனுமதியின்பேரிலேயே பிறப்பிக்கப்பட்டன. கீழ் அதிகாரிகள் தங்களைக் குமாஸ்தாக்களாகவே கருதி வந்தனர். ஆதலால், உயர் உத்தியோகஸ்தர்களின் வேலைகள் சுமந்து, நிர்வாகம் மிகவும் தாமதமாகவே நடைபெற்றது. பிரிட்டிஷ் சாம்ராச்சியத்திற்கு அவசியமான பணிகளே துரிதமாகவும் திறமையாகவும் நடைபெற்றன. மக்களுக்குத் தேவையான சேவைகள் மிகவும் குறைவாகவும் அலட்சியமாகவும் கவனிக்கப்பட்டன.

ஐ. சி. எஸ். வரிசையில் இந்தியர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டபொழுதும் இந்த சேவக ஏற்றத் தாழ்வுகளை இந்திய உத்தியோகஸ்தர்களும் பாராட்டி வந்தனர்.

மத்திய அரசாங்கம் பாதுகாப்பு, நாணயம், இரயில்வே, தபால் முதலிய சில அகில இந்திய இலாகாக்களையே நிர்வகித்து வந்தது. கல்வி, சுகாதாரம், போலீஸ் முதலிய பல பணிகள் மாகாண அரசாங்கங்களிடம் ஒப்புவிக்கப்பட்டன. ஆதலால், 5, 6 நிர்வாக கவுன்சிலர்களை வைத்துக்கொண்டு இராஜ்யப் பிரதிநிதி மத்திய அரசாங்கத்தை நிர்வகித்து வந்தார். ஒரு மத்திய சட்டசபை இருந்தபோதிலும், அது அரசாங்கத்தின் போக்குகளைக் கண்டிப்பதற்கும், சட்டங்கள் இயற்றுவதில் ஆலோசனை கூறுவதற்குமே பயன்பட்டது.

புதிய அரசியல் அமைப்பில் பாரதம் ஓர் ஐக்கிய அரசாங்கமாக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் பொறுப்புகளும், இராஜ்ய அரசாங்கங்களின் உரிமைகளும் ஏறக்குறைய முன்போலவே வகுக்கப்பட்டன.

ஆனால், மக்கள் ஆட்சியில் மத்திய அரசாங்கத்தின் அலுவல்கள் துரிதமாக வளர்ந்தன. 1951-ல் முதல் ஐந்தாண்டுத் திட்டம் உருவானபின், மத்திய அரசாங்க இலாகாக்களும், அதில் பணிபுரியும் சேவகர்களின் எண்ணிக்கைகளும் பன்மடங்கு பெருகின. இப்பொழுது 21 பெரிய இலாகாக்களும் அவற்றுள் பல கிளை இலாகாக்களும் இருக்கின்றன. இராஜ்யங்களுக்கு ஒதுக்கிவைக்கப்பட்ட கல்வி, விவசாயம், சுகாதாரம் போன்ற பணிகளுக்குக்கூட விரிவான மத்திய அரசாங்க இலாகாக்கள் இருக்கின்றன. அத் துறைகளில் நாட்டுக்குப் பொதுவான திட்டங்கள் அமைப்பதற்கும், மானியமாகவும் கடனுகவும் பண உதவி செய்வதற்கும் மத்திய இலாகாக்கள் அவசியமாகின்றன.

பழைய பிரிட்டிஷ் வழக்கத்தை அனுசரித்து நிர்வாகம், போலீஸ், வெளிநாட்டு சேவைகளுக்கு அகில இந்திய சேவைகள் ஏற்படுத்தப்பட்டு அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். இராஜ்யங்களிலும் இவர்களே முக்கியப் பதவிகளை வகிக்கின்றனர். இதனுல் கீழ் அதிகாரிகள் பொறுப்பேற்பதற்கு அஞ்சுகின்றனர். மேல் அதிகாரிகள் தமக்கு வேலை அதிகமென்று முறையிடுகின்றனர்.

திட்டக் கமிஷன், மத்திய இலாகாக்கள், இராஜ்ய இலாகாக்கள் இவைகளுக்குள் ஒரே பணிக்கு வெவ்வேறு

அதிகாரிகள் பொறுப்பு வகிப்பதால் குழப்பமும் முரண்பாடுகளும் அடிக்கடி ஏற்படுகின்றன. ஒரு பழைய கட்டடத்தை நடுவில் வைத்துக்கொண்டு அதைச் சுற்றிலும் புதிய அறைகளும் கூடங் களும் அமைத்ததுபோல் இந்திய நிர்வாகம் காணப்படுகின்றது. விடுதலையானவுடன் பழைய நிர்வாகத்தை அடியோடு கலைத்து விட்டுப் புதிதாக அமைப்பதற்கு அவகாசமுமில்லை; பணமுமில்லை. ஆதலால், தேவைக்கேற்றபடி பழைய நிர்வாகத்தைப் பெருக்கிக் கொண்டே சமாளித்து வந்திருக்கின்றனர். இந்த நிர்வாக அமைப்பைச் சீர்திருத்தம் செய்ய அவ்வப்போது கமிட்டிகள் அமைத்து முயற்சி செய்யப்படுகிறது. தற்சமயம் திரு. மொரார்ஜி தேசாய் தலைமையில் ஒரு கமிட்டி ஆராய்ந்துவருகிறது.

பார்லிமென்ட், நீதிபரிபாலனம், சைனியம் இவற்றின் நிர்வா கங்கள் தனி முறையில் நடைபெறுகின்றன. அவற்றிற்கு உத்தி யோகஸ்தர்களை நியமிப்பதும், மேற்பார்வை செய்வதும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு அந்தந்த நிறுவனத்தின் தலைவர்களுக்கே ஒப்படைக்கப்படுகின்றன. அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மந்திரிகள் தலையிடக்கூடாதென்பது அதன் முக்கிய நோக்கம்.

1955-56-லிருந்து 1966-67 வரையில் பாரத மத்திய அரசாங்கத்தின் பொது நிர்வாகச் செலவுகள்மட்டும் ரூ. 34 கோடியிலிருந்து ரூ. 110 கோடியாக அதிகரித்திருக்கிறது. மொத்த வருமானம் ரூ. 485 கோடியிலிருந்து ரூ. 2,191 கோடி யாகவும், செலவு ரூ. 480 கோடியிலிருந்து ரூ. 2141 கோடி யாகவும் பெருகியிருக்கின்றன. பிரிட்டனின் பொது நிர்வாகத் திற்குச் சுமார் ரூ. 300 கோடியும், அமெரிக்க ஐக்கிய அரசாங்கத் திற்கு ரூ. 7,000 கோடியும் செலவாகின்றன. சைனியம், சமூக சேவைகள், இராஜ்யங்களுக்கு மானியம் முதலிய செலவுகள் பொது நிர்வாகத்தில் சேர்க்கப்படவில்லை.

# 15. அரசாங்க ஊழியர்கள்

இன்று எந்த நாட்டிலும் அரசாங்க சேவகமே மிகப்பெரிய பரந்த தொழிலாகவிருக்கிறது. இந்த அத்தியாயத்தில் சைனியத்தில் தொண்டுபுரியும் ஊழியர்களைத் தவிர்த்து இதர அரசியல் இலாகாக்களில் வேலை செய்யும் ஊழியர்களைப்பற்றி ஆராயப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின்கீழ் இவர்கள் எண்ணிக்கை 28 இலட்சம்; இராஜ்யங்கள், ஸ்தல ஸ்தாபனங்களில் பணிபுரிவோர்கள் இதைக்காட்டிலும் இரண்டு மடங்கு. பிரிட்டனில் நேரில் அரசாங்கத்தின்கீழ் ஊழியம் செய்வோர் 10 இலட்சம் பேர். இந்திய மத்திய அரசாங்கத்தின்கீழ் 20 இலட்சம் ஊழியர்களும், இராஜ்ய ஸ்தலஸ்தாபனங்களின்கீழ் 40 இலட்சம் சேவகர்களும் தொண்டு புரிகின்றனர். ஆதலால், இந்த ஊழியர்களை எப்படி நியமிப்பது, என்ன பயிற்சி அளிப்பது, என்ன ஊதியம் கொடுப்பது, எவ்விதம் எவ்வளவு தூரம் உத்தியோக உயர்வுக்கு வசதிகள் ஏற்படுத்துவது, எத்தனை வருஷங்கள் ஊழியம் செய்யவேண்டும், வேலையிலிருந்து விலகிய பின்னர் அவர்கள் ஜீவனத்திற்கு என்ன வழி செய்வது என்பன மகத்தான பிரச்சினைகளாகிவிட்டன. ஒவ்வோர் இலாகாவிலும் ஒரு பெரும் பிரிவு அதன்கீழ்ப் பணிபுரியும் ஊழியர்களின் விவரங்களைக் கணக்குவைத்து, மாதாமாதம் சம்பளம், படி முதலியவைகளைத் தீர்த்துக்கொடுத்து, அவர்களது விடுமுறை நாட்கள், சேவை வகுப்பில் அவர்களது இடம், எவ்வெப்பொழுது பதவி உயர்வு பெற்றார் என்பதற்கெல்லாம் விவரமாய்ப் பதிவு செய்து வைப்பதற்காகவே அமைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாகப் பத்தில் ஓர் ஊழியன் இப் பணியிலேயே ஈடுபட்டிருப்பான்.

நூறு வருஷங்களுக்கு முன், நிலைமை அடியோடு வேறாக விருந்தது. சைனியம், போலீஸ் இரண்டையும் தவிர்த்து இதர பணிகளில் வெகு சிலரே அரசாங்கத்திற்குத் தேவையாகவிருந்தனர். பெரிய உத்தியோகஸ்தர்களை பிரிட்டனில் அரசரும் மந்திரிகளும் தமது இஷ்டம்போல் நியமித்தனர். அவ்வித உத்தியோகங்களையும், சைனியத்தில் கமிஷன்களையும் விற்பதுமுண்டு.

இதற்காக அரசரிடம் ஒரு தனி அலுவலகம்கூடவிருந்தது. பிரபுக்களே பெரும்பாலும் மந்திரிகளாகவிருந்ததால் மற்ற பிரபுக்கள் குடும்பங்களின் பட்டமில்லாத இளங் குமரர்களை நியமிப்பது வழக்கம். தொழில் பெருகி, தனவந்தர்களும் அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்றபொழுது அவர்கள் வீடுகளிலிருந்த இளைஞர்களையும் எடுத்துக்கொண்டனர். பெரிய உத்தியோகஸ்தர்கள் கீழ்த்தர ஊழியர்களைத் தங்கள் இஷ்டம்போல் நியமித்தனர். நியமிப்பது போலவே, வேலையைவிட்டு நீக்கிவிடுவதும் அந்தந்த அதிகாரிகளின் எதேச்சாதிகாரத்திலிருந்தது.

அரசாங்க வேலைகள் அதிகரித்து ஜனநாயகமும் பெருகவே, இம் முறை அநியாயமானதென்றும், அது அரசாங்கம் திறமையாக நடைபெறுவதற்குத் தகாததென்றும் பொதுஜன அபிப்பிராயம் வளர்ந்துவந்தது. 19ஆம் நூற்றுண்டின் நடுவில் பெரிய உத்தியோகங்களுக்குப் பரீட்சைமூலம் அபேட்சகர்களை நியமிப்பது என்று முடிவாயிற்று. அதன் பயனுகக் கலாசாலைகளில் உயர் கல்வி பெற்ற வாலிபர்கள், பிரிட்டிஷ் சிவில் சர்வீஸ் என்ற சேவையில் புக ஆரம்பித்தனர். இவர்களிலிருந்தே எல்லா இலாகாக்களின் முக்கிய நிர்வாகிகள் நியமிக்கப்படுவது உறுதியான சம்பிரதாயமாயிற்று. அவர்களுடைய சம்பளங்களும், படிகளும், மற்றும் ஊழிய நிபந்தனைகளும் மிகவும் தாராளமாக இருந்ததால் திறமைக்கும் நேர்மைக்கும் இந்தச் சேவை உலகப் பிரசித்தி பெற்றது.

இந்தப் பரீட்சை நடத்தவும், மற்றுமுள்ள ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கவும் ஒரு சிவில் சர்வீஸ் கமிஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது அரசர்பேரில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டபோதிலும், அது நிர்வாகத்திற்குட்படாமல் சுதந்தரமாகவே தனது பணியைச் செய்கிறது. பார்லிமென்டுக்குத் தனது அறிக்கையை ஆண்டுதோறும் சமர்ப்பிக்கிறது.

பிரிட்டிஷ் அரசாங்க ஊழியம் பின்வரும் வகுப்புகளாக அமைக்கப்பட்டிருக்கிறது.

1. உயர் நிர்வாக வகுப்பு: இதன் நபர்களே மந்திரிசபைக்கு ஆலோசனை கூறுவதற்கும் நீதிகளை வகுப்பதற்கும், இலாகாக்களின் பிரிவுகளை நிர்வகிப்பதற்கும் பொறுப்புள்ளது. இதில் 2,550 பேர்கள் இருக்கின்றனர்.

2. நிர்வாகிகள் வகுப்பு : இவர்களில் பெரும்பாலோர் அரசாங்கப் பண வரவு செலவுக் கணக்கு வைத்தல், கணக்குகளைப்

பரிசோதித்தல், உயர் நிர்வாகிகளுக்கு உதவிபுரிதல் முதலிய பணிகளில் தொண்டு புரிகின்றனர் (சுமார் 75,000 பேர்கள்).

3. நிபுணர் வகுப்பு: இதில் எஞ்சினீர்கள், டாக்டர்கள், வழக்கறிஞர்கள் முதலிய தனித் தொழில் நிபுணர்கள் இருக்கின்றனர் (சுமார் 1,26,000 பேர்கள்).

4. குமாஸ்தா வகுப்பு: கணக்குப் புத்தகங்களைப் பூர்த்தி செய்தல், கடிதப் போக்குவரத்தைக் கண்காணித்தல், ரிகார்டுகள். ரிஜிஸ்டர்கள் முதலியவற்றை ஒழுங்குபடுத்திப் பதிவு செய்வது, பாதுகாத்தல் முதலிய பணிகளைப் புரிவோர் (சுமார் 1,30,000).

5. உதவி குமாஸ்தா வகுப்பு: சுருக்கெழுத்துத் தட்டெழுத்துக்காரர்கள், பிரதிகள் எடுப்போர் முதலியவர்கள் (சுமார் 1,00,000 பேர்கள்).

6. சில்லறைப் பணியாட்கள்: கடிதங்களை விலாசத்திற்குச் சேர்ப்பது, அலுவலகங்களைச் சுத்தமாக வைப்பது, தபால் தந்தி எடுத்துச் செல்லுவது முதலிய சிறிய தொண்டுகள் செய்வோர் (34,000).

இவர்களைத் தவிரச் சில இலாகாக்களுக்குத் தனிப் பணியாளர் இருக்கின்றனர். உதாரணமாக, தபால்காரர்கள் (115,000), டெலிபோன் சிப்பந்திகள் (53,000), தந்திக்காரர்கள் (23,000), அந்தந்த வேலைக்குப் பயிற்சி செய்விக்கப்பட்டு நியமிக்கப்படுகிறார்கள்.

பிரிட்டனில் சம்பள விகிதங்கள்: மிகவும் குறைந்தது வருஷத்திற்கு 250 பவுன். உதவி குமாஸ்தா வகுப்பு 600-லிருந்து 1000 பவுன்வரை. குமாஸ்தா 1000—2000 பவுன் வரையில்; நிர்வாகிகள், நிபுணர்கள் 2750—7000 பவுன் வரையில்; சாதாரணமாக 5000 பவுனே அதிக சம்பளமாகும். காபினெட் மந்திரிகள், காரியதரிசிகள், உயர்தர நீதிபதிகள் முதலியோர் 5000-லிருந்து 12,000 பவுன் வரையில் ஊதியம் பெறுகின்றனர். சர்க்கார் சேவகத்திற்கு வெளியில் பெரும் தொழில் நிபுணர்கள், சினிமா நடிகர் முதலோர் 25,000 பவுன்கூடச் சம்பாதிக்கிறார்கள்.

பிரிட்டிஷ் மக்களில் 20% 1000—1500 பவுனும், 5% 1500—2000 பவுனும், 2·5% 2000—3000 பவுனும், 1% 3000 பவுனுக்கு மேலும் ஊதியம் பெறுகின்றனர். அரசாங்க ஊதியங்களும் ஏறக்குறைய இதே அளவில்தானிருக்கும்.

அரசாங்க ஊழியர்கள் அரசியல் கட்சிகளில் சேரலாமா? அக் கட்சிகளின் பிரசாரத்தில் ஈடுபடலாமா என்பது சிக்கலான பிரச்சினை. இதற்காக பிரிட்டனில் அவர்கள் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். முதல் வகுப்பில் அரசாங்கத் தொழிற்சாலைகளில் வேலை செய்வோர், தபால் தந்தி இலாகாக்களில் பணி புரிவோர், இவர்கள்போன்று பிறரை மேற்பார்வையிடவேண்டிய பொறுப்பில்லாத ஊழியர்கள். இவர்கள் மற்ற பிரஜைகளைப்போல் அரசியல் விவகாரங்களில் பங்கெடுத்துக்கொள்ளலாம். சட்ட சபைகளுக்கு அபேட்சகராக நிற்கும்பொழுது வேலையை இராஜிநாமா செய்யவேண்டும். தோற்றுவிட்டால் மீண்டும் பழைய வேலையில் சேரலாம்.

இரண்டாவது வகுப்பில் குமாஸ்தாக்கள், தட்டெழுத்துச் சுருக்கெழுத்துக்காரர்கள் போன்று அலுவலக வேலைகளில் கீழ்த்தர ஊழியர்களாவர். இவர்கள் தங்களுடைய மேல் அதிகாரிகளின் அனுமதி பெற்று அரசியல் விவகாரங்களில் சேர்ந்துகொள்ளலாம். ஆனால், இவர்கள் பார்லிமெண்டுக்கு அபேட்சகர்களாக நிற்கக் கூடாது.

மற்ற உயர்தர ஊழியர்களனைவரும் அரசியல் கட்சிகளிலோ, பிரசாரத்திலோ, நேரடியாகவோ மறைமுகமாகவோ கலந்து கொள்ளக்கூடாது. தேர்தல் காலத்தில் தங்கள் வாக்குகளை இஷ்டம்போல் போடலாம். இவர்கள் எக் கட்சி ஆட்சி புரிந்தாலும் சம ஊக்கத்துடனும் பக்தியுடனும் தமக்குரிய பணியைச் செய்யவேண்டும். நீதிமுறைகளில் அபிப்பிராயபேதமிருப்பினும், அவைகளுக்கு மந்திரி சபையே பொறுப்பு என்பதை உணர்ந்து, அவைகளை அமல் செய்யவேண்டும்

அரசாங்கத் தொழிற்சாலை ஊழியர்களைத் தவிர்த்து மற்றவர்கள் தொழிற்சங்கம் அமைப்பதும் வேலை நிறுத்தம் செய்வதும் தகாதமுறை என்று பிரிட்டனில் கருதப்படுகிறது. சம்பளம், படி, லீவு முதலியவற்றில் ஊழியர்களுக்கும் அரசாங்கத்திற்கும் தகராறுகள் ஏற்பட்டால் அவற்றைத் தீர்ப்பதற்கு ஊழியர் சங்கங்களும், அவைகளின் பிரதிநிதிகளும், அரசாங்கப் பிரதிநிதிகளும் கொண்ட விட்லி கவுன்சில்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இம் மாதிரி 70 கவுன்சில்கள் இருக்கின்றன.

18ஆம் நூற்றாண்டின் இறுதியில் வட அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் குடியேற்ற மாகாணங்கள் கலகம் செய்து பிரிட்டிஷ் ஆட்சியை உதறி எறிந்தபொழுது, அதற்கு முன்னிருந்த பிரிட்டிஷ்

முறையையும் விலக்கிவிட்டுத் தமக்கு வேண்டிய உயர் அதிகாரி களைத் தேர்ந்தெடுக்கும் முறையை ஏற்றுக்கொண்டன. இரண்டு அல்லது நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை கவர்னர், உயர் நீதிபதிகள், நகரத் தலைவர்கள், பொக்கிஷதார், தணிக்கையாளர் கள் போன்ற எல்லா அதிகாரிகளையும் தேர்ந்தெடுத்தனர். கீழ்த்தர ஊழியர்களை அந்த அதிகாரிகள் தம் இஷ்டம்போல் நியமித்தனர். ஐக்கிய அரசாங்கம் அமைக்கப்பட்டபொழுது, இத் தேர்தல்முறை பொருந்தாததால், ஊழியர்களை நியமிப்பதற்குப் பிரசிடென்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. சில முக்கிய உத்தியோகஸ்தர்களை நியமிக்கும்பொழுது செனேட்டின் அனுமதி பெறவேண்டும். தூதர்கள், உயர் நிர்வாகிகள், கான்ஸல்கள், உத்தம நீதிமன்றத் தின் நீதிபதிகள், சட்டத்தால் குறிக்கப்படும் இதர உத்தியோகஸ் தர்கள் இவ்விதம் நியமிக்கப்படவேண்டும். மற்ற எல்லா ஊழியர் களையும் பிரசிடென்ட் இஷ்டப்படி நியமிக்கலாம். முதலில் ஒரு புதிய பிரசிடென்ட் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் நீதிபதிகளைத் தவிர, மற்ற உத்தியோகஸ்தர்கள் ராஜினுமா செய்வது வழக்கம். புதிய பிரசிடென்ட் தமது கட்சியைச் சேர்ந்தவர்களை அந்தப் பதவிகளுக்கு நியமிப்பார். இதற்கு அரசியல் கொள்ளை முறை என்ற இழிவுப் பெயர் வழங்கிவந்தது.

1816ஆம் ஆண்டில் ஐக்கிய அரசாங்கத்தின்கீழ் 6327 ஊழியர்கள் இருந்தனர். இந்த எண்ணிக்கை ஓயாமல் அதிகரித்து 1939-ல் 9 இலட்சமிருந்தனர். இப்பொழுது அது 29 இலட்சத் தில் இருக்கிறது. இவ்வளவு பேர்களையும் விலக்கிப் புதியவர்களை நியமிப்பது சாத்தியமில்லை. ஆதலால், உயர் பதவியிலுள்ள இரண்டு மூன்றுயிரம் பேர்களைத் தவிர மற்ற ஊழியர்கள் பிரிட் டனில் போலவே நிலையாக நியமிக்கப்படுகின்றனர்.

அபேட்சகர்களின் தகுதியைக் கவனித்தே அரசாங்க ஊழி யரை நியமிப்பது என்ற முறை 1883-ல் ஆரம்பமாயிற்று. இரண்டு கட்சிகளும் சேர்ந்து ஒரு கமிஷன் ஏற்படுத்தி அதன் மூலம் பரீட்சை வைத்தோ, வேறு சோதனைகள் செய்தோ நியமிக்க வேண்டுமென்று தீர்மானமாயிற்று. ஆனல், இது ஊழியர்களின் ஒரு பகுதிக்கே அமலாயிற்று. தபால் நிலையங்களும், சுங்காலயங் களும் இம் முறையின்கீழ் முதலில் வந்தன. இந்தக் கமிஷன்மூலம் நியமிக்கப்பட்டவர்கள் அரசியல் கட்சிக்கு நன்கொடை கொடுக்க லாகாதென்றும், மேலதிகாரிகள் அவ்வித நன்கொடை வசூல் செய்யலாகாதென்றும் விதிக்கப்பட்டது. இந்த முறையை மற்ற இலாகாக்களுக்கும் பரப்புவதற்கு பிரசிடென்டுக்கு அதிகாரமளிக் கப்பட்டதால், இப்பொழுது 90% ஊழியர்கள் நிலையான சேவை

யில் இருக்கின்றனர். மற்ற 10 சதத்திலும் பெரும்பாலோர் தகுதி யின்பேரிலேயே நியமிக்கப்படுகின்றனர். ஆயிரத்தில் ஒருவரே பழம் கொள்ளை முறைப்படி பதவி பெறுகின்றனர்.

ஐக்கிய அரசாங்கத்தின்கீழ் ஊதியம் பெறும் எந்த நிலையான சேவகனும் அரசியல் விவகாரங்களில் கலந்துகொள்ளக்கூடா தென்று இரண்டாவது உலக யுத்தத்திற்குமுன் சட்டம் செய்யப் பட்டது.

அமெரிக்க ஐக்கிய அரசாங்க ஊழியர்கள் 18 வரிசைகளில் (கிரேடுகள்) வகுக்கப்பட்டிருக்கின்றனர். முதல் வரிசையிலுள்ள வர்களுக்கு ஆரம்பச் சம்பளம் வருஷம் 2,690 டாலர்; இது படிப் படியாக உயர்ந்து 18ஆம் வரிசையிலுள்ளவர்களுக்கு 14,800 டாலர் கிடைக்கிறது. அதாவது, மிகவும் கீழ்த்தர ஊழியருக்கும் உயர்தர உத்தியோகஸ்தருக்கும் 6 மடங்கே அதிகமிருக் கிறது. பிரசிடென்ட், நீதிபதிகள், நிர்வாகிகள்போன்ற வெகு சிலருக்கு 25,000 டாலரிலிருந்து லட்சம் டாலர் வரையில் ஊதியம் கிடைத்தபோதிலும், பொதுவாக அமெரிக்க அரசாங்க ஊழியர்களுக்குள் மற்ற நாடுகளைக் காட்டிலும் சமத்துவம் அதிக மென்றே கூறலாம்.

அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் ஊழியர்களுக்குத் தொழிற்சங்கம் அமைப்பதற்கும் வேலை நிறுத்தம் செய்வதற்கும் உரிமையில்லை. ஆனால், ஊழியர் சங்கம் அமைத்துத் தமது குறைகளை விண்ணப்பித்துக்கொள்ளலாம். காங்கிரஸ் மெம்பர் களிடம் முறையிட்டு அவர்கள் உதவியைக்கொண்டு பரிகாரம் தேடலாம்.

இந்தியாவின் அதிகார வர்க்கம் பிரிட்டிஷ் ஏற்பாடுகளை அனுசரித்து அமைக்கப்பட்டபோதிலும், சில முக்கிய வேற்று மைகள் இருக்கின்றன. உயர்தர உத்தியோகங்களில் பெரும்பாலர் ஆங்கிலேயர்களாகவும், கீழ்த்தர சேவையில் இந்தியர்களாகவும் இருந்ததால், சம்பளம், செல்வாக்கு, அதிகாரம் எல்லாவற்றிலும் இருதரத்தாருக்கும் ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகவிருந்தன. ஐம்பது வருஷங்களுக்குமுன் அடித்தளத்தில் மாதம் ரூ. 15-ம் உச்சத்தில் ரூ. 7,000-முமாகவிருந்தது. இப்பொழுது அவை ரூ. 100-ம், ரூ. 4,000-முமாக இருக்கின்றன. எல்லா முடிவுகளும் உத்தரவுகளும் உயர்தர உத்தியோகஸ்தர்களாலேயே பிறப்பிக்கப் படவேண்டும். ஆதலால், கீழ் வரிசையிலிருப்போர்கள் தங்கள் சுய புத்தியை உபயோகிக்கப் பழகாமல் அனேகமாக குமாஸ்தாக்

களின் மனப்பான்மையுள்ளவர்களாக இருந்து வந்திருக்கின்றனர். இதனால், அரசாங்கக் காரியங்கள் மிகவும் தாமதமாகவே நடைபெறுகின்றன. பொறுப்புணர்ச்சியில்லாதவர்களுக்குத் தங்கள் பணியில் உற்சாகமில்லாமலிருப்பது ஆச்சரியமில்லை.

அமெரிக்க, பிரிட்டிஷ் அரசியல்களில் அரசாங்க சேவகர்களுக்கு அரசியல் அமைப்பின்மூலமாக எவ்வித உரிமையுமில்லை. சிலருக்குச் சட்ட மூலமாகவும், பலருக்கு நிர்வாகத்தால் செய்யப்பட்டுள்ள உத்தரவுகள் வாயிலாகவும் உரிமைகளும் நிபந்தனைகளும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இந் நாட்டிலோ, அரசியல் அமைப்பின் 14ஆவது பாகம் முழுதும் அதாவது, 308-லிருந்து 323 விதிகள் முடிய அரசாங்க சேகவத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. அவற்றுள் கவனிக்கப்படவேண்டிய விதிகள் 311, 312, 315, 320. 311ஆவது விதிப்படி எந்த அரசாங்க சேவகனும் சரியான, பட்சபாதமற்ற விசாரணையின்றித் தண்டிக்கப்படக்கூடாது. விசாரணை முடிந்து அவன் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டாலும், வேலையிலிருந்து நீக்கப்படுவதானால் அவ்விதத் தண்டனை தகாதென்று நிரூபிக்க அவனுக்கு மறு அவகாசமளிக்கப்படவேண்டும். இந்த விதியைக் கோர்ட்டுகள் அமல் செய்யும் பொழுது விசாரணை எப்படி நடைபெறவேண்டும்; குற்றம் சாட்டப்பட்ட சேவகனுக்கு என்ன வசதிகள் கொடுக்கப்படவேண்டும், என்ற பல பிரச்சினைகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றின் பலனாக எந்த சர்க்கார் ஊழியனையும் தனது பணியைச் சரியாகச் செய்யாததற்குத் தண்டிப்பது மிகவும் சிக்கலான விவகாரமாகிவிட்டது. ஆதலால், நிர்வாகத்தில் பல ஊழல்கள் பெருகி அதைக் குலைக்கின்றன.

அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தில் ஐக்கிய அரசாங்க ஊழியர்கள் வேறு, இராச்சியங்களின் சேவகர்கள் வேறு. பொதுவான சேவைகளில்லை. இந்நாட்டிலோ சிலமுக்கிய சேவைகள் அகில பாரத சேவைகளாகவிருக்கின்றன. 312ஆம் விதியில் அகில பாரத நிர்வாக சேவையும், அகில பாரத போலீஸ் சேவையும் அவ்விதப் பொது சேவைகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மேலும், இராச்சிய சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையில் தீர்மானம் நிறைவேறினால், புதிய அகில பாரத சேவைகள் அமைக்கலாம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. வைத்தியம், விவசாயம், எஞ்சினீரிங் முதலிய துறைகளில் அவ்வித சேவைகள் ஏற்படவேண்டுமென்று தீர்மானம் நிறைவேறி அவை அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சேவைகளில் உள்ளவர்களில் பெரும்பாலோர் இராச்சியங்

களில் வேலை செய்தபோதிலும் அவர்களை நியமிப்பதற்கும் தண்டிப் பதற்கும் மத்திய அரசாங்கத்திற்கே உரிமையுண்டு.

மத்திய அரசாங்கத்திலும், இராச்சியங்களிலும் பொது சேவைக் கமிஷன்கள் இருக்கவேண்டுமென்றும், அவற்றின் மெம்பர்களை மத்திய, இராச்சிய அரசாங்கங்கள் நியமித்தபோதிலும் மத்திய கமிஷனின் அங்கத்தினர்கள் 65 வயதுவரையிலும், இராச்சிய கமிஷனின் மெம்பர்கள் 60 வயது வரையிலும் பணி புரிவார்களென்றும், அவர்களைக் குற்றங்களுக்காக நீக்கவேண்டுமானால் உத்தம நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டுக் குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியின் உத்தரவாலேயே நீக்கப்படவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக எல்லா அரசாங்க சேவகர்களும் இக் கமிஷன்களின் மூலமாகவே நியமிக்கப்படுகின்றனர். ஒரு வரிசையிலிருந்து மேல் வரிசைக்கு மாற்றுவதற்கும் அவற்றின் அனுமதி வேண்டும். இந்தக் கமிஷன்கள் ஆண்டுதோறும் அந்தந்தச் சட்டமன்றங்களுக்குத் தாங்கள் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். அதில் தங்கள் சிபாரிசுகளை அரசாங்கங்கள் நிராகரித்த விவரங்கள் குறிப்பிட்டிருக்கும். அந்த அறிக்கைமீது விவாதம் நடக்கும்பொழுது, அவ்வாறு நிராகரித்ததற்குத் தகுந்த காரணங்கள் மந்திரிகள் கூறவேண்டுமாதலால், சாதாரணமாக அவற்றின் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்வதே சம்பிரதாயமாகி வருகிறது.

அரசாங்கத்தின் அலுவல்கள் விடுதலைக்குப்பின் பல துறைகளிலும் அதிகரித்து வருவதால், ஊழியர்களின் எண்ணிக்கையும் பெருகி வருகின்றது. மத்திய அரசாங்க ஊழியர்கள் 1953-ல் 15·61 இலட்சத்திலிருந்து 1962-ல் 22·60 இலட்சமாகி விட்டனர். இவர்களில் 5,000 நபர்களுக்கு மாதம் ரூ 1,000-த்திற்குமேல் சம்பளம். ரூ. 500-லிருந்து ரூ. 1,000 வரையில் சுமார் 16,000 பேர்கள். ரூ. 75-க்குக் குறைவாக $5\frac{1}{2}$ இலட்சம் பேர்கள். இதிலிருந்து இவர்களுக்குள்ளிருக்கும் பெரிய ஏற்றத் தாழ்வுகள் புலப்படும்.

1962ஆம் ஆண்டின் இறுதியில் அரசாங்க ஊழியர்களின் புள்ளிவிவரங்கள் பின்வருமாறு: மத்திய அரசாங்கம் 22·6 இலட்சம், இராச்சிய அரசாங்கங்கள் 31·66 இலட்சம், ஸ்தல ஸ்தாபனங்கள் 14·01 இலட்சம், இதர பொது ஸ்தாபனங்கள் 9·83 இலட்சம், ஆக மொத்தம் 78·10 இலட்சங்கள். இந்தத் தொகை இன்னும் சில வருஷங்களில் கோடியை எட்டிவிடுமென்பது நிச்சயம்.

அரசியலில் பங்கெடுத்துக்கொள்ளுவதைப்பற்றி இங்கும் பிரிட்டனில் போலவே நியமங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அரசாங்கத் தொழிற்சாலைகளிலும், இரயில்வே, தபால் முதலிய வியாபார இலாகாக்களிலும் பணி புரியும் ஊழியர்கள் தொழிற் சங்கம் நிறுவலாம்; அரசியலில் பங்கெடுத்துக்கொள்ளலாம். வேலைநிறுத்தம்கூடச் செய்யலாம். இவற்றில் மேற்பார்வை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு இவ் உரிமைகளில்லை. மற்ற இலாகாக்களில் அரசாங்க ஊழியர்கள் தங்கள் சங்கங்களை ஏற்படுத்திக் குறைகளை அரசாங்கத்திற்கு முறையிட்டுக்கொள்ளலாம்; ஆனால், வேலைநிறுத்தம் செய்யவோ, அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளவோ கூடாது. அரசாங்கத்திற்கும் இவர்களுக்கும் நடுவே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துவைக்க இங்கும் பிரிட்டனில்போல் விட்லி கௌன்சில்கள் ஏற்படுத்தவேண்டுமென்ற கொள்கை ஏற்கப்பட்டு. அவை ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

# 16. தேசியப் பாதுகாப்பு

நாட்டைப் பாதுகாப்பதற்காகவே அரசாங்கம் முதன்முதலாக உருவாயிற்றென்று கூறலாம். சமீபகாலம் வரையில் அதுவே முக்கிய அலுவலாகவிருந்தது. அரசாங்கத்தின் வருமானத்தில் மிகப் பெரும் பகுதி சைனியத்திற்காகவே செலவிடப்பட்டு வந்தது.

இக்காலத்தில் அரசாங்கப் பணிகள் பன்மடங்காக விரிவடைந்து, சமூக நல சேவைகளே அரசாங்கத்தின் முக்கிய நோக்காகிவிட்டன. ஆயினும், பாதுகாப்பின் அவசியமும் முக்கியத்துவமும் குறைந்துவிட்டது என்று கூறமுடியாது. தொழில்களை விசித்திரமாக வளர்த்த விஞ்ஞானம், போர் சாதனங்களையும் அதைவிட அதிகமாகவே பெருக்கியிருக்கிறது. 100 வருஷங்களுக்கு முன் காலாட் படைகள், குதிரைப் படைகள், பீரங்கிகள் ஆகியன சைனியத்தின் முக்கிய அங்கங்களாகவிருந்தன. இப்பொழுது காலாட்படைகள் பெரும்பாலும் மோட்டார் வண்டிகளில் ஏற்றிச் செல்லப்படுகின்றனர். டாங்கிகள், போர் விமானங்கள், நீர் மூழ்கிக் கப்பல்கள், அணுகுண்டை வீசும் பீரங்கிகள், விமானங்கள் ஆகியன வல்லரசுகளின் முக்கிய ஆயுதங்களாகிவிட்டன.

மகாபாரதத்தில் பண்டைய சைனியத்தின் அங்கங்களும். அவைகளுக்குரிய யானைகள், இரதங்கள், குதிரைப்படைகள், காலாட்கள் இவற்றிற்கு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அடித்தளத்தில் 1 யானை, 1 ரதம், 3 குதிரை, 5 காலாட்கள் கொண்டது ஒரு பத்தி. மூன்று பத்தி ஒரு குல்மம்; மூன்று குல்மம் ஒரு கணம்; மூன்று கணங்கள் ஒரு வாகினி; மூன்று வாகினி ஒரு பிராதானம்; மூன்று பிராதானம் ஒரு சாமீரம்; மூன்று சாமீரம் ஓர் அநீகினி; மூன்று அநீகினி ஓர் அக்ஷௌஹிணி; ஓர் அக்ஷௌஹிணியில் 21,870 யானை, 21,870 இரதம், 65,610 குதிரை; 1,09,330 காலாட்படை இருக்கும். இந்த அமைப்பு சரித்திர காலத்

தில் பலவாறு மாறியிருக்கக்கூடும். ஆனால், அங்கங்கள் மட்டும் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு அப்படியே இருந்தன. வில்லும், அம்பும், வாளும், சக்கரமும் பிரதான ஆயுதங்களாக இருந்தன. துப்பாக்கியும் பீரங்கியும் உருவானதாலேயே ஐரோப்பியரின் போர் வல்லமை திடீரென்று பெருகி அவர்கள் உலகத்தை வென்று அரசாளலானார்கள். ஆனால், நெப்போலியன் காலத்து சைனியத்தையும் இக் காலத்திய யந்திரப்படைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நெப்போலியன் சைனியம் ஏறக்குறைய பாரதத்தில் கூறப்பட்ட சைனியத்திற்கே ஈடாகும்.

அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் சைனியத்தில் சுமார் 25 இலட்சம் துருப்புகள் இருக்கின்றனர். அவர்களுக்கு உதவி செய்யத் துருப்புகளல்லாத 10 இலட்சம் சேவகர்களிருக்கின்றனர்.

1967ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் மொத்தச் செலவு 14,550 கோடி டாலரில், பாதுகாப்புக்கு 6,100 கோடி டாலர் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவற்றை ரூபாயாக்குவதற்கு 7½ஆல் பெருக்கவேண்டும். இதைக் கொள்முதல் வழியாக வகுத்தால் துருப்புகள் சம்பளம் 1,815 கோடி டாலர். தளவாடங்கள் 1,597 கோடி டாலர். அவைகளைப் பராமரித்து உபயோகிப்பதற்கு 1,493 கோடி டாலர். ஆராய்ச்சிக்கு 648 கோடி டாலர்; கட்டடம் முதலியவற்றிற்கு 166 கோடி; அணுசக்தி 230 கோடி டாலர்; வெளிநாட்டு உதவி 204 கோடி டாலர். ஆகாய விமானம், அணுகுண்டு முதலியவற்றின் பாகங்கள் ஆண்டுதோறும் அதிகரித்துவருகின்றன.

அமெரிக்க அரசியல் அமைப்பின்படி பிரசிடென்டே எல்லா சைனியத்திற்கும் உத்தம சேனாதிபதி. அவருக்குக்கீழ் ஒரு பாதுகாப்புக் காரியதரிசியும் அவருடைய மேற்பார்வையில் விமானப் படை மூன்றுக்கும் தனித்தனியான காரியதரிசிகளும் பொறுப்பாளிகளாகவிருக்கின்றனர். அவர்களுக்குக்கீழ் தளபதிகளும், இதர படைத் தலைவர்களும் இருக்கின்றனர். போர் தொடுத்தல், சைனியத்தை உபயோகித்தல், சமாதானம் செய்தல் முதலிய அரசியல் நீதிகள் படைத் தலைவர்களின் வசமிருக்கலாகாது, அதைச் சேராத அரசியல் தலைவரிடமும் அவருக்கு நம்பிக்கையுள்ள நிர்வாகிகளிடமும் இருக்கவேண்டுமென்பது எல்லா மக்கள் ஆட்சிக்கும் அடிப்படையான கொள்கையாகும். அதை அமெரிக்கப் பாதுகாப்பு அமைப்பு நன்கு அமல் செய்கின்றது.

பிரிட்டனிலும் சட்டப்படி பாதுகாப்பின் முடிவான பொறுப்பு அரசனைச் சேர்ந்திருப்பினும், நடைமுறையில் பிரதம மந்திரியும்,

மந்திரி சபையுமே உண்மையான பொறுப்பாளிகள். 1964ஆம் வருஷம் வரையில் மூன்று படைகளும் தனித்தனியாக நிர்வகிக்கப் பட்டு வந்தன. ஆனால், அவ்வாண்டில் எல்லாப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் முழுப் பொறுப்பு ஏற்கும் ஒரு பாதுகாப்பு இலாகா ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பாதுகாப்பு மந்திரி (பாதுகாப்புக் காரியதரிசி என்று ஆங்கிலப் பெயர்) தலைமை வகிக்கிறார். அவருக்குக்கீழ் மூன்று படைகளுக்கும் தனித்தனி மந்திரிகள் இருக் கின்றனர். பாதுகாப்பு மந்திரியின் தலைமையில் ஒரு பாதுகாப்புக் கௌன்சில் இருக்கிறது. பாதுகாப்பு விவகாரங்களில் மந்திரி சபைக்கு அது ஆலோசனை கூறும்.

1964-65-ல் பாதுகாப்புக்காக ஏறக்குறைய 200 கோடி பவுன் ஒதுக்கப்பட்டது. அதன் விவரங்கள் பின்வருமாறு : தரைப்படை 53 கோ. ப., கடற்படை 50 கோ. ப., விமானப் படை 50 கோ. ப., விமான இலாகா 27 கோ. ப., கட்டடங்கள் 17 கோ. ப., அணுகுண்டு 68 லட்சம் பவுன், மத்திய நிர்வாகம் 2·6 கோ. ப. தற்போதைய மாற்று விகிதத்தில் இது ரூ. 4,200 கோடிக்குச் சமானமாகும். துருப்புகளின் எண்ணிக்கை தரைப் படையில் 2 இலட்சம், விமானப் படையில் 1·3 இலட்சம்; கடற் படையில் 1 இலட்சம்; இதைத் தவிர உதவிப் படைகள் 2·6 இலட்சம்; துருப்புகளல்லாத சேவகர்கள் பல இலட்சங்களுமிருக் கின்றனர்.

இவ்வளவு அதிகமாகப் பாதுகாப்புக்குச் செலவு செய்தும் பிரிட்டன் தன்னையும் தனது சாம்ராஜ்ய நாடுகளையும் தானாகவே பாதுகாக்க முடியும் என்று நம்பவில்லை. அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தைப் பெரிதும் நம்பியிருக்கிறது. இதற்காக நேடோ (வடக்கு அட்லான்டிக் ஒப்பந்த ஸ்தாபனம்), மேற்கு ஐரோப்பிய சங்கம், செண்டோ (மத்திய ஒப்பந்த ஸ்தாபனம்), சியாட்டோ (தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த ஸ்தாபனம்), என்ற கூட்டு ஏற்பாடுகளைச் செய்து மற்ற நாடுகளின் சகாயத்தை நாடியிருக் கிறது. அணுகுண்டுகளைத் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றும், போதிய அணு ஆயுதங்களைத் தயார் செய்யவில்லை. அமெரிக் காவையே நம்பியிருக்கிறது.

1947ஆம் வருஷம் வரையில் பாரதத்தின் பாதுகாப்பு பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பாதுகாப்பின் ஒரு பிரிவாகவே கருதப் பட்டது. ஆதலால், தரைப்படையையே வலுப்படுத்தியிருந் தனர். இரண்டு உலக மகாயுத்தங்களிலும் இந்தியப் படைகள் உயரிய சேவை செய்தன.

இந்தியா பிரிக்கப்பட்டவுடன் அதன் சைனியமும் யுத்த தளவாடங்களும் பிரிக்கப்பட்டன. இரண்டாவது மகா யுத்தத்திற்கு முன் இந்தியாவின் பாதுகாப்புச் செலவு ஆண்டுக்கு ரூ. 100 கோடிக்குக் குறைவாகவே இருந்தது. இரண்டாவது யுத்த காலத்தில் சிறிய கப்பற்படையும் விமானப்படையும் சேர்க்கப்பட்டன. 1948-ல் பாதுகாப்புச் செலவு ரூ. 164 கோடியாக இருந்தது. 1962-ல் சீன ஆக்கிரமணத்திற்குப்பின் அது திடீரென்று பெருகி 1962-63-ல் ரூ. 425 கோடியாகவும், 63-64-ல் ரூ. 704 கோடியாகவும், 1966-67-ல் ரூ. 798 கோடியாகவும் அதிகரித்திருக்கிறது. இந்த ஆண்டில் தரைப் படைக்கு ரூ. 600 கோடியும், விமானப் படைக்கு ரூ. 145 கோடியும், கடற்படைக்கு ரூ. 30 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து நமது கடற்படையும், விமானப் படையும் எவ் வல்லரசுடனும் போர் புரிய உதவாது என்பது விளங்கும். அணுசக்தி ஆயுதங்களைத் தயாரிப்பதில்லை என்று பாரத அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர். எந்த நாட்டுடனும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளுவதில்லை என்பதும் நமது நிலையான நீதியாகவிருக்கிறது. 1962-ல் சீனு படையெடுத்தபொழுது அமெரிக்காவையும் பிரிட்டனையும் உதவி கேட்கவேண்டி இருந்தது. அதிர்ஷ்டவசமாக சீனப் படைகள் சிறிது தூரம் அஸாம் பிரதேசத்தில் நுழைந்துவிட்டுப் பிறகு எல்லைப்புறத்திற்குத் திரும்பி விட்டன. 1965-ல் பாகிஸ்தானேடு போர் மூண்டபொழுது நமது சைனியங்களைக்கொண்டே சமாளித்துவிட்டோம். பாரதத்தின் பாதுகாப்புப் பெரிதும் உலக சமாதானத்தையும், வல்லரசுகளின் நல்லெண்ணத்தையுமே பொறுத்திருக்கிறது. சீனு தனது முழு பலத்துடன் இந்தியாமீது ஆக்கிரமித்தால் அமெரிக்கா, சோவியத் ருஷியா, பிரிட்டன் முதலிய வல்லரசுகளின் உதவியை நாடாமல் சமாளிப்பது மிகவும் கஷ்டமாகும்.

நமது அரசியல் அமைப்பின் 53 (2) விதிப்படி எல்லாப் பாதுகாப்புப் படைகளுக்கும் ஜனுதிபதியே உத்தம சேனுதிபதி ஆவார். ஆனுல், பிரிட்டிஷ் அரசியல் சம்பிரதாயம் இங்கும் அமலாகுமாதலால், உண்மையான அதிகாரம் மந்திரி சபையிடமும். பிரதம மந்திரியிடமுமே இருக்கிறது. அவர்களுக்குப் போர் தொடுக்கவும், சமாதானம் செய்யவும் முழு அதிகாரமிருக்கிறது. அமெரிக்காவைப்போல பார்லிமென்டின் அனுமதி வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஆனுல், மந்திரி சபை பார்லிமென்டின் தினசரி ஆதரவிலேயே இயங்கவேண்டுமாதலால் பார்லிமென்டின் ஆதரவைக் கொண்டே எவ்வித நடவடிக்கையும் எடுக்கவேண்டியதாகிறது.

# 17. நீதி பரிபாலனம்

நீதி பரிபாலனம் அரசியலின் அஸ்திவாரமாகும். பாதுகாப்பும் நீதி பரிபாலனமுமே முன் காலங்களில் அரசியலின் முக்கிய அங்கங்க ளாகவிருந்தன. இக் காலத்தில் சட்டமியற்றுதல், நிர்வாகம், சமூக சேவைகள் முக்கியத்துவத்தை அடைந்திருந்தாலும், சரியான நீதி பரிபாலனமில்லாவிட்டால் அவையனைத்தும் பயன்தரமாட்டா.

நீதிக்கு இரண்டு பெரும் பகுதிகளுண்டு. ஒன்று சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் குற்றங்களை நன்கு விசாரித்துக் குற்றவாளி களைத் தண்டித்தல். இதைக் குற்ற இயல் எனலாம். ஆங்கிலத்தில் கிரிமினல் நீதி என்பார்கள். இதுவே, பழங்காலத்து நீதி பரிபால னத்தில் முக்கிய அம்சமாகவிருந்தது. கொலை, கொள்ளை, களவு, பலாத்காரம், நம்பிக்கைத்துரோகம், மோசடி, இராத்துரோகம் முதலிய செயல்களைத் தடுப்பதும், அவைகளைச் செய்வோர்களைச் சிறைப்படுத்தி விசாரித்து தண்டிப்பதும் சமூகம் நிலைத்திருப் பதற்கும், சரிவர இயங்குவதற்கும் இன்றியமையாதவை. ஒரு வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டாலும், அது சமூகமனைத்தையும் பாதிப்பதால், குற்றங்களைக் கண்டுபிடிப்பதும், விசாரணைக்குக் கொண்டுவருவதும், தண்டனையை அமல் செய்வதும் அரசாங் கத்தின் பொறுப்புகளாவன. அதிகத் தீங்கு விளைவிக்காத சில்லறைச் சண்டைகளில்மட்டும் பாதிக்கப்பட்டவர் நேரில் நீதி மன்றத்தில் முறையிட்டுக் குற்றவாளிகள்மீது வழக்குத் தொடர வேண்டும். பெருங் குற்றங்களைப்பற்றிய விவகாரங்களெல்லாம் போலீஸ் இலாகாவின் பொறுப்புகள் ஆகும். தண்டனையானபின், தண்டனையை அமல் செய்வது நிர்வாகத்தின் கடமை ஆகும். முன் காலங்களில் பல்விதக் கொடிய தண்டனைகள் விதிக்கப்பட்டன. இப்பொழுது அபராதம், சிறைவாசம் இரண்டுமே நீதிபதிகளால் விதிக்கப்படும் தண்டனைகள் ஆகும். சிறைவாசம் விதிக்கப்பட்ட குற்றவாளியைச் சிறைக்கூடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டியது போலீஸ் படையின் பொறுப்பு. அதன்பின் சிறைச்சாலை

அதிகாரிகள் கைதிகளைச் சிறைச்சாலை விதிகளின்படி பாதுகாத்துப் பராமரித்துத் தண்டனை காலம் முடிந்தபின் விடுதலை செய்ய வேண்டும்.

பிரிட்டனில் இக் குற்றங்கள் கோவையாக ஒரு சட்டத் தொகுதியில் வர்ணிக்கப்படவில்லை. பண்டைக் காலத்திலிருந்து சம்பிரதாயமாகவும், நீதிமன்றங்களின் தீர்ப்புமூலமாகவும் குற்றங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இப் பழம் குற்றங்களுடன் இக் காலத்திற்கேற்பச் சட்டமூலமாகப் பல குற்றங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டனிலிருந்தும், மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், அமெரிக்காவுக்குக் குடியேறியபொழுது, இந்தச் சம்பிரதாயங்களும், வழக்கங்களும் அங்கு நிலவிவந்தன. பிற்காலத்தில் சட்டங்கள் மூலமாகப் பல குற்றங்கள் சேர்க்கப்பட்டன.

இந்தியாவின் நிலைமை வேறு. பிரிட்டிஷ் ஆட்சி இங்கு நிலை பெற்றதும், ஆங்காங்கிருந்த பல வழக்கங்களை எல்லாம் விலக்கி, குற்றங்களையெல்லாம் ஒழுங்காகத் தொடுத்து, இந்தியன் பீனல் கோடு (இந்தியக் குற்ற இயல் தொகுதி) என்று ஒரு பெரும் சட்டமியற்றினர். சிற்சில மாறுதல்களோடு இப்பொழுதும் அது அமலில் இருந்துவருகிறது.

குற்றப் பட்டியலைப்போலவே, குற்றவாளிகளைக் கைது செய்வது, வழக்குத் தொடர்வது, விசாரணை, சாட்சியம் முதலிய நீதி முறைகளும் பிரிட்டன், அமெரிக்கா ஆகியவைகளில் ஓரளவு சம்பிரதாயமாகவே இருக்கின்றன. இங்கு அவைகளும் ஒரு தனிச் சட்டத் தொகுதியாக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு இந்தியன் கிரிமினல் ப்ரொஸீஜர் கோடு (குற்ற இயல் நிர்வாக முறைத் தொகுதி) என்று பெயர். ஆதலால், சில அம்சங்களில் இந்தியாவில் நீதிபரிபாலனம் எளிய முறையில் வகுக்கப்பட்டிருக்கிறது என்று கூறத்தகும்.

அநேகமாக எல்லாக் குற்றங்களும் பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் நீதிபதி, ஜூரி இரண்டும் கூடியே விசாரணை செய்யப்படுகின்றன. சட்டத்தை விளக்குவதற்கு நீதிபதியும், சம்பவங்கள், சாட்சியம் இவற்றின் மெய்ம்மை, பொய்மையைத் தீர்மானிப்பதற்குப் பன்னிரண்டு சாதாரணப் பிரஜைகள் ஜூரியாக அமைக்கப்பட்டு பொறுப்பாளிகளாகிறார்கள். உயர்ந்த படிப்பும், சட்டத்தில் தேர்ச்சியுமிருந்தால் போதாது. மனித சுபாவத்தை நன்குணர்ந்து, குற்றவாளியைப்போன்ற பிரஜைகள் மனத்தில் சாட்சியத்தின் உண்மை நிச்சயமானாலொழிய எவனும் தண்டிக்கப்படக்கூடாது

என்ற கொள்கையை இம் முறை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. குற்றவாளிக்குத் தெரிந்தவர்களையும், அவன்மீது ஏதாவது ஆத்திரமுள்ளவர்களையும் ஜூரியில் சேர்க்கக்கூடாது. குற்றவாளியோ, அவன் சார்பில் அவனுடைய வக்கீலோ ஆட்சேபிக்கும் நபர்களைச் சாதாரணமாக நீதிபதி ஜூரியில் சேர்க்கமாட்டார். ஜூரி ஏகமனதாகத் தீர்ப்புச் சொல்லவேண்டும். அவர்களுக்குள் அபிப்பிராயபேதமிருந்தால் தண்டனை விதிக்கமுடியாது.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் தனது நாட்டிலுள்ள குற்றப் பட்டியலையும், விசாரணை, தண்டனைமுறைகளையும் இந்தியாவில் புகுத்தியபோதிலும் ஜூரியைச் சேர்க்கும் முறையைச் சில முக்கியத் தலைநகரங்களில்மட்டுமே ஏற்படுத்தியது. மற்ற இடங்களில் குற்ற விசாரணை நீதிபதிமூலமாகவே நடைபெற ஏற்பாடாயிற்று. பெரிய குற்றங்களில் அவருக்கு ஆலோசனை கூற இரு அஸெஸ்ஸர்கள் (மதிப்பவர்களை) நியமிக்கப்பட்டனர். ஆனால், அவர்களின் அபிப்பிராயங்களை ஏற்கவேண்டும் என்ற நியமமில்லை. ஜூரி முறையை ஏற்காததற்குப் பல காரணங்களுண்டு. முதலில் பெரிய குற்றங்களை விசாரிப்பவர் ஆங்கிலேய நீதிபதிகளாகவிருந்தனர். அவர்கள்முன் வாதிப்பது ஆங்கில மொழியிலேயே. ஜூரிகள் ஆங்கிலம் தெரிந்தவர்களாகவே இருக்க வேண்டுமென்று விதித்ததால், போதிய நபர்கள் கிடைப்பது அரிதாக இருந்தது. மேலும், இந்திய ஜூரிகளிடம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு நம்பிக்கையில்லை. கல்கத்தா, பம்பாய், சென்னை நகரங்களில் ஜூரி முறை இருந்தபோதிலும், ஜூரி ஏகமனதாக இருக்க வேண்டுமென்ற நியமனத்தை நீக்கி, பெரும்பாலரின் தீர்மானப்படி நீதிபதிக்குத் தண்டனை விதிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டது. இராஜத்துரோகக் குற்றத்திற்காக லோக மானிய திலகரை விசாரித்த பொழுது ஜூரியில் இருந்த இரண்டு இந்தியர், அவர் குற்றவாளி அல்லர் என்று தீர்மானித்தனர். ஆனால், ஆங்கிலேயரான மற்றவர்கள் பெரும்பாலராகவிருந்ததால் அவர் குற்றவாளி என்று முடிவு கூறியதை நீதிபதி ஏற்று ஆறு வருஷங்களுக்குச் சிறைத் தண்டனை விதித்தார்.

நீதியின் இரண்டாது பிரிவு பிரஜைகளின் உரிமைகளையும் கடமைகளையும் பற்றியது. அதை சிவில் நியாயம் என்பார்கள். குடும்பத்தில் பெற்றோர், மக்கள், கணவன், மனைவி முதலியோரின் பரஸ்பர உரிமைகளும் கடமைகளும், பிரஜைகளின் பரஸ்பர நடவடிக்கைகள், பிரஜைகளுக்கும் அரசாங்கத்திற்குமுள்ள தொடர்புகள் இவற்றைப்பற்றிய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறவேண்டியது சிவில் கோர்ட்டுகளின் வேலை. ஒப்பந்தங்கள்,

கம்பெனிச் சட்டங்கள் வரிகள், மானநஷ்ட நடவடிக்கைகள், எதிர் பாராமல் ஒரு பிரஜை மற்ருெருவருக்குத் தீங்கோ, நஷ்டமோ உண்டாக்கினல் அதற்கு நஷ்டஈடு வழக்குகள் இவையனைத்தும் சிவில் விவகாரங்களாவன. ஆரம்பத்தில் குற்றங்களை விசாரிக்கும் கோர்ட்டுகளுக்கும், அதில் வாதாடும் வழக்கறிஞர்களுக்கும் அதிகச் செல்வாக்கும் வருமானமும் இருந்தன. ஆனல், இக் காலத்தில் சிவில் வழக்குகள் மிகவும் பெருகியிருப்பதால் அவற்றை விசாரிக்கும் கோர்ட்டுகளும், நீதிபதிகளும், வக்கீல்களுமே நீதிபரிபாலனத்தில் முக்கிய அம்சங்களாகவிருக்கின்றனர்.

உரிமைகளும் கடமைகளும் பெரும்பாலும் சட்டங்கள் வாயிலாக நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனல், இந் நாட்டில் சில குடும்ப, சமூக விவகாரங்கள் பழைய சம்பிரதாயங்களை ஒட்டியே நீதி மன்றங்களால் தீர்மானிக்கப்படுகின்றன. ஹிந்துக்கள், முஸ்லீம்கள் முதலியோரின் சொத்துப் பிரிவினைகள், விவாகம், சுவீகாரம் முதலிய விவகாரங்கள் சமீப காலம்வரையில் இவ்வாறே தீர்மானிக் கப்பட்டுவந்தன. இப்பொழுது இந்துக்களின் சம்பிரதாயங்கள் ஒரு சட்டத்தொகுதியாக்கப்பட்டு அதை அனுசரித்தே நீதிபதிகள் தீர்ப்பளிக்கவேண்டும். முஸ்லீம்களின் விவகாரங்கள் இஸ்லாம் மதக் கோட்பாடுகளைக்கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன. இந்திய அரசியல் அமைப்பின் 44ஆவது விதியில், 'இந்தியா முழுதும் எல்லாப் பிரஜைகளுக்கும் பொதுவான ஒரு சிவில் சட்டத் தொகுதி உருவாக்க அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும்' என்று கூறப்பட்டிருக்கிறது.

பிரிட்டன், அமெரிக்காவிலும்கூடச் சில சிவில் வழக்குகள் பொதுச் சட்டம் என்று சம்பிரதாயமாக வந்துள்ள வழக்கப்படி முடிவு செய்யப்படுகின்றன. நஷ்ட ஈடு வழக்குகளில் பலவற்றுக்குச் சட்டங்களில்லை. பழைய தீர்ப்புகளின் ஆதாரங்களைக்கொண்டே முடிவு செய்யப்படுகின்றன.

சிவில் வழக்குகளைப் பாதிக்கப்பட்ட பிரஜையோ, அரசாங்கமோ, மற்ற ஸ்தாபனமோ தொடரவேண்டும். குற்ற வழக்குகளைப்போல் அரசாங்க அதிகாரிகள் பொறுப்பாளிகளல்லர்.

நீதிமன்றங்களில் வழக்குகள் ஒழுங்காக விசாரணை செய்யப் படுவதற்குத் தேர்ச்சிபெற்ற வழக்கறிஞர் குழு அத்தியாவசிய மாகும். குற்றவாளிகள்மீது குற்றம்சாட்டி, சாட்சிகளை விசாரணை செய்ய அரசாங்கத்தார் வழக்கறிஞரான உத்தியோகஸ்தர்களை நியமிக்கின்றனர். குற்றவாளி தரப்பில் வாதாடவும், எதிர் சாட்சி களைக் குறுக்கு விசாரணை செய்யவும், குற்றவாளிகளுக்குச் சாதக

மாகச் சாட்சிகளை கோர்ட்டுக்குக் கொண்டுவந்து விசாரிக்கவும் தேர்ச்சிபெற்ற வக்கீல்கள் வழக்காடுவதையே தமது தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். சிவில் வழக்குகளுக்கு அவ்வித வழக்கறிஞர் மிகவும் தேவை. ஓரளவு குற்றச் சட்டங்களை சாதாரணப் பிரஜை அறியலாம். சிவில் சட்டங்கள் மிகவும் சிக்கலாக இருப்பதால், வக்கீலில்லாமல் வழக்காட முடியாது.

ஆதலால் வக்கீல் தொழிலை நன்கு புரிய கல்லூரிகளில் சட்டப் படிப்புகளும், அதன்பின் தொழில் புரியும் வழக்கறிஞர்களிடம் சில காலம் சீடராக இருந்தும் தொழிலில் நுழையவேண்டுமென்று சட்டங்களிருக்கின்றன.

எல்லா நாடுகளிலும், வழக்கறிஞர்கள் அரசியலில் முக்கிய பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றனர். சட்ட அறிவும், பேச்சுத் திறமையும் அரசியலுக்குச் சாதகமான திறமைகள்.

கோர்ட்டுகளில் வழக்காடுவது மிகவும் சிரமமான காரியம். அதற்கு அதிகமாகச் செலவுமாகும். ஒரு பெரிய குற்றத்தில் மாட்டிக்கொண்ட நிரபராதிகூட ஆயிரக்கணக்காகச் செலவு செய்துதான் தப்பித்துக்கொள்ளவேண்டும். குற்றவாளி மிகவும் ஏழையாக இருந்தால், நீதிபதியே அரசாங்கத்தின் செலவில் அவனுக்கு வக்கீல் ஏற்பாடு செய்யலாம். ஆயினும், தனது செலவில் வாதாடும் வக்கீலுக்குச் சமமாகாது.

சிவில் வழக்குகளில் செலவு இதைவிட அதிகம்; காலதாமதமும் ஆகும். சில வழக்குகள் வருஷக்கணக்கில் நீளுவதை நாம் காண்கிறோம். சிவில் விவகாரத்தில் ஏழைகளுக்குப் பொதுச் செலவில் வக்கீல் வைத்து உதவுவது வழக்கமில்லை. இதனால் கொள்கையளவில் எல்லோருக்கும் ஒரே சட்டமும் நியாயமும் இருந்தபோதிலும், நடைமுறையில் ஏழைகளுக்கு அது கிட்டாமலிருந்தது. 1949-ல் பிரிட்டனில் இதற்காக ஒரு சட்டம் இயற்றப்பட்டு இப்பொழுது பிரஜையின் சக்திக் குறைவுக்குத் தகுந்தவாறு உதவியளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அமெரிக்காவிலும் இந்தியாவிலும் ஏழைகளுக்கு உதவி அவசியமென்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டபோதிலும், சட்டப்படி உரிமையும் அதற்கான ஏற்பாடுகளும் இனித்தான் உருவாகவேண்டும்.

# 18. நியாயாலயங்கள்

நீதி பரிபாலனத்திற்குப் பலவித நியாயாலயங்கள் தேவை ஒவ்வொரு நாட்டிலும் அவை பழைய சம்பிரதாயங்களாலும், புதிய சட்டங்களாலும் உருவாகியிருக்கின்றன. ஆதலால், நாம் ஆராயும் மூன்று அரசியல்களிலும் உள்ள நியாயாலயங்களைப்பற்றித் தனித் தனியாகக் குறிப்பிட்டுவிட்டு, முடிவில் சில பொது அம்சங்களைப் பற்றிக் கவனிப்போம்.

குற்றங்களை விசாரிக்க பிரிட்டனில் மூன்றுவித நியாயாலயங்கள் இருக்கின்றன. அடித்தளத்தில் மாஜிஸ்திரேட் கோர்ட்டுகள் சிறிய குற்றங்களை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதுடன், பெரிய குற்றங்களைப் பூர்வாங்க விசாரணை செய்து மேல்கோர்ட்டுகளுக்கு அனுப்புகின்றன. இந்தக் கோர்ட்டுகளில் சாதாரணமாக இரண்டி லிருந்து ஏழு மாஜிஸ்திரேட்டுகள் இருக்கின்றனர். அவர்களுக்கு விசேஷத் தகுதிகள் தேவையில்லை; சம்பளமுமில்லை; கௌரவம் மட்டுமே. ஆனால், சில பெரிய நகரங்களில் ஊதியம் பெறும் மாஜிஸ்டிரேட்டுகளும் நியமிக்கப்படுகின்றனர்.

17 வயதுக்குட்பட்ட யுவர்களை விசாரிப்பதற்கு யுவர்களின் மனோதத்துவத்தில் தேர்ச்சியடைந்த மாஜிஸ்டிரேட்டுகளின்கீழ்த் தனிக் கோர்ட்டுகள் இருக்கின்றன. அவ்வாறே குடும்பத் தகராறு களை விசாரிக்க ஓர் ஆணும், ஒரு பெண்ணும் நீதிபதிகளாகவுள்ள கோர்ட்டுகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பெரிய குற்றங்களை விசாரிக்க அடுத்தபடியாக செஷன்ஸ் கோர்ட்டுகள் எல்லா நகரங்களிலும், கௌன்டி என்று கூறப்படும் நமது ஜில்லாவைப்போன்ற பிரதேசங்களிலும் இயங்குகின்றன. கௌன்டிகளில் ஒரு சட்டத் தேர்ச்சியுள்ள நீதிபதியின் தலைமை யில் பல சாதாரண நீதிபதிகள் பணிபுரிகின்றனர். நகரங்களில் ஒரே நீதிபதியின்கீழ் இந்தக் கோர்ட்டுகள் நடைபெறுகின்றன.

செஷன்ஸ் கோர்ட்டுகளில் எல்லா வழக்குகளும் ஜூரிகளைக் கொண்டே விசாரிக்கப்படுகின்றன.

மிகவும் தீவிர தண்டனைகள் விதிக்கக்கூடிய கொடிய குற்றங்களைப்பற்றிய வழக்குகள் அஸ்ஸைஸ் கோர்ட்டுகளால் விசாரிக்கப்படுகின்றன. இவை பிரிட்டனின் உயர்நீதிமன்றத்தின் கிளைகள். அம் மன்றத்தின் நீதிபதி ஆங்காங்குச் சென்று விசாரணை செய்கிறார். அவ் விசாரணையும் ஜூரியின் உதவியோடு நடைபெறுகின்றது.

மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளின் தீர்ப்பிலிருந்து உயர்நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். செஷன்ஸ், அஸைஸ் கோர்ட்டுகளின் முடிவுகளுக்கெதிராக முறையீடு செய்துகொள்ளுவதற்குத் தனியாகக் கிரிமினல் அப்பீல் கோர்ட்டு உயர்நீதி மன்றத்தின் தனி விபாகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின்கீழ் மூன்று அல்லது ஐந்து நீதிபதிகள் கொண்ட ஒரு பெஞ்ச் (குழு) அப்பீல்களைக் கேட்டு முடிவு செய்யும். ஜூரிகள் பட்சபாதமாகவோ அக்கிரமமாகவோ தீர்ப்புக் கூறியிருப்பதாக நிரூபிக்கப்பட்டாலொழிய சம்பவங்களைப்பற்றி அப்பீல் கோர்ட்டில் வாதங்கள் கவனிக்கப்படமாட்டா. சட்ட விவகாரங்களே வாதிக்கப்படும்.

சிவில் விவகாரங்களுக்கு இரண்டுவித கோர்ட்டுகளிருக்கின்றன. சாதாரணமாக 400 பவுனுக்குக் குறைவான தொகையைப் பற்றிய விவகாரங்கள் கௌன்டி கோர்ட்டுகளிலும், அதற்கு மேற்பட்ட தொகைகள்பற்றிய விவகாரங்கள் உயர் நீதிமன்றத்திலும் விசாரிக்கப்படுகின்றன. தொகைக் கணக்கில்லாமல் சில சிக்கலான வழக்குகள் உயர்நீதி மன்றத்திலேயே கொண்டுவரப்பட வேண்டும்.

உயர் நீதிமன்றத்தில் சிவில் வழக்குகளின் அப்பீல்களை விசாரிக்கத் தனி விபாகமிருக்கிறது. அந்த அப்பீல் கோர்ட்டிலிருந்து சில மிக முக்கிய வழக்குகளுக்குப் பிரபுக்கள் சபைக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

அமெரிக்காவையும் பாரதத்தையும்போல் பிரிட்டனில் உத்தம நீதிமன்றம் ஒரு தனி ஸ்தாபனமன்று. உயர் நீதிமன்றம் அதன் முக்கிய உறுப்பாகும். அதில் 53 உயர் நீதிபதிகளிருக்கின்றனர், இவர்களுக்குத் தலைவர் பிரதம நீதிபதி. இவர்களைத் தவிர நீதி பரிபாலனத்துக்கு முடிவான பொறுப்புள்ள சான்ஸலர் பிரபுவும்

10 அப்பீல் பிரபுக்களும் பிரபுக்கள் சபையில் இருக்கின்றனர். உயர்நீதிமன்றத்தின் அப்பீல் கோர்ட்டுகளிலிருந்து பிரபுக்கள் சபைக்கு இரண்டாவது அப்பீல் செய்யும்பொழுது இவர்களிலிருந்து ஐந்து அல்லது ஏழு பிரபுக்கள் கொண்ட ஒரு பெஞ்சு வழக்கை விசாரிக்கும்.

நீதி பரிபாலனத்தின் முக்கிய அதிகாரியான சான்ஸலர் பிரபு பிரிட்டிஷ் மந்திரி சபையில் ஓர் அங்கத்தினராகவிருக்கிறார். பிரபுக்கள் சபையில் மற்ற நீதிபதிகளும் மெம்பராக இருக்கின்றனர். நீதி பரிபாலனம் நிர்வாகத்திற்குக்கீழ் இருக்கலாகாது என்ற கொள்கைக்கு இது முரண்பாடாகும். ஆயினும், சம்பிரதாயத்தால் இக் கொள்கை நடைமுறையில் அமலாகிவருகின்றது.

அமெரிக்க ஐக்கிய அரசியலில் இருவித கோர்ட்டுகள் இருக்கின்றன. ஒன்று ஐக்கிய கோர்ட்டுகள், மற்றொன்று இராஜ்ய கோர்ட்டுகள். ஐக்கிய சட்டமன்றமாகிய காங்கிரசின் சட்டங்களைப்பற்றி எழும் வழக்குகள், அரசியல் அமைப்பின் விதிகளின் அர்த்தத்தைப்பற்றிய தகராறுகள். இரண்டு இராஜ்யங்களுக்கு நடுவில் ஏற்படும் பிணக்குகள், ஓர் இராஜ்யத்தில் வசிப்பவர் மற்றோர் இராஜ்யத்திலிருக்கும் சொத்துகளைப்பற்றிக் கோரும் உரிமைகள், வெளிநாட்டு தூதர்களைப்பற்றிய பிரச்சினைகள் இவைகளெல்லாம் ஐக்கிய கோர்ட்டுகளில் முடிவு செய்யப்படும்.

ஐக்கிய கோர்ட்டுகளுக்கு மூன்று வரிசைகளுண்டு. அடியில் 90 ஜில்லா கோர்ட்டுகளும், சுங்கம் முதலிய தனி வழக்குகளுக்காகச் சில கோர்ட்டுகளும் உள்ளன. மேல் வரிசையில் இந்தக் கோர்ட்டுகளின் தீர்ப்புகளை ஆட்சேபித்து அப்பீல் செய்யும் கோர்ட்டுகள்; இம் மாதிரி 11 அப்பீல் கோர்ட்டுகள் இருக்கின்றன. இவற்றின் நீதிபதிகள் குறிப்பிட்ட இராஜ்யங்களுக்குச் சென்று அங்கு அப்பீல்களை விசாரணை செய்வார்கள்.

சாதாரணமாக எல்லா ஐக்கிய கோர்ட்டு வழக்குகளும் ஓர் அப்பீலோடு முடிவடையும். ஆனால், சில வழக்குகளின் அப்பீல்களை எல்லாக் கோர்ட்டுகளுக்கும் உச்சியில் இருக்கும் உத்தம நீதிமன்றம் விசாரணை செய்யும். மேலும் அமெரிக்க அரசியல் அமைப்பின் விதிகளின் அர்த்தத்தையும் போக்கையும் நிர்ணயிப்பது அதன் முக்கியப் பணியாகும்.

உத்தம நீதிமன்றத்தின் அமைப்பும் அதிகாரங்களும் அரசியல் அமைப்பின் 3 ஆவது விதியில் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இதை ஒட்டியே இந்திய உத்தம நீதிமன்றமும் அமைக்கப்

பட்டிருப்பதால் அந்த விதி முழுதும் கீழே மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

விதி III பிரிவு (1): ஐக்கிய நாடுகளின் நீதி பரிபாலன அதிகாரம் ஓர் உத்தம நீதிமன்றத்திடமும், அதன்கீழ் அவ்வப் போது காங்கிரசால் ஏற்படுத்தப்படும் கீழ்க் கோர்ட்டுகளிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. உத்தம நீதிமன்றம், கீழ்க்கோர்ட்டு கள் இவற்றின் நீதிபதிகள் ஒழுங்காகப் பணிபுரியும்வரை பதவியி லிருப்பார்கள். குறிப்பிட்ட தவணைகளில் அவர்கள் ஊதியம் பெறுவார்கள். எந்த நீதிபதியின் ஊதியமும் அவருடைய பதவி காலத்தில் குறைக்கப்படலாகாது.

பிரிவு (2): இந்தக் கோர்ட்டுகளின் அதிகாரம் இந்த அரசியல் அமைப்பின்கீழ் எழும் எல்லாச் சட்ட, சம்பிரதாய, வெளிநாட்டு உடன்படிக்கைகள் சம்பந்தமான வழக்குகளுக்கும் பொருந்தும். அவ்வாறே வெளிநாட்டுத் தூதர்கள், மந்திரிகள், கான்சல்கள்—கப்பல், கடல் உரிமைகளைப்பற்றிய பிரச்சினைகள்—ஐக்கிய அரசாங்கம் வாதி பிரதிவாதியாகும் வழக்குகள்—இரண்டு இராச் சியங்களுக்கும் நடுவில் ஏற்படும் தகராறுகள்—ஓர் இராச்சியத்திற் கும் மற்றோர் இராச்சியத்தின் பிரஜைக்கும் மத்தியில் உண்டாகும் பிணக்குகள்—வெவ்வேறு இராச்சியங்களின் பிரஜைகளுக்குள்எழும் வழக்குகள்—ஓர் இராச்சியத்தின் பிரஜைகள் மற்றோர் இராச்சியத் தின் நிலங்களின் பட்டா உரிமைகளைப்பற்றிய பிரச்சினைகள்—ஓர் இராச்சியத்திற்கோ, அதன் பிரஜைகளுக்கோ ஒரு வெளிநாட்டோடு அல்லது அதன் பிரஜைகளோடு ஏற்படும் தகராறுகள் இவையனைத் தும் இந்தக் கோர்ட்டுகளின் அதிகாரத்திற்குட்பட்டவையாவன.

பிரிவு (3): 'ஐக்கிய நாடுகளுக்கு எதிராக இராஜதுரோகம், அவைகளுக்கெதிராகப் போர் புரிவதும், அவற்றின் எதிரிகளோடு சேருவதும், அவர்களுக்கு உதவியும் ஆதரவுமளிப்பதுமேயாகும். அக் குற்றச் செயல்களுக்காக இரண்டு சாட்சிகள்மூலமோ, அல்லது திறந்த கோர்ட்டில் குற்றவாளிகள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளுவதாலோ நிரூபிக்கப்பட்டாலொழிய எவரும் தண்டனைக்குள்ளாகமாட்டார். இராஜதுரோகத்தின் தண்டனை காங்கிரசால் சட்டமூலமாக விதிக்கப்படும். ஆனால், எந்தத் தண்டனையும் குற்றவாளிகளோடு இரத்த சம்பந்தம் மட்டும் உள்ள வர்களைப் பாதிக்கலாகாது. சொத்துப் பறிமுதல் குற்றவாளியின் வாழ்நாள்களுக்குப் பிறகு செல்லுபடியாகாது.'

நீதிபதிகள் வாழ்நாள் முடியப் பதவியிலிருக்கக்கூடுமாதலால், நிர்வாகத்தின் தயவை எதிர்பார்க்கவேண்டியதில்லை. அவர்களைப்

பெருங் குற்றச்சாட்டு முறையால் மட்டுமே நீக்கக்கூடுமாதலால், பயத்திற்கும் இடமில்லை. நீதிபதிகளைப் பிரசிடென்டு செனெட்டின் அங்கீகாரத்துடன் நியமிக்கவேண்டும். ஆதலால், அமெரிக்க உத்தம நீதிமன்றமும் அதன்கீழுள்ள கோர்ட்டுகளும் சுதந்திரமாகவும் பட்சபாதமின்றியும் நீதி பரிபாலனம் செய்வதற்கு வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இராச்சியங்களில் கோர்ட்டுகள் ஏறக்குறைய பிரிட்டனைப் போல் அமைந்திருக்கின்றன. ஜூரி முறையும் அப்படியே வழக்கத்திலிருக்கின்றது. ஆனால், ஒரு பெரும் வேற்றுமை உண்டு அநேகமாக எல்லா இராச்சியங்களிலும் எல்லா வரிசைகளிலும் நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். சில இராச்சியங்களில் மட்டும் ஐக்கிய அரசாங்கத்தைப் போல கவர்னரால் மேல்சட்டசபையின் சம்மதத்தோடு நியமிக்கப்படுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டாலும் நியமிக்கப்பட்டாலும், அரசியல் கட்சிகளின் கொடைகளாகவே நீதிபதிகளின் நியமனங்கள் இருந்து வருகின்றன. பல அமெரிக்க அரசியல் அறிஞர்கள் இதைக் குறைகூறுகின்றனர். இதைப்பற்றி மக்காமி என்ற ஆசிரியர் பின்வருமாறு எழுதுகின்றார்:

‘மொத்தத்தில் நீதிபதிகள் அரசியல் நோக்குடன் நியமிக்கப் பட்டபோதிலும், பதவி ஏற்றபின் நியாயம் வழங்குவதில் கட்சிப் பட்சபாதம் காட்டுவதில்லை. ஆனால், கோர்ட்டுகளின் அலுவலர்களை நியமிப்பதிலும், கடனாளிகளின் சொத்துகளுக்கு ரிசீவர் வைப்பதிலும், மைனர்களுக்கு கார்டியன் நியமிப்பதிலும் தங்கள் கட்சிக்காரர்களுக்குச் சலுகை காட்டுகின்றனர். தீர்ப்புகளில் அதைப் புக விடுவதில்லை. நீதிபதிகள் எவ்விதத்தாலும் பட்சபாதம் காட்டுவது நீதிபரிபாலன தர்மத்திற்கு விரோதமென்று அமெரிக்க வழக்கறிஞர் சங்கம் வற்புறுத்துகிறது. ஆயினும், 1949-ல் 14 இராச்சியங்களில் நீதிபதிகள் தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்டனர்.’

இந்தியாவின் நியாயாலயங்கள் சில அம்சங்களில் அமெரிக்க முறையிலும், மற்ற அம்சங்களில் பிரிட்டிஷ் முறையிலும் அமைக்கப் பட்டிருக்கின்றன. நமது உத்தம நீதிமன்றம் அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டை அனுசரித்து அரசியல் அமைப்பில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன் பிரதம நீதிபதியை ஜனாதிபதி பிரதமரின் ஆலோசனையின்பேரில் நியமிக்கவேண்டும். மற்ற நீதிபதிகளைப் பிரதம நீதிபதியோடு ஆலோசித்து நியமிக்கவேண்டும். இராஜ்யங்களின் உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளை அதன் முக்கிய நீதிபதி, கவர்னர்,

பிரதம நீதிபதி அணைவரையும் ஆலோசித்து நியமிக்கவேண்டும். உத்தம நீதிமன்றத்தின் நீதிபதிகள் 65 வயது வரையிலும், இராஜ்ய உயர் நீதிமன்ற நீதிபதி 62 வயதுவரையிலும் பதவி வகிப் பார்கள். அவர்களைப் பெருங் குற்றச்சாட்டு முறையிலேதான் பதவியிலிருந்து நீக்கமுடியும்.

ஆனால், அமெரிக்க, இந்திய நியாயாலயங்களுக்குள் ஒரு முக்கிய வேற்றுமை உண்டு. இந்தியாவில் ஐக்கிய கோர்ட்டுகள், இராஜ்ய கோர்ட்டுகள் என்று பாகுபாடு இல்லை. நியாயாலயங்களைப் பொறுத்தவரையில் இந்தியா ஒரு தனி அரசாகவே காணப்படும். இங்குள்ள எல்லாக் கோர்ட்டுகளும் தமது எல்லைகளுக்குட்பட்டு எல்லா வழக்குகளையும் விசாரிக்கலாம். அவற்றின் தீர்ப்புகளிலிருந்து உயர் நீதிமன்றத்திற்கும், அரசியல்அமைப்பிலோ அல்லது சட்டங் களைப் பற்றியசிக்கலான பிரச்சினைகளிலோ, அடிப்படையான பிரஜா உரிமைகளைப்பற்றி ஏற்படும் வழக்குகளிலோ உத்தம நீதிமன்றத் திற்கு அப்பீல் செய்துகொள்ளலாம். அதன் தீர்ப்புகளுக்கு எல்லாக் கோர்ட்டுகளும் நிர்வாக அதிகாரிகளும் கட்டுப்படுவார்கள்.

இராஜ்யங்களில் ஜில்லா கோர்ட்டுகளும், அதன்கீழ் முன்சீப் கோர்ட்டுகளும் இருக்கின்றன. மிகவும் சிறிய வழக்குகளை விசாரிக்க நகரங்களில் பெஞ்சு கோர்ட்டுகளும், கிராமங்களில் பஞ்சாயத்து கோர்ட்டுகளும் இருக்கின்றன. பஞ்சாயத்து கோர்ட்டுகளுக்குப் பஞ்சாயத்துகள் அங்கத்தினர்களைத் தேர்ந் தெடுக்கின்றனர். பெஞ்சு கோர்ட்டுகளுக்கு ஜில்லா அல்லது மாகாண நீதிபதிகள் நியமிக்கின்றனர். இவர்களுக்கு விசேஷத் தகுதிகள் தேவையில்லை. முன்சீப்புகள், ஜில்லா நீதிபதிகளை இராஜ்ய அரசாங்கத்தார் உயர் நீதிமன்றத்தின் முக்கிய நீதிபதி யின் ஆலோசனையின்பேரில் நியமிக்கின்றனர்.

பிரிட்டிஷ் ஆட்சியில் பல குற்றங்களை நிர்வாக அதிகாரிகளான ஜில்லா கலெக்டர், டெபுடி கலெக்டர், தாசில்தார், சப் மாஜிஸ்திரேட் போன்றவர்கள் விசாரித்தனர். செஷன்ஸ் கோர்ட்டுகளும், அவை களுக்கு மேலுமே தனி நீதிபதிகளால் நடைபெற்றன. நிர்வாகத் திற்கும் போலீஸ் இலாகாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்த தால், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குப் பட்சபாதமற்ற நியாயம் கிடைக்கவில்லை என்ற சந்தேகமிருந்தது. முக்கியமாக அரசியல் குற்றம் சாற்றப் பட்டவர்களுக்கு அரசாங்கத்தின் மேலதிகாரி களின் இஷ்டப்படியே தண்டனை விதிக்கப்பட்டது. இது நீதி பரிபாலனக் கொள்கைக்கு விரோதமானதால், அரசியல் அமைப் பின் 50ஆவது விதியில் 'இராஜ்யத்தின் பொது சேவைகளில், நீதிபதிகளையும் நிர்வாகிகளையும் பிரித்துவிட நடவடிக்கை எடுத்துக்

கொள்ளவேண்டும் ' என்ற கொள்கை வற்புறுத்தப்பட்டது. இதை அனுசரித்துப் பல இராஜ்யங்களில் இப் பிரிவினை பூர்த்தியாகி விட்டது.

வக்கீல் தொழிலும் பிரிட்டிஷ் முறையிலேயே உருவாகியிருக்கிறது. ஆனால், ஒரு முக்கிய வேற்றுமை என்னவெனில், பிரிட்டனில் வழக்குகளைத் தயார் செய்வதற்கு சொலிஸிடர்களும், கோர்ட்டுகளில் வழக்காடுவதற்கு அட்வகேட்டுகளுமாக இரண்டு பாகமாகப் பிரிந்திருக்கிறது. இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, சென்னைகளில் சில சொலிஸிடர்கள் இருக்கின்றனர். சாதாரணமாக இருவித வேலைகளையும் வக்கீல்களே செய்கின்றனர். உயர் நீதிமன்றம், உத்தம நீதிமன்றத்தில் வழக்காடும் வக்கீல்கள் அட்வகேட் என்று அழைக்கப்படுகின்றனர். அகில இந்தியாவிலும், ஒவ்வோர் இராஜ்யத்திலும் வக்கீல் தொழிலுக்கு வேண்டிய தகுதிகளையும் படிப்புகளையும் நிர்ணயிக்கவும், தொழில் கண்ணியமாக நடைபெறுவதற்கு விதிகளை ஏற்படுத்தவும், அவற்றை மீறுவோர் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவுமாக சட்டமியற்றப்பட்டு, அதன்கீழ் 'பார் கௌன்சில்களும்' ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பெருங் குற்ற வழக்குகளில், குற்றவாளி மிகவும் ஏழைகளாக இருந்தால், நீதிபதியே அவனுக்காக ஒரு வக்கீலை அமர்த்தலாம். ஆனால், சாதாரணக் குற்ற வழக்குகளிலும் சிவில் வழக்குகளிலும் ஏழைகளுக்கு உதவி செய்ய இன்னும் வசதிகள் செய்யப்படவில்லை. அது அவசியமென்றுமட்டும் பொதுவாக அபிப்பிராயம் பெருகி வருகிறது.

பொதுவாக மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இந்தியாவில் கோர்ட்டுகள் நேர்மையாகவே நடைபெறுகின்றன என்றும், நீதிபதிகள் பட்சபாதமின்றி நியாயம் வழங்குகிறார்கள் என்றும் கூறலாம். ஆனால், இதற்குப் பல விலக்குகள் அதிகரித்து வருகின்றன என்று இலஞ்ச ஊழல் ஒழிப்புக் கமிட்டி கூறியிருக்கிறது. சில இராஜ்யங்களில் அரசியல்வாதிகள் நீதி பரிபாலனத்தில் தலையிடுகின்றனர். கீழ்க்கோர்ட்டுகளின் நீதிபதிகளில் சிலர் இலஞ்சத்திற்கும், பெரும் பதவியிலுள்ளோரின் தயவுக்கும் ஆளாகின்றனர். வக்கீல்களுக்கு வழக்குக் கொண்டுவந்து கொடுக்கும் தரகர்கள் பல இடங்களில் தவறான முறைகளை அனுசரிக்கின்றனர். சில வக்கீல்களும் நீதிபதிகளைக் கெடுக்கத் தயங்குவதில்லை என்ற புகார் அவ்வப்பொழுது எழுகின்றது. இக் குறைகளையெல்லாம் முளையிலேயே கிள்ளி எறிந்து, நமது நீதிபரிபாலனத்தை முற்றிலும் பரிசுத்தமாகச் செய்வது நாட்டின் வருங்கால வாழ்வுக்கு இன்றியமையாதது.

# 19. ஐக்கிய அரசியல்

பொதுவாக அரசியல் இருவகைப்பட்டது. ஒன்று தனி அல்லது ஓரதிகார அரசியல். அதில் எல்லா அரசியல் அதிகாரங்களும் ஒரு மத்திய சட்ட மன்றத்திலும் நிர்வாகத்திலும் குவிந்திருக்கும்; மற்ற எல்லா ஸ்தாபனங்களின் அதிகாரமும் சட்ட மன்றத்தின் சட்டங்களால் வரையறுக்கப்பட்டிருக்கும். அந்த அதிகாரங்களை அதிகரிக்கவும், குறைக்கவும், அந்த ஸ்தாபனங்களை அகற்றவும், வேறு ஸ்தாபனங்களை நிறுவவும் சட்டமன்றத்திற்கு அதிகாரமுண்டு. பிரிட்டனில் இவ்விதத் தனி ஆட்சியே இருக்கின்றது. ஃபிரான்ஸ், ஜப்பான், இத்தாலி, எகிப்து, சிலோன் முதலிய பல தேசங்களில் இவ்விதத் தனி அரசியலே இருக்கின்றன. தனி அரசியல் மக்கள் ஆட்சியாக இருக்கவேண்டும் என்கிற நியமமில்லை. அது மன்னராட்சியாகவும் எதேச்சாதிகாரியின் ஆட்சியாகவும் இருக்கலாம்.

ஐக்கிய ஆட்சியில் அரசியல் அதிகாரங்கள் ஒரு மத்திய அரசாங்கத்திற்குப் பல இராஜ்ய அரசாங்கங்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜெர்மனி சோவியத் ருஷியா, பாரதம் முதலிய நாடுகளில் இம் முறை உலவி வருகிறது. ஐக்கிய அரசியலும் மக்கள் ஆட்சியாகவோ, எதேச்சாதிகாரமாகவோ இருக்கலாம். ஆனால், எல்லா ஐக்கிய அரசியல்களுக்கும் எழுத்துமூலம் வரையறுக்கப்பட்ட ஓர் அரசியல் அமைப்பு அவசியம். தனி ஆட்சியோ பிரிட்டனைப்போல் சம்பிரதாயங்களைக் கொண்டே நடைபெறக்கூடும்.

அமெரிக்க, பாரத ஐக்கிய அரசியல்களின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் நன்கு விளக்குவது இந் நூலின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. ஆதலால், இதிலும் அடுத்த மூன்று அத்தியாயங்களிலும் இவை ஆராயப்படும்.

1776 ஜூலை 12-ல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட பதின்மூன்று அமெரிக்க மாகாணங்கள் (காலனிகள்) பிரிட்டிஷ்

ஆட்சியை உதறித் தள்ளிவிட்டு, சுதந்திரப் பிரகடனம் செய்து, ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டு அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொண்டன. அக் கூட்டு அரசாங்கத்தில் (கான்ஃபெடரேஷனில்) மத்திய அரசாங்கம் இராஜ்யங்களின் பிரதிநிதியாகவே—ஏஜெண்டாகவே கருதப்பட்டது. ஒரு மத்திய சட்டமன்றம் (காங்கிரஸ்) அமைக்கப் பட்டபோதிலும், அதன் சட்டங்களை அமல் செய்வதற்குக் கூட்டு அரசாங்கத்திற்கு நேரில் அதிகாரமுமில்லை; சேவகர்களுமில்லை. இராஜ்ய அரசாங்கங்கள் மூலமாகவே செய்யவேண்டும். அதற்குத் தானுகவே வரி விதிப்பதற்கோ, கடன் வாங்குவதற்கோ அதிகார மில்லை. இராஜ்யங்களின் கொடைகளைக்கொண்டே சமாளிக்க வேண்டும். சைனியத்திற்கும் இராஜ்யங்களின் தயவையே நாட வேண்டும். எல்லா இராஜ்யங்களுக்கும் சமப் பிரதிநிதித்துவம் இருந்ததால், பெரிய இராஜ்யங்களின் ஒத்துழைப்பு மனப்பூர்வமாகக் கிடைக்கவில்லை.

இவ்விதக் கூட்டாட்சி ஓர் உண்மையான அரசியலாகக் கருதப்படத் தகுந்ததன்று. இது சுதந்திர அரசாங்கங்கள் ஒப்பந்தம் செய்துகொண்டு சில விவகாரங்களைச் செய்வதுபோலாகும். என்றைக்கும் கூட்டாட்சி எளிதில் கலைந்துபோகலாம். சில முக்கிய இராஜ்யங்கள் விலகிவிட்டால், அவைகளைத் தடுக்க முடியாது. இக் காரணங்களால் இந்த இராஜ்யங்களின் பிரதிநிதிகள் 1787-ல் மீண்டும் கூடிக் கூட்டு அரசியலை மாற்றி ஐக்கிய அரசியலாக்கினர்.

ஐக்கிய அரசியலின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு: அதில் ஒரு மத்திய அரசாங்கமும் இராஜ்ய அரசாங்கங்களுமிருக்க வேண்டும். சட்டமியற்றுதல், வரி விதித்தல், நிர்வாகம், அரசாங்க சேவைகளை ஏற்படுத்தி சேவகர்களை நியமித்தல் போன்ற முக்கிய அரசியல் விவகாரங்களில் மத்திய, இராஜ்ய அரசாங்கங்களுக்குத் தனித்தனியாகச் சுதந்திர உரிமைகளும் அதிகாரங்களும் தெளிவாக எழுத்துமூலம் வரையறுக்கப்படவேண்டும். இந்த அதிகாரப் பிரிவினை ஒரு சுதந்திர நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படவேண்டும். மத்திய, இராஜ்ய அரசாங்கங்கள் பொது மக்களுக்கு நேரில் பொறுப்பாளிகளாகவேண்டும். இதற்காக அவற்றின் சட்ட மன்றங்களின் ஒரு சபையாவது நேரில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அந்தச் சபையின் சம்மதமின்றி ஐக்கிய அரசாங்கத்தின் சட்டங்களைச் செய்யலாகாது; வரி விதிக்கலாகாது. தங்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற மத்திய, இராஜ்ய அரசாங்க நிர்வாகங்கள் சுதந்திரமாக நடைபெற வேண்டும். தங்கள் சட்டங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றக்

தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட பொக்கிஷமும் அரசாங்க சேவைகளுமிருக்கவேண்டும்.

அமெரிக்க, பாரத அரசியல்களில் இந்த அம்சங்களனைத்தும் காணப்படுகின்றன. ஆதலால், அவை இரண்டும் உண்மையான ஐக்கிய அரசியல்களென்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமைகளும் பெரிதானவை. ஆதலால், இவ்விரண்டு அரசியல்களையும் ஒரே பெயரால் குறிப்பிடுவது சரியன்றென்று சில தத்துவஞானிகள் கருதுகின்றனர். அமெரிக்க அரசியலே உண்மையான ஐக்கியமென்றும், பாரத அரசியல் அரைகுறையான ஐக்கியமென்றும் கூறுகின்றனர். இது வீண் வாக்குவாதம். எந்த ஐக்கிய அரசியலிலும் நாட்டின் மக்களிடமே முடிவான அரசுரிமை உள்ளது. மத்திய, இராஜ்ய அரசாங்கங்கள் எவ்வளவு சுதந்திரமாக இருப்பினும், அவற்றுள் நெருங்கிய தொடர்பு அவசியமாகும். யுத்தம் போன்ற நெருக்கடியான காலங்களில் அரசியல் அமைப்பு எப்படி இருப்பினும், அது ஓர் தனி அரசியல்போலவே நடைபெறவேண்டியிருக்கும். ஆதலால், மத்திய, இராஜ்ய அரசாங்கங்களின் சுதந்திரம் சாதாரணமாக வரையறுக்கப்பட்டிருந்தும், பல துறைகளில் மத்திய அரசாங்கம் இராஜ்ய அரசாங்கங்களின் ஒத்துழைப்பாலும், இராஜ்ய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் உதவியாலும் நடைபெறவேண்டும்.

அமெரிக்க, பாரத ஐக்கிய அரசியல்களின் முதல் வேற்றுமை அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பொறுத்ததாகும். முதன் முதலில் அமெரிக்க அமைப்பில் ஏழு விதிகள்மட்டுமே இருந்தன. முதல் விதி காங்கிரஸைப்பற்றியது. 10 பிரிவுகளில் அதன் இரு சபைகளின் அங்கத்தினர்கள், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை, அதிகாரங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது விதியில் பிரசிடென்டின் தேர்தல், அதிகாரம், நிர்வாக நிபந்தனைகள் 4 பிரிவுகளில் வர்ணிக்கப்பட்டன. மூன்றுவது விதியில் உத்தம நீதி மன்றமும், நான்காவதில் ஐக்கிய அரசாங்கத்தின் சில பொது அம்சங்களும், ஐந்தாவதில் அரசியல் அமைப்பின் திருத்த முறையும், ஆருவதில் ஐக்கிய ஸ்தானங்கள், சட்டங்கள், அதிகாரிகள் இவற்றின் பிராதான்யமும், ஏழாவது விதியில் 9 இராஜ்யங்கள் சம்மதித்தவுடன் அமைப்பு அமலாகுமென்றும் கூறப்பட்டுள்ளன.

இந்த அமைப்பை ஒப்புக்கொள்ளும்பொழுதே பல இராஜ்யங்கள் அடிப்படையான உரிமைகளின் பட்டியலும் சேர்க்கப்படவேண்டும் என்று நிபந்தனைகள் செய்தன ; அதை ஏற்று, அடுத்த

10 திருத்த விதிகள் ஏற்கெனவே ஆராயப்பட்ட பிரஜா உரிமைகளைப் பற்றியவை.

இதற்குப் பின்னர் 12 திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆனால், அவையனைத்தும் சாதாரண பிரச்சினைகளைப் பற்றியவை.

ஆக மொத்தம் அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் அமைப்பு முழுதும் 29 விதிகளில் அடங்கியிருக்கின்றன.

இதற்கு நேர்மாருக இந்திய அரசியல் அமைப்பில் 22 பாகங்கள், 395 விதிகள், 9 அட்டவணைகள் இருக்கின்றன.

இவ்விதம் நீண்ட அமைப்புச் சட்டம் செய்வதற்குப் பல காரணங்கள் இருந்தன. அமெரிக்க அரசியல் அமைப்பில் ஐக்கிய அரசாங்கத்தின் உறுப்புகளும், அதிகாரங்களுமே விவரிக்கப்பட்டிருக்கின்றன. இராஜ்யங்கள் தங்கள் அரசியல் அமைப்புகளை இஷ்டப்படி செய்துகொள்ளும் உரிமையை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. இந் நாட்டிலோ, 1935-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் மத்திய, மாகாண அரசாங்கங்களையும் அவைகளுக்குள்ள பரஸ்பர சம்பந்தங்களையும் விவரித்து ஓர் நீண்ட அரசியல் சட்டம் செய்திருந்தது. அதை அனுசரித்தே அரசியல் நிர்ணய சபையும் தற்போதைய அரசியல் அமைப்பை இயற்றியது. இங்குப் பழைய பிரிட்டிஷ் மாகாணங்கள், சுதேச சமஸ்தானங்கள், மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழிருந்த பிரதேசங்கள் அனைத்தையும் ஓர் அரசியல் திட்டத்தின்கீழ் கொண்டுவரவேண்டியிருந்தது.

மேலும், இராஜ்யங்களுக்கு அமெரிக்க இராஜ்யங்களைப்போல் தங்கள் விவகாரங்களில் பூர்ண சுதந்திரம் கொடுத்தால் நாட்டின் ஒற்றுமை குன்றி, அரசியல் கலைந்துபோகும் என்ற பயம் மிகுந்திருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியில் சுதேச சமஸ்தானங்கள் தாங்கள் முற்றிலும் சுதந்திர நாடுகள் என்றும், பிரிட்டிஷ் மன்னரோடு ஒப்பந்தம் மூலமாகச் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருப்பதாகவும் வாதித்தன. திருவாங்கூர், போபால், ஹைதராபாத் இராஜ்யங்கள் பாரத ஐக்கிய அரசியலில் சேர முதலில் மறுத்தன. சாம, தான, பேத, தண்ட முறைகளைக் கையாண்டு சர்தார் படேல் அவைகளை ஐக்கிய அரசியலுக்குட்பட்ட இராஜ்யங்களாகச் செய்தார்.

பாரத அரசியலுக்குட்பட்ட இராஜ்யங்களுக்கும், அமெரிக்க இராஜ்யங்களுக்கும் உள்ள முக்கிய வேற்றுமைகள் பின்வருவன: ஏற்கெனவே கூறியபடி அமெரிக்க இராஜ்யங்கள் தங்களுடைய

இராஜ்ய அரசியல் அமைப்பைத் தாமே செய்துகொள்ளலாம். இந்திய இராஜ்யங்கள் பொதுவான அரசியல் அமைப்பினுல் கட்டுப் பட்டிருக்கின்றன.

அமெரிக்க ஐக்கிய அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு காங்கிரசின் இரு சபைகளும் மூன்றில் இரண்டு பெரும்பாலரால் நிறைவேற்றப்பட்டு, நாலில் மூன்று இராஜ்யங்களால் ஆமோதிக் கப்படவேண்டும். பாரத அரசியல் அமைப்பில் பல விதிகளைப் பார்லிமென்டின் இரு சபைகளும் மொத்த அங்கத்தினர்களில் பெரும்பாலரும், கூட்டத்தில் கலந்துகொள்வோரில் மூன்றில் இரண்டு பங்கும் ஆதரித்தால் திருத்திவிடலாம். சில விதிகளுக்கு மட்டும் இராஜ்யங்களில் பாதியாவது ஆமோதிக்கவேண்டும்.

அமெரிக்க இராஜ்யங்கள் ஐக்கிய அரசாங்கத்தைப்போலவே தங்கள் கவர்னர்களைப் பொதுத் தேர்தல் மூலமாக நியமித்துக் கொள்ளுகின்றன. இங்கு ஜனுதிபதி கவர்னர்களை நியமிக்கிருர்.

ஐக்கிய, இராஜ்ய அரசாங்கங்கள் அமெரிக்காவில் தங்கள் தங்கள் நிர்வாக உத்தியோகஸ்தர்களைத் தாங்களே நியமித்துக் கொள்ளுகின்றன. இந்தியாவில் பல சேவைகள் பொதுவாக வுள்ளன. நீதி பரிபாலனமும் அமெரிக்காவில் பிரிந்தும் பாரதத்தில் ஒன்ருகவும் இருக்கிறது.

சட்டம் இயற்றுவதில் அமெரிக்க காங்கிரசுக்கும் இராஜ்யங் களுக்கும் அதிகாரங்கள் முற்றிலும் பங்கீடு செய்யப்பட்டிருக் கின்றன. பாரதத்தில் பல விஷயங்கள் ஓர் பொதுப் பட்டியலில் அடங்கியுள்ளன.

ஓர் இராஜ்யம் வெளிநாட்டின் ஆக்கிரமிப்பாலோ, உள்நாட்டுப் புரட்சியாலோ முற்றிலும் சீர்குலைந்து அதன் அரசாங்கம் நடை பெருமல் போனுலொழிய அமெரிக்க ஐக்கிய அரசாங்கம் இராஜ் யத்தில் குறுக்கிட அதிகாரமில்லை. இந்தியாவிலோ சரியான மந்திரி சபை அமைப்பதற்குச் சிறிது சிரமம் இருந்தால்கூட ஜனுதிபதி இராஜ்ய அரசாங்கத்தைக் கலைத்துவிட்டுத் தமது ஆட்சியை ஏற்படுத்தலாம்.

மற்றும் பல துறைகளில் பாரத இராச்சியங்கள் மத்திய அரசாங் கத்திற்கு உட்பட்டிருக்கின்றன. ஆதலால், பாரத ஐக்கிய அரசியல் ஒருவித சாம்ராஜ்ய ஐக்கிய அரசியல் என்று கூறத்தகும்.

# 20. ஐக்கிய—இராஜ்ய அதிகாரப் பிரிவினை

ஐக்கிய, இராஜ்ய அரசாங்கங்களுக்குள் எல்லா அரசியல் அதிகாரங்களையும் பங்கீடு செய்வது ஐக்கிய அரசியலுக்கு அடிப்படையானது. அமெரிக்க அரசியலமைப்பில் ஐக்கிய அரசாங்கத்தின் அதிகாரங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பட்டியலுக்குள் அடங்காத எல்லா அதிகாரங்களும் இராஜ்ய அரசாங்கங்களுக்குச் சேர்ந்தவை. பொதுவாக எந்தெந்த விஷயங்களில் ஐக்கிய சட்டமன்றம் சட்டம் இயற்றக்கூடுமோ, அவற்றின் மீது நிர்வாக அதிகாரமுண்டு என்பது ஐக்கிய அரசியல் கொள்கை. இதைச் சட்ட, நிர்வாக, அதிகார சமப் பரப்பு எனலாம். ஆனால், இதற்கு விதிவிலக்குகள் உண்டு. இராஜ்ய அரசாங்கங்களின் சம்மதத்தின்பேரில் ஐக்கிய காங்கிரசின் சட்டத்தால் ஏற்படும் சில பொறுப்புகள் அவர்களிடம் சமர்ப்பிக்கப்படலாம். அவ்வாறே இராஜ்ய அரசாங்கத்தின் சில அலுவல்களை ஐக்கிய அரசாங்கத்தின் சம்மதத்தோடு அதன் அதிகாரிகளிடம் ஒப்புவிக்கப்படக்கூடும். இதற்கு ஒரு பெருஞ் சான்று 'டென்னெஸி வாலி அதாரிடி' என்ற பெரும் ஸ்தாபனமாகும். பல இராஜ்யங்களுக்குப் பொதுவாக ஐக்கிய அரசாங்கம், ஒரு பெரும் நதிக்கு அணைகள் போட்டு, மின்சாரத்திற்கும் பாசனத்திற்கும் அதன் தண்ணீரைப் பயன்படுத்தி, அந்தப் பிரதேசங்களின் வளத்தைப் பெருக்க ஏராளமான பண உதவியுடன் ஓர் ஸ்தாபனத்தை நிறுவியுள்ளது. இந்த ஸ்தாபனத்திற்கு அந்த நதியை ஒட்டிய இராஜ்யங்களெல்லாம் சட்டமூலம் தங்கள் அதிகாரங்களை வேண்டுமளவு விட்டுக்கொடுத்திருக்கின்றன.

அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் அதிகாரங்கள் அரசியல் அமைப்பின் முதல் விதியின் 8ஆவது பிரிவில் அடங்கியுள்ளன. 9ஆவது பிரிவில் ஐக்கிய அரசாங்கம் செய்யக்கூடாத காரியங்களும், 10ஆவது பிரிவில் இராச்சிய அரசாங்கங்கள் செய்யக்

கூடாத காரியங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. விதி (1) 8ஆவது பிரிவு; காங்கிரசின் அதிகாரங்கள் பின்வருமாறு :

(1) வரிகள், சுங்கங்கள், தீர்வை, உற்பத்திக் கட்டணம் முதலியவற்றை விதிக்கவும், கடன்களைத் தீர்க்கவும் பொதுப் பாதுகாப்புக்கும், பொதுமக்களின் நலத்திற்கும் ஏற்பாடு செய்யவும்; ஆனால், எல்லாவித வரிகள், சுங்கங்கள், தீர்வைகள், கட்டணங்கள் ஐக்கிய நாடுகளின் எல்லாப் பிரதேசங்களுக்கும் ஒரே மாதிரி இருக்க வேண்டும்.

(2) ஐக்கிய அரசாங்கத்தின் பொறுப்பின்பேரில் கடன் வாங்க;

(3) அயல் நாடுகளுடன். இராச்சியங்கள் பரஸ்பரமாக இந்திய ஆதிவாசிகளுடன் வியாபாரத்தை ஒழுங்குபடுத்த ;

(4) பிரஜா உரிமை பெறுவதற்கும், நபர்களும் ஸ்தாபனங்களும் கடன் தீர்க்க முடியாமல் நொடிந்துபோவதைப்பற்றியும் நாடெங்கும் ஒரேவிதமான விதிகள் செய்ய ;

(5) நாணயத்தை நிறுவ, அதன் பெறுமானத்தையும் அந்நிய நாணயத்தின் பெறுமானத்தையும் நிர்ணயிக்க, நிறுத்தல் அளத்தல் அளவுகளை நிதானிக்க ;

(6) அரசாங்கப் பத்திரங்களுக்கும் நாணயங்களுக்கும் போலிப் பிரதிகள் செய்வோருக்குத் தண்டனை விதிக்க ;

(7) தபால் நிலையங்களையும் தபால் சாலைகளையும் நிறுவ ;

(8) விஞ்ஞானத்தையும் கலைகளையும் வளர்ப்பதற்காக எழுத்தாளர்களுக்கும் புதிய கருவிகள், முறைகள் கண்டுபிடிப்போருக்கும் தங்கள் நூல்களிலும் சூட்சுமங்களிலும் குறிப்பிட்ட காலத்திற்கு ஏகபோக உரிமை வழங்க ;

(9) உத்தம நீதிமன்றத்திற்குக் கீழ்ப்பட்ட நியாயாலயங்கள் நிறுவ ;

(10) திறந்த கடலில் கொள்ளையடிப்பதற்கும் சர்வதேச சட்டங்களை மீறுவதற்கும் தண்டனை விதிக்க ;

(11) போர்ப் பிரகடனம் செய்யப் பகைவர்கள் கப்பல்களைப் பறிப்பதற்கும், பதிலுக்குப் பதில் செய்வதற்கும் பத்திரங்கள் வழங்க;

(12) சைனியங்களைத் திரட்டிப் பராமரிக்க; ஆனால், இரண்டு வருஷங்களுக்குமேல் அவைகளுக்கு வேண்டிய செலவை அனுமதிக்கலாகாது ;

(13) ஓர் கப்பற் படை நிர்மாணித்துப் பராமரிக்க ;

(14) தரை, கப்பற் படைகளின் அமைப்புகளையும் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தி விதிகள் செய்ய ;

(15) ஐக்கிய அரசாங்கத்தின் சட்டங்களை அமல் செய்யவும், கலகங்களை அடக்கவும், ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும், குடிப்படைகளை உபயோகிக்கவும் ஏற்பாடு செய்ய;

(16) குடிப்படைகளைத் திரட்டவும், அவைகளுக்கு ஆயுதங்கள் வழங்கவும் பயிற்சி கொடுக்கவும் ஐக்கிய அரசாங்கத்தின் ஆணையில் எந்த பாகங்கள் இருக்கவேண்டுமென்றும் நிர்ணயிக்க ; ஆனால், அவற்றின் உத்தியோகஸ்தர்களை நியமிப்பதும், காங்கிரசின் சட்டப்படி பயிற்சி அளிப்பதும் இராச்சியங்களின் அதிகாரங்களாக ஒதுக்கப்படும் ;

(17) இராச்சியங்களின் சம்மதத்தோடும் காங்கிரசின் அனுமதியோடும் ஐக்கிய அரசாங்கத்தின் இருப்பிடமான, நிர்ணயிக்கப்படும் பத்து சதுர மைலுக்கு மேற்படாத பிரதேசத்தைப் பற்றியும் இராச்சியங்களின் சட்டசபைகளின் சம்மதத்துடன் அவற்றின் எல்லைக்குட்பட்ட இடங்களைக் கோட்டைகள், ஆயுத கிடங்குகள், ஆயுத உற்பத்தி சாலைகள், துறைமுகங்களில் கப்பல் பட்டறைகள், மற்றக் கட்டடங்கள்மீதும் ஏகபோக சட்ட அதிகாரங்களை வகிக்க ;

(18) மேற்கண்ட அதிகாரங்களை அமல் செய்வதற்கும், இந்த அரசியல் அமைப்பின்மூலம் ஐக்கிய அரசாங்கத்திடமும், இலாகாக்களிலும், அதிகாரிகளிடமும் ஒப்புவிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறையில் பிரயோகிக்கவும் வேண்டிய எல்லாச் சட்டங்களையும் செய்யவும்.

காங்கிரசிற்கு அதிகாரமில்லாத செயல்களாவன :

(1) 1808ஆம் ஆண்டு வரையில் எந்த இராச்சியமும் இஷ்டப்படி தனக்கு விருப்பமான நபர்களை வெளியிலிருந்து வரவழைத்துக்கொள்ள தடுக்கலாகாது. ஆனால், ஓர் நபருக்கு 10 டாலருக்கு மேற்படாமல் சுங்கம் விதிக்கலாம்.

(2) கலகத்தாலோ, வெளிநாட்டு ஆக்கிரமிப்பாலோ பொது மக்களின் பாதுகாப்புக்கு அத்தியாவசியமான காலங்களில் தவிர சிறை வைத்திருப்போரை நீதி மன்றத்திற்குக் கொண்டுவரும்படி இடும் கட்டளை (ஹைபியஸ் கார்பஸ் ரிட்) நிறுத்திவைக்கப்படலாகாது.

(3) நடந்துபோன காரியத்தைப்பற்றிச் சட்டம் செய்யலாகாது,

(4) நபர் வரியோ அல்லது இதர நேர்முக வரியோ பின் விதிப்படி எடுக்கப்படும் ஜனக்கணக்கின் விகிதாசாரப்படி அல்லது விதிக்கலாகாது.

(5) எந்த இராச்சியத்திலிருந்தும் ஏற்றுமதியாகும் சரக்குகள் பேரில் சுங்கம் விதிக்கலாகாது.

(6) வியாபாரக் கட்டுப்பாட்டு விதிகளில் ஓர் இராச்சியத்திற்கு மற்ற இராச்சியங்களுக்கில்லாத சலுகைகள் கொடுக்கலாகாது. எந்த இராச்சியத்தின் துறைமுகத்திலிருந்தும் புறப்படும் கப்பல்கள் மற்றோர் இராச்சியத்தின் துறைமுகத்திற்குச் செல்லவேண்டு மென்றோ, தீர்வைகள் செலுத்தவேண்டுமென்றோ நிர்ப்பந்திக்கப் படலாகாது.

(7) சட்டத்தால் அனுமதிக்கப்பட்டாலன்றி பொக்கிஷத்தி லிருந்து பணமெடுக்கக்கூடாது. அவ்வப்போது பொது வரவு செலவுக் கணக்குகள் பிரசுரிக்கப்படவேண்டும்.

(8) ஐக்கிய அரசாங்கத்தால் எவ்விதப் பிரபுத்துவப் பட்டமும் அளிக்கப்படலாகாது. அதன்கீழ் உத்தியோகமோ இதர பொறுப்போ வகிக்கும் எவரும் வேறு அரசன் இராஜபுருஷன் அல்லது அரசாங்கத்திடமிருந்து காங்கிரசின் சம்மதமில்லாமல் எவ்விதக் கொடை, ஊதியம், உத்தியோகம் அல்லது பட்டமும் பெறலாகாது.

அதே விதி 10ஆவது பிரிவில் இராச்சியங்கள் செய்யக்கூடாத காரியங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஐக்கிய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் விஷயங்களில் அவற்றிற்கு நிர்வாக அதிகாரங் களில்லை என்று கூறத் தேவையில்லை.

(1) எந்த இராச்சியமும் எவ்வித உடன்படிக்கையும், சந்தியும், கூட்டாட்சியும் செய்யலாகாது ; பகைவர் கப்பல்களைப் பறிக்கவும், பதிலுக்குப் பதில் வாங்கவும் பத்திரம் வழங்கலாகாது ; நாணய முத்திரை கூடாது; தங்க வெள்ளி நாணயங்களைத் தவிர, இதர வகையில் கடன் தீர்க்கக் கட்டாயப்படுத்தலாகாது ; நடந்துபோன காரியங்களைப்பற்றிச் சட்டம் செய்யலாகாது. ஒப்பந்தங்களின் பொறுப்புகளைப் பாதித்துச் சட்டமியற்றலாகாது ; பிரபுத்துவப் பட்ட மளிக்கலாகாது ;

(2) எந்த இராச்சியமும் காங்கிரசின் அனுமதியின்றி ஏற்றுமதி இறக்குமதிமீது தனது மேற்பார்வைக்குத் தேவையான தொகைக்கு மேல் சுங்கமோ, தீர்வையோ, வரியோ விதிக்கலாகாது. இதுகாறும்

விதித்திருக்கும் அவ்விதக் கட்டணங்களின் நிகரத் தொகை ஐக்கிய அரசாங்கத்தின் பொக்கிஷத்திற்குச் சேரும். அவ்விதச் சட்டங்கள் காங்கிரசின் கட்டுப்பாடுகளுக்கும் மாற்றங்களுக்கும் உட்பட்டிருக்கும்.

(3) காங்கிரசின் சம்மதமின்றி எந்த இராச்சியமும் கப்பல் வரி விதிக்கவோ, துருப்புகள் வைத்துக்கொள்ளவோ, சமாதான காலங்களில் போர்க்கப்பல்களைப் பராமரிக்கவோ, இதர இராச்சியத்துடனோ அன்னிய நாட்டுடனோ ஒப்பந்தம் செய்துகொள்ளவோ, ஆக்கிரமிக்கப்பட்டுத் தாமதமின்றிப் பாதுகாப்பு அவசியமில்லாத பொழுது போர் தொடுக்கவோ கூடாது:

4ஆவது விதியில் ஐக்கிய இராச்சிய அரசாங்கங்களுக்குப் பொதுவான கடமைகளும் உரிமைகளும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

(1) எந்த இராச்சியத்திலும் மற்ற இராச்சியங்களின் சட்டங்கள், பொதுப் பத்திரங்கள், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முழு மதிப்பும் அங்கீகாரமும் அளிக்கப்படவேண்டும். அச் சட்டங்கள் பத்திரங்கள், நடவடிக்கைகளை எவ்விதம் நிரூபிக்கப்படவேண்டுமென்றும், அதன் பலன்களும் காங்கிரசின் பொதுச் சட்டங்கள் நிர்ணயிக்கும் ;

(2) எந்த இராஜ்யத்தின் பிரஜைகளுக்கும் மற்ற எல்லா இராஜ்யங்களின் உரிமைகளும், பாதுகாப்புகளும் சொந்தமாகும் ; ஓர் இராச்சியத்தில் தேசத்துரோகம் சதி அல்லது மற்றக் குற்றச் சாட்டுக்குட்பட்டிருப்பவன் அங்கிருந்து தப்பியோடி வேறு இராஜ்யத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அவன் தப்பியோடின இராஜ்யத்தின் நிர்வாக அதிகாரிகளின் கோரிக்கையின்பேரில் அவனது குற்றத்தை விசாரிக்க உரிமையுள்ள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

(3) ஐக்கியத்திற்குள் புது இராஜ்யங்கள் காங்கிரசால் ஏற்கப்படலாம். ஆனால், ஓர் இராஜ்யத்தின் பாகத்திலோ, இரண்டு மூன்று இராஜ்யங்களை இணைத்தோ, அவற்றின் பாகங்களைச் சேர்த்தோ பாதிக்கப்பட்ட இராஜ்யங்களின் சட்ட மன்றங்களும், காங்கிரசும் சம்மதித்தாலொழிய உருவாக்கவோ, ஏற்படுத்தவோ கூடாது.

ஐக்கியத்திற்குச் சொந்தமான பிரதேசங்களைப்பற்றியும், அவற்றின் சொத்துகளைப்பற்றியும் விதிகளும் சட்டதிட்டங்களும் செய்ய காங்கிரசுக்கு அதிகாரமுண்டு. ஐக்கிய இராச்சிய அரசாங்

களுக்குஉள்ள உரிமைகளை பாதிக்கும்படி இவ் வரசியல் அமைப்பின் விதிகள் வியாக்கியானம் செய்யப்படலாகாது.

(4) ஐக்கியத்திற்குட்பட்ட எல்லா இராச்சியங்களுக்கும் குடியரசான அரசியல் முறையை நிலைநிறுத்த ஐக்கிய அரசாங்கம் உத்தரவாதமாகும். ஆக்கிரமிப்பிலிருந்து ஒவ்வோர் இராச்சியத்தையும் பாதுகாக்கவேண்டும். இராச்சிய சட்டமன்றமோ, அது கூடாதபொழுது நிர்வாகமோ வேண்டினுல் உள்நாட்டு பலாத்காரத்திற்கெதிராகவும் பாதுகாப்பளிக்கவேண்டும்.

அரசியல் அமைப்பின்படி அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் அதிகாரங்கள் குறைவாகவும் இராஜ்யங்களின் அதிகாரங்கள் அதிகமாகவுமிருந்தபோதிலும் சென்ற 190 ஆண்டுகளில் நாடு அடைந்த மாறுதல்களால் இப் பங்கீடு குலைந்து ஐக்கிய அரசாங்கத்தின் ஆதிக்கம் பெருகியிருக்கிறது. இராஜ்யங்களின் பரஸ்பர வியாபாரத்தின்மீது கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் அநேகமாக எல்லாப் பொருளாதாரத் துறைகளிலும் ஐக்கிய அரசாங்கத்தின் பொறுப்புகளைப் பெருக்கியிருக்கிறது. பல இராஜ்யங்கள் வழியாகச் செல்லும் இரயில், மோட்டார், கப்பல்களின் விகிதங்களும், கடமைகளும் காங்கிரசின் சட்டங்களுக்குட்பட்டிருக்கின்றன. உத்தம நீதிமன்றத்தின் வியாக்கியானத்தால், ஓர் இராஜ்யத்திலிருந்து வேருென்றில் விற்கப்படும் குலுக்குச் சீட்டுகள்கூட (லாட்டரி சீட்டுகள்கூட) ஐக்கியக் கட்டுப்பாட்டுக்குள்ளாகிவிட்டது. விபசாரத்திற்குப் பெண்களைக் கொண்டுபோவதை மத்திய சட்டம் தடுக்கிறது. மோட்டார் வண்டிகள் ஓர் இராஜ்யத்தில் திருடப்பட்டு வேறு இராஜ்யத்தில் விற்கப்பட்டால் அது ஐக்கியச் சட்டத்தின்படி குற்றமாகும். தொழில், தொழிலாளி, விவசாயம் எல்லாவற்றிலும் பொதுவான விவகாரங்களை ஒழுங்குபடுத்துவது ஐக்கிய அரசாங்கத்தின் கடமையாகிவிட்டது.

இரண்டு உலக மகாயுத்தங்களின் பலனுக ஐக்கிய அரசாங்கத்தின் வருமானமும் அதன்கீழ் தொண்டு புரியும் ஊழியர்களின் எண்ணிக்கையும் பிரமாண்டமாக வளர்ந்துவிட்டன. இராஜ்யங்களின் ஏகபோக அதிகாரத்திலிருக்கும் பல பணிகளுக்கு ஐக்கிய அரசாங்கம் மானியம் கொடுக்கவேண்டியிருக்கிறது. இக் காரணங்களால் ஐக்கிய அரசாங்கத்தின் அதிகாரமும் செல்வாக்கும் மிகவும் பெருகியிருக்கின்றன. ஆயினும், அமெரிக்க அரசியலில் இராஜ்யங்களின் சுதந்தரமும் அதிகாரமும் கணிசமாக நிலைத்து நிற்கின்றன. அவற்றின் வருமானமும், பணிகளும், சேவகர்களின் தொகையும் அதிகரித்திருக்கின்றன. ஐக்கிய அரசாங்கத்தோடு

ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இராஜ்யங்களின் அந்தஸ்து குறைந் திருப்பினும் உண்மையான அரசியல் சேவைகளின் பரப்போ, தரமோ குறையவில்லை; கூடியேயிருக்கிறது.

இந்திய அரசியல் அமைப்பில் எல்லா அரசாங்க அதிகாரங் களும் 210 இனங்களாகக் கணக்கிடப்பட்டு மூன்று பட்டியல் களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதல்பட்டியலில் 97 இனங்க ளிருக்கின்றன. ஐக்கிய அரசாங்கத்திற்குமட்டுமே இவ்வினங் களைப்பற்றிச் சட்டமியற்ற அதிகாரமுண்டு. அவற்றுள் முக்கிய இனங்கள் பாதுகாப்பு: தரை, கப்பல், விமானப்படைகள்; ஆயுதங்கள், அணுசக்தியும் அதன் கனிப் பொருள்களும்; அந்நிய நாட்டு விவகாரங்கள், போரும் சமாதானமும்; குடியுரிமை; இரயில்வே; கப்பல், பெரும் துறைமுகங்கள்; வானவழிகள்; விமானங்கள், விமான நிலையங்கள்; தபால் தந்தி, டெலிபோன்; நாணயம், நாணயமாற்றம்; ரிசர்வ் பாங்கு; சீட்டுக் குலுக்கல், ஒரு வெளிநாட்டு இராஜ்யத்திலிருந்து மற்ற இராச்சியத்துடன் வியா பாரம், பாங்கு, இன்ஷியூரன்ஸ், தொழிற்சாலை முதலியவற்றை நிர் வகிக்கும் கம்பெனிகள், கார்ப்பொரேஷன்கள், பாங்குத் தொழில், உண்டியல், செக்கு, பிராமிசரி நோட்டு முதலிய லேவாதேவி சாதனங்கள், பங்கு மார்க்கெட், நூதன கருவிகள் சூட்சுமங்கள், நூல்கள் முதலியவற்றை உருவாக்குவோரின் உரிமைகள்; பார்லிமென்டால் தேசத்திற்கு முக்கியமானவை என்று பிரகடனம் செய்யப்படும் தொழில்கள்; உப்பு உற்பத்தி, வியாபாரம்; தேசிய ஸ்தாபனங்கள்; புராதன தேசியச் சின்னங்கள், கட்டடங்கள், சரித்திர ஸ்தலங்கள்; அகில இந்திய சேவைகள்; சட்டமன்றங்கள்; ஜனாதிபதி, உப ஜனாதிபதிகளின் தேர்தல்கள்; உத்தம நீதிமன்றம், உயர் நீதிமன்றங்களின் அமைப்பும் நிர்வாக ஏற்பாடுகளும்; அடுத்த அத்தியாயத்தில் விவரிக்கப்படும் வரிகள்.

இரண்டாவது பட்டியலில் அடங்கியுள்ள 66 இனங்களின்மீது இராச்சிய சட்டமன்றங்களுக்கே அதிகாரமுண்டு. அவற்றுள் பிரதானமானவை உள்நாட்டுச் சமாதானம், போலீஸ் படை, நீதி பரிபாலனம்; உயர் நீதிமன்றத்தைத் தவிர இதர நியாயா லயங்கள்; ஸ்தலஸ்தாபனங்கள், சுகாதாரம், வைத்திய சாலைகள்; மதுபானம்; கல்வி; வாசகசாலைகள்; கண்காட்சிக் கூடங்கள்; சாலைகள், பாலங்கள், தோணித்துறைகள்; விவசாயம், கால் நடைகள், நீர்ப்பாசனம், ஏரிகள், அணைக்கட்டுகள்; நில உரிமை கள், கடன்கள், அடைமானம், கிரயம் முதலிய விவகாரங்கள்; காடுகள், மீன் பண்ணைகள், மீன் பிடிக்கும் உரிமைகள்; மத்திய அரசாங்கத்திற்குட்படாத தொழில்கள்; சுரங்கங்கள், இராஜ்யத்

திற்குட்பட்ட வியாபாரம், லேவாதேவி, காசுக்கடைக்காரர்கள்; நாடகம், சினிமா; சூதாட்டம்; அடுத்த அத்தியாயத்தில் கூறப் படும் இராச்சிய வரிகள்.

மூன்றுவது பட்டியலில் 47 இனங்கள் அடங்கியுள்ளன. அவற் றைப்பற்றி பார்லிமென்டும், இராச்சிய சட்டமன்றங்களும் சட்டம் இயற்றலாம். ஆனுல், ஒரே இனத்தைப்பற்றிய சட்டங்களுக்குள் முரண்பாடிருந்தால் பார்லிமென்டின் சட்டமே செல்லுபடியாகும். இராச்சிய சட்டம் அடிபட்டுப்போகும். ஏதாவது, அவசியமான காரணத்தால் இவ்வினங்களில் ஒன்றைப்பற்றி பார்லிமென்டின் சட்டத்திற்கு முரண்பாடாக ஓர் இராச்சியம் சட்டமியற்ற விரும் பிஞல், அச் சட்டத்தின் நகலை ஜனுதிபதிக்கு அனுப்பி அவர் சம்மதம் பெற்ருல், இராச்சியத்தின் அந்தச் சட்டம் அடிபடாது. ஆனுல், பார்லிமென்ட் பின்னர் அச் சட்டத்திற்கு முரண்பாடாக வேறு சட்டம் செய்தால், பார்லிமென்டின் சட்டமே உறுதியாகும்.

இந்த இனங்களில் முக்கியமானவை, குற்றச் சட்டமும், குற்ற வழக்குமுறையும், விவாகம், விவாகரத்து, கூட்டுக் குடும்பம், குடும்பச் சொத்துப் பிரிவினை ; உயில், வாரிசு, விவசாய நிலம் தவிர இதர சொத்து மாற்றம். அதைப் பதிவு செய்தல், அதன் பத்திரங்கள்; ஒப்பந்தம், வியாபாரக்கூட்டு, செயலாண்மை, நஷ்டஈடு, திவா லாதல், தர்ம பொறுப்புகள், தர்மகர்த்தாக்கள்; சாட்சியம், சிவில் வழக்குமுறை; பைத்தியமும் பைத்திய வைத்தியசாலைகளும், பிராணிகள்மீது கொடுமை; கலப்படம்; மருந்துகளும், விஷங் களும்; தொழிற்சங்கங்களும் தகராறுகளும்; பொருளாதார சமூக திட்டங்கள், சமூகப் பாதுகாப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், தொழிலாளி நலம்; தர்ம, மதஸ்தாபனங்கள்; தொத்துநோய் தடுத்தல்; பிறப்பு இறப்புப் பதிவும் புள்ளிவிவரங்களும்; விலைக் கட்டுப்பாடு; மோட்டார் வண்டிகள், அவற்றின்மீது வரிக் கொள்கைகள், தொழிற்சாலை நியமங்கள்; மின்சாரம், செய்திப் பத்திரிகைகள், புத்தகங்கள், அச்சகங்கள், சொத்துகளைக் கட்டாயமாக வாங்குவதும் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளு வதும்.

இவ்வாறு மூன்று பட்டியல்கள் இருப்பதாலும், பொதுப் பட்டி யலில் பல இனங்கள் இருப்பதாலும், ஐக்கிய இராஜ்ய அரசாங்கங் களின் பரஸ்பர சம்பந்தங்களைத் தெளிவாக வரையறுப்பது அவசிய மாயிற்று. இது அரசியல் அமைப்பின் 11ஆவது பாகத்தில் செய்யப் பட்டிருப்பது. 245-லிருந்து 255 வரையில் 11 விதிகளில் மத்திய இராஜ்ய மன்றங்களின் தொடர்புகள் விளக்கப்பட்டிருக்கின்றன

பார்லிமெண்டின் சட்டங்கள் பாரதம் முழுவதற்குமோ, ஒரு பாகத்திற்கோ செய்யப்படலாம். இராஜ்ய சட்டமன்றம் இராஜ்யத்திற்கே இயற்றப்படவேண்டும். ஆனால், ஒரு முக்கிய வேற்றுமை உண்டு. பார்லிமெண்டின் சட்டங்கள் பாரதத்திற்கு வெளியிலிருப்பவர்களைக்கூடக் கட்டுப்படுத்தலாம். இராஜ்யத்தின் சட்டம் தனது எல்லைக்கப்பால் செல்லாது.

பார்லிமெண்டின் சட்டத்திற்கும் இராஜ்யத்தின் சட்டத்திற்கும் முரண்பாடு ஏற்பட்டால் பார்லிமெண்ட் தனது அதிகாரத்தை மீறியிருந்தாலொழிய அதன் சட்டமே உறுதியாகும். முரண்பாடாக இருக்கும் இராஜ்ய சட்டத்தின் விதிகள் அடிபட்டுப்போகும். ஆனால், தனது அதிகாரத்தை மீறி இராஜ்யத்தின் ஏகபோக உரிமைகளை பாதிக்கும் பார்லிமெண்டின் சட்டம் செல்லாது.

சாதாரணமாக எல்லா இராஜ்ய நியாயாலயங்களும் தமது வரம்புகளுக்குட்பட்டு எல்லா வழக்குகளையும் விசாரிக்கலாம். ஆனால், பிரத்தியேக அகில இந்திய விஷயங்களில் ஏற்படும் வழக்குகளை விசாரிக்கப் பார்லிமெண்ட் தனிக் கோர்ட்டுகளை ஏற்படுத்தலாம்.

மூன்று பட்டியல்களில்இடம் பெறாத இனங்களைப்பற்றியோ, வரிகளைப் பற்றியோ சட்டமியற்ற பார்லிமெண்டுக்கே உரிமையுண்டு.

இராஜ்ய சபை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் இராஜ்யப் பட்டியலில் உள்ள இனத்தைப்பற்றிப் பார்லிமெண்டு சட்டம் செய்வது அவசியம். அல்லது காலோசிதமென்று தீர்மானம் செய்தால், அதனைப்பற்றி பார்லிமெண்ட் சட்டம் செய்யலாம். அந்தச் சட்டம் ஓராண்டுக்கு உறுதியாகும். அதன் பின்னர் அதனை நீடிப்பதற்கு அவ்விதமே இராஜ்ய சபை தீர்மானம் செய்யலாம். ஒரு தீர்மானத்தால் ஓராண்டே நீடிக்கலாம்.

நாட்டிற்கு நெருக்கடியென்று 352 விதிப்படி ஜனாதிபதி பிரகடனம் செய்தால், இராஜ்யப் பட்டியலில் உள்ள எவ்வினத்தையும்பற்றி பார்லிமெண்ட் சட்டமியற்றலாம். அச் சட்டப் பிரகடனம் ரத்து செய்யப்பட்டு ஆறுமாதங்கள் வரையில் செல்லும்.

இரண்டு அல்லது அதற்கு அதிகமான இராஜ்யங்களின் சட்டமன்றங்கள் தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட ஓர் இனத்தைப்பற்றி பார்லிமென்டே பொதுவான சட்டமியற்றுவது நலம் என்று தீர்மானம் செய்தால், அப்படியே பார்லிமெண்ட் செய்யலாம். அச் சட்டம் அந்த இராஜ்யங்களையே கட்டுப்படுத்தும்.

எவ்வினத்தைப்பற்றியும், வெளிநாடுகளுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்ற பார்லிமென்ட் சட்டமியற்றலாம்.

இந்த விதிகளின் பலனாக, இராஜ்யங்களுக்குப் பொதுப் பட்டியலில் உள்ள இனங்கள்மீது சட்டமியற்றுவது கடினமாகி விட்டது. அப்படிச் செய்யவேண்டுமென்றாலும் மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்றே செய்வது வழக்கமாகி இருக்கிறது. இராஜ்யப் பட்டியலிலுள்ள இனங்களைப்பற்றிய சட்டங்களிலும் சில விதிகள் பொதுப்பட்டியல் இனங்களை பாதிக்குமாதலால், அவைகளுக்கும் ஜனாதிபதியின் சம்மதம் பெறுவது நலம். இல்லையேல் அச் சட்டங்கள் அரசியல் அமைப்புக்கு முரண்பாடா என்ற பிரச்சினை கோர்ட்டுகளில் எழுவது நிச்சயம்.

ஐக்கிய இராஜ்ய நிர்வாகங்களின் தொடர்புகள் 256-லிருந்து 263 முடிய விதிகளில் கூறப்பட்டிருக்கின்றன.

இராஜ்யத்தின் நிர்வாகம் பார்லிமென்டின் சட்டங்களை அமல் செய்வதற்குச் சாதகமாக நடைபெறவேண்டும். இதற்கு வேண்டிய கட்டளைகளை மத்திய நிர்வாகம் பிறப்பிக்கலாம்.

அவ்வாறே மத்திய நிர்வாகத்திற்கு எவ்விதத் தடையுமின்றி இராஜ்ய நிர்வாகம் செய்யப்படவேண்டும். மத்திய அரசாங்கத்தால் இராஜ்ய அரசாங்கங்களுக்குத் தேவையான உத்தரவுகளிட அதிகாரமுண்டு.

நாட்டின் பொது நலத்திற்கோ, பாதுகாப்புக்கோ அத்தியாவசியமான போக்குவரத்துச் சாதனங்களை நிறுவவும், பராமரிக்கவும் மத்திய அரசாங்கம் இராஜ்ய அரசாங்கங்களுக்குக் கட்டளை இடலாம். இரயில்வேக்களைப் பாதுகாப்பதற்கும் உத்தரவிட அதிகாரமுண்டு. ஆனால். அந்தப் பணிகளைச் செய்வதில் ஏற்படும் அதிகச் செலவுகளை மத்திய அரசாங்கம் ஏற்கவேண்டும். செலவுத் தொகைகளைப்பற்றி மத்திய இராஜ்ய அரசாங்கங்களுக்குள் தகராறு ஏற்பட்டால் உத்தம நீதிமன்றத்தின் தலைவர் நியமிக்கும் மத்தியஸ்தரின் தீர்ப்பு இருவரையும் கட்டுப்படுத்தும்.

ஒப்பந்தத்தால் மத்திய இராஜ்ய நிர்வாகங்கள் ஒருவரது பணிகளை மற்றவரிடம் ஒப்புவிக்கலாம். செலவுகளைப் பாத்தியமானவர் ஏற்கவேண்டும்.

பல இராச்சியங்களுக்குப் பொதுவான நதிகளின் ஜலத்தைப் பற்றிய தகராறுகளைத் தீர்க்க பார்லிமென்ட் சட்டம் செய்யலாம்.

அவற்றைப்பற்றி உத்தம நீதிமன்றமுட்பட நியாயாலயங்கள் வழக்குகளை விசாரிக்கலாகாதென்றும் அச் சட்டம் விதிக்கலாம்.

இராச்சியங்களுக்குள் ஏற்படும் விவாதங்களையும், தகராறுகளையும் தீர்க்க ஜனாதிபதி விசேஷ ஆணையால் ஒரு கௌன்சில் ஏற்படுத்தலாம்.

இவ்விதத் தொடர்புகளும், தகராறுகளும் எல்லா ஐக்கிய அரசியல்களுக்கும் பொதுவானவை. அமெரிக்க அரசியலில் அவை நீதிமன்றங்கள் மூலமாகவோ, ஒப்பந்தங்கள் வாயிலாகவோ சமாளிக்கப்படுகின்றன.

இந்திய அரசியலிலோ பார்லிமென்டுக்கும் மத்திய நிர்வாகத்திற்கும் மிதமிஞ்சிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் இராச்சியங்கள் மத்திய அரசாங்கத்திற்குப் பணிந்து போகவேண்டும்.

# 21. வரி, நிதி விபாகம்

எந்த ஐக்கிய அரசியலிலும், ஐக்கிய அரசாங்கத்திற்கும் இராஜ்ய அரசாங்கங்களுக்கும் வேண்டிய நிதிகளுக்கேற்பாடு செய்வதே மிகவும் சிக்கலான பிரச்சினையாகும். தத்துவ ரீதியில் ஆலோசித்தால், ஐக்கிய அரசாங்கம் தனக்குத் தேவையான தொகைகளை நேரில் வரி விதித்து வசூல் செய்துகொள்ளவேண்டும். இராச்சியங்களும் அவ்வாறே தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் இரண்டும் சுதந்தரமாக ஆட்சி புரிவது சாத்தியமாகும். இதற்கு இரண்டு வழிகளுண்டு. ஐக்கிய இராச்சிய அரசாங்கங்கள் எவ்விதமான வரியையும் விதித்து வசூல் செய்துகொள்ள அதிகாரம் கொடுக்கப்படலாம். இக் கொள்கையே அமெரிக்க அரசியலில் கையாளப்பட்டது. ஆதியில் உருவான அரசியல் அமைப்பில் நேர்முகமான வரியும், சொத்துமீதுள்ள வரியும் ஐக்கிய அரசாங்கம் விதிக்கலாகாது. ஏற்றுமதி, இறக்குமதி சுங்க வரிகள் இராச்சியங்கள் விதிக்கக் கூடாது. மீதி எல்லா வரிகளையும் இரண்டும் விதிக்கலாமென்று ஏற்பாடாகியிருந்தது. ஆனால், வருமான வரியை நேர் வரி யென்று உத்தம நீதிமன்றம் தீர்மானித்தபின்னர், 16ஆவது திருத் தத்தில் வருமான வரி விதிப்பதற்குப் பூரண அதிகாரம் ஐக்கிய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது. ஆதலால், இப்பொழுது சொத்து வரியொன்றே இராச்சியங்களுக்கும், ஏற்றுமதி இறக்குமதி மீது சுங்க வரியொன்றுமே ஐக்கிய அரசாங்கத்திற்கும் ஏகபோக வரிகளாக இருக்கின்றன. வருமான வரி, விற்பனை வரி, மோட்டார் வரி, உற்பத்தி வரிபோன்ற மற்ற வரிகளெல்லாம் இரண்டுக்கும் பொதுவாகவிருக்கின்றன. இதனால், தொழில், வியாபாரம் முதலிய விவகாரங்களுக்குப் பல கஷ்டங்களேற்படு கின்றன. ஒரு கம்பெனிக்குப் பல இராச்சியங்களில் கிளைகளிருக் கலாம். அந்தக் கம்பெனி ஐக்கிய அரசாங்கத்திற்குத் தனியாக வும், மற்ற இராச்சியங்களுக்கு வெவ்வேறாகவும் வருமான வரி செலுத்தவேண்டும். வரி விகிதங்களும் வெவ்வேறாகவிருக்கலாம்.

தங்கள் தங்கள் இராச்சியத்தில் தொழில் வளருவதற்காகப் போட்டி போட்டுக்கொண்டு முதலாளிகளுக்கு இராச்சிய அரசாங்கங்கள் வரிச் சலுகைகள் கொடுக்கக்கூடும். ஆதலால், வருமான வரியை ஏகபோக ஐக்கிய அரசாங்க வரியாகச் செய்வதற்கு இராச்சியங்களோடு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

சாதாரணமாக, இராச்சியங்கள் சொத்து வரி, விற்பனை வரி, மோட்டார் வரிகளைக்கொண்டே சமாளிக்கின்றன. சில காரியங்களுக்கு ஐக்கிய அரசாங்கம் மானியங்களும் கொடுக்கிறது. அப்படிக் கொடுக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. முக்கியமாகக் கல்வி, சுகாதாரம், சமூக நலம், வீடு கட்டுவதற்கு உதவி, போக்குவரத்து வசதிகளை விருத்தி செய்தல், இயற்கை வளங்களைப் பெருக்குதல், விவசாயம் இவைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இராச்சியங்களின் மொத்த வருமானத்தில் 15% இந்த மான்யங்களின் ஈவாகவிருக்கின்றது. 1967 ஆம் ஆண்டுக்கு மொத்தம் 1,475 கோடி டாலர் மானியத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் கல்விக்கு 203 கோடி, சுகாதாரம், சமூக நலத்திற்கு 662 கோடி, வீடு சமூக முன்னேற்றத்திற்கு 88 கோடி, போக்குவரத்து வசதிகள் (முக்கியமாகப் பொதுச் சாலைகளுக்கு) 431 கோடி டாலர்கள் கொடுக்கப்படும்.

சாதாரணமாக, ஐக்கிய அரசாங்கம் இராஜ்ய அரசாங்கங்களுக்குக் கடன் கொடுப்பதில்லை. இராஜ்யங்கள் நேரில் பொது மக்களிடமிருந்தும், பாங்கிகளிடமிருந்தும் தமது கடன் தேவைகளுக்கு வசூல் செய்துகொள்ளவேண்டும்.

இந்திய ஐக்கிய அரசியலில் வரி விபாகம் வேறு கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க அரசியலில் இதர சட்ட அதிகாரங்கள் முற்றிலும் பிரிக்கப்பட்டுப் பொதுவினங்கள் இல்லாமலிருக்க வரிகள்மட்டும் பொதுவாக இருக்கின்றன. இந்திய அரசியலிலோ நீண்ட பொதுப் பட்டியல் இருந்தும், வரிகள்மட்டும் முற்றிலும் பங்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. பொதுவான வரிகளில்லை. எந்த வரியும் ஒன்று பார்லிமென்டாலோ அல்லது இராஜ்ய சட்டமன்றத்தாலோ விதிக்கப்படவேண்டும்.

பார்லிமென்டால் விதிக்கப்படும் வரிகள் : விவசாய வருமானத்தைத்தவிர இதர வருமானத்தின்மீது வரிகள்; இறக்குமதி, ஏற்றுமதி சுங்கவரி ; மது லாகிரி வஸ்துக்களைத் தவிர இதர பொருள்கள்மீது உற்பத்தி வரி ; கார்ப்பொரேஷன்மீது (கம்பெனி) வரி ; விவசாய

நிலத்தைத் தவிர்த்து இதர சொத்துகளின் கொள்முதல் மதிப்பின் மீது வரி; விவசாய நிலமில்லாத இதர சொத்துகள்மீது இறந்தவர் சொத்து வரி; இரயில், கப்பல், விமானமூலம் தூக்கிச் செல்லப்படும் மனிதர், சாமான்மீது எல்லை நகர வரி; இரயில் கட்டணங்கள் மீது வரி; பங்கு மார்க்கெட் விவகாரங்கள்மீது வரி; செய்திப் பத்திரிகைகளின் விற்பனைமீதும், விளம்பரங்கள்மீதும் வரி; ஓர் இராஜ்யத்திலிருந்து மற்றோர் இராஜ்யத்திற்கு ஏற்றுமதியாகும் சாமான்கள்மீது விற்பனை வரி.

இராஜ்ய அரசாங்கங்கள் விதிக்கக்கூடிய வரிகளாவன :

சர்வே, நிலப்பதிவுக் கட்டணங்கள் உட்பட நிலவரி; விவசாய நில வார்சு வரி, இறப்போரின் விவசாய நிலத்தின்மீது வரி; நிலம், கட்டடம் இவற்றின்மீது வரி; கனிப்பொருள் உரிமைகள்மீது வரி; மது, லாகிரி வஸ்துகள்மீது உற்பத்தி வரி; ஒரு ஸ்தல ஸ்தாபன எல்லைக்குள் உபயோகத்திற்கோ, விற்பனைக்கோ கொண்டுவரப்படும் சாமான்கள்மீது வரி; மின்சார உபயோகம், விற்பனைமீது வரி; செய்திப் பத்திரிகைகளைத் தவிர இதர சாமான்கள்மீது விற்பனை வரி; சாலை, நதி அல்லது கால்வாய் வழி தூக்கிச் செல்லப்படும் சாமான்கள்மீது வரி; சாலைகளில் செல்லும் வாகனங்கள்மீது வரி; மிருகங்கள், படகுகள்மீது வரி; சாலைச் சுங்கம்; தொழில், வியாபாரம் உத்தியோகங்கள்மீது வரி; வினோதக் காட்சிகள், விளையாட்டுகள், பணயம் சூதாட்டம் உட்பட உல்லாச நடவடிக்கைகள்மீது வரி; ஐக்கியப் பட்டியலில் குறிப்பிடாத பத்திரங்கள்மீது ஸ்டாம்பு வரி.

இப் பங்கீடு, வரி விதிக்கும் அதிகாரத்திற்கு மட்டுமே. இவ் வரிகளால் வசூலிக்கப்படும் தொகைகளின் விநியோகத்தைப் பற்றி வேறு விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏனெனில், எண்ணிக்கையில் பலவாகவிருப்பினும் இராஜ்யப் பட்டியலிலுள்ள வரிகள்மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு இராஜ்யங்களுக்களித்திருக்கும் பொறுப்புகளைச் சமாளிக்க முடியாது. இராஜ்யங்கள் விதிக்கும் வரிகளின் வசூல் தொகைகள் அவைகளையே சேரும். ஐக்கிய அரசாங்கத்திற்கு அவற்றில் பங்கில்லை. ஆனால், ஐக்கிய அரசாங்கத்தின் வரி வசூல்களில் இராஜ்யங்களுக்குப் பங்குண்டு. ஆனால், இது பல விதங்களில் பங்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்றுமதி, இறக்குமதிமீது விதிக்கப்படும் சுங்க வரிகளும் கார்ப்பொரேஷன்மீது விதிக்கப்படும் வருமான வரியும், சொத்து மதிப்பு வரியும், ஏகபோகமாக ஐக்கிய அரசாங்கத்திற்கே சேரும்.

நபர்கள்மீது விதிக்கப்படும் வருமான வரியை ஐக்கிய அரசாங்கம் இராஜ்யங்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும். எவ்வளவு பாகம் இராஜ்யங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும், அந்தப் பாகத்தை இராஜ்யங்களுக்குள் எவ்விதம் பங்கீடு செய்ய வேண்டும் என்பதைப்பற்றி நிதிக் கமிஷன் சிபார்சுகளைக் கவனித்து ஜனாதிபதி உத்தரவிடவேண்டும்.

உற்பத்தி வரிகளை இராஜ்யங்களோடு பகிர்ந்துகொள்ளலாம். இது பார்லிமென்டின் சட்டத்தின்மூலம் செய்யப்படவேண்டும். நிதிக் கமிஷன் இதைப்பற்றிச் சிபார்சுகள் செய்யும்.

இறந்தோர் சொத்துமீது வரி, எல்லை வரி, இரயில் கட்டண வரி, செய்திப் பத்திரிகை விற்பனை வரி, பங்கு மார்க்கெட் விவகாரங்கள் வரி, இவைகள் பார்லிமென்டால் விதிக்கப்பட்டு, மத்திய அரசாங்கத்தால் வசூலிக்கப்படும். ஆனால், வசூல் தொகைகளில் ஓர் அம்சம் ஐக்கியப் பிரதேசங்களுக்கு ஒதுக்கிவைக்கப்பட்டு மீதி அனைத்தும் இராஜ்யங்களுக்குப் பங்கீடு செய்யப்படவேண்டும். அப் பங்கீடு எம் முறையில் செய்வது என்பது பார்லிமென்டின் சட்டத்தால் நிர்ணயிக்கப்படும். அதைப்பற்றிச் சிபார்சு செய்யும்படி ஜனாதிபதி நிதிக் கமிஷனைக் கேட்டுக்கொள்ளலாம். ஆனால், இவ்விதச் சிபார்சுகளில்லாமல் நேரிலேயே சட்டம் செய்து கொள்ளவும் உரிமை உண்டு.

ஐக்கியப் பட்டியலில் அடங்கியுள்ள ஸ்டாம்பு வரிகள், மருந்து, பவுடர் பூச்சு முதலிய சாமான்களின்மீது உற்பத்தி வரிகள் இவைகளின் விகிதங்களைப் பார்லிமென்ட் சட்டமூலம் விதிக்கும். அவ் வரிகளை இராஜ்யங்களே வசூல் செய்து தமது வருமானத்தோடு சேர்த்துக்கொள்ளும்.

இவ்விதம் இராஜ்யங்களுக்குத் தாமே வசூல் செய்து விநியோகித்துக்கொள்ளும் பல வரிகளும், ஐக்கிய அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுக் கூடுதலை இராஜ்யங்களுக்குப் பங்கீடு செய்யப்படும் வரிகளும், ஐக்கிய அரசாங்கத்தின் சொந்த உபயோகத்திற்கான வருமான, உற்பத்தி வரிகளில் பங்கும் கொடுத்த பின்னரும் இராஜ்யங்களின் தேவைகள் பூர்த்தியாகிவிடுமென்று அரசியல் நிர்ணயசபை நினைக்கவில்லை. ஆதலால். 275ஆம் விதியில், வருமானம் போதாமல் திண்டாடும் இராஜ்யங்களுக்குப் பார்லிமென்ட் சட்டமூலம் மானியம் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறது. முதன்முதலில் ஜனாதிபதி இதற்காக உத்தரவிடலாமென்றும், நிதிக் கமிஷன் நியமிக்கப்பட்டபின் அதன் சிபார்சுகளை கவனித்து அவ்வித உத்தரவிடலாமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஐக்கிய அரசாங்கத்திற்கும் இராஜ்ய அரசாங்கங்களுக்கும் நிதி விவகாரத்தில் பட்சபாதமின்றி சிபார்சுகள் செய்வதற்காக ஒரு நிதிக் கமிஷன் ஏற்படுத்தியிருப்பது இந்திய அரசியலின் ஒரு தனிச் சிறப்பாகும். இது 280, 281ஆம் விதிகளில் அடங்கி இருக்கிறது. அரசியல் திட்டம் அமலாகி இரண்டு வருஷத்திற்குள் முதல் நிதிக் கமிஷன் நியமிக்கப்படவேண்டும். பின்னர் ஐந்து வருஷங்களுக்கு மேற்படாத காலவரையில் மற்றக் கமிஷன்கள் நியமிக்கப்படவேண்டும். அதற்கு ஒரு தலைவரும், நான்கு அங்கத்தினர்களுமிருப்பர். அவர்களுடைய தகுதிகளையும் ஊதியம், படி முதலியவைகளையும் பார்லிமென்ட் சட்டத்தால் நிர்ணயம் செய்யவேண்டும். அக் கமிஷனின் கடமைகளாவன :

1. இராஜ்யங்களுடன் பகிர்ந்துகொள்ளவேண்டிய அல்லது பகிர்ந்துகொள்ளக்கூடிய வரிகளின் மொத்தக் கூடுதல்களில் எவ்வளவு பாகம் இராஜ்யங்களுக்கு ஒதுக்கப்படவேண்டும், அந்தப் பாகத்தை இராஜ்யங்களுக்கு எவ்விதம் பங்கீடு செய்யவேண்டு மென்பதையும் ;

2. ஐக்கிய அரசாங்க மொத்த நிதியிலிருந்து இராஜ்யங்களுக்கு மானியம் கொடுப்பதில் அனுசரிக்கவேண்டிய கொள்கைகளைப்பற்றியும் ;

3. சரியான நிதி விவகாரத்தின் பொருட்டு ஜனாதிபதி அதற்கு அனுப்பும் இதர பிரச்சினைகள்பற்றியும் சிபாரிசுகள் செய்ய வேண்டும்.

கமிஷனின் அறிக்கை பார்லிமென்டில் வைக்கப்படும். அதனோடு சிபாரிசுகளின்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது அல்லது எடுக்க உத்தேசித்திருக்கிறது என்பதைப்பற்றியும் ஒரு விளக்கம் சமர்ப்பிக்கவேண்டும்.

அரசியல் நிர்ணய சபையின் திட்டத்தில் இந்த ஏற்பாடுகள் மூலம் ஐக்கிய இராஜ்ய அரசாங்கங்களின் நிதித் தொடர்புகள் முற்றிலும் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஐந்தாண்டுத் திட்டங்கள் ஆரம்பமானதும், இது போதவில்லை என்று கருதப்பட்டது. அதனால், 282 விதியின்கீழ் திட்டக் கமிஷனின் சிபாரிசுகளை அனுசரித்து இராஜ்யங்களுக்குப் பல காரியங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அதன் வாசகமாவது :

1. ஐக்கியமும், இராஜ்யமும் எவ்விதப் பொதுக் காரியங்களுக்கும் மானியம் வழங்கலாம். அக் காரியம் தனது சட்டமன்றம்

சட்டம் இயற்றக்கூடிய விஷயமாக இருக்கவேண்டியதில்லை. இவ் விதி எதிர்பாராத நெருக்கடிகளுக்கோ, உலக சங்கங்களுக்கோ, அபூர்வமான தேவைகளுக்கோ அரசாங்கங்கள் உதவுவதற்காக இயற்றப்பட்டது. அது சர்வ சாதாரணமாக ஐக்கிய இராஜ்ய நிதி விநியோகத்திற்குப் பயன்படுவது அரசியல் அமைப்பின் உத்தேசத்திற்கு மாறுபட்டது என்பதில் சந்தேகமில்லை.

இதுவரையில் நான்கு நிதிக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டு அவற்றின் சிபாரிசுகளை ஐக்கிய அரசாங்கமேற்று இராஜ்யங்களுக்கு அதிக அளவில் வரிகளில் பாகமும் மானியங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. முதலில் கார்ப்பொரேஷன் வரியைத் தவிர்த்து இதர வருமான வருவாயில் 50% இராஜ்யங்களுக்குக் கொடுக்கப்பட்டது. முதல் கமிஷன் அதை 55% ஆகவும், இரண்டாவது 60% ஆகவும், மூன்ருவது 66% ஆகவும், நான்காவது கமிஷன் 75% ஆகவும் அதிகரித்தது.

உற்பத்தி வரிகளில், 1950-க்கு முன் பங்கீடில்லை. முதல் கமிஷன் நெருப்புப்பெட்டி, புகையிலை, எண்ணெய்களிலிருந்து செய்யப்பட்ட செயற்கை நெய் இம் மூன்றின்மீதுள்ள உற்பத்தி வரிகளின் கூடுதலில் 40% இராச்சியங்களுக்குச் சேரவேண்டுமென்று சிபாரிசு செய்தது. இரண்டாவது கமிஷன், இந்த மூன்று பொருள்களோடு தேயிலை, காபி, சர்க்கரை, காகிதம், எண்ணெய்களையும் சேர்த்து அவற்றின் உற்பத்தி வரிக் கூடுதலில் 25% கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்தது. மூன்ருவது கமிஷன், 35 சாமான்கள்மீதுள்ள உற்பத்தி வரியில் 20% கொடுக்க வேண்டுமென்றது. நான்காவது கமிஷனே, ஐக்கிய அரசாங்கத்திற்குக் கிடைக்கும் உற்பத்தி வரி மொத்தத்தில் 20% கொடுத்தது.

ஒவ்வொரு கமிஷனும் இராச்சியங்களுக்கு மானியங்கள் கொடுக்கவும் சிபார்சு செய்தது.

இதைத் தவிர இராச்சியங்கள் துணி, சர்க்கரை, புகையிலை மீது விற்பனை வரி விதிக்கும் உரிமையை விட்டுக்கொடுத்து அதற்குப் பதிலாக ஐக்கிய அரசாங்கம் அவற்றின்மீது கூடுதலாக உற்பத்தி வரி விதித்து இராச்சியங்களுக்கு நிதிக் கமிஷனின் சிபார்சுகளின்படி பங்கீடு செய்துவருகின்றது. 1966-67-ல் இராச்சியங்களின் பாகத்திற்காக வருமான வரியில் ரூ. 130·45 கோடியும், உற்பத்தி வரியில் ரூ. 165·66 கோடியும், கூடுதல் உற்பத்தி வரியாக ரூ. 47·09 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இறந்தோர் சொத்து வரி ரூ. 9·11 கோடி கூடுதலாயிற்று. ஆக மொத்தம் வரிப் பங்கீடுமூலம் ரூ. 350·31 கோடி வரவு செலவுத் திட்டத்தில்

மதிப்பிடப்பட்டிருக்கிறது. மானியமாக நிதிக் கமிஷன் சிபாரிசுகளின் படி 275 விதியின்கீழ் ரூ. 152·41 கோடியும், 282 விதியின்கீழ் ரூ. 194·52 கோடியுமாக மொத்தம் ரூ. 346·93 கோடி வழங்கப் பட்டிருக்கிறது. ஆதலால், வரிப் பங்கீடும் மானியமும் ஏறக்குறைய சமானமாக இருக்கின்றன.

பார்லிமென்டின் சட்டத்தால் விதிக்கப்படும் எல்லைகளுக் குட்பட்டு, ஐக்கிய அரசாங்கம் நாட்டின் மொத்த நிதியின் உத்தர வாதத்தின்பேரில் கடன் வாங்கலாம். ஆனால், இதுவரையில் பார்லிமென்ட் சட்டம் செய்யவில்லை. ஆதலால், ஐக்கிய அரசாங் கம் எல்லையின்றிக் கடன் வாங்கலாம். 1950-57 உள்நாட்டுக் கடன் ரூ. 1,438 கோடியாகவிருந்தது. 1966-67-ல் அது ரூ. 3,510 கோடியாகப் பெருகிவிட்டது. வெளிநாட்டுக் கடன் அதே காலத்தில் ரூ. 32 கோடியிலிருந்து ரூ. 3,293 கோடியாக அதிகரித்தது. ஐந்தாண்டுத் திட்டங்களின் முதலீடுகளுக்காக ரூ. 5,000 கோடிக்குமேல் கடன் வாங்கப்பட்டது.

இராச்சியம் தனது நிதியின்பேரில் இந்தியாவில் கடன் வாங்க லாம். ஐக்கிய அரசாங்கமும் இராச்சியங்களுக்கு உசிதமான நிபந்தனைகளுடன் கடன் கொடுக்கலாம். மத்திய அரசாங்கக் கடன் கள் தீரும்வரையில் இராச்சிய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைக்கொண்டே வேறிடத்தில் கடன் வாங்கக்கூடும். 1950-51-ல் மத்திய அரசாங்கம் இராச்சியங்களுக்குக் கொடுத் திருந்த கடன் ரூ. 221 கோடியே. அது 1966-67-ல் ரூ. 4,320 கோடியாகிவிட்டது. இவ்விதம் இராச்சியங்கள் மத்திய அரசாங்கத் தின் பெரும் கடனாளிகளாக ஆகும் என்று அரசியல் நிர்ணய சபை எதிர்பார்க்கவில்லை. அமெரிக்க இராச்சியங்களைப்போல், பொது மக்களிடமிருந்து கடன் வாங்கிக்கொண்டு தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் என்று எண்ணப்பட்டது. இந்தக் கடன் களுக்காக ஆண்டுதோறும் வட்டிக்காக ரூ. 170 கோடியும் முதலுக்காக ரூ. 300 கோடியும் இராச்சியங்கள் மத்திய அரசாங் கத்திற்குச் செலுத்தவேண்டும். இத் தொகைகளைப் பல இராச்சியங் கள் தங்கள் வருமானத்திலிருந்து செலுத்தமுடியாமல் புதிதாகக் கொடுக்கப்படும் கடன்களிலிருந்து செலுத்துகின்றன.

# 22. இராச்சியங்கள்

ஓர் ஐக்கிய அரசியலில் ஐக்கிய அரசாங்கத்தைப்போலவே இராச்சிய அரசாங்கங்களும் நேரடியாகப் பொதுமக்களின் ஆதரவிலேயே நடைபெறுகின்றன. இக் கொள்கையிலேயே அமெரிக்க, பாரத அரசியல்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இரண்டுக்கும் சில முக்கிய வேற்றுமைகள் இருக்கின்றன. அவற்றுள் சில முன் அத்தியாயங்களில் விளக்கப்பட்டன. இங்குச் சில பொதுவான வேற்றுமைகள் குறிப்பிடப்படும்.

அமெரிக்க இராச்சியங்கள் ஒவ்வொன்றும் தமது அரசியல் அமைப்பை நிர்ணயித்துக்கொள்ளவும் மாற்றவும் உரிமை பெற்றிருக்கின்றன. ஐக்கிய அரசாங்கம் முதன்முதலில் 13 இராச்சியங்களின் பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்டது. அவர்கள் தங்கள் இராச்சியங்களின் சுதந்தரங்களை அனுவசியமாக விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. ஆதலால், பொதுவான அதிகாரங்களைமட்டும் ஐக்கிய அரசாங்கத்திடம் ஒப்புவித்துவிட்டு ஐக்கிய அரசியல் அமைப்பில் குறிப்பிடப்படாத எல்லா அதிகாரங்களும் இராச்சியங்களிடமிருக்கும் என்று முடிவு செய்தனர். ஆனால், இராச்சிய அரசியல் அமைப்புகளுக்கு இரண்டு நிபந்தனைகளுண்டு. எந்த அமைப்பும் குடி அரசாக இருக்கவேண்டும். முடியரசாகவோ, எதேச்சாதிகாரமாகவோ இருக்கலாகாது. இராச்சியத்தின் அரசியல் அமைப்பு, ஐக்கியத்தின் அமைப்பிற்கு எவ்விதத்திலும் முரண்பாடாக இருக்கக்கூடாது,

இவ்வாறு சுதந்தரமளிக்கப்பட்டபோதிலும், அமெரிக்க ஐக்கிய அரசியலுக்குட்பட்ட 50 இராச்சியங்களின் அமைப்புகளும் பல அம்சங்களில் ஒரேவிதமாக இருக்கின்றன. ஒன்றைத் தவிர, எல்லா இராச்சியங்களின் சட்டமன்றங்கள் இருசபை அடங்கியவை. நெப்ராஸ்கா இராச்சியத்தில்மட்டும் ஒரே சட்டசபையுள்ளது. காங்கிரசைப்போலவே, இருசபைகளுக்கும் பிரதிநிதிகள்

நேரடியில் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சபைகளின் பெயர்களும் செனேட், பிரதிநிதி சபைகளே. ஆனால், பல இராச்சியங்களில் செனேட் மெம்பர்கள் 4 ஆண்டுகளுக்கும், பிரதிநிதிசபை அங்கத்தினர்கள் 2 வருஷங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சில இராச்சியங்களில் இருதரத்தாரும் 4 வருஷங்களுக்கும் பதவி வகிக்கின்றனர்.

சட்டமியற்றும் முறை காங்கிரசைப்போலவே; கமிட்டிகளும் அவ்வாறே.

முக்கிய நிர்வாக அதிகாரி கவர்னர். பிரசிடென்டைப் போலவே இராச்சியத்தின் வாக்காளர்களால் நேரில் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஏறக்குறைய பாதி இராச்சியங்களில் இரண்டு வருஷங்களுக்கும், மீதியில் 4 ஆண்டுகளுக்கும் பதவி வகிக்கிறார். அவரோடு ஓர் உதவி (லெப்டினென்ட்) கவர்னரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மேல் சபைக்கு அக்கிராசனராகவும், கவர்னர் இறந்தாலோ, நீக்கப்பட்டாலோ அவர் பதவியிலும் அவர் பணி செய்வார்.

அமெரிக்க ஐக்கிய அரசியலுக்குட்பட்ட இராச்சியங்களுக்குள் விஸ்தீரணத்திலும், ஜனத்தொகையிலும், செல்வத்திலும் பெரும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. ரோட் தீவு 1,200 சதுரமைல். டெக்ஸாஸ் 2,66,000 சதுரமைல். ஜனத்தொகை ஓர் இலட்சத்திலிருந்து $1\frac{1}{2}$ கோடி வரையில் இருக்கிறது.

இராச்சியங்களின் முக்கிய அதிகாரங்கள்: போலீஸ் பாதுகாப்பு; நியாயம்; கல்வி, சுகாதாரம்; சமூக நலம்; சாலைகளை அமைத்துப் பராமரிப்பது; ஸ்தலஸ்தாபனங்களைப்பற்றிச் சட்டமியற்றுவதும், மேற்பார்வையிடுவதும்; காங்கிரஸ் உள்பட எல்லாத் தேர்தல்களையும் நடத்துதல்.

ஒவ்வோர் இராச்சியமும் தமது கோர்ட்டுகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறது. இராச்சியத்தின் சட்டங்களைப்பற்றியும் அதற்குள் நடைபெறும் விவகாரங்களைப்பற்றியும் இராச்சிய நீதிமன்றங்களே தீர்ப்புக் கூறும். அவ்வாறே தமது சேவகர்களனைவரையும் இராச்சிய அரசாங்கம் நியமித்துக்கொள்ளும். ஐக்கிய இராச்சிய அரசாங்கங்களுக்குப் பொதுவான சேவைகளில்லை. ஐக்கிய அரசாங்கம் இராச்சியங்களுக்குப் பண உதவி செய்யவேண்டிய கடமை இல்லை. வரிகளைப் பகிர்ந்துகொள்ளவும் விதியில்லை. சமீப காலம்வரையில் சிற்சில துறைகளைத் தவிர, எல்லாச் செலவுகளையும் இராச்சியங்களே சமாளித்து வந்தன. ஆனால்,

இப்பொழுது அனேகமாக எல்லாக் காரியங்களுக்கும் ஐக்கிய அரசாங்கம் உதவி வருகின்றது. முக்கியமாக விவசாய ஆராய்ச்சி, கல்வி, சாலை அமைப்பு, சமூகப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் ஏராளமாக மானியங்கள் வழங்கிவருகின்றது. இதனால், இராச்சியங்களின் சுதந்திரம் குறைந்துவிட்டதென்றோ அவற்றின் செல்வாக்கு மங்கி வருகின்றதென்றோ நினைக்கலாகாது. ஐக்கிய அரசாங்கத்தின் அதிகாரமும், செல்வமும், செல்வாக்கும் மிகவும் வளர்ந்திருப்பது உண்மையே. இராச்சியங்களின் காரியங்களும் வருமானமும், சேவைகளும் சற்றுக் குறைவாகவிருப்பினும் பெருகிக் கொண்டே வருகின்றன. ஐக்கிய அரசியல் முறை மிகவும் திறமையாகவும் நிலைத்தும் ஓங்கிவருவது மற்ற நாடுகளுக்கு ஓர் வழிகாட்டியாகவிருக்கின்றது.

பாரத ஐக்கிய அரசியலிலும், இராச்சிய அரசாங்கங்கள் ஐக்கிய அரசாங்கத்தைப்போலவே அமைந்திருக்கின்றன. ஆனால், அமெரிக்க இராச்சியங்களுக்கும் இந்திய இராச்சியங்களுக்கும் பல வேற்றுமைகளிருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவைகளாவன :

அமெரிக்க ஐக்கிய நாட்டின் பரப்பு 94 இலக்ஷம் சதுர கிலோ மீட்டர்; இந்தியாவின் பரப்பு 33 இலக்ஷம் கி.மீ. இரண்டு நாடுகளின் ஜனத்தொகை (1960) முறையே 18, 44 கோடிகள். அதாவது, மூன்றில் ஒரு பங்கு பிரதேசத்தில் இரண்டரை மடங்கு ஜனங்கள் வசிக்கின்றனர். ஒரு சதுர கிலோ மீட்டரில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 19 ஜனங்களே; பாரதத்திலோ 134 பேர்கள்.

ஐக்கிய நாட்டில் 50 இராச்சியங்களிருக்கின்றன. அதிக ஜனத்தொகை உள்ளது நியூயார்க். அதில் 1½ கோடி மக்கள் இருக்கின்றனர். இந் நாட்டிலோ நாகாலாந்தைச் சேர்த்து 16 இராச்சியங்கள். உத்தரப் பிரதேசத்தில் 7·4 கோடி, பீகாரில் 4·6 கோடி; ஜம்மு காச்மீரம், நாகாலாந்து இரண்டிலுமே 1 கோடிக்குக் குறைவான ஜனத்தொகை,

இந்திய இராச்சியங்களின் கவர்னர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்கள். சாதாரணமாக, அவர்கள் 5 வருஷத்திற்குப் பதவி வகிப்பார்கள். ஆனால், ஜனாதிபதி இஷ்டப்பட்டால் அக் கால வரையறையைக் குறைக்கலாம், நீடிக்கலாம். சட்ட வாசகப்படி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டபோதிலும், மத்திய அரசாங்கமும், முக்கியமாகப் பிரதம மந்திரியே உண்மையில் நியமிப்பவர்கள்.

ஏழு இராச்சியங்களில் இரண்டு சபைகள் கொண்ட சட்ட மன்றங்களும் மீதி இராச்சியங்களில் ஓரே சபையுள்ள சட்டமன்றங்

களுமிருக்கின்றன. இராச்சிய மேல் சட்டசபைகளுக்கு மறைமுக மான தேர்தல் முறையில் அங்கத்தினர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

பொதுவாக, சட்ட சபைகளின் அதிகாரங்கள், அமெரிக்க இராச்சியங்களைப் போலவே இருந்தாலும், இங்குப் பொதுப் பட்டியலில் பல இனங்களிருப்பதால் நடைமுறையில் இந்திய இராச்சிய சட்ட சபைகளின் அதிகாரம் குறைவென்று ஒப்புக் கொள்ளவேண்டும்.

பாரத ஐக்கிய அரசாங்கத்திற்குப் பலவிதங்களில் இராச்சிய அரசாங்கங்கள்மீது ஆதிக்கமிருப்பதை முன் அத்தியாயங்களில் விளக்கப்பட்டது.

இந்திய இராச்சியங்களுக்கு உயர் நீதிமன்றம் ஏற்படுத்த அதிகாரமில்லை. அகில இந்திய சேவைகளுக்கு மத்திய அரசாங்கமே உத்தியோகஸ்தர்களை நியமிக்கிறது. எல்லாத் தேர்தல் களும் தேர்தல் கமிஷனரின் மேற்பார்வையில் நடைபெறவேண்டும்.

ஆனல், ஸ்தல ஸ்தாபனங்களை அமைப்பதிலும், அவைகளை மேற்பார்வையிடுவதிலும், இந்திய இராச்சிய அரசாங்கங்களின் அதிகாரம் அமெரிக்காவின் இராச்சியங்களைவிட அதிகமாகும். அந் நாட்டில் நகரசபைகளும், பிரதேச சபைகளும் அநேகமாகத் தமது பணிகளில் சர்வ சுதந்தரமுள்ளவைகளாகவிருக்கின்றன. இந்தியாவிலோ, இராச்சிய அரசாங்கத்திற்குப் பயந்து நல்ல பிள்ளை களாக நடந்துகொள்ளவேண்டும். இது அடுத்த அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்படும்.

இராச்சியங்களைத் தவிர்த்து, இரண்டு ஐக்கிய அரசியலிலும் சில ஐக்கிய பிரதேசங்கள் இருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்தின் கீழ், சன்னித் தீவுகள், குவாம், பனமா கால்வாய், பசிஃபிக் தீவுகள் இருக்கின்றன. இவற்றுள் சிலவற்றிற்கு ஓரளவு சுயஆட்சி உரிமைகள் உள. மற்றவை ஐக்கிய அரசாங்கத்தால் நேரில் ஆளப்படுகின்றன; மேலும், இரண்டாவது மகா யுத்தத் திற்குப் பின் ஜப்பானிடமிருந்து வசப்படுத்திய மார்ஷல், கராலின், மரியானு தீவுகளை உலக ஐக்கிய நாடுகளின் சங்கத்தோடு ஒப்பந்தம் செய்துகொண்டு தர்மகர்த்தாவாக ஆட்சி செய்துவரு கிறது. ஜப்பானிய ஒப்பந்தத்தில் மற்றும் சில சிறிய தீவுகளின் மீதும் இவ்வித ஆதிக்கம் பெற்றிருக்கிறது,

எல்லா ஐக்கியப் பிரதேசங்களிலும் முக்கியமானது கொலம்பியா ஜில்லா. இதில்தான் தலைநகரம் வாஷிங்டன் இருக்கின்றது.

இதைச் சுற்றிலுமுள்ள இராஜ்யங்களிடமிருந்து பிரித்து ஓர் ஐக்கியப் பிரதேசமாக்கினர். இதற்குத் தனிச் சட்டமன்றமில்லை. காங் கிரசே அதன் சட்டமன்றமாகும்.

பாரதத்திலும் பலவித ஐக்கியப் பிரதேசங்கள் இருக்கின்றன. ஹிமாசலப் பிரதேசம், மணிபூர், திரிபுரா, கோவா தாமன் ஹவேலி. பாண்டிச்சேரி பிரதேசங்களில் பார்லிமெண்டால் சட்டமூலம் சட்ட சபைகள் அமைக்கப்பட்டு ஓர் உப (லெப்டினன்ட்) கவர்னர் அல்லது கமிஷனரின்கீழ் அரைகுறையான குடியாட்சி நடைபெறு கின்றது. அவற்றின் அரசாங்கங்கள்மீது ஐக்கிய அரசாங்கத் திற்கு இராஜ்யங்களைவிட அதிக ஆதிக்கமுண்டு. அவற்றின் வருமானங்களும் பெரும்பாலும் ஐக்கிய அரசாங்கத்தின் மானியமே.

அந்தமான், நிகோபார், அந்தமான் தீவுகள் ஐக்கிய அரசாங் கத்தால் நியமிக்கப்பட்ட நிர்வாகியின்மூலம் ஆளப்படுகின்றன.

அமெரிக்காவைப்போல் தலைநகரான டில்லியும் ஓர் ஐக்கியப் பிரதேசமே. அதற்கு ஓரளவு சுய ஆட்சி கொடுப்பதற்குச் சட்டம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், தனிச் சட்டசபையோ, மந்திரி சபையோ இராது. எல்லாத் துறைகளிலும் ஐக்கிய அரசாங்கத் தின் மேற்பார்வைக்குட்பட்டிருக்கும்.

# 23. ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள்

மத்திய இராஜ்ய அரசாங்கங்கள்மூலம் எல்லா அரசியல் விவகாரங்களும் நடைபெறமுடியாது. கிராமத்திலும் நகரத்திலும் பல காரியங்களை அங்கிருப்பவர்களே செய்தாலொழிய மக்களின் தேவைகள் சரிவர கவனிக்கப்படமாட்டா. ஆதலால், எல்லா இராச்சியங்களிலும் பலவித ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள் நிலவி வருகின்றன.

பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு இரண்டிலும் ஆதி முதற் கொண்டு இந்த ஸ்தாபனங்கள் வேரூன்றி வளர்ந்திருக்கின்றன. ஆதலால், பல துறைகளில் சுதந்தரமாகவே செயல்புரிகின்றன. சட்டப்படி பார்லிமென்டுக்கும், இராச்சிய சட்ட சபைகளுக்கும் கீழ்ப்பட்டிருந்தபோதிலும் மக்களின் பேராதரவைப் பெற்றிருப்பதால் அவற்றின் அதிகாரங்களைப் பிடுங்கவோ, குறைக்கவோ இராச்சிய அரசாங்கம் முயற்சி செய்வதில்லை.

பிரிட்டனில் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து, வடக்கு அயர்லாந்து பிரதேசங்களில் சரித்திரபூர்வமாக வந்திருக்கும் ஸ்தலஸ்தாபனங்களுக்குள் பல வேற்றுமைகளிருக்கின்றன. அவற்றை விரிவாக ஆராய்வது இந் நூலுக்கு அவசியமில்லை. இங்கிலாந்தின் ஸ்தலஸ்தாபனங்கள் சுருக்கமாக வர்ணிக்கப்படு கின்றன. மற்ற ஸ்தாபனங்களும் சில வேற்றுமைகளுடன் ஏறக் குறைய அவ்வாறே அமைந்திருக்கின்றன. இங்கிலாந்திலும் வேல்சிலும் 61 கௌன்டி கவுன்சில்கள், 83 கௌன்டி பரோ கௌன்சில்கள், 317 தனி பரோ கௌன்சில்கள், 564 நகர கௌன்டி பரோ கௌன்சில்கள், 473 கிராமாந்திர கௌன்டி கவுன்சில்கள், 7,500 பாரிஷ் கௌன்சில்கள் இருக் கின்றன. தனி பரோ கௌன்சில்கள் நமது முனிசிபாலிடிகளைப் போன்றவை. பார்லிமென்டின் சட்டத்துக்குக் கீழ்ப்பட்டு சுதந்திர மான சுய ஆட்சிபெற்றவை. ஆனால், நமது முனிசிபாலிடிகளைக் காட்டிலும் அதிக அதிகாரம் உள்ளவை. அவற்றின் விவகாரங்

களில் தலையிடுவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் சாதாரணமாக உரிமையில்லை. போலீஸ், நியாயம் முதலிய பொறுப்புகளும் உண்டு.

கௌன்டி என்பது நமது ஜில்லாவுக்குச் சமமாகும். அதற்குக் கீழ் முக்கிய நகரங்களை கௌன்டி பரோ என்றும், சிறிய நகரங்களைச் சேர்த்து ஜில்லா நகர கௌன்சில்கள் என்றும், மீதி கிராமாந்தரங்களை ஜில்லா கவுன்சில்கள் என்றும் கூறப்படுகின்றன. நமது நாட்டில் புதிதாக நிறுவப்படும் ஜில்லா பரிஷத், பஞ்சாயத் சமிதிகளுக்கு ஒப்பானவை. பாரிஷ் கௌன்சில்கள் நமது கிராமப் பஞ்சாயத்தைப் போன்றவை. ஆனால், அதிக அதிகாரமில்லை

எல்லாக் கௌன்சில்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டவை. இவை செய்யும் பணிகளாவன: குடிஜல, சாக்கடை வசதிகள், சுகாதாரம், கலப்படத்தைத் தடுப்பது போன்ற மக்களின் பொதுநலத்தைப் பாதுகாத்தல், சாலைகளை அமைத்தல், பாலங்கள் கட்டுதல், தெருவிளக்கு ஏற்பாடு செய்தல் முதலிய பொது வசதிகளை வளர்த்தல்; நெருப்பு, திருட்டு, பலாத்காரம் முதலிய அபாயங்களைத் தடுப்பதற்கு நெருப்பணைப்பு, போலீஸ் படைகளை அமைத்துப் பராமரித்தல், கல்வி, வைத்தியம், விநோத விடுதிகள்மூலம் மக்களின் வாழ்க்கையை உயர்த்தல், பரோக்களில் இவையனைத்தையும் ஒரே நகரசபை செய்யும். இதர ஸ்தலஸ்தாபனங்கள் கௌன்டி, ஜில்லா கௌன்சில்கள் இவற்றைத் தத்தம் சக்திக்கேற்றவாறு பகிர்ந்துகொள்ளும்.

இந்த ஸ்தலஸ்தாபனங்களின் வருமானம் 40 சதம் தேசிய அரசாங்கத்திடமிருந்து மானியமாகவும், 40 சதம் வீட்டு வரி மூலமும், 20 சதம் இதர வகைகளிலும் கிடைக்கின்றன. ஓரளவு இந்த ஸ்தாபனங்களின் தேர்தல்களில் அரசியல் கட்சிகள் கலந்து கொள்ளுகின்றன. கட்சியில் சேராதவர்களும் அந்தந்தப் பிரதேசங்களில் தாம் செய்யும் சமூக சேவைமூலம் மக்கள் ஆதரவைப் பெற்று இடம் பெறுகின்றனர்.

சில ஸ்தலஸ்தாபனங்கள் பஸ் போக்குவரத்து, துறைமுகம் முதலிய தொழில்களையும் செய்கின்றன. தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கவும் முயல்கின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் ஸ்தல ஸ்தாபனங்கள் பிரிட்டனைப்போலவே பழமையானவைகளாகவும் சுதந்தரமுள்ளவை

களாகவும் இருக்கின்றன. ஆனால், அவற்றின் அமைப்புகளில் அதிக வேற்றுமைகள் உள. பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பிரிட்டனிலிருந்தும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் மக்கள் வட அமெரிக்காவுக்குக் குடியேறின பொழுது அந்தப் பரந்த தேசத்தில் சில இடங்களிலேயே ஆதிவாசிகள் இருந்தனர். அவர்களை விரட்டிவிட்டு வெள்ளையர் தங்கள் குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். ஏராளமான நிலமிருந்ததால், சிறிய நகரங்களில் வசித்தனர். எல்லா அரசாங்கப் பணிகளையும் ஆங்காங்கு மக்களே செய்துகொள்ளவேண்டியிருந்தது. தங்கள் தாய்நாடுகளிலிருந்த ஸ்தலஸ்தாபனங்களை அனுசரித்து நிறுவனங்களை ஏற்படுத்திக்கொண்டனர். பல கிராமங்களும் நகரங்களும் சேர்ந்து பின்னர் இராஜ்யங்களாயின. இராஜ்ய அரசாங்கங்கள் ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரங்களையோ, சுதந்திரங்களையோ குறைக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| இப்பொழுது அந்த நாட்டில் முனிசிபாலிடிகள் | ... | ... | 16,778 |
| கௌன்டிகள் | ... | ... | 3,049 |
| சிறிய நகராட்சிகள் | ... | ... | 17,202 |
| கல்வி ஜில்லாக்கள் | .. | ... | 67,346 |
| விசேஷ ஜில்லாக்கள் | ... | ... | 12,319 |

இராஜ்ய சட்டப்படி தனி சுய ஆட்சி ஸ்தலமாக செய்யப்பட்ட நகரங்களில் முனிசிபாலிடிகள் இருக்கின்றன. அவற்றுள் பாதி 1,000 ஜனத்தொகைக்குக் குறைவானவை. சுமார் ஆயிரம் முனிசிபாலிடிகளே 10,000-த்திற்கு அதிகமான மக்கள் உள்ளவை. ஆனால், சில மிகப்பெரிய முனிசிபாலிடிகளுமுண்டு. நியூயார்க் நகரில் 80 இலட்சம் ஜனங்கள் இருக்கின்றனர். 1940-ல் நியூயார்க் மாநகரின் ஜனத்தொகையைக் காட்டிலும் அதிக ஜனமுள்ள இராஜ்யங்கள் மூன்றுதாமிருந்தன.

நகரத்தின் பாதுகாப்பு, நீதி பரிபாலனம், கல்வி, சுகாதாரம் முதலிய எல்லா அதிகாரங்களும் முனிசிபாலிடிகளிடமே உள்ளன. சில முனிசிபாலிடிகள் எரியாவி, மின்சாரம், டெலிபோன், பஸ் முதலிய தொழில்கள் செய்து சம்பாதிக்கின்றன.

1952-ல் 25,000 ஜனத்தொகைக்கு அதிகமான 384 முனிசிபாலிடிகளின் செலவு விவரங்களைக் கவனித்தால், அவற்றின் செல்வ நிலையும் பரந்த அதிகாரங்களும் விளங்கும். மொத்தம் 519 கோடி டாலர்கள். கல்வி 90 கோடி, சாலைகள் 59 கோடி,

போலீஸ் 54 கோடி, சுகாதாரம் 58 கோடி, வைத்தியசாலைகள் 45 கோடி, இதர பொது நலம் 42 கோடி, நெருப்பணைப்பு 41 கோடி, விநோத ஏற்பாடுகள் 28 கோடி, நூல்நிலையங்கள் 8 கோடி, இதர பல்வகைப் பணிகள் 103 கோடி. இத் தொகை பாரதத்தின் மத்திய, இராஜ்ய அரசாங்கங்களின் மொத்தச் செலவிற்குச் சமான மாகும்.

முனிசிபாலிடிகளின் ஆட்சிகள் மூன்றுவிதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மேயரும் கௌன்சிலர்களும் நேரில் தேர்ந்தெடுக்கப்பட்டு, மேயர் நிர்வாக அதிகாரியாகவும், கௌன்சில் சட்டசபையைப்போல் விதிகளையும் வரவு செலவுகளையும் அனுமதிக்கும் அதிகாரியாகவுமிருக்கும் முறையே மிகவும் பழமையானது. பெரும்பாலான முனிசிபாலிடிகள் இம் முறையிலேயே ஆளப்படுகின்றன. சில நகரங்களில் வாக்காளர்கள் சில நிர்வாக உத்தியோகஸ்தர்களை நேரில் தேர்ந்தெடுத்து, அவர்கள் சேர்ந்து ஒரு கமிஷனாக ஆட்சி செய்கின்றனர். மற்றும் சில நகரங்களில், விதிகள் செய்வதற்கு ஒரு பிரதிநிதி சபை தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தச் சபை முனிசிபல் நிர்வாகத்திற்கு ஒரு மானேஜரை நியமித்து, அவர் ஒரு தொழிற்சாலை நிர்வாகத்தைப்போல் நகராட்சியை நடத்துகிறார்.

முனிசிபாலிட்டி இல்லாத இடங்களில் கௌன்டி கௌன்சில்களும் சிறிய நகரசபைகளும் இந்த அதிகாரங்களைப் பங்கீடு செய்துகொண்டு ஆட்சி புரிகின்றன. சிறிய கிராமங்களில்கூட இந்த நகராட்சி முறையே நடைபெற்றுவருகிறது.

பாரதத்தில் ஆதிகாலம்முதல் கிராமங்களில் பஞ்சாயத்துகள் இருந்துவந்திருக்கின்றன. சாதாரணமாக அப் பஞ்சாயத்துகள் ஊரிலுள்ள ஜாதிகளின் தலைவர்களைக் கொண்டனவாக இருந்தன. ஒவ்வொரு ஜாதிக்கும் தனது சொந்த அலுவல்களைக் கவனிக்கவும் தகராறுகளைத் தீர்க்கவும் ஒரு ஜாதிப் பஞ்சாயத்து இருந்தது. இப் பஞ்சாயத்துகளின் தலைவர்கள் கூடி ஊருக்குப் பொதுவான காரியங்களைக் கவனித்துவந்தனர். அரசியல் குழப்பத்தால் அப் பஞ்சாயத்துகள் பிரிட்டிஷ் இராஜ்யம் ஊர்ஜிதமானபொழுது குற்றுயிராகவும், அடியோடு மறைந்தும் இருந்தன. பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் அவைகளைப்பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. தங்களுக்கும் குடிகளுக்கும் நடுவில் உள்ள எவ்வித ஸ்தாபனத்தையும் தங்களுக்கு விரோதமாகவே பாவித்தனர். ஆனால், பொதுமக்கள் தொடர்பின் அவசியத்தை உணர்ந்தனர். 1869ஆம் ஆண்டில் நிலவரிமீது மேல்வரி

(செஸ்) விதித்து, அதை மக்களின் சமூக நலத்திற்காக உபயோகிப் பதற்கு ஜில்லா கலெக்டர் தலைமையில் கமிட்டிகளை நியமித்தார்கள். வங்காளத்தில் சௌகிதாரி சட்டம் செய்து, 10 சதுர மைல் பரப்புக்கு ஒரு யூனியன் ஏற்படுத்தி, அதற்கு ஒரு பஞ்சாயத்தை நியமித்தனர். மக்களிடம் சந்தா வசூல் செய்து, ஊர்காப்பாளர் களை நியமித்து, சமாதானத்தைப் பாதுகாப்பதே அதன் முக்கிய உத்தேசம்.

1882 மே 18-ல் அப்பொழுது வைசிராயாக இருந்த ரிப்பன் பிரபுவால் ஒரு தீர்மானம் பிறப்பிக்கப்பட்டது. அது தாலுகாக் களில் போர்டுகள் ஏற்படுத்தவேண்டுமென்றும், அவைகளை மேற் பார்வையிட ஜில்லா போர்டுகள் அமைக்கப்படவேண்டுமென்றும் மாகாண அரசாங்கங்களுக்கு உத்தரவிட்டது. அதனை அனு சரித்து எல்லா மாகாணங்களிலும் ஜில்லா தாலுகா போர்டுகள் நிறுவச் சட்டமியற்றப்பட்டது. பல மாகாணங்களில் ஜில்லா போர்டுகளுக்கே அதிகாரங்களும் மானியங்களும் பெரும்பாலும் வழங்கப்பட்டன. சென்னையில் அவை ஜில்லா தாலுகா போர்டு களுக்குப் பங்கீடு செய்யப்பட்டன. மத்திய மாகாணத்தில் மட்டுமே தாலுகா போர்டுகள் முக்கிய ஸ்தாபனங்களாக்கப் பட்டன.

பிரிட்டிஷ் வியாபாரிகளும் அதிகாரிகளும் வசித்த கல்கத்தா, சென்னை, பம்பாய் நகரங்களில் இங்கிலாந்திலுள்ள நகராட்சி அமைக்கப்பட்டது. ஆனால், போலீஸ், நீதி பரிபாலன அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை. இதர விஷயங்களில் கணிச மான சுதந்திர அந்தஸ்து கொடுக்கப்பட்டது.

மற்ற நகரங்களிலும் முனிசிபாலிடிகள் ஏற்படுத்தப்பட்டன. பிரிட்டிஷ் நகராட்சியின் பிரதிபிம்பங்களாக அமைக்கப்பட்ட போதிலும், அரசாங்கத்திற்கு அவற்றின்மீது பலவித ஆதிக்க மிருந்ததால், அதிக சுதந்திரமில்லாத ஸ்தாபனங்களாகவே இருந்தன.

1920ஆம் ஆண்டில் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத் தங்கள் அமலாக்கப்பட்டு, ஸ்தல ஸ்தாபனங்கள் சட்டசபைக்குப் பொறுப்புள்ள மந்திரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டது. கிராமப் பஞ்சா யத்துகளுக்குப் புத்துயிர் கொடுக்கவும், கல்விக்குத் தனி நிறுவனங் கள் அமைக்கவும் அம் மந்திரிகள் முயற்சி செய்தனர். ஆனால், அவர்களிடம் போதுமான அதிகாரமோ, பணமோ இல்லாததால், அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை.

காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற சுதந்திர இயக்கத்தில் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு முக்கிய இடமளிக்கப்பட்டது. அதன் பலனாக 1947-49-ல் அரசியல் நிர்ணய சபையால் தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப்பில் 40ஆவது விதியில் கிராமப் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி, அவைகளுக்குப் போதிய அதிகாரங்களும் பணமும் கொடுக்கப்படவேண்டுமென்று ஒரு வழிகாட்டிக் கொள்கை சேர்க்கப்பட்டது.

1952-ல் கிராமாந்தரங்களின் முன்னேற்றத்திற்காக ஓர் பெரும் சமுதாயத் திட்டம் வகுக்கப்பட்டு, 100 கிராமங்களுக்கு ஓர் வட்டாரம் அமைக்கப்பட்டு விவசாயம், கல்வி, சாலை முதலிய திட்டங்கள் அமல் செய்யப்பட்டன. பெரும்பாலும் சம்பள உத்தியோகஸ்தர்கள் மூலமாகவும், பயிற்சி அளிக்கப்பட்ட கிராம சேவகர்கள் மூலமாகவும் அவை நடைபெற்றன. உத்தியோகப் பற்றற்றவர்கள் ஆலோசனைக் கமிட்டிகளில் நியமிக்கப்பட்டனர். இதனால் கிராமங்களில் பலவித முன்னேற்றப் பணிகள் செய்யப்பட்டபோதிலும், பொதுமக்களுக்கு நேரில் தொடர்பு ஏற்பட்டாலொழிய அவற்றால் முழுப் பலன் கிடைக்காதென்று புலப்பட்டது. 1957-ல் காலஞ் சென்ற பல்வந்தராய்மேதாவின் தலைமையில் ஓர் கமிட்டி அமைக்கப்பட்டு, கிராமாந்தர சுய ஆட்சிக்குத் தீவிரமான சிபார்சுகள் செய்யப்பட்டன. அவற்றின்படி கிராமப் பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து சமிதிகள், ஜில்லா பரிஷத்துகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அநேகமாக எல்லாக் கிராமங்களிலும் பஞ்சாயத்துகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டபூர்வமான அதிகாரங்களுடனும் நிதியுடனும் பணியாற்றிவருகின்றன. பஞ்சாயத்துகளைத் தேர்ந்தெடுக்க வயதுவந்த அனைவருக்கும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

அவை கிராமத்தில் குடிதண்ணீர், சாக்கடை வசதிகள், தெரு விளக்கு, சாலைகள், புத்தகசாலை முதலிய சமூகப் பணிகளுக்குப் பொறுப்பாளிகளாக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வோர் வட்டாரத்திற்கும் ஓர் பஞ்சாயத்து சமிதி (யூனியன் கௌன்சில் என்று இதற்குப் பெயர்) கிராமப் பஞ்சாயத்துகளின் தலைவர்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்வி, கிராம வைத்தியசாலை, சிறு நீர்ப்பாசனம், சுகாதாரம், விவசாய முன்னேற்றம் முதலிய பணிகள் அவற்றிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. சமூக நலத் திட்டத்தின்கீழிருந்த வட்டார உத்தியோகஸ்தர்களும் கிராம சேவகர்களும் பஞ்சாயத் சமிதியின் பணியாளர்களாக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜில்லா பரிஷத்துகளைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன. சென்னை, இராஜஸ்தானம் முதலிய சில இராச்சியங்களில் பஞ்சாயத் சமிதியே முக்கிய ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனமாக இருக்கவேண்டுமென்றும், ஜில்லாவில் வெறும் ஆலோசனை சபையொன்று இருந்தால் போதுமென்றும் கருதப்படுகிறது. மகாராஷ்டிரம், குஜராத் இராச்சியங்களில் ஜில்லாவில் நல்ல அதிகாரமுள்ள ஜில்லா பரிஷத் இருந்தாலொழிய, ஸ்தல சுய ஆட்சி சிறப்பாக இராது என்று எண்ணப்படுகிறது. மகாராஷ்டிரத்தில் அந்தப் பரிஷத் சமிதி தலைவர்களும் நேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் சேர்ந்து அமைக்கப்பட்டு, தலைவர் உப தலைவர்களுக்குச் சம்பளமும் கொடுக்கப்படுகிறது.

31-3-'63-ல் 34 கோடி ஜனங்கள் உள்ள 520,712 கிராமங்களில் 205,452 கிராமப் பஞ்சாயத்துகள் உருவாகியிருந்தன. சராசரி 21/2 கிராமங்களுக்கு ஒரு பஞ்சாயத்துக் கணக்காகிறது. கிராமாந்தர மக்களில் 96 சதம் இப் பஞ்சாயத்துகளுக்குள்ளிருக்கின்றனர்.

மொத்தம் 324 ஜில்லாக்களில் 5,131 அபிவிருத்தி வட்டாரங்கள் இருக்கின்றன. அவற்றில் 3,144 பஞ்சாயத்து சமிதிகள் ஏற்பட்டிருக்கின்றன. கேரளம், மத்தியப் பிரதேசங்களில் அவைகளை நிறுவ, சட்டம் தயாராகிவருகின்றன; 210 ஜில்லா பரிஷத்துகளும் மேற்கூறிய தேதியில் அமைக்கப்பட்டிருந்தன.

மாநகர்களிலும் நகரங்களிலும் பிரிட்டிஷ் காலத்திலிருந்தபடியே கார்ப்பொரேஷன்களும் முனிசிபாலிடிகளும் இருக்கின்றன. புதிய அரசியல் அமைப்பை அனுசரித்து, வயது வந்தவர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. தனிச் சமூகப் பிரதிநிதித்துவம் ரத்து செய்யப்பட்டது. ஆனால், சில துறைகளில் அவற்றின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. முக்கிய உத்தியோகஸ்தர்களை இராச்சிய அரசாங்கங்களே நியமிக்கின்றன. முனிசிபாலிடிகளிடமிருந்த ஆஸ்பத்திரிகளும், நடுத்தரப் பள்ளிகளும், கலாசாலைகளும் இராச்சிய அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டன. 1961-ல் 1 இலட்சத்திற்குமேலுள்ள மாநகர்கள் 107. ஜனத்தொகை 3·5 கோடி. 50,000-த்திலிருந்து இலட்சம்வரையில் ஜனத்தொகையுள்ள நகரங்கள் 141. மொத்த ஜனங்கள் 1 கோடி. 20,000-த்திலிருந்து 50,000 வரையில் 515 நகரங்கள், மொத்த ஜனங்கள் 1·6 கோடி. இவற்றிலெல்லாம் முனிசிபல் ஆட்சி நடைபெற்றது. 10,000-த்திலிருந்து 20,000 வரை 817 சிறிய நகரங்கள் இருக்கின்றன. இவற்றில் சில

முனிசிபல் ஆட்சியிலும், சில பஞ்சாயத்து ஆட்சியிலுமிருக்கின்றன. 5,000-த்திலிருந்து 10,000 வரையில் 844 மிகச் சிறிய நகரங்கள் பெரும்பாலும் பஞ்சாயத்து ஆட்சியிலிருக்கின்றன. ஆனால், அவைகள் நகரப் பஞ்சாயத்துகள் என்று வகுக்கப்பட்டு, சாதாரணக் கிராமப் பஞ்சாயத்திற்கு அதிகமாகவும் முனிசிபாலிடிகளுக்குக் குறைவாகவும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றன.

முனிசிபாலிடிகளுக்கு முக்கிய வருமானம் வீட்டு வரியும், இராச்சிய அரசாங்க மானியமும், பஞ்சாயத்துகளுக்கு நிலவரிமீது போடப்படும் செஸ்களும், பல இராச்சியங்களில் நிலவரியில் ஒரு பாகமும் வழங்கப்படுகின்றன; மானியங்களும் கொடுக்கப்படுகின்றன. மொத்தத்தில், ஸ்தல சுய ஆட்சிக்குச் சில முக்கிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று கூறலாம். ஆனால், ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரங்களோ, வருமானங்களோ திருப்திகரமாக இருப்பதாகச் சொல்லமுடியாது. பிரிட்டிஷ், அமெரிக்க ஸ்தாபனங்களோடு ஒப்பிடும்பொழுது மயிலுக்கும் வான்கோழிகளுக்குமுள்ள வேற்றுமையே புலப்படுகிறது.

# 24. பொருளாதாரம்

நாட்டின் சுதந்திரம், சமாதானம் இவ்விரண்டிற்குப்பின் அதன் பொருளாதார அபிவிருத்தியே அரசாங்கத்தின் மூன்ருவது முக்கிய இலட்சியமாகும். இருநூறு வருஷங்களுக்குமுன் அரசாங்கம் நேரடியில் பொருளாதாரத்தை வளர்ப்பது ஒரு சிறிய அளவுக்கே சாத்தியமாக இருந்தது. விவசாயம், கைத்தொழில், வியாபாரம், குதிரை, மாடு, ஒட்டகம் முதலிய மிருகங்களைக்கொண்டு போக்கு வரத்துகள், உலகெங்கும் பொருளாதாரத்தின் முக்கிய அம்சங் களாக இருந்தன. சென்ற 200 ஆண்டுகளிலேதான் இது புரட்சி கரமாக மாறியிருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சி, அதன்மூலம் நீராவி, எண்ணெய், மின்சாரம் முதலிய இயற்கைச் சக்திகளைக் கொண்டு கணக்கற்ற புதிய பொருள்கள் தயாரிக்கப்படுவதும், அவை ரெயில், கப்பல், மோட்டார், ஆகாய விமானமூலம் ஆயிரக் கணக்கான மைல்கள் தூக்கிச் செல்லப்பட்டு, வியாபாரம் செய்யப்படு வதும் சர்வசாதாரணமாகிவிட்டது. விவசாயத்தில்கூடப் பல நாடுகளில் டிராக்டர்கள், அறுப்பறுத்துக் கட்டித் தானியத்தைப் பிரிக்கும் கூட்டு யந்திரங்கள், விவசாயப் பொருள்களைத் தூக்கிச் செல்ல லாரிகள் மூலமாக, அதுவும் ஒரு யந்திரத் தொழிலாகி வருகின்றது.

இந்த யந்திர யுகத்தில் அரசாங்கத்திற்கும் பொருளாதாரத் திற்கும் நெருங்கிய தொடர்பு அவசியமாயிற்று. யந்திரங்களைத் தயார் செய்வதிலும் உபயோகிப்பதிலும் சரியான முறைகளைக் கையாளாவிட்டால் ஆபத்து நேரிடும். சட்டபூர்வமாகக் கட்டுப் பாடுகளையும் தடைகளையும் ஏற்படுத்தி, அவைகளை அமல் செய்யத் தகுந்த உத்தியோகஸ்தர்களையும் இலாக்காக்களையும் நிறுவ வேண்டும். ஒரே தொழிற்சாலையில் நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் தொழிலாளர்கள் வேலைசெய்வதால், அவர்க ளுடைய நலனைப் பாதுகாப்பதற்கும், அவர்களுக்கும் முதலாளிக்கு முள்ள தொடர்புகளை ஒழுங்கு செய்வதற்கும் சட்டங்களும்

அதிகாரிகளும் தேவையாகின்றனர். இக் காலத்திய தொழில் களுக்கு ஏராளமான முதல் வேண்டும். செம்பு, வெள்ளி, தங்க நாணயங்களைக்கொண்டு விவகாரங்கள் நடைபெற முடியாது. அதற்காகக் காகித நாணயம் அச்சிட்டு வழங்கவேண்டியிருந்தது. அந்தக் காகித நாணயத்தின் உள்நாட்டுப் பெறுமானமும், வெளி நாட்டுப் பெறுமானமும் நிலைபெற்றிருக்க அரசாங்கம் பலவித சிக்கலான முறைகளைக் கையாளவேண்டும். போதிய ஜாக்கிரதை யுடன் சமாளிக்காவிட்டால், தம்மிஷ்டப்படி அரசாங்கம் மிதமிஞ்சிக் காகித நாணயத்தை வழங்கிவிட்டால், அதன் மதிப்புக் குறைந்து, பொருளாதாரம் சீர்குலைந்துவிடும். இரண்டாம் யுத்தத்திற்குப் பின் ஜெர்மனி, ஜப்பான், ஃபிரான்சு, ரஷியா இவற்றின் பழைய நாணயங்கள் பிரயோசனமற்றனவாகிப் புதிய நாணயங்கள் வழங்க வேண்டியிருந்தது. டாலர், பவுன், இவற்றின் வெளிநாட்டு மதிப்பைக்கூடக் குறைக்கவேண்டிவந்தது. சமீபத்தில் ரூபாயின் வெளிநாட்டு மதிப்பைக் குறைக்கவேண்டியிருந்ததையும் குறிப் பிடலாம்.

காகித நாணயத்தோடுகூட இக்காலத்திய பொருளாதாரம் நடைபெற முடியாது. அதற்காக பாங்குகள் தேவை. பொருளா தாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எதிர்பாராமல் பலவித அபாயங்கள் ஏற்படக்கூடும். அதனால் தனி நபர்களும் கம்பெனி களும் முறிந்துபோகாமலிருப்பதற்காக இன்ஷியூரன்ஸ் அவசிய மாகும். சம்பாத்தியமும் உத்தியோகமும் நின்றுபோகும் காலத்தில் குடும்பங்கள் கஷ்டப்படாமலிருப்பதற்கு ஆயுள் இன்ஷூரன்ஸ் உதவுகிறது. இவ்வித ஸ்தாபனங்களை யெல்லாம் நிறுவுவதற்கும், சரிவர நடைபெறுத்துவதற்கும் விவரமான சட்டங்களும், அவற்றை அமல் செய்யும் அதிகாரிகளும் இக்காலத்திய அரசாங்கங்களின் தவிர்க்க முடியாத கடமைகளாகின்றன.

பொருளாதார சரித்திரத்தில் பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, பாரதம் மூன்றின் வரலாறுகளும் வெவ்வேறு விதமாக இருக் கின்றன.

விஞ்ஞான வளர்ச்சியிலும், இயந்திர சாதனத்திலும் பிரிட்டன் உலகிற்கே முன்னணியில் நின்றது. மேலும், அது ஆசியா, ஆஃப் ரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களில் தனது ஆதிக்கத்திற்குட்பட்ட சாம்ராச்சிய நாடுகளைப் பெற்றிருந்தது. இதனால், ஏராளமான முதல் பிரிட்டனுக்கு சுலபமாகக் கிடைத் தது. ஆதலால், பத்தொன்பதாவது நூற்றுண்டு முழுதும் உற்பத்தி யும் வியாபாரமும் ஓயாமல் வளர்ந்துவந்தன.

பிரிட்டனின் மொத்த நிலப்பரப்பு 93,018 சதுர மைல்; இங்கிலாந்து 50,051; வேல்ஸ் 7,966; ஸ்காட்லாண்டு 29,795; வடக்கு அயர்லாந்து 5,206; அதிக மலைப் பிரதேசங்கள். அங்கு நிலத்தின் செழிப்பு மிகவும் குறைவு. பள்ளத் தாக்குகளில் நிலம் செழிப்பாக இருக்கிறது. வயல்கள் சுற்றிலும் வேலியால் சூழப்பட்டு நன்ருக விவசாயம் செய்யப்படுகின்றது.

1700-ல் பிரிட்டனில் 70 இலட்சம் மக்கள்தாமிருந்தனர். 18,19ஆம் நூற்றுண்டுகளில் ஜனத்தொகை மிகத் துரிதமாக வளர்ந்தது. 1921-ல் அது 445 இலட்சமாகிவிட்டது. அதன்பின் அதன் வளர்ச்சி மிகவும் குறைந்து, 10 வருஷத்திற்கு 25 இலட்சம் வீதமே பெருகிவருகிறது. ஆயினும், பிரிட்டனின் மக்கள் விகிதம் சதுர மைலுக்கு 534. இது உலகில் மிகவும்ஜனநெருக்கமுள்ள நாடுகளைச் சேர்ந்தது. வருஷாந்தர வளர்ச்சி இப்பொழுது 1 சதமாக இருப்பதால், நம் நாட்டைப்போல் கர்ப்பத்தடை அவசியமில்லை. ஆனால், அநேகமாக எல்லாக் குடும்பங்களும் கர்ப்பத்தடை முறைகளைக் கையாண்டுவருவதாலேயே ஜனப்பெருக்கம் தடைப்பட்டிருக்கிறதென்றும் கூறலாம். 18, 19ஆம் நூற்றுண்டுகளில் பிரிட்டிஷ் குடும்பங்கள் ஏராளமாக அமெரிக்கா, ஆஸ்திரேலியாவுக்குக் குடியேறின. 1815-லிருந்து 1930வரை 2 கோடி மக்கள் வெளியேறியதாக மதிப்பிடப்படுகிறது. ஆனால், முதல் உலக மகாயுத்தத்திற்குப்பின் வெளியேறுவோரும் திரும்பிவருவோரும் ஏறக்குறைய ஒரே எண்ணிக்கையாக இருக்கின்றனர். 1961-ல் மொத்த ஜனத்தொகை 527 இலட்சம். இயந்திரத் தொழில் வளர்ச்சியின் காரணத்தால், பிரிட்டிஷ் மக்கள் நகரங்களிலேயே பெரிதும் வசிக்கின்றனர். 80 சதம் அவ்வாறு வசிப்பதோடு, 4 சதமே விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். லண்டனைச் சுற்றி 40 மைலுக்குள் 120 இலட்சம் ஜனங்கள் வசிக்கின்றனர்.

1963-ல் பிரிட்டனில் மொத்த வருஷாந்தர வருமானம் 2,636 கோடி பவுன். சராசரி நபருக்கு 500 பவுனுக்கு மேலிருந்தது. ஆண்டுதோறும் 2-லிருந்து 3 சதம் அதிகரித்துவருகிறது. ஜனத்தொகைவளர்ச்சி 1 சதத்திற்குக் குறைவாகையால், வருஷம் $1\frac{1}{2}$ சதம் சராசரி நபர் வருமானம் உயர்ந்துவருகிறது. இதனுல் இரண்டு மகாயுத்தங்களால் இழந்த சாம்ராச்சிய நாடுகளிலிருந்து கிடைத்த இலாபங்களை இழந்ததற்காக இப்பொழுது பிரிட்டிஷ் மக்கள் வருந்தவேண்டியதில்லை.

இயந்திரத் தொழிற்சாலைகளின் உற்பத்திமூலம் 35%மும், சுரங்கப் பொருள்கள், மின்சாரம் முதலியவற்றுல் 15%மும், விவசா

யம் காடுகள்மூலம் 20%மும், அரசாங்கத் தொழில், கல்வி முதலிய பணிகள்மூலம் மீதியும் நாட்டின் வருமானத்தின் ஈவுகளாவன.

1962-ல் 272 இலட்சம் நபர்களுக்கு நேரடியான வருமானங்களிருந்தன. அவற்றுள் 16,000 வருமானங்களே 6,000 பவுனுக்கு அதிகமானவை. கால்வாசி வருமானங்கள் 250—500 பவுன்களும், கால்வாசி 500-750 பவுன்களும்,40% 750, 1,000 பவுன்களும் சுமார் 40 இலட்சம் வருமானங்கள் 1,000 பவுனுக்குமேலும் இருந்தன. அவற்றுள் பெரும்பாலானவை 2,000 பவுனுக்குக் குறைவாகவே இருந்தன. ஆதலால், ஒரு பிரிட்டிஷ் குடும்பத்தின் வருமானம் சாதாரணமாக ஆண்டுக்கு 250 பவுனுக்குக் குறைவில்லாமலும், 2,000 பவுனுக்கு அதிகமில்லாமலும் இருக்கிறது. பொருளாதார சமத்துவம் பேரளவில் நிலவிவருகிறதென்று கூறலாம்.

பிரிட்டிஷ் மக்கள் செலவழிக்கும் பொருள்களும் தொகைகளும் பின்வருமாறு: உணவு 492 கோடி பவுன்; மதுபானம் 112 கோ. ப.; புகையிலை 108 கோ. ப.; வீடு, நிலக்கரி, வெளிச்சம் 206 கோ. ப.; உடை, காலணி 145 கோ. ப.; மோட்டார் கார், மோட்டார் சைகிள் 40 கோ. ப.; தட்டுமுட்டுச் சாமான்கள் 75 கோ. ப.; இதர பலவித சாமான்களும் சேவைகளும் 400 கோ. ப.

பிரிட்டனின் முக்கிய இயற்கைப் பொருள்கள் நிலக்கரியும், மற்றும் சில கனிமப் பொருள்களுமே. விவசாயமும் குறைவு. ஆதலால், உணவுக்கும் தொழிலுக்கும் வேண்டிய பொருள்களைப் பேரளவில் இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. இவற்றிற்குப் பதிலாக அதன் உற்பத்திச் சாலைகளில் தயாராகும் செயற்கைப் பொருள்களை ஏற்றுமதி செய்து சமாளிக்கவேண்டும். இது 19ஆம் நூற்றாண்டில் உலகிலேயே வியாபாரத்தில் முதன்மையாக இருந்தது. மொத்த உலக வியாபாரத்தில் மூன்றில் ஒரு பங்கு பிரிட்டன் பங்காக இருந்தது. ஆனால், இந்த நூற்றாண்டில் ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகள் போட்டிபோட்டு, அதில் கணிசமான பாகத்தைக் கைப்பற்றிக்கொண்டன. 1937-ல் உலக வியாபாரத்தில் பிரிட்டனின் பங்கு 22% ஆகவும், 1963-ல் 15%ஆகவும் குறைந்துவிட்டது. ஆயினும், மொத்த உலக வியாபாரம் தீவிரமாக வளர்ச்சியடைந்ததால், பங்கு குறைந்தபோதிலும் ஏற்றுமதி இறக்குமதி சாமான்களின் அளவு கூடியே வந்திருக்கிறது. 1963-ல் இறக்குமதி 482 கோடி பவுனும், ஏற்றுமதி 408 கோடி பவுனுமாக இருந்தது. இவ்விரண்டுக்குமுள்ள வித்தியாசத்தைக்

கப்பல், பாங்கு விவகாரங்கள்மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு பிரிட்டன் சமாளித்துவருகிறது. ஆயினும், தற்சமயம் அது கஷ்டப்பட்டுக்கொண்டுதானிருக்கிறது. தொழிலாளிகளுக்கு அதிக கூலிகளும், வசதிகளும், பாதுகாப்புகளும் அளிப்பதால், பிரிட்டனில் உற்பத்தி விலை ஜெர்மன், ஜப்பான் முதலிய நாடுகளைக் காட்டிலும் அதிகமாகவே இருப்பதால், ஏற்றுமதியில் போட்டிபோடுவது கடினமாகிவருகிறது.

பிரிட்டனின் முக்கிய உற்பத்திகள் பின்வருமாறு :

மோட்டார் வண்டிகள் 232 கோ.ப.; இரசாயனப் பொருள்கள் 287 கோ. ப.; இஞ்சினீரிங், மின்சார சாமான்கள் 469 கோ. ப.; உலோக சாமான்கள் 145 கோ.ப.; துணி. தோல் பொருள்கள் 304 கோ. ப.; காகிதம், அச்சு முதலிய சாமான்கள் 154 கோ. ப.; கப்பல் 41 கோ. ப.; உணவு, புகையிலை, சுருட்டு முதலியவை 483 கோ. ப.; எஃகு முதலிய உலோகங்கள் 209 கோ.ப.; இதர சாமான்கள் 205 கோ.ப.; இந்த உற்பத்தி சாலைகளில் 89 இலட்சம் தொழிலாளிகள் வேலைசெய்கின்றனர்.

இறக்குமதியில் 35% உணவுப் பொருள்கள் மதிப்பு 168 கோ.ப.; பெட்ரோலியம் இனங்கள் 12%-56 கோ. ப.; அரைகுறையாக உருவாக்கப்பட்ட பொருள்கள் 91 கோ. ப.; முற்றிலும் உருவாக்கப்பட்ட யந்திரசாலை உற்பத்தி சாமான்கள் 65 கோ.ப.; இவ்விரண்டும் சேர்ந்து 32.5%. மொத்த இறக்குமதி 1963-ல் 482 கோ.ப.; இதற்கு எதிராக ஏற்றுமதி 408 கோ. ப.; அவற்றுள் மோட்டார் கார், யந்திரங்கள் முதலிய இஞ்சினீரிங் சாமான்கள் 46·1%; எஃகு முதலிய உலோகங்கள் 11·3%; இரசாயனப் பொருள்கள் 9%; துணிமணிகள் 7·3%; இதர செயற்கைப் பொருள்கள் 9·9%; இறக்குமதியான பொருள்களில் ஏற்றுமதியானவை 15 கோ.ப.

மொத்தத்தில், பிரிட்டிஷ் பொருளாதார நிலைமை மிகவும் நன்றாக இருக்கிறதென்றே கூறவேண்டும். ஆயினும், பிரிட்டிஷ் மக்கள் உலகில் தங்களுக்கிருந்த ஸ்தானத்தை இழந்துவருகின்றனர். இயற்கை வளம் அதிகமாகவும் ஜனநெருக்கம் குறைவாகவுமிருக்கும் நாடுகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் பிரிட்டனைவிட அதிக விரைவில் உயர்ந்துவருகின்றது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருளாதாரப் போக்கு முற்றிலும் மாறானது. இது ஏராள இயற்கை வளமுள்ள பெரிய நாடு. பிரிட்டனைவிட நிலப்பரப்பில் 38 மடங்கும், பாரதத்தைவிட 2·8

மடங்கும் பெரியது. அதன் ஜனத்தொகை 1960-ல் 181 கோடி; பிரிட்டனைவிட 3/0 மடங்கு அதிகம். பாரதத்தின் ஜனத்தொகையில் 37%. 1610-ல் ஆதிவாசிகளைத் தவிர 210 வெள்ளையர்களே இருந்தனர். புதிய ஐக்கிய அரசாங்கம் ஏற்பட்டதும், 1790-ல் எடுக்கப்பட்ட குடிக்கணக்கில், 40 இலட்சம் ஜனங்கள் இருந்தனர். 1950-ல் இது 15 கோடிக்குப் பெருகி, இப்பொழுது 18 கோடிக்குச் சிறிது அதிகமாக இருக்கிறது. ஒரு சதுர கிலோ மீட்டருக்கு (2·5 சதுர மைல்) 19 பேர்களே இருக்கின்றனர். அதே பரப்பில் பாரதத்தில் 134 பேர்களும், பிரிட்டனில் 215 பேர்களுமிருப்பதை ஒப்பிட்டுப் பார்த்தால், அமெரிக்க மக்களின் வளர்ச்சிக்கு ஏராளமான இடமிருக்கிறதென்பது விளங்கும். நிலம்பரப்பில் மட்டுமன்று; விவசாய நிலம், கனிமப் பொருள்கள், மண்ணெண்ணெய் முதலிய எல்லா வசதிகளும் மிதமிஞ்சிக் கிடக்கின்றன. 18ஆம் நூற்றுண்டு முழுதும் உள்நாட்டு மக்களின் பெருக்கம், ஐரோப்பாவிலிருந்து குடியேறினவர்களும் நாடெங்கும் பரவி விவசாயத்தில் ஈடுபட்டனர். 19ஆம் நூற்றுண்டில் யந்திரத் தொழில் ஐரோப்பாவில் தோன்றியதுமே, அமெரிக்காவிலும் புகுந்தது. விவசாயத்துடனேயே யந்திரத் தொழிலும் கூட வளர்ந்ததனுல், அமெரிக்க ஐக்கிய நாடு தன்னிறைவுடன் வளர்ச்சி பெற்றுவந்திருக்கிறது.

தொழில் வளர்ச்சியின் காரணமாகக் கிராமங்கள் நகரங்களாகி விட்டன. 1791-ல் 95% மக்கள் கிராமங்களிலும், 5% நகரங்களிலுமிருந்தனர். 1890-ல் 65%, 35% ஆக மாறின. 1950-ல் நகரங்களில் 84%மும், கிராமாந்திரங்களில் 16%முமாக மக்கள் குடியிருந்தனர்.

அமெரிக்காவின் செல்வம் ஓயாமல் மிகவும் விரைவாக வளர்ந்து வந்திருக்கிறது. 1949-ல் அந் நாட்டில் நபரின் வருமானம் 1,453 டாலராக இருந்தது. அப்பொழுது கானடாவில் 870, பிரிட்டனில் 773, ஜப்பானில் 100, இந்தியாவில் 57 டாலராக இருந்தன. சென்ற 17 வருஷங்களில் இந்த ஏற்றத்தாழ்வு மேலும் அதிகரித்திருக்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருளாதார நிலைமையைப் பின்வரும் புள்ளிவிவரங்கள் நன்கு விளக்கும்:

1966 ஜனவரி 12ஆம் தேதி பிரசிடென்ட் ஜான்சன் காங்கிரசுக்கு அனுப்பிய செய்தியில் அடியிற்கண்டவாறு கூறியிருக்கிருர்:

'சென்ற வருஷத்தில் மட்டும் 4,700 கோடி டாலர் தேசிய வருமானம் அதிகரித்தது. அடுத்த வருஷத்தில் அதன் மொத்தம் 72,000 கோடி டாலராக உயரும்; நபருக்குச் சராசரி 4,000 டாலராகிறது. இதில் 22% அரசாங்கம் வரியாக வசூல் செய்து செலவழிக்கிறது.

10,000 மக்களுக்கு 4,307 மோட்டார் வண்டிகள், 9,861 ரேடியோ, டெலிவிஷன் பெட்டிகள் ; 4,460 டெலிபோன்கள் ; 31 செய்திப் பத்திரிகைகள் ; 13 டாக்டர்கள். உலகில் உற்பத்தியாகும் கோதுமையில் 12·4%, பருத்தியில் 29·3%, சர்க்கரையில் 4.4%, புகையிலையில் 25·6%, எஃகில் 25·6%, அலுமினியத்தில் 48·1%, நிலக்கரியில் 22·3%, பெட்ரோலியப் பொருள்களில் 28·5% அமெரிக்க ஐக்கிய நாட்டில் உற்பத்தியாகின்றன. அதன் ஜனத்தொகை உலக மக்களில் 5·7% என்று நினைந்து கொண்டால், இந்தச் செல்வப் பெருக்கின் அளவு ஓரளவு புலப்படும்.

1948-ல் 40 இலட்சம் தொழில் வியாபாரக் கூட்டுகள் இருந்தன. அவற்றுள் 6,400 கூட்டுகள் 44% தொழிலாளிகளுக்கு வேலை கொடுத்தன. ஆதலால், பிரமாண்ட தொழில் கூட்டுகளும், வெகு சிறிய கூட்டுகளும் நாடெங்கும் பரவியிருக்கின்றன. யந்திர உற்பத்தி சாலைகளிலும், போக்குவரத்து, மின்சாரம் முதலிய பொதுத் தொழில்களிலுமே பெரிய முதலாளித்துவம் வலுத்திருக்கிறது.

பாரதத்தின் பொருளாதாரம் அன்னிய ஆட்சியால் தடைப்பட்டிருந்தது. இந்த நூற்றாண்டின் ஆரம்பம் வரையில் பழங் காலத்தைப்போலவே விவசாயமும் குடிசைத் தொழில்களுமே பொருளாதாரத்தின் முக்கிய அம்சங்களாக இருந்தன. மேலும் முக்கியமான குடிசைத் தொழில்களாவன : நூல் நூற்றல், துணி நெசவு செய்தல். பிரிட்டனில் மில்களில், யந்திரங்கள் மூலமாக மில் துணி உற்பத்தியாகி, இந்தியாவில் விற்கப்பட்டதால், இவை சீர் குலைந்து நசிக்க ஆரம்பித்தன. 17, 18ஆம் நூற்றாண்டுகளில், இந் நாட்டிலிருந்து கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்து, அதற்குப் பதிலாகத் தங்கம், வெள்ளி, மற்றும் சில அபூர்வ சாமான்களை இறக்குமதி செய்வதே பிரிட்டிஷ் வியாபாரிகளின் தொழிலாக இருந்தது. ஆனால், யந்திரத் தொழில் தலையெடுக்கத் தொடங்கியதும், வெளிநாடுகளிலிருந்து பஞ்சை இறக்குமதி செய்து, மில்களில் துணியாக்கி ஏற்றுமதி செய்வது இலாபகரமாயிற்று. பாரதம் அந்த மில் துணிக்குப் பெரிய சந்தையாயிற்று. இந்த மில் துணி நாட்டின் மூலைமுடுக்குகளில் பரவுவதற்கும், பிரிட்டிஷ் சாம்ராச்

யத்தின் ஆதிக்கம் வலுப்பதற்கும், சைனியங்களின் போக்குவரத்திற்குமே ரெயில், தந்தி, தபால் முக்கியமாக உருவாயின. அவை மக்களுக்கும் ஓரளவு பயன்பட்டது உண்மையே. இவற்றைத் தவிர விஞ்ஞான வளர்ச்சியிலும் யந்திரத் தொழிலிலும் இந்தியாவுக்குப் பங்கில்லை.

இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் பம்பாய் முதலிய இடங்களில் இந்திய முதலாளிகள் துணி மில்களை ஏற்படுத்த முன் வந்தனர். இந் நாட்டிலேயே பஞ்சு கிடைத்ததாலும், தொழிலாளிகள் குறைந்த கூலிகளில் கிடைத்ததாலும், இந்திய மில் துணி மலிவாக இருந்தது. இதைக் கண்டு பிரிட்டிஷ் முதலாளிகள் இந்திய மில் தொழிலைத் தடுப்பதற்குத் தங்கள் அரசாங்கச் செல்வாக்கை உபயோகித்தனர். இந்திய மில்துணிமீது உற்பத்தி வரி விதிக்கப்பட்டது. பிரிட்டிஷ் துணிகளுக்குத் துறைமுகங்களிலும் ரெயில் கட்டணங்களிலும் சலுகைகள் காட்டப்பட்டன.

முதல் உலக மகாயுத்தம்வரையில் மில் துணி ஒன்றே இந்தியாவின் யந்திரத் தொழிலாக இருந்தது. அதற்குப்பின் சுதந்திர இயக்கம் தீவிரமாவதைக் கண்டு, பிரிட்டிஷ் அரசாங்கம், முதலாளிகள், ஆங்கிலம் படித்தவர்கள் முதலிய சில வகுப்பினர்களின் ஆதரவைத் தேடியும், தாமும் இந்தியாவின் தொழில் வளர்ச்சியை விரும்புவதாக வெளியுலகுக்குக் காண்பிப்பதற்காகவும், மற்றும் சில தொழில்களுக்கு அனுமதியளித்ததுடன் உதவியும் செய்தனர். அவற்றுள் சர்க்கரை ஆலைகள் முக்கியமானவை. இரண்டாம் உலக யுத்த காலத்தில் சண்டைக்காகப் பலவித சாமான்களையும் ஆயுதங்களையும் இங்குத் தயார் செய்து எல்லா யுத்தகளங்களுக்கும் அனுப்பவேண்டியிருந்தது.

இவ்விதம் சுதந்திரம் பெற்றபொழுது பாரதத்தில் சில யந்திரத் தொழில்கள் ஏற்பட்டிருந்தும், மற்ற முற்போக்கான நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தபொழுது மிகவும் பிற்போக்காகவே இருந்தது; சுமார் நூறு வருஷம் பின்னணியில் இருந்ததென்றுல் மிகையாகாது.

ஒருபுறம் பொருளாதாரம் வளர்ச்சியடையாமலிருக்க, ஜனத்தொகைமட்டும் விஷம்போல் ஏறிவந்தது. மற்ற நாடுகளில் யந்திரத் தொழிலும் ஜனத்தொகையும் சேர்ந்து வளர்ந்ததால், மொத்தச் செல்வமும் குடும்பங்களின் வருமானமும் அதிகரித்து வந்தன. கிராமாந்தர ஜனத்தொகை குறைந்து, நகரங்களில் யந்திரத் தொழிலில் வேலை செய்யும் தொழிலாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது.

இந்திய ஜனத்தொகையின் வளர்ச்சி பின்வரும் புள்ளிவிவரங்களிலிருந்து தெளிவாகும் :

| வருஷம் | ஜனத்தொகை (இலட்சம்) | வருஷாந்தர வளர்ச்சி வீதம்(%) |
|---|---|---|
| 1911 | 2521 | ·573 |
| 1921 | 2514 | —·031 |
| 1931 | 2790 | 1·101 |
| 1941 | 3187 | 1·422 |
| 1951 | 3611 | 1·331 |
| 1961 | 4392 | 2·150 |

19ஆம் நூற்றுண்டில் அதிக ஜனப்பெருக்கம் இல்லை. இந்த நூற்றுண்டில் அரசியல் உணர்ச்சி அதிகரிக்கவே, சுகாதாரத்தைப் பற்றி அரசாங்கம் அதிக கவலை எடுக்கத் தொடங்கியது. அப்படியும், 1918-20-ல் ஒரு கொள்ளைநோய் தோன்றிக் கோடிக் கணக்கான மக்களைக் கொன்றுவிட்டதால், ஜனத்தொகை சற்றுக் குறைந்தது. அதன்பின் சுகாதாரம் இந்திய மந்திரிகள் மேற்பார்வையில் வந்தது. தொத்து வியாதிகள் தடுக்கப்பட்டன. குடிதண்ணீர் வசதிகளும் சாக்கடை ஏற்பாடுகளும் விருத்தியானதால், மரண விகிதம் குறைந்து, ஜனத்தொகை பெருகிற்று. சுதந்திரம் பெற்ற முதல் பத்தாண்டுகளில் ஜனப்பெருக்க விகிதம் 1·3%-லிருந்து 2·2%-க்கு உயர்ந்ததே இதற்குச் சான்ருகும்.

சுதந்திரம் பெற்ற முதல் மூன்று நான்கு வருஷங்களில் பொருளாதார வளர்ச்சிக்கு பாரத அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியவில்லை. பாகிஸ்தான் பிரிவினையால் ஏற்பட்ட தொல்லைகளாலும், கோடிக்கணக்கான அகதிகளுக்கு உணவு, தொழில், வீடு அளிக்கவேண்டியிருந்ததாலும் நிலைமையைச்சமாளிப்பதே சிரமமாக இருந்தது. இத் தொல்லைகள் ஒருவாறு தீர்ந்ததும், 1951-ல், ஓர் திட்டக் கமிஷன் ஏற்பட்டுப் பொருளாதார அபிவிருத்தி திட்டம் வரையப்பட்டது. இதுவரையில் மூன்று திட்டங்கள் பூர்த்தியாயிருக்கின்றன. அவற்றின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு :

திட்டச் செலவுகள் (கோடி ரூபாய்கள்)

| | மொத்தம் | பொதுத்துறை முதலீடு | தனியார்துறை முதலீடு |
|---|---|---|---|
| முதல் திட்டம் (1951-56) | 3360 | 1560 | 1800 |
| இரண்டாம் திட்டம் (1956-61) | 6831 | 3731 | 3100 |
| மூன்ரும் திட்டம் (1962-66) | 10400 | 6300 | 4100 |

பொதுத்துறை முதலீடுகளில் முக்கியமானவை முறையே கோடி ரூபாய்களில்: விவசாயம், 290, 549, 1092; நீர்ப்பாசனம், மின்சாரம், 583, 882; 1875, சுரங்க, யந்திரத் தொழில்கள், 97, 1125, 1902; போக்குவரத்து வசதிகள், 518, 1261, 2057; சமூக சேவைகள் 412, 855, 1415. இத் திட்டங்களின் பலனுகப் பின்வரும் உற்பத்திப் பெருக்கங்கள் கிடைத்திருக்கின்றன:

| பொருள் | 1950-51 | 1964-65 |
|---|---|---|
| உணவுத்தானியங்கள் (இலட்ச டன்கள்) ... | 549 | 884 |
| எண்ணெய் விதைகள் (ல. டன்கள்) ... | 51 | 86 |
| பஞ்சு (ல. பேல்கள்) ... ... | 29 | 54 |
| சணல் (ல. பே.) ... ... | 35 | 61 |
| கரும்பு (வெல்லம் ல. டன்கள்) ... | 57 | 123 |
| நீர்ப்பாசனம் (ல. ஹெக்டர்) ... | 208 | 257 |
| மின்சாரம் (ல. கிலோவாட்) ... | 23 | 83 |
| யந்திரங்கள் (பெறுமானம் ல. ரூ.) ... | 34 | 2570 |
| மோட்டார் வாகனங்கள் ... | 16,500 | 70,800 |
| எஃகு (ல. டன்கள்) ... | 10 | 44 |
| சிமென்டு (ல. டன்கள்) ... | 27 | 98 |
| அலுமினியம் (டன்) ... | 3,800 | 54,100 |
| அமோனியம் சல்பேட் (டன்) ... | 9,100 | 2,34,000 |
| காகிதம் (டன்) ... | 1,15,800 | 4,94,000 |
| நிலக்கரி (ல. டன்) ... | 328 | 644 |
| சர்க்கரை (ல. டன்) ... ... | 11 | 32 |
| மில்துணி (ல. மீட்டர்) ... ... | 34,000 | 46,760 |
| சணல் சாமான் (டன்) ... | 8,37,000 | 12,21,92,000 |

எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி ஏற்பட்டிருந்தபோதிலும், எதிர்பார்த்த அளவு பெருகவில்லை. இதற்குக் காரணம் வேலை நுட்பங்களில் அனுபவமில்லாமை, வீண் செலவு, காலவிரயம், திறமைக்குறைவு முதலியவை. பல தொழில்களுக்கு வெளிநாடுகளிலிருந்து யந்திரங்கள் தேவையாக இருந்தன. அந்த யந்திரங்களை வாங்க அந்நியச் செலாவணி கடன் வாங்கவேண்டியிருந்தது. திடீரென்று பொதுத்துறையில் மிதமிஞ்சிய பொறுப்புகளை ஏற்றுக் கொண்டதால் பலவித ஊழல்களும் தோன்றின.

சுதந்திரத்திற்குப்பின் இந்தியாவின் பொருளாதாரம் ஓரளவு முற்போக்கு அடைந்திருந்தபோதிலும், அது மிகவும் பின்னணியிலேயே இருக்கிறது. அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஆஸ்தி

ரேஸியா முதலிய தேசங்களுடன் ஒப்பிடவே முடியாது. 1958-ல் உலகத்தின் ஜனத்தொகையின் சத ஈவு, உலக வருமானத்தின் ஈவுகளைக் கவனித்தால் இது தெளிவாகும். 1958-ல் 187·7 கோடி மக்கள், வருமானம் 88,400 கோடி டாலர். அதில் ஐரோப்பாவில் 16·1% மக்களும் 27·9% செல்வமும் இருந்தன; வட அமெரிக்காவில் 13·6% மக்கள், 51·4% செல்வம்; ஜப்பானில் 4·9% மக்கள், 3% செல்வம்; இதர ஆசியாவில் 44·5% மக்கள், 8% செல்வம்; இந்தியாவில் 11·9% மக்கள், 3% செல்வம்.

1963-ல் சில நாடுகளின் வருமானமும் நபர் வருமானமும் பின்வருமாறு:

| நாடு | நாட்டு வருமானம் கோடி டாலர் | நபர் வருமானம் டாலர் |
|---|---|---|
| ஆஸ்திரேலியா | 1566 | 1434 |
| கானடா | 3002 | 1586 |
| சிலோன் | 132 | 124 |
| எகிப்து | 407 | 157 |
| இத்தாலி | 3,523 | 698 |
| ஜப்பான் | 4,906 | 512 |
| இந்தியா | 3,612 | 78 |

நமது வறுமையின் அளவை உணவு, உடை, வாழ்க்கைச் சாதனங்களின் குறைவுகள் காட்டுகின்றன.

நபருக்கு வருஷாந்தர உணவுப் பண்டங்கள் (கிலோ)

| நாடு | தானியங்கள் | சர்க்கரை | கொழுப்பு | வினியோக வருஷாந்தர கலோரிகள் |
|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 82 | 50 | 7 | 3140 |
| கானடா | 63 | 46 | 8 | 3060 |
| இத்தாலி | 134 | 24 | 4 | 2750 |
| பிரிட்டன் | 81 | 50 | 8 | 3290 |
| அமெரிக்க ஐக்கிய நாடு | 65 | 41 | 8 | 3090 |
| ஜப்பான் | 149 | 17 | 1 | 2280 |
| இந்தியா | 139 | 18 | 3 | 2000 |

மற்றும் சில சாதனங்கள் (10,000 மக்களுக்கு)

| நாடு | மோட்டார் வண்டி | டெலிஃபோன் | ரேடியோ | பத்திரிகைகள் |
|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 3066 | 2338 | 2142 | 37·5 |
| ஜப்பான் | 425 | 879 | 2014 | 42 |
| பிரிட்டன் | 1674 | 1723 | 2951 | 49 |
| அமெரிக்க ஐக்கிய நாடு | 4307 | 4[illegible]60 | 9861 | 31·1 |
| இந்தியா | 14 | 15 | 68 | 0·03 |

அந்நிய ஆட்சியின் காரணத்தால் இந்தியா நூறு வருஷம் பின்னணியில் இருக்கிறது. மேலும், மற்ற நாடுகளைவிட அதன் வளர்ச்சியும் குறைவு. ஆதலால், முற்போக்கான நாடுகளை எட்டிப் பிடிப்பதற்கு வெகுகாலமாகும். ஆயினும் உணவு, உடை, கல்வி, வீடுபோன்ற அத்தியாவசியமான துறைகளில் பாரத மக்கள் தங்கள் முழு கவனத்தையும் செலுத்தினுல், அவர்களின் நிலைமை உயர்ந்து, கண்ணியமான வாழ்க்கை சாத்தியமாகும். ஆயுத பலத்திலும் அணுகுண்டிலும் நாம் போட்டிபோட முயன்ருல் பொதுமக்களின் வாழ்க்கைத்தரம் உயராது.

## 25. கல்வி

இருநூறு வருஷங்களுக்கு முன் கல்வி அரசாங்கத்தின் பொறுப்பாக எந்நாட்டிலும் கருதப்படவில்லை. மேலும், பொதுமக்கள் அனைவரும் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற அவசியமும் ஏற்படவில்லை. விவசாயம், கைத்தொழில்கள், காலாட்படையிலோ, குதிரைப்படையிலோ போர் புரிவது இவற்றுள் எதற்கும் அது தேவையில்லை. மதச் சடங்குகளுக்கும் அரசாங்க விவகாரங்களுக்கும் வேண்டிய படித்தவர்களுக்கு ஆங்காங்கு தனவந்தர்களாலோ, மத ஸ்தாபனங்களாலோ, ஸ்தல ஸ்தாபனங்களாலோ இயற்றப்பட்டுவந்த சில பள்ளிகளில் உயர்தர வகுப்பினர் குழந்தைகளும், மிகவும் புத்தி கூர்மையுள்ள மற்றக் குழந்தைகளும் கல்வி கற்று இப் பணிகளைப் புரிந்தனர்,

இயந்திரங்கள்மூலம் பொருளாதாரப் புரட்சி ஏற்பட்டவுடன் பொதுமக்களின் கல்வி அத்தியாவசியமாயிற்று. தொழிற்சாலைகளில் பலவிதக் கட்டுப்பாடுகளும் நியமங்களும் அமல் செய்வதற்கு எழுதப் படிக்கத் தெரிந்த தொழிலாளிகள் தேவையாகவிருந்தது. குடியரசு உணர்ச்சி பெருகவே, எழுதப்படிக்கத் தெரியாதவர் மிருகத்திற்குச் சமானமானவர் என்ற எண்ணமும் பரவிற்று. ஆதலால், அனைவருக்கும் ஆரம்பக் கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டுமென்றும், இது அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்பென்றும் கருதப்பட்டது.

ஆரம்பப் பள்ளி முடிந்ததும், அதற்கு மேலான படிப்புக்கு வசதிகள் ஏற்பட்டு, அதில் பலர் சேரத் தொடங்கினர். இயந்திரப் பொருளாதாரம் பெருகவே, விஞ்ஞானமும், சரித்திரமும், அரசியலும், பொருளாதாரமும் ஓரளவு கற்பது பிரஜைக்கும் நாட்டிற்கும் நலமென்ற எண்ணம் நிலவியதால், மத்தியக் கல்வியும் சர்வ சாதாரணமாயிற்று.

மத்தியக் கல்வி பெற்றோரில் திறமையுள்ளவர்களுக்கு உயர்தரக் கல்விக்காகக் கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் நிறுவப்

பட்டன. ஏழைக் குடும்பத்தின் யுவர்கள் அவற்றில் சேரு வதற்கு மானியங்கள் வழங்குவதும் வழக்கமாயிற்று.

முடிவில் கல்லூரிகளில் தேர்ச்சிபெற்ற மாணவர்களில், மிகவும் புத்திசாலிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்வதால் அறிவின் வளர்ச்சிக்கும், பொருளாதாரப் பெருக்குக்கும் வழிகோலுவது அரசாங்கத்தின் கடமையாயிற்று. இதில் தொழிலதிபர்களும் பெரும் பங்கெடுத்துக்கொண்டார்கள்.

ஆரம்பக் கல்வி, மத்தியதரக் கல்வி, உயர்தரக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, ஆராய்ச்சி இவற்றிற்காக ஏராளமான பணம் செலவழிப்பதும், பெரும் ஸ்தாபனங்கள் ஏற்படுத்துவதும் இக் காலத்திய அரசியலின் ஒரு முக்கிய அலுவலாகிவிட்டது.

பிரிட்டனில் 1870-ல் எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய மாக ஆரம்பக் கல்வி அளிக்கப்படவேண்டும் என்ற கொள்கை சட்டபூர்வமாக ஏற்கப்பட்டது. அடுத்த முப்பது வருஷங்களில் அது அமலாக்கப்பட்டு, அக் கல்வி இலவசமாக்கப்பட்டது. 1902-ல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தால் மத்தியக் கல்விக்கும் பொதுவான ஏற்பாடு செய்யப்படுவது கடமையாக்கப்பட்டது. 1944-ல் இயற்றப்பட்ட கல்விச் சட்டம் எல்லாவிதக் கல்விக்கும் ஆதாரமாக இருக்கிறது.

அதன்படி 5 வயதிலிருந்து 15 வயது வரையில் ஆண், பெண் குழந்தைகளைக் கல்விக்கூடத்திற்கு அனுப்பிக் கல்வி கற்பிப்பது பெற்றோர்களின் கடமையாகும். 1970-71-ல் இது 16 வயதாக சட்டப்படி உயர்த்தப்படும். ஆயினும், இப்பொழுதும் அவ் வயது வரை பெரும்பாலான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

பிரிட்டனில் பள்ளி மாணவர்களின் தொகை இப்பொழுது 88 இலட்சம். அதாவது ஜனத்தொகையில் 6-ல் ஒரு பாகம். இதில் 90% மாணவர்கள் அரசாங்கப் பள்ளிகளில் படிக்கின்றனர். மீதி 10% தனி ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங் களில் இருக்கின்றனர். பெரும்பாலான பொதுப் பள்ளிகள் ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் இருக்கின்றன; பல இடங் களில் பொதுஸ்தாபனங்களால் அரசாங்க உதவியின்பேரில் நடத்தப்பெறுகின்றன.

மத்தியதரப் பள்ளிகள் மூன்றுவிதமானவை. 1. இலக்கணப் பள்ளிகள் (கிராமர் ஸ்கூல்); 2. புதிய மத்தியப் பள்ளிகள்;

3. விசேஷப் பள்ளிகள். முதல் வகைப் பள்ளிகளில் மாணவர்கள் கல்லூரிப் படிப்புக்குத் தயாராக்கப்படுகின்றனர். இரண்டாவது வகைப் பள்ளிகளில் தொழிற்சாலைகள், விவசாயம் முதலிய தொழில் களுக்குத் தேவையான பாடங்களும் போதிக்கப்படுகின்றன. விசேஷப் பள்ளிகள், பிரபுக்கள், தனவந்தர்களின் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் படிக்கும் ஒரு மாணவனுக்கு வருஷம் 300-லிருந்து 550 பவுன் வரையில் செலவாகும்.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் எல்லா மாணவர்களும் பரீட்சை எழுதவேண்டுமென்று கட்டாயமில்லை, ஆனால், பல பாடங்களில் அவ்விதப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. அவற்றில் தேறிய வர்களே கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

பிரிட்டனில் 32 சர்வகலாசாலைகள் இருக்கின்றன. இங்கி லாந்தில் 25, ஸ்காட்லாண்டில் 5, வேல்சில் 1, வடக்கு அயர் லாந்தில் 1. இவற்றுள் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் சர்வகலா சாலைகள் மிகவும் புகழ் பெற்றவை; அவை 12, 13ஆம் நூற்றாண்டு களிலிருந்து தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. ஸ்காட் லாண்டிலுள்ள கிளாஸ்கோ, அபர்டீன், எடின்பரோ கலாசாலை களும் சுமார் 500 வருஷங்களாக இயங்கி வருகின்றன.

இக் கலாசாலைகளில் ஆண்களும் பெண்களும் சரிசமான மாகவே சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஜாதி வித்தியாசங்களு மில்லை. உலகிலுள்ள பல நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆண்டுதோறும் இவற்றைத் தேடிவருகின்றனர். 1963-64-ல் 129,000 மாணவர்கள் இக் கலாசாலைகளில் இருந்தனர். 14,000 முழுநேர ஆசிரியர்கள் இவர்களுக்குக் கல்வி கற்பித்தனர். 8 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் விகித மாகிறது.

உயர்தரத் தொழில்நுட்பக் கல்விக்கு ஏராளமான வசதிகள் இருக்கின்றன. இங்கிலாந்து, வேல்சில் 12 உச்ச ஸ்தாபனங்கள் உள்ளன. 25 பிரதேசக் கல்லூரிகளும், மற்றும் 500 இதர ஸ்தாபனங்களுமிருக்கின்றன. ஸ்காட்லாண்டில் 14 கேந்திர ஸ்தாபனங்களும், 80 இதர நிறுவனங்களுமுள்ளன.

1963-64-ல் கல்விக்காக, பொது நிதிகளிலிருந்து செலவு 136 கோடி பவுன். இதில் கலாசாலைகளுக்குமட்டுமே மானியம் 10·1 கோடி பவுன். மாணவர்களுக்கும் தாராளமாக உதவி

செய்யப்படுகிறது. ஆரம்ப, மத்திமக் கல்வி இலவசமாக இருப்பதோடு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குச் சாப்பாடு, விடுதி வாடகைகளுக்கும் மானியம் கொடுக்கப்படுகிறது. உயர்தரக் கல்லூரிகளிலும், கலாசாலைகளிலும் படிப்போர்களில் 90% மாணவர்களுக்குத் தேவைக்கும் தகுதிக்கும் ஏற்ப உதவி யளிக்கப்படுகிறது.

இக் காலத்தில் ஒரு நாட்டின் வளர்ச்சி விஞ்ஞான ஆராய்ச்சியைப் பொறுத்திருக்கிறது. பிரிட்டனில் அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. 1961-62-ல் அரசாங்கமும் தனியார் ஸ்தாபனங்களும் சேர்ந்து 64 கோடி பவுன் செலவழித்தன. இதில் அரசாங்கம் மூன்றில் இரண்டு பங்கு ஏற்றுக்கொண்டது. விஞ்ஞானத்தைத் தவிர, மற்றப் பல துறைகளிலும் தீவிரமாக ஆராய்ச்சி செய்யப்படுகிறது. 1961-ல் பிரிட்டனில் சுமார் 3 இலட்சம் விஞ்ஞான உயர்தரப் படிப்புப் பட்டம் பெற்றவர் இருந்தனர். இது போதாதென்றும், ஆண்டிற்கு 20,000 பேர் அதிகமாவதற்கு வழி செய்யவேண்டுமென்றும் சமீபத்தில் ஒரு நிபுணர் குழு சிபார்சு செய்தது.

பிரிட்டனிலிருந்து விஞ்ஞானிகளும், இதர ஆராய்ச்சியாளர்களும் அமெரிக்காவுக்கு ஆயிரக்கணக்கில் போய்விடுகின்றனர். அங்கு அவர்களுக்கு வருமானமும் வசதிகளும் அதிகமாகவிருக்கின்றன. பண்டைக் காலத்தில் வள்ளல்களான அரசர்களைத் தேடிப் புலவர்கள் போவதைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அதேபோல், இக் காலத்தில் ஆராய்ச்சியாளர்களும் மேதாவிகளும் செல்வம் மிகுந்து, அதை அறிவின் வளர்ச்சியில் செலவழிக்கத் தயாராகவிருக்கும் நாடுகளை நாடுகின்றனர்.

பிரிட்டனில் ஆதி முதற்கொண்டு பள்ளிகளில் மதக் கல்வி போதிக்கப்பட்டுவருகிறது. ஆனால், பொதுப் பணத்திலிருந்து உதவிபெறும் பள்ளிகளில்பெற்றோர் விரும்பினாலொழிய மாணவர்கள் மதப் பாடங்களைப் படிக்கக் கட்டாயப்படுத்தப்படக்கூடாது. எல்லா மதங்களும் தங்கள் கொள்கைகளைப் போதிக்கக் கல்லூரிகளையும், பயிற்சிக்கூடங்களையும் நடத்துகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கல்விக்குப் பிரிட்டனைவிட அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதற்காகப் பணச் செலவும் மூன்று மடங்கு அதிகமாகிறது. 1961-ல் 3—5 வயதுக் குட்பட்ட குழந்தைகளில் பாதிக்குமேல் குழந்தைப் பள்ளிகளில் இருந்தனர். 6-லிருந்து 15 வயதுவரையில் எல்லாச் சிறுவர்

சிறுமிகளும் பள்ளிக்கூடத்திற்குச் சென்றனர். 16—17 வயதுகளில் 84% மத்திமக் கல்விக்கூடங்களில் இருந்தனர். 18—19 வயதுகளில் உள்ளவர்களில் 38% கல்லூரிகளில் படித்தனர். 20 — 24 வயதுள்ளவர்களில் 13% கலாசாலைகளில் ஆராய்ச்சிக்குத் தகுதி கொடுக்கும் உச்சப் படிப்புகளில் ஈடுபட்டிருந்தனர்.

கல்வி பெரும்பாலும் நகராட்சி, இராச்சிய அரசாங்கத்தின் பொறுப்பாகும். சமீப காலத்தில் ஐக்கிய அரசாங்கமும் ஏராளமான உதவி செய்துவருகின்றது. 1862-ல் மாரில் சட்டப்படி விவசாயக் கல்லூரிகளுக்கு நிலம் மானியமாகக் கொடுக்கப்பட்டது. பின்னர் 1914 ஸ்மித்லீவர் சட்டப்படி கல்லூரிகளின் உயர் படிப்புக்கும், 1917-ல் ஸ்மித் ஹியூஸ் சட்டத்தின்படி தொழில் நுட்பப் படிப்புக்கும் ஆதரவளிக்க அதிகாரம் கொடுக்கப் பட்டது.

இவ் உதவி பல இலாகாக்கள்மூலம் அந்தந்த இலாகாவைச் சேர்ந்த கல்விக்கூடங்களுக்கும் பயிற்சி சாலைகளுக்கும் அளிக்கப் படுகிறது. சுகாதாரம், கல்வி, நிலங்கள் இலாகாமூலம் 379 கோடி டாலரும், பாதுகாப்பு இலாகாமூலம் 211 கோடி டாலரும், மற்றும் பலவித மானியங்களும் சேர்த்து 839 கோடி டாலர் உதவி அளிக்க 1967ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்விக்காக நகராட்சிகள், இராச்சிய அரசாங்கங்கள், மற்றப் பொது ஸ்தாபனங்கள், தனிக் குடும்பங்களால் நடத்தப்படும் கல்விக்கூடங்கள் இவற்றால் செலவழிக்கப் படும் தொகைகள் இதைப்போல் பன்மடங்காகும், ஆரம்ப, மத்தியப் பள்ளிகளில் ஒரு மாணவனுக்கு சுமார் 300 டாலர் செலவாகிறது. கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் இதைவிட அதிகச் செலவாகும்.

குழந்தைக் கல்விக்காகும் செலவில் 82%, ஆரம்பப் பள்ளிக்கு 88%, மத்திமக் கல்விக்கு 99%, கல்லூரி, கலாசாலைச் செலவுகளில் 60%, பொதுப் பணத்திலிருந்தும் மீதி இதர வகைகளிலும் செலவிடப்படுகின்றன.

அன்னிய ஆட்சியால் பாரதத்திற்கு ஏற்பட்ட தீமைகளில் கல்வியில் பிற்போக்கே மிகவும் வருந்தத்தக்கது. 1870-ல் தங்கள் நாட்டில் ஆரம்பக் கல்வியை கட்டாயமாகவும் இலவசமாகவும் செய்த பிரிட்டிஷ் அரசாங்கத்தார், இந் நூற்றுண்டின் ஆரம்பத்தில் பெரியார் கோபாலகிருஷ்ணகோகலே மத்திய சட்ட சபையில் கொண்டுவந்த கட்டாயக் கல்வி மசோதாவை நிரா

கரித்துவிட்டனர். மாகாணங்களில் சொல்ப தொகைகள் ஒதுக்கி வைத்து, ஆங்காங்குத் தனியார் ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு உதவிமட்டுமே வழங்கினார்கள். பிரிட்டிஷ் ஆட்சியில் முன்னிருந்த கிராமத் திண்ணைப் பள்ளிக்கூடங்களும் மறைந்துவிட்டன. முஸ்லீம்களுக்காக மசூதிகளிலிருந்த பள்ளிகளும் ஆதரவின்றி வாடின. கிறிஸ்தவப் பாதிரிகளால்மட்டும் ஓரளவு இக் காலத்திய கல்வி வளர்க்கப்பட்டது. சர்க்கார் தொழிலுக்கு சேவகர்கள் தயார் செய்வதற்காக, கல்கத்தா, சென்னை, பம்பாய்போன்ற நகரங்களில் அரசாங்கத்தார் நடுத்தரப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நிறுவினர். ஸ்தலஸ்தாபனங்கள் தங்களுடைய சிறிய வருமானத்தில் ஒரு பங்கைக் கல்விக்காகச் செலவழித்தன.

சுதந்திரத்தற்காக அரசியல் கிளர்ச்சி தோன்றிய பின்னரே கல்வி அரசாங்கத்தின் பொறுப்பு என்று ஏற்கப்பட்டது. முதல் மகா யுத்தத்திற்குப்பின் மாண்டேகு செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தப்படி கல்வி, சட்டசபைகளுக்குப் பொறுப்புள்ள மந்திரிகளிடம் ஒப்புவிக்கப் பட்டது. முன்னைவிடக் கல்விக்கு அதிகத் தொகைகளும் ஒதுக்கப் பட்டன. மத்திய, உயர்தரப் படிப்புகளும் சற்றுத் துரிதமாக முன்னேறத் தொடங்கின. ஆயினும், சுதந்தரம் பெற்ற பிறகே கல்விக்கு நல்ல காலம் பிறந்ததென்று கூறலாம்.

பாரத அரசியல் திட்டம் 45ஆம் விதியில் அமலாகிப் பத்து ஆண்டுகளுக்குள் எல்லாக் குழந்தைகளுக்கும் 14 வயது முடியும்வரை கட்டாயக் கல்வி போதிக்கப்படவேண்டும் என்று வழிகாட்டி விதி செய்யப்பட்டிருக்கிறது. மத்திய இராச்சிய அரசாங்கங்கள் பெரு முயற்சி செய்தும், ஐந்தாண்டுத் திட்டங் களில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துங்கூட இது சாத்தியப்பட வில்லை. முதல் 5 வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் 1950-51-ல் 190 இலட்சமிருந்தனர். 1965-66-ல் 520 இலட்சமாகப் பெருகினர். 6-லிருந்து 8ஆவது வகுப்பு வரையில் 30 இலட்சத்திலிருந்து 110 இலட்சத்திற்கு அதிகரித்தனர். 6—11 வயதிற்குட்பட்டவர்களில் 1965-66-ல் 79%-ம், 11—14 வயதுகளில் 32%-மே படிக்கின்றனர். 1971-ல் இவை 92%; 47% ஆகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசியல் திட்ட இலட்சியம் 1981-ல்தான் பூர்த்தியாகலாம்.

போதிய அளவு முற்போக்கு சாத்தியமில்லாதபோதிலும், சில அம்சங்களில் கணிசமான அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. 1—5 வகுப்புகளில் பெண்களின் எண்ணிக்கை 54 இலட்சத்தி

லிருந்து 182 இலட்சத்திற்கும், 6—8 வகுப்புகளில் 5·3 இலட்சத்திலிருந்து 28 இலட்சத்திற்கும், 9—11 வகுப்புகளில் 2 இலட்சத்திலிருந்து 11 இலட்சத்திற்கும் பெருகியிருப்பது போற்றத்தக்கது.

1965-66-ல் சர்வகலாசாலைகளிலும் உயர்தரக் கல்லூரிகளிலும் 11 இலட்சம் மாணவர்கள் இருந்தனர். 17—23 வயதுகளில் உள்ள மக்களில் 2·6% ஆவர். பிரிட்டனில் 5%-ம், அமெரிக்க ஐக்கிய நாட்டில் 20%-ம், சோவியத் ருஷ்யாவில் 14%-ம் இருந்தனர். இதிலிருந்து இந்தியா எவ்வளவு தூரம் முன்னேற வேண்டுமென்பது விளங்கும்.

பள்ளி ஆசிரியர்கள் 1950-51-ல் 7½ இலட்சத்திலிருந்து 1965-66-ல் 20 இலட்சமாக அதிகரித்தனர். ஆனால், இவர்களில் 6 இலட்சம் ஆசிரியர்கள் பயிற்சி பெறாதவர்கள்.

தொழிற் கல்வியில் கணிசமான பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்ட முடிவில் ஆண்டுதோறும் பட்டப் படிப்புக்கு 24,700 மாணவர்களும், டிப்ளோமாவுக்கு 4,99,000 மாணவர்களும் சேருவதற்கு வசதி செய்யப்பட்டிருந்தது. வைத்தியக் கல்லூரிகள் 30-லிருந்து 75-க்கும், ஆண்டுதோறும் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை 2,500-லிருந்து 5,800-க்கும் அதிகரித்துள்ளன.

கல்விக்காக 1965-66-ல் ரூ. 550 கோடி செலவழிக்கப்பட்டது. அதில் மத்திய அரசாங்கம் ரூ. 40 கோடி, இராச்சிய அரசாங்கங்கள் ரூ. 360 கோடி, ஸ்தல ஸ்தாபனங்கள் ரூ. 36 கோடி, மாணவர்கள் கட்டணம் ரூ. 80 கோடி ; இதர வகைகளில் ரூ. 34 கோடி.

## 26. சுகாதாரம், வைத்தியம்

சென்ற நூறு வருஷங்களிலேதான் அரசாங்கம் சுகாதாரத்திற்கும் வைத்தியத்திற்கும் பல நாடுகளில் பொறுப்பு ஏற்று வருகின்றது. அதற்குமுன் பிளேக், காலரா, அம்மை முதலிய தொத்து நோய்கள் கடுமையாகப் பரவும் காலங்களில்மட்டும் ஸ்தல ஸ்தாபனங்களும் மேலதிகாரிகளும் வியாதி கண்ட வீடுகளைப் பூட்டியும் பிணங்களை அகற்றியும் சுகாதாரத்தைப் பாதுகாக்க முயன்றனர். வைத்தியம் கஷாயம், சூரணம் முதலியவற்றில் தேர்ந்த பழங்கால வைத்தியர்களால் செய்யப்பட்டுவந்தது. அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் குடும்ப வைத்தியர்கள் இருந்தனர்.

பிரிட்டனில் 1848-ல் பொதுச் சுகாதாரச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரே அரசாங்கம் இத் துறையில் ஈடுபடலாயிற்று. சுத்த ஜலம், சாக்கடை வசதிகள், மலம், குப்பைகளை நீக்குதல், தெருக்களைச் சுத்தம் செய்தல் முதலிய சுகாதாரப் பணிகள் அடுத்த 50 வருஷங்களில் பெருகிவந்தன. சமூக சுகாதாரத்தைத் தவிர மக்களின் தேக ஆரோக்கியத்தைப்பற்றிய ஏற்பாடுகள் இந்த நூற்றாண்டு ஆரம்பத்திலேதான் தொடங்கின. இது படிப்படியாக வளர்ந்து 1948-ல் எல்லாப் பிரஜைகளுக்கும் சுகாதார வைத்திய வசதிகள் கட்டாயமாகக் கிடைக்கவேண்டுமென்ற பரந்த நோக்கத்துடன் தேசிய சுகாதாரச் சட்டம் செய்யப்பட்டது.

பொதுவான சமூக சுகாதாரம் ஸ்தல ஸ்தாபனங்களின் முக்கியப் பொறுப்பாகும். தொத்து நோய்களைத் தடுப்பதும், குடிதண்ணீர் வழங்குவதும், சாக்கடைகளைக்கவனிப்பதும், மற்றுமுள்ள சுகாதாரப் பணிகளை ஆற்றுவதும் அவற்றின் சட்டபூர்வமான கடமைகளாகும். அவ்வாறே உணவுகள், மருந்துகள் இவற்றின் கலப்படங்களைத் தடுப்பதும் அவற்றின் பொறுப்பு. இப் பணிகளைச் சுகாதார, உணவு இலாகாக்கள் மேற்பார்வையிடுகின்றன. சாப்பாட்டு விடுதிகளைக் கண்காணிக்க நகரசபைகள் தனி அதிகாரிகளை நியமிக்கின்றன. பால், மாமிசம், பாலாடைப் பண்டங்கள் தனிமுறையில் பரிசோதிக்

கப்படுகின்றன. இங்கிலாந்தில் நிலக்கரிப் புகையால் காற்று அசுத்தமாவதால், அதைத் தடுப்பதும் சுகாதார அதிகாரிகளின் கடமையாகும்.

தேசிய சுகாதாரச் சட்டத்தின் நோக்கங்களாவன: பிரஜைகளின் தேக, மனோ வியாதிகளைத் தடுப்பதும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு விஞ்ஞான முறைப்படி சகலவித வைத்திய வசதிகளும் ஏற்படுத்துவதுமே. முதலில் வைத்தியத்திற்கு எவ்விதக் கட்டணமும் இருக்கலாகாது என்று சட்டம் செய்தனர். இதனால், செலவு மிதமிஞ்சிப் போகவே, மூக்குக் கண்ணாடி, செயற்கைப்பல் போன்ற சில வசதிகளுக்குக் கட்டணம் விதித்திருக்கின்றனர். சுகாதாரத்திற்கு அயல்நாட்டிலிருந்து வந்திருப்பவர்களிடமிருந்து தனி வரி வசூல் செய்யப்படுகிறது. பிரிட்டிஷ் மக்களிடமிருந்தும் தேசிய சுகாதார இன்ஷூரன்ஸ் திட்டப்படி வரிகள் வசூலிக்கப்படுகின்றன.

வைத்தியசாலைகளை அமைத்துப் பராமரிப்பது சுகாதார இலாகாவின் நேர்க் கடமையாகும். நேராகவோ, இதர ஸ்தாபனங்கள் வாயிலாகவோ சுகாதாரத் துறையில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்வதும் அதன் பொறுப்பு. 400 பொது வைத்திய சாலைகளும், பல தனிப்பட்ட நோய்களுக்காகப் பிரத்தியேகமான மருத்துவக்கூடங்களும் அவ் இலாகாவின்கீழ் நடைபெறுகின்றன.

இவற்றைத் தவிர, 23,500 பொது டாக்டர்கள் பிரஜைகளின் நோய்களைத் தடுக்கவும் சிகிச்சை செய்யவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். 10,000 பல் வைத்தியர்களும் 7,000 கண் வைத்தியர்களும் பணியாற்றுகின்றனர். 1 டாக்டரிடம் 3,500 மக்கள் பதிவு செய்துகொள்ளலாம். இவர்களின் ஊழியங்கள் அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்றன.

சுகாதாரத்திற்காக நாட்டின் வருமானத்தில் 4% அதாவது சுமார் 100 கோடி பவுன் செலவாகிறது. வெளிநாடுகளிலிருந்து பணிக்காகவோ, உல்லாசத்திற்காகவோ வந்திருப்பவர்களுக்கும் இந்த வசதிகள் கிடைப்பது குறிப்பிடத்தக்கது.

சுகாதாரத்திற்கு மக்களுக்குப் போதிய சத்துள்ள உணவு அவசியம் என்று கூறத் தேவையில்லை. பிரிட்டனில் நபருக்கு வருஷம் 100 பவுனுக்கு உணவு அருந்தப்படுகிறது. அவ் உணவின் வருஷாந்திர இனவாரி ராத்தல் அளவுகள் பின்வருமாறு: பால் 326; உருளைக்கிழங்கு 228; கோதுமை மாவு 163; சர்க்

கரை 113; மாமிச வகைகள் 140; வெண்ணெய், பாலேடு 30; முட்டை 31, காய்கறிகள் 100. பிரிட்டனின் உணவில் சுமார் பாதியளவு இறக்குமதி செய்யப்படுகிறது. அதற்கு 1963-ல் 168 கோடி பவுன் செலவாயிற்று. கோதுமை, சர்க்கரை, வெண்ணெய், மாமிச வகைகள் வெளியூரிலிருந்து இறக்குமதி யாகின்றன. தனது விவசாயத்தை வலுப்படுத்தி, அதிலிருந்து மூன்றில் இரண்டு பங்கு கோதுமையையும், பால் முழுதும், மாமிசம், காய்கறிகளில் கணிசமான அம்சமும் உள்நாட்டிலேயே தயார் செய்யப்படுகின்றன. 3 கோடி உழைப்பாளிகளில் 9 இலட்சம் பேர்களே விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். இவர்கள் மூலம் 70 கோடி பவுன் பெறுமானமுள்ள உணவு உற்பத்தி செய்யப்படுகிறதென்றல் விவசாயத்தின் திறமை நன்கு விளங்கும். இந்த விவசாயம் 5 கோடி ஏக்கர்களில் 3,40,000 குடியானவர் களால் நடைபெறுகின்றது.

எல்லாக் குடும்பங்களுக்கும் நல்ல வீடுகள் இருக்கவேண்டு மென்ற உணர்ச்சி இரண்டாவது உலக யுத்தத்திற்குப்பின் பிரிட்ட னின் கொள்கையாயிற்று. 1945-ல் இருந்து 1963 முடிய 45 இலட்சம் வீடுகளும், குடியிருப்புகளும் கட்டப்பட்டன. ஸ்தல ஸ்தாபனங்கள் இதற்கு முக்கியப் பொறுப்பாளிகள். மொத்தம் 170 இலட்சம் வீடுகளில் நாலில் ஒரு பாகம் பொது ஸ்தாபனங் களால் கட்டப்பட்டு, அவை சபைகளுக்குச் சொந்தமாக இருக்கின் றன. தற்சமயம் கட்டப்படும் வீடுகளில் தனியார் தரப்பில் பாதி யும் பொது ஸ்தாபனங்கள்மூலம் பாதியும் கட்டப்படுகின்றன. கிராமாந்தரங்களில் இரண்டு தளங்கள் வீடுகளும், நகரங்களில் 2-லிருந்து 20 மாடிகள் வரையிலுள்ள பெரிய கட்டடங்களில் குடி யிருப்புகளும் கட்டப்படுகின்றன. தொழிலாளிகளாலும் ஏழை களாலும் வீடு கட்டுவதற்கு முதல் சேகரிக்க முடியாதென்பதையும், தனியார் முதலாளிகளால் கட்டப்பட்ட வீட்டிற்கு வாடகை கொடுப் பது அவர்களால் அசாத்தியமென்றும் அறிந்து, பொது ஸ்தாபனங் கள் அவற்றைக் கட்டி, ஊதியத்தில் ஒரு சிறு பாகமே வாடகை யாகப் பெறுகின்றன. அதனுல் ஏற்படும் நஷ்டத்தைப் பொது ஸ்தாபனங்களும் பிரிட்டிஷ் அரசாங்கமும் பகிர்ந்துகொள்கின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிரிட்டனைப்போல் அனைவருக்கும் அரசாங்கமூலம் வைத்திய வசதிகள் அளிக்கப்படுவதில்லை. ஆனல், அந்த வசதிகளுக்குக் குறைவில்லை; அதிகமென்றே கூறவேண்டும். சுகாதாரம் பெரும்பாலும் ஸ்தலஸ்தாபனங்கள், இராச்சிய அரசாங்கங்களின் பொறுப்பாக இருக்கிறது. ஆயினும், ஐக்கிய அரசாங்கம் அதற்குப் பேருதவி அளிக்கின்றது,

1966-67-ல் அதற்காக ஐக்கிய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் 1000 கோடி டாலர் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரங்களாவன : நேரடியாக ஆஸ்பத்திரி, வைத்தியத்திற்கு 240 கோடி டாலர்; இராச்சிய ஸ்தல ஸ்தாபனம் முதலியவற்றிற்கு இவ் வசதிகளுக்காக மானியம் 462 கோடி டாலர்; சுகாதார வைத்திய ஆராய்ச்சிக்காக 178 கோடி டாலர்; அவ்விதக் கல்விக்காக 55 கோடி டாலர்; நோய் தடுக்கும் திட்டங்களுக்கு 63 கோடி டாலர்; வைத்தியசாலை முதலிய கட்டடங்களுக்கு 67 கோடி டாலர்; இவைகளுக்குச் சமமான தொகைகள் இராச்சிய, ஸ்தல ஸ்தாபன, இதர பொதுநல சங்கங்கள்மூலம் செலவழிக்கப்படுகின்றன.

மக்கள் சுயேச்சையாகச் சேர்ந்து தங்கள் ஆரோக்கியத்திற்கான இன்ஷூரென்ஸ் முறையைப் பேரளவில் கையாண்டு வருகின்றனர். 1962-ல் மொத்தம் 18 கோடி மக்களில் 13 கோடி பேர் இதில் சேர்ந்து இருந்தனர். இதில் நீலச் சிலுவைத் திட்டம் குறிப்பிடத்தக்கது. 5½ கோடி பேர்கள் 1959-ல் சேர்ந்திருந்தனர். ஒரு பிரதேசத்திலிருக்கும் தனியார் ஆஸ்பத்திரிகள் ஒன்றுகூடி மாதாந்தரக் கட்டணத்தின்பேரில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்கின்றன. அதைக்கொண்டு டாக்டர்கள், நர்சுகளுக்குச் சம்பளம் கொடுத்து அங்கத்தினர்கள் நோய்வாய்ப்பட்டால் ஆஸ்பத்திரியில் சேர்த்துக்கொண்டு சிகிச்சை செய்கின்றனர்.

நீலக் கவசத் திட்டம் இதற்கு அதிகமாக ரணசிகிச்சை, வீட்டில் டாக்டர் வந்து கவனிப்பதுபோன்ற வசதிகள் அளிக்கின்றன.

தொழிற்சாலைகளில் வேலை செய்வோர் கூட்டாக இன்ஷூர் செய்வதும் வழக்கம். 5 கோடிக்கு மேல் இவ்வித ஏற்பாட்டில் சேர்ந்திருக்கின்றனர். தனி முறையில் 3 கோடி மக்கள் தங்கள் ஆரோக்கியத்தை இன்ஷூர் செய்துகொள்ளுகின்றனர்.

சாதாரண ஸ்தலஸ்தாபனங்களால் நேரில் நிர்வகிக்கப்படாமல் சுகாதாரம் 429 விசேஷ ஜில்லா ஸ்தாபனங்களாலும், மற்ற வைத்திய, ஆரோக்கிய வசதிகள் 371 தனி ஸ்தாபனங்களாலும் கவனிக்கப்படுகின்றன. அவற்றின் செலவுகளுக்கு ஸ்தல ஸ்தாபனங்கள், இராச்சிய அரசாங்கம், ஐக்கிய அரசாங்கம் ஆகிய மூன்றும் மானியங்கள் கொடுக்கின்றன.

அமெரிக்க நபரால் தினசரி 3170 கலோரி சத்துள்ள உணவு அருந்தப்படுகிறது. பிரிட்டனில் 3000, ஜப்பானில் 2280,

பாரதத்தில் 2000 கலோரி சத்தே கிடைக்கிறதென்றுல் அமெரிக்க மக்கள் திடகாத்திரர்களாக இருப்பது ஆச்சரியமல்ல. நபருக்கு ஆண்டுக்கு 136 ராத்தல் கோதுமை, 15·7 ராத்தல் மாமிசம், 397 முட்டைகள், 8·7 ராத்தல் வெண்ணெய், 95 ராத்தல் சர்க்கரை, 17 ராத்தல் காப்பிக்கொட்டை, 109 ராத்தல் பழவகை உணவு அருந்தப்படுகிறது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குமுன் வீடு தனிக் குடும்பத்தின் பொறுப்பாகவே இருந்தது. ஆனுல், அது முடிந்தபின், பொதுவாக மக்கள் நல்ல வீடுகளில் வசித்தபோதிலும் இலட்சக் கணக்கான ஏழைகள் மோசமான வீடுகளில் இருப்பதைப்பற்றிக் கிளர்ச்சி தோன்றி, அவர்களுக்கு அரசாங்கத்தின்மூலம் வீட்டு வசதிகள் செய்யப்படலாயிற்று; இதுவரையில் 5 இலட்சம் வீடுகள் ஐக்கிய அரசாங்கத்தின் பண உதவியால் கட்டப்பட்டு, மிகவும் மலிவான வாடகையில் விடப்பட்டிருக்கின்றன. 1967-ல் இதற்காக 60 கோடி டாலர் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் சுகாதாரம், வைத்திய வசதிகளுக்காக ஆண்டுக்கு ரூ. 30 கோடிக்குக் குறைவாக செலவழிக்கப்பட்டது. முதல் திட்ட காலத்தில் ரூ. 140 கோடி, இரண்டாவது திட்டத்தில் ரூ. 225 கோடி, மூன்றுவது திட்டத்தில் ரூ. 342 கோடி செலவு செய்யப்பட்டன. 1966-67-ல் ரூ. 174 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களின் எண்ணிக்கை இரு மடங்காகவும், நர்சுகள் $3\frac{1}{2}$ மடங்காகவும் அதிகரித்திருக்கின்றனர். 1950-51-லிருந்து 1965-66 வரையில் ஆஸ்பத்திரிகள் 8,400-லிருந்து 15,000-த்திற்கும் அவற்றின் படுக்கைகளில் 1·1-லிருந்து 2·40 இலட்சத்திற்கும் பெருகியிருக்கின்றன. முதலில் 29 வைத்தியக் கல்லூரிகளே இருந்தன. இப்பொழுது 87 பொதுக் கல்லூரிகளும் 16 பல் வைத்தியக் கல்லூரிகளுமிருக்கின்றன. ஆண்டுதோறும் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை 4 மடங்காகியிருக்கின்றது. மலேரியா சிகிச்சைக்குத் தனியாக 390 ஸ்தலங்களும், க்ஷய ரோகத்திற்கு 145 இடங்களும், குஷ்டரோகத்திற்கு 675 சிகிச்சைக் கூடங்களும், புற்றுநோய்களுக்கு 101 சிகிச்சை ஸ்தலங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஜனத்தொகையின் பெருக்கத்தால் பாரதத்தின் முன்னேற்றம் மிகவும் தடைப்படுகிறது. 1941-51 பத்து வருஷங்களில் 1·26% வீதம் பெருகிய தொகை 1951-61-ல் 1·97% வீதமும் 1961-65-ல் 2·4% வீதமுமாயிற்று. வைத்திய, சுகாதார வசதி

களால் 1920-ல் சராசரி வயது 27-லிருந்து இப்பொழுது 50-க்கு அதிகரித்திருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டுக்காக முதல் திட்டத்தில் 147 காரியஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவை மூன்றும் திட்ட இறுதியில் 11,474ஆகப் பெருகியிருந்தன. 15 இலட்சம் பேர்களுக்கு ரணசிகிச்சையும், 8 இலட்சம் பேர்களுக்கு கர்ப்பத்தடை உதவிகளும் செய்யப்பட்டன.

உணவு தானியங்கள், இதர உணவுப் பொருள்களின் உற்பத்தி மூன்று திட்டங்களின் பலனுகக் கணிசமாக அபிவிருத்தியடைந்திருந்தபோதிலும், ஜனத்தொகைப் பெருக்கால் உணவு நெருக்கடி இருந்துகொண்டே வருகிறது. 1950-51-ல் உணவு தானியங்களின் உற்பத்தி 5·5 கோடி டன்னிலிருந்து 1964-65-ல் 8·8 கோடி டன்னுயிருந்தது. ஆனுல், 1965-66-ல் மழை சரியாகப் பெய்யாததால் 1 கோடி டன்னுக்குமேல் குறைந்துவிட்டது. நபருக்குத் தினசரி 14 அவுன்சு தானியமும் 2·1 அவுன்சு பருப்பு வகையராவுமே கிடைக்கின்றன.

மற்ற நாடுகளுடன் இந்திய மக்கள் அருந்தும் உணவை ஒப்பிட்டுப் பார்த்தால் இந் நாட்டு மக்களின் வறுமை நன்கு புலப்படும்.

நபருக்கு உணவு (ஆண்டுக்கு கிலோ கிராம்)

| | தானியம் | சர்க்கரை | பால் | மாமிசம் |
|---|---|---|---|---|
| பாரதம் | 13·9 | 18 | 3 | 2 |
| ஜப்பான் | 14·9 | 17 | 1 | 7 |
| பிரிட்டன் | 81 | 50 | 8 | 76 |
| அமெரிக்கா | 65 | 41 | 8 | 97 |
| ஃபிரான்ஸ் | 99 | 29 | 6 | 74 |
| ஜெர்மனி | 77 | 31 | 6 | 64 |
| பாக்கிஸ்தான் | 151 | 17 | 2 | 4 |
| சிலோன் | 119 | 18 | 1 | 2 |

வீட்டு வசதிகளில் சென்ற 15 வருஷங்களில் அதிக அபிவிருத்தி ஏற்படவில்லை. பெரிய நகரங்களில் தனியார் தரப்பில், ஏராளமான வீடுகள் கட்டப்பட்டிருப்பது உண்மையே. ஆயினும் அவ் இடங்களில் வாடகைகள் மிதமிஞ்சி அதிகரித்திருப்பதும், குடியிருப்புக்கு இரகசியமாக வாடகையைத்தவிர மொத்தத் தொகை கொடுப்பதும் வழக்கமாகி வருகிறது. இது ஜனப் பெருக்கத்திற்கேற்ற அளவு வீடுகள் அதிகரிக்கவில்லையென்பதைக் காட்டுகின்றது.

ஐந்தாண்டுத் திட்டங்களில் அரசாங்க உதவியைக்கொண்டு தொழிற்சாலைத் தொழிலாளிகள், அதிக சம்பளமில்லாத நடுத்தரக் குடும்பங்கள், சேரியிலிருப்போர், தோட்ட வேலைக்காரர்கள் இவர் களுக்காக வீட்டு வசதிகள் செய்யப்பட்டன. மூன்ருவது திட்ட காலத்தில் இதற்காக ரூ. 110 கோடி செலவிடப்பட்டது.

கிராமாந்தரங்களில் பெரும்பாலான மக்கள் மிகவும் மோசமான குடிசைகளிலேயே வசித்து வருகின்றனர். நாட்டின் செல்வம் மிகவும் பெருகிய பின்னரே அவர்களின் வீட்டு வசதிகளுக்கு உதவி கிடைக்கக்கூடும்போல் தோன்றுகிறது.

# 27. சமூகப் பாதுகாப்பு

இயந்திர சகாப்தத்திற்கு முன், எந்தச் சமூகத்திலும் அதன் தேவைகளுக்கு மிக அதிகமாக செல்வம் உற்பத்தி செய்ய முடிய வில்லை. விவசாயத்திலும் கைத்தொழில்களிலும் உழைப்போர் தமது எளிய வாழ்க்கை நடத்துவதே கடினமாக இருந்தது. வியாபாரிகள், கலைஞர்கள் முதலியோருக்குச் சற்று அதிக வருமானம் கிடைத்தபோதிலும், இக் காலத்தில் மிகவும் ஏழைகளுக்குக் கிடைக்கும் வாழ்க்கை வசதிகூடக் கிடையாது. ஆனால், பொட்டிவண்டி, நல்ல காளை மாடுகள், குதிரைகள், பெரிய வீடுகள், கம்பளங்கள்போன்ற ஆடம்பரங்களிலேயே அவர்கள் தமது உயர்வைக் காண்பித்தனர். அரசர்களும் பிரபுக்களும் வரி, வாடகைமூலம் ஏராளமான வருமானத்தைச் சுரண்டிக்கொண்டனர். ஆனால், அது இக் காலத்திய கணக்கில் மிகவும் குறைவு என்றுதான் கூறவேண்டும்.

இந் நிலைமையில், அரசாங்கங்கள் வசூலிக்கும் வரிகளைக் கொண்டு நாட்டைப் பாதுகாக்க, சைனியத்தையும் நகரங்களில் சமாதானத்தைக் காக்கப் போலீஸ் படைகளையும் பராமரிப்பது பெருஞ்சாதனையாக இருந்தது. ஒன்றிரண்டு சாலைகளோ, கல்விக் கூடங்களோ, ஏரிகளோ ஏற்பாடு செய்துவிட்டால் அரசாங்கம் மக்களால் பெரிதும் போற்றப்பட்டது.

இயந்திர சக்தியால் மனிதனுடைய செல்வ உற்பத்தி பன்மடங்கு வளர்ந்துவிட்டது. ஆதலால் சைனிய, போலீஸ் பாதுகாப்பைப்போலவே சமூக சேவைகளும், சமூகப் பாதுகாப்புமே அரசாங்கங்களின் முக்கியப் பொறுப்புகளாகிவிட்டன. சமூக சேவைகளைப்பற்றி முன் அத்தியாயங்களில் கூறப்பட்டது. இப்பொழுது மூன்று அரசியல்களிலும் சமூகப் பாதுகாப்பின் நிலைமையைப்பற்றி விளக்கப்படும்.

சமூகப் பாதுகாப்பின் மூலக் கொள்கைகளாவன. வயது வந்த திடகாத்திரமுள்ள ஆண்களும் பெண்களும் தமது உழைப்பின்

ஊதியத்தைக்கொண்டு வாழவேண்டும். ஆனால், உழைக்க முடியாத குழந்தைகள், வயோதிகர்கள், பிறப்பினாலோ துரதிர்ஷ்டத்தாலோ உழைத்துப் பிழைக்க முடியாதவர்கள் ஆகியோரைச் சமூகம் பராமரிக்கவேண்டும். வயோதிகர்களுக்கும், வியாதி, ஆபத்துகளால் உழைக்கமுடியாதவர்களுக்கும் உபகாரச் சம்பளம், நோய்வாய்ப்பட்டோருக்கு சிகிச்சை, வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கினவர்களுக்குத் தற்கால உதவி, அனாதைகளுக்கு ஆதரவு, ஏழைக் குடும்பங்களின் குழந்தைகளுக்கு மானியம் இவை அனைத்தும் சமூகப் பாதுகாப்பின் அம்சங்களாவன.

1601-ல் பிரிட்டனில் ஏழைகளுக்கு சமூகத்தின் வாயிலாக உதவியளிக்க ஒரு சட்டம் செய்யப்பட்டது. ஆனால், அது மிகவும் சிலருக்கே கிட்டியது. உண்மையான சமூகப் பாதுகாப்பின் அஸ்திவாரம் இந்த இருபதாம் நூற்றாண்டிலேயே போடப்பட்டது. கட்டணமில்லாத வயோதிக உபகாரச் சம்பளத்தைப்பற்றிய சட்டம் 1908-ல் செய்யப்பட்டது. அது மிகவும் குறைவாகவே இருந்தது. வயது வந்தவர்கள் உழைக்கும்பொழுது கூலியில் ஒரு சிறு பாகத்தைக் கட்டணமாகச் செலுத்தி, அதற்குப் பதிலாகத் தமது வயோதிக காலத்தில் உபகாரச் சம்பளமாகவும், இறந்துவிட்டால் தனது விதவைக்கும் வயது வராத குழந்தைகளுக்கும் வாழ்க்கைப் படியாகவும் உதவ 1926-ல் சட்டமியற்றப்பட்டது. 1912-ல் அதே மாதிரி கட்டணத்துடன் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் இயற்றப்பட்டது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப்பின் பல சட்டங்கள்மூலம் இத் திட்டங்கள் விரிவாகி, இப்பொழுது பிரிட்டனில் பூர்ண சமூகப் பாதுகாப்பு முறை அமலில் இருக்கிறது.

இது மூன்று பிரிவாகவிருக்கிறது. அவைகளுக்குத் தேசிய இன்ஷூரன்ஸ், தொழில் விபத்துக்கு ஈடு, குடும்ப மானிய திட்டங்கள் என்று பெயர். தேசிய இன்ஷூரன்ஸ் திட்டம் 15 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாயமாகச் செல்லுபடியாகும். அச் சட்டத்தின்படி கட்டணங்கள் செலுத்தவேண்டும். அப்படிச் செலுத்துவோருக்கு ஒரு கீழ்த்தலத்தும் மேல்படிக்கும் உட்பட்டுக் கட்டணங்களுக்கேற்றவாறு உதவிகள் செய்யப்படும். கட்டணம் செலுத்துவோன் ஒரு தொழிலாளியாக இருந்தால், அவனைப்போலவே அவனுடைய முதலாளியும் கட்டணம் செலுத்தவேண்டும். சொந்தமாக வேலை செய்வோர் தொழிலாளியைப் போல் $1\frac{1}{2}$ மடங்கு கட்டணம் செலுத்தவேண்டும். அரசாங்கமும் ஒரு பாகம் சேர்த்து, இத் தொகைகள் ஒரு தனி நிதியாக்கப்படுகிறது. அதிலிருந்து உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

கட்டணத்தில் ஒரு பங்கு கட்டாயமாகவும், மற்றொரு பங்கு செலுத்துவோரின் விருப்பத்தின்பேரிலும் வசூல் செய்யப்படுகிறது. இஷ்டப்பட்டு அதிகக் கட்டணம் செலுத்துவோருக்கு உதவித் தொகைகளும் அதிகமாக இருக்கின்றன. ஆண்களுக்கு 70 வயதிற் கும், பெண்களுக்கு 65-க்கும் மேல் உபகாரச் சம்பளம் நிச்சயமாக வழங்கப்படுகிறது. ஆனால், வேலையிலிருந்து ஓய்வு பெற்றிருப் போருக்கு 65, 60-க்குமேல் கொடுக்கப்படுகிறது. ஓர் உழைப் பாளி வாரத்திற்கு 10 ஷி. $11\frac{1}{2}$ பென்சும், அவன் முதலாளி 12 ஷி. $3\frac{1}{2}$ பென்சும் கட்டாயமாகக் கட்டவேண்டும். அவன் இஷ்டப்பட்டால் மேலும் 13 ஷி. $4\frac{1}{2}$ பென்ஸ் செலுத்தினால் முதலாளி 14 ஷி. $8\frac{1}{2}$ பென்சு செலுத்தவேண்டும். சொந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் 15 ஷி. 10 பென்சும், தொழில் புரியாதவர் 12 ஷி, 1 பென்சும் செலுத்தவேண்டும். பென்ஷன் வயது வந்ததும் வாரம் குறைந்தது 4 பவுன் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். இது தனி மனிதனுக்கு அவனால் பராமரிக்கப் படும் மனைவி அல்லது தாய்தந்தையர்க்குத் தலைக்கு 2 ப. 10 ஷி., முதல் குழந்தைக்கு 1 ப. 2 ஷி. 6 பென்சும் வழங்கப்படும். பிரசவ காலத்தில் 22 பவுனும், வயது வந்தவர் இறந்தால் 25 பவுனும் மானியங்களாகக் கொடுக்கப்படுகின்றன. கட்டணங் களுக்கேற்றவாறு இத் தொகைகள் குறைந்தும் கூடியும் இருக்கும்.

தொழிற்சாலையில் விபத்துக்காளானவர்களுக்கு வாரம் 6 ப. 15 ஷி., அவர்களின் போஷணையில் இருக்கும் வயதுவந்தவர் களுக்கு, தலைக்கு 2 ப. 10 ஷி., குழந்தைகளுக்கு, தலைக்கு 1 ப. 2 ஷி. 6 பென்சும் உதவித் தொகைகள் கொடுக்கப்படுகின்றன.

விதவைகளுக்கு ஒவ்வொரு குழந்தைக்கும் 1 ப. 10 ஷில்லிங்கும் மற்றவர்களுக்கு முதல் குழந்தைக்கு 1 ப. 2 ஷி. 6 பென்சும், மற்றக் குழந்தைகளுக்குத் தலைக்கு 14 ஷி. 6 பென்சு வீதமும் வழங்கப்படுகின்றன. யுத்தத்தில் இறந்தோர், காயம்பட்டோர், அவர்கள் குடும்பங்களுக்கு இதைவிட அதிக உதவித் தொகைகள் கிடைக்கின்றன.

பிரிட்டனில் வசிப்போர் அனைவருக்கும் வைத்திய வசதிகள் அளிக்கப்படுகின்றன. சம்பாதிப்போர் கட்டாயமாக ஒரு சிறு கட்டணம் செலுத்தவேண்டும். ஆனால், எல்லோருக்கும் ஒரே மாதிரியாக வைத்திய வசதிகள் கிடைக்கின்றன. வெளிநாடு களிலிருந்து பிரிட்டனில் தொழிலுக்காகவோ, வேறு காரணங் களுக்காகவோ வந்திருக்கும் ஜனங்களுக்கும் இந்தச் சுகாதாரச் சலுகைகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பிரிட்டனைக்காட்டிலும் வெகு தாமதமாகவே செய்யப்பட்டன. ஏனெனில், அவைகளுக்கு அவ்வளவு அவசியமில்லை. 19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஒரு பிரமாண்டமான நிலப்பரப்பில் ஜனத்தொகை மிகவும் குறைவாக இருந்தது. ஏராளமான காலி நிலங்கள் இருந்தன. எந்தக் குடும்பத் தலைவனும் விரும்பினுல் நல்ல இடங்களில் 160 ஏக்கர்களும், மணற்பாங்கான பிரதேசங் களில் 320 ஏக்கர்களும், ஓர் ஏக்கர் 2 டாலர் வீதம் பெறலாம் என்ற சட்டம் செய்யப்பட்டது. மேலும், தனி மனிதனின் சுதந்தர உரிமை பெரிதும் பாராட்டப்பட்டது. அரசாங்கம் பொருளா தாரத்தில் தலையிடக்கூடாது என்ற தத்துவம் ஆளும் கூட்டத்தின ரிடம் குடிகொண்டிருந்தது. ஆனுல், யந்திர சகாப்தம் வலுப் பெற்று, நகரங்கள் உருவாகி, பெரும்பாலான மக்கள் அங்கு வசிக்கத் தலைப்பட்டதும் வயோதிகர்களுக்கும், விபத்தால் அல்லது வியாதி யால் சம்பாதிக்க முடியாதவர்களுக்கும் உதவி செய்யும் அவசியம் உண்டாயிற்று. ஆங்காங்கு ஸ்தல ஸ்தாபனங்களும் தரும நிறுவ னங்களும் சிறிய உதவியளிக்கத் தொடங்கின. முதல் யுத்தத் திற்குப்பின் போரில் மாண்டோரின் குடும்பங்களுக்கும் காயம் பட்டவர்களுக்கும், வயதுவந்த போர்வீரர்களுக்கும் அரசாங்க மானியங்கள் பேரளவில் வழங்கப்படவே, ஏன் மற்றவர்களுக்கும் அம்மாதிரி உதவக் கூடாது என்ற பிரச்சினை தீவிரமாக வாதிக்கப் பட்டது. 1929-30-ல் உண்டான மகத்தான பொருளாதார மந்தத்தால் கோடிக்கணக்கான மக்கள் வேலையிழந்து, வருவா யின்றித் தாம் தவிப்பதுமன்றித் தமது பெற்றேர்களும் மக்களும் துன்புறுவதைக் கண்டு சமூகப் பாதுகாப்பின் அத்தியாவசியம் அனைவருக்கும் புலப்பட்டது. முதன்முதலில் வேலையில்லாதவர் களுக்கு வேலை கொடுக்கவேண்டும், அல்லது உதவிச் சம்பளம் வழங்கவேண்டுமென்று நிச்சயமாகி, ஸ்தலஸ்தாபனங்களுக்கு ஐக்கிய சர்கார் மானியம் கொடுக்கலானுர்கள். 1933-ல் பிரசிடென்ட் ரூஸ்வெல்டின் ஆலோசனையை ஆமோதித்து காங்கிரஸ் வறுமையால் வாடுவோர் அனைவருக்கும் உதவியளிக் கவும், அதற்காகக் கணிசமான மானியங்கள் கொடுக்கவும் சட்டம் செய்தது. 1935 ஆகஸ்டு 14-ல் ஒரு பரந்த சமூகப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டு, அது பன்முறை விஸ்தரிக்கப்பட்டு, முடிவில் 1962-ல் தற்சமயம் நிலவிவரும் முறை ஊர்ச்சிதமாயிற்று. அதற்குப் பெயர் முதியோர், பராமரிப்பவர், இறந்த குடும்பத்தினர். தொழில் செய்து சம்பாதிக்கக்கூடாதவர் சட்டம். அதன்படி தொழில் புரிவோரும், அவர்களின் முதலாளிகளும், சொந்தமாகத் தொழில் செய்வோரும் சட்டத்தில் விதித்த கட்டணங்களைச் செலுத்தவேண்டும். இத் தொகைகள் இரு நிதிகளில் சேகரிக்கப்

படுகின்றன. ஒன்று உபகாரச் சம்பளங்களும், உதவித் தொகைகளும் கொடுப்பதற்கு; மற்றொன்று இத் திட்டத்தை நாடெங்கும் அமல் செய்வதற்குவேண்டிய செலவுகளுக்கு. இவை ஐக்கிய அரசாங்கத்தின் பத்திரங்களில் சேமிக்கப்பட்டு, அதனுல் நிர்வகிக்கப்படுகிறது.

இச் சட்டத்தின்கீழ், ஒரு நபர் 62 வயதில் ஓய்வெடுத்துக் கொண்டாலோ, அதற்கு முன் வேலை செய்வதற்குத் தகாதவராஞலோ உபகாரச் சம்பளம் பெறுவார். அவரால் பராமரிக்கப்படும் மனைவி, மக்களுக்கு உதவித் தொகைகள் அளிக்கப்படும். கட்டணம் செலுத்திய நபர் இறக்கும்பொழுது அவர் குடும்பத்திற்கு ஒரு மானியத் தொகை கொடுக்கப்படும். 4,800 டாலர் வருமானம் வரையிலேயே கட்டணங்களும் உதவிகளும் அளிக்கப்படும். தொழிலாளி $4\frac{1}{8}$%-ம் முதலாளி அதற்குச் சமமாகவும் செலுத்த வேண்டும். சொந்தத் தொழில் புரிவோர் தமது வருவாயில் $6\frac{1}{5}$% கட்டவேண்டும். இவ்வாறு கட்டி வருவோர்கள் 62 வயதில் 3,000 டாலருக்குக் குறைந்த வருமானமிருந்தால், ஓய்வு பெற்ருல் மாதம் 76 டாலர், ஒவ்வோர் ஆண்டுக்கும் 6 டாலர் அதிகமாகவும் 65-க்குமேல் 95 டாலரும் பெறுவார். அவர் மனைவிக்கு 36-லிருந்து 48 டாலர் வரையிலும், ஒரு குழந்தைக்கு 71 டாலர் வீதம் மொத்தம் ஒரு குடும்பத்திற்கு 202 டாலருக்குமேற்படாமல் கொடுக்கப்படும். 4,800 டாலர் வருமானமுள்ளோருக்கு இத் தொகைகள் 101-லிருந்து 107 டாலரும், மொத்தம் குடும்பத்திற்கு 254 டாலருக்கு மேற்படாமலும் வழங்கப்படும். இதன்கீழ் 170 இலட்சம் நபர்களுக்கு உதவியளிக்கப்படுகிறது. இத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்கள் சேர்க்கப்படவில்லை. அவர்களின் தொகை 165 இலட்சம். இவர்களுக்கு வேறு திட்டப்படி அதிக உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இவ்விரு வகையிலும் மாதம் 300 கோடி டாலருக்கு மேல் உதவியளிக்கப்படுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தில் மாட்டிக்கொள்வோருக்கு ஐக்கிய அரசாங்கச் சட்டத்தின்கீழ் இராச்சிய அரசாங்கங்கள் பொறுப்பு வகிக்கின்றன. 4 பேருக்குமேல் தொழிலாளிகளை அமர்த்தியிருக்கும் எல்லா முதலாளிகளும், ஸ்தல ஸ்தாபனங்களும் தொழிலாளிகளின் கூலி மொத்தத்தில் 3·1% வரி செலுத்த வேண்டும். அதில் 2·7% இராச்சியத்திற்குக் கொடுக்கப்படுகிறது. அதிலிருந்து வேலையில்லாத தொழிலாளிகளுக்கு உதவியளிக்கப்படுகிறது. சாதாரணமாக, அவர்கள் வேலை செய்தபொழுது சம்பாதித்த கூலியில் பாதிக்கு மேற்படாமல் கொடுக்கப்படும். அதற்குச் சில

நிபந்தனைகளுண்டு. ஓர் உழைப்பாளி தானாக வேலையை இராஜி னாமா செய்துவிட்டுச் சும்மாயிருந்தால் உதவி கிடைக்காது. தகாத செயல்களுக்கு வேலையிலிருந்து நீக்கப்பட்டாலும் இல்லை. வேலையில்லாதோரின் பட்டியலில் தன் பெயரைப் பதிந்துகொள்ள வேண்டும். அவனுக்கு உசிதமான வேலை கொடுத்தால் ஏற்க வேண்டும். இம் முறையில் 1960-ல் 456 இலட்சம் தொழிலாளி கள் இவ் உதவிக்கு உரியவர்களாக இருந்தனர்.

கட்டணம் கட்ட இயலாத முதியோர், அவர்களின் குழந்தை கள், அனாதைக் குடும்பங்கள் இவர்களுக்கு உதவியளிக்க 1960 சமூகப் பாதுகாப்புச் சட்டத்தில் நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட் டிருக்கின்றன. இதற்காக ஐக்கிய அரசாங்கம் 120 கோடி டாலரும், இராச்சிய அரசாங்கங்கள், ஸ்தலஸ்தாபனங்கள் 70 கோடி டாலரும் ஆண்டுக்குச் செலவிடுகின்றன.

இந்தத் திட்டங்களுக்குள் வராமல் துரதிர்ஷ்டவசத்தால் கஷ்டப் படுவோருக்கும் பொது உதவித் திட்டம் இருக்கின்றது. அதற்காக வருஷத்திற்கு 30 கோடி டாலர் வரையில் செலவாகிறது.

நோய்வாய்ப்பட்டவர்களுக்கு வைத்திய வசதிகளுக்கு மக்கள் நேரிலேயே கட்டணம் கட்டி உதவி பெறக்கூடிய பல திட்டங்கள் உலவிவருகின்றன. அதன்கீழ் 1959-ல் 13 கோடி மக்கள்—அதாவது மொத்த ஜனத்தொகையில் 75% பாதுகாக்கப்பட்டனர்.

பிரிட்டனைப்போல் எல்லாவிதப் பாதுகாப்பும் அரசாங்க நிறு வனத்தால் எல்லா மக்களுக்கும் கிட்டாதபோதிலும், அமெரிக்க மக்களின் மொத்தப் பாதுகாப்புக் குறைவானதென்று கூறமுடி யாது. சராசரி வருமானம் அதிகமாகவிருப்பதால் கட்டணத்தின் பேரில் பாதுகாப்புப் பெறுவதற்கு அமெரிக்க மக்களுக்கு ஆற்றல் அதிகமிருக்கின்றது.

பாரதத்தில் பொதுமக்களுக்குச் சமூகப் பாதுகாப்பிற்கு எவ்வித ஏற்பாடுமில்லையென்றே கூறவேண்டும். அரசாங்க வைத்திய சாலைகளில் இலவசமாகச் சிகிச்சை கிடைப்பதொன்றே இந்தியப் பிரஜைக்கு அளிக்கப்படும் வசதியாகும். அதிலும் பல மருந்துகளை நோயாளி தானே செலவழித்து வாங்கவேண்டும். வைத்தியசாலை களில் இடம் கிடைப்பது மிகவும் கஷ்டம்.

ஆங்காங்கு அனாதைக் குழந்தைகளுக்குச் சில அறநிலையங்கள் இருக்கின்றன. பொதுவாக, தர்ம சிந்தனையுள்ளவர்களால் அவை நடைபெறுகின்றன; சிறிதளவு அரசாங்க உதவி பெறுகின்றன.

சில வகுப்பார்களுக்குப் பென்ஷன், பிராவிடன்ட் நிதி, ஆரோக்கிய இன்ஷூரன்ஸ் திட்டங்கள் இருக்கின்றன. பொதுவாக அரசாங்கப் பொதுஸ்தாபன சேவகர்களுக்கும், தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளிகளுக்குமே இவற்றின்மூலம் உதவி கிடைக்கிறது. இவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 1 கோடியாகும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின்கீழ் தொழிலாளிகளுக்குச் சில இடங்களில் பிராவிடென்ட் நிதி ஒன்றே இருந்தது. சுதந்தரத்திற்குப் பின் தொழிலாளி ஆரோக்கிய இன்ஷூரன்ஸ் திட்டம் சட்டமாக்கப்பட்டு, அதன்மூலம் நோய்வாய்ப்பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்யவும் கூலியிழந்த நாட்களுக்கு உதவித் தொகை வழங்கவும் ஏற்பாடாகியிருக்கிறது.

போதிய சமூகப் பாதுகாப்பளிப்பதற்கு நாட்டின் செல்வ உற்பத்திபோதாதென்பது உண்மையே. ஆயினும், இலட்சக்கணக்கான முதியோர்களும் குழந்தைகளும் ஆதரவின்றித் தவிப்பது ஒரு குடியரசிற்கு முற்றிலும் ஒவ்வாதது. மத்திய, இராச்சிய அரசாங்கங்கள் நேரிலோ, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மூலமாகவோ அவர்களுக்கு உதவி செய்வது தமது இன்றியமையாத கடமையாகக் கருதவேண்டும். முதன்முதலில் உதவித் தொகைகள் குறைவாக இருந்தபோதிலும், நாட்டின் செல்வ நிலை ஓங்கும்பொழுது படிப்படியாக அதை உயர்த்தலாம். பொதுமக்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிப்பது தமது கடமையென்று ஏற்கும்வரையில் இந்தியக் குடியரசின் இலட்சியம் பொதுநல சமுதாயம் (சோஷலிசம்) என்று பறையடிப்பது வீண் விதண்டாவாதமாகும்.

# 28. அரசியல் கட்சிகள்

மக்கள் ஆட்சி அரசியல் கட்சிகள்மூலமாகவே நடைபெற வேண்டும். இம் முடிவு அனுபவத்தால் ஏற்பட்டது. கட்சிகளில்லாமலே பொதுமக்களின் பிரதிநிதிகள் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அரசாங்கத்தை நடத்துவது தத்துவ ரீதியில் சாத்தியமென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். ஓரளவு ஸ்விட்சர்லாந்தில் இம் முறையில் நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது. சிறிய தேசமாக இருப்பதாலும், நமது பஞ்சாயத்துகளைப்போன்ற காண்டன்கள் ஏறக்குறைய பூர்ணமான சுய ஆட்சி பெற்றிருப்பதாலும், நாட்டின் மத்திய அரசாங்கத்தில் கட்சிப் போட்டிகளுக்கு அதிக அவகாசமில்லை. ஆயினும், அங்கும் அரசியல் கட்சிகள் இருக்கின்றன.

சிக்கலான பிரச்சினைகளிலும், வரி விகிதத்திலும், மற்றும் பொருளாதார, வெளிநாட்டு நீதிகளிலும் பிரதிநிதிகள் கட்டுப்பாடாக இருந்தாலொழிய நிச்சயமான கொள்கைகளோ, நீதிகளோ அமலாவது, சுலபமல்ல. பேச்சு, எழுத்து, பிரசாரம், சங்கம் அமைப்பது, இவற்றில் மக்கள் சுதந்தரமாகவிருப்பது மக்கள் ஆட்சியின் அஸ்திவாரமாகும். எல்லோரும் எவ்விதப் பிரச்சினையிலும் ஒன்றுபட்டிருப்பார்களென்று எதிர்பார்க்கமுடியாது. ஆதலால், கொள்கைகளிலும் நீதிகளிலும் ஒரு மனமுடையவர்கள் ஒன்றுசேர்ந்து தமது திட்டங்களை அரசாங்கமூலம் அமல் செய்வதற்கு விரும்புவது சகஜம். சட்டமன்றங்களில் பெரும்பாலராக இருக்கும் கூட்டத்தாலே இவ்வாறு செய்யமுடியும். ஆதலால், சிறந்த தலைவர்களைக் கொண்டு கட்டுப்பாடுள்ள கட்சிகள் மூலமே மக்கள் ஆட்சி எல்லா நாடுகளிலும் நடைபெற்று வருகின்றது.

இவ்விதம் பல கட்சிகள் இருக்கக்கூடும். சில சமயங்களில் எக் கட்சியும் சட்டமன்றத்தில் பெரும்பான்மையாக இல்லாமலிருக்கக்கூடும். அப்பொழுது இரண்டு, மூன்று கட்சிகள் ஒன்றுசேர்ந்து நிர்வாகம் நடத்தும். ஆனால், இவ்விதக் கூட்டுகள் நீடித்து

இருப்பதில்லை. அடிக்கடி கலைந்து நிர்வாகத்தில் குழப்பமும், நீதி களில் அடிக்கடி மாற்றமும் உண்டாகும். இதற்கு ஃபிரான்சு தேசம் போதிய சான்ருகும். இரண்டு கட்சிகள் வலுப்பெற்று நிலவிவரும் நாடுகளிலேயே மக்கள் ஆட்சி சரிவர நடைபெறும் என்பதை பிரிட்டன், அமெரிக்கா, கானடா முதலிய நாடுகள் நிரூபித்திருக் கின்றன. இவைகளைத் தவிர சிறிய கட்சிகள் இருப்பதால், பாதக மில்லை. ஆனும் கட்சியின்மீது பொதுமக்களுக்கு அதிருப்தி உண்டானல் அவர்கள் இரண்டாவது பெருங் கட்சிக்கு ஆதர வளித்துப் புதிய நிர்வாகம் அமைத்து ஆட்சியைக் குழப்பமின்றி நடத்தலாம்.

பிரிட்டனில் 17ஆம் நூற்ருண்டிலிருந்து அரசியல் கட்சிகள் தோன்றி வலுப்பட்டு வந்திருக்கின்றன. முதலில் சீர்திருத்தக் காரர்கள் விக் என்ற பெயருடனும் அதை எதிர்க்கும் பிரபுக்களும் நிலச்சுவான்தார்களும் டோரி என்ற பெயருடனும் இரு கட்சிகளாக மாறிமாறி மந்திரிசபை அமைத்து ஆண்டுவந்தனர். இந் நூற்ருண் டின் ஆரம்பத்தில் அவர்களுக்குத் தாராள மனப்பான்மையுள்ளது (லிபரல்), இருக்கும் நிலையைப் பாதுகாப்பது (கன்செர்வேடிவ்) என்ற பெயர் மாற்றத்துடன், அக் கட்சிகளே முக்கியத்துவம் பெற் றிருந்தன. தொழில் கட்சி ஒரு சிறு கூட்டமாகத் தோன்றிற்று. முதல் உலக யுத்தத்திற்குப்பின் அது வலுப்பெற்றுச் சிறிது காலம் பிரிட்டனில் மூன்று கட்சிகள் போட்டிபோட்டன. பின்னர், தொழிற் கட்சி தீவிரச் சீர்திருத்தங்களைக் கோரும்பொழுது, கன்செர்வேடிவ் கட்சியும் மிதமான முற்போக்குக்குத் தயாராகிவிட்டது. ஆத லால், லிபரல்கட்சி பிளவுபட்டு ஒருபகுதி கன்செர்வேடிவ்களோடும் மற்ருெரு பகுதி தொழிற் கட்சியோடும் சேர்ந்துவிட்டது. ஒரு சிறு பாகம் இன்றும் பழைய பெயரைக் காத்துவருகிறது. 1959ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் கன்செர்வேடிவ் கட்சிக்கு 365, தொழிற் கட்சிக்கு 165, லிபரல் கட்சிக்கு 6 பிரதிநிதிகள் தேர்ந் தெடுக்கப்பட்டனர். 1964ஆம் ஆண்டுத் தேர்தலில் தொழிற் கட்சிக்கு 317, கன்செர்வேடிவ் கட்சிக்கு 303, லிபரல்கட்சிக்கு 9 பிரதிநிதிகள் வெற்றி பெற்றனர். கன்செர்வேடிவ் மந்திரிசபை விலகி, தொழிற் கட்சி மந்திரி சபை அமைத்து ஆண்டுவருகிறது.

கன்செர்வேடிவ் கட்சியின் அமைப்பு மிகவும் எளிதானது. பார்லிமென்டில் இருக்கும் கட்சியே பெரும்பாலும் வெளியிலும் கட்சி வேலைகள் செய்கிறது. அதன் தலைவரே கட்சித் தலைவ ராவர். ஒவ்வொரு பார்லிமென்டுத் தொகுதியிலும் ஒரு கிளைச் சங்கமிருக்கிறது. வருஷந்தோறும் இவற்றின் பிரதிநிதிகளும் பார்லிமென்டில் உள்ள அங்கத்தினர்களும் ஒரு மகாநாடு கூட்டி,

கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும்பற்றி விவாதிப்பார்கள். இடைத் தேர்தல்களுக்கும், பொதுத் தேர்தல்களுக்கும் கிளைச் சங்கங்கள் தலைவரின் அனுமதியுடன் அபேட்சகர்களை நிச்சயிக்கும். சாதாரணமாகப் பார்லிமென்டில் இருப்பவர்கள் விரும்பினால் பழைய தொகுதிக்கு அபேட்சகர்களாக நியமிக்கப்படுவார்கள். அவர்களே தங்கள் தேர்தல் செலவுகளைச் சமாளிப்பார்கள்.

தொழிற் கட்சியின் அமைப்பு வேருனது. அதற்குத் தொழிற் சங்கங்கள், கிளை ஸ்தாபனங்கள், பார்லிமென்டில் உள்ள தொழிற் கட்சி அங்கத்தினர்கள் அனைவரும் சேர்ந்து வருஷாந்திர மகா நாட்டில் ஒரு தலைவரையும், நிர்வாகக் கமிட்டியையும் நியமிப்பார்கள். அபேட்சகர்களை நியமிப்பதில் தொழிற்சங்கங்களுக்கு அதிகச் செல்வாக்குண்டு.

அம் மகாநாட்டில் தொழிற் கட்சியின் கொள்கைகளும் திட்டங்களும் வாதிக்கப்பட்டுத் தீர்மானங்கள்மூலம் நிர்ணயிக்கப்படும். ஆனால், அரசாங்க விஷயங்களில் கட்சித் தலைவரோ, நிர்வாகக் கமிட்டியோ தலையிடுவதில்லை.

தொழிற் கட்சி அரசாளும்பொழுது அதன் பிரதம மந்திரி இஷ்டப்பட்டால் தலைவரையும் மற்றக் கட்சிப் பிரமுகர்களையும் கலந்து ஆலோசிக்கலாமேயொழிய, அவருக்குக் கண்டிப்பான உத்தரவிட பார்லிமென்டிலுள்ள தொழிற் கட்சி ஒன்றுக்கே உரிமையுண்டு. அதுவும் அவரைத் தலைமையிலிருந்து நீக்க விரும்பினாலொழிய அவ்வாறு செய்யமாட்டாது. அந் நிலைமை வரும் முன்னரே பிரதமர் ராஜினாமா செய்துவிடுவார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரிட்டிஷ் ஆட்சியை நிராகரித்து, போராடிக் குடியரசை ஏற்படுத்திய சமயத்தில் அரசியல் கட்சிகளில்லை. விடுதலைப் போர்த் தலைவர் வாஷிங்டன் தலைமையில் ஏற்பட்ட மந்திரி சபைக்கு எதிராகக் கட்சியில்லை. ஆனால், அவருடைய கூட்டாளிகள் ஹாமில்டன், ஜெப்பர்சன் இருவருக்கும் பல பிரச்சினைகளில் தீவிர அபிப்பிராய பேதங்கள் இருந்தன.

ஆதலால், அரசியல் திட்டம் ஏற்பட்டு 20 ஆண்டுகளுக்குப் பின் இவ்விரு தலைவர்களும் பிரிந்து, தனித்தனியாகக் கட்சிகளை அமைத்தனர். ஜெப்பர்சன் தலைமையில் ஏற்பட்டது ஜனநாயக (டெமொகிராடிக்) கட்சி. இதற்கு எதிராக ஹாமில்டன் தலைமையில் விக் அல்லது தாராள மனப்பான்மைக் கட்சி ஏற்பட்டது.

1854-ல் அடிமைப் பிரச்சினை எழுந்தபொழுது அதை எதிர்த்துக் குடியரசு (ரிபப்ளிகன்) கட்சி ஏற்பட்டு, அதற்குள் விக் கட்சி மறைந்தது. சென்ற 150 ஆண்டுகளாக ஜனநாயக, குடியரசுக் கட்சிகள் இரண்டுமே அமெரிக்க அரசியலை நடத்திவந்திருக்கின்றன. குடியரசுக் கட்சி அடிமைகளை விடுதலை செய்வதற்காகப் பிரசிடென்ட் லிங்கன் தலைமையில் உள்நாட்டுப் போரில் வெற்றி பெற்றதால், அதே சென்ற நூற்றுண்டின் இறுதிவரையில் நிர்வாகத்தை வகித்துவந்தது. அதற்கு வடக்கு இராச்சியங்களில் அதிகச் செல்வாக்கு. ஜனநாயகக் கட்சி ஆதியில் பதவி வகித்தபோதிலும், அடிமை முறையை ஆதரித்த தெற்கு இராச்சியங்களின் உரிமைகளைப் பாதிக்க அதில் பெரும்பாலர் விரும்பவில்லை. ஆதலால், உள்நாட்டுப் போருக்குப்பின் அது பலமிழந்தது.

இந்த நூற்றுண்டில் இரண்டு கட்சிகளும் ஏறக்குறைய சரிசமமாக மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளன. முதல் உலக மகாயுத்த காலத்தில் பிரசிடென்டான வில்சன் ஜனநாயகக் கட்சித் தலைவர். யுத்த முடிவில் நடந்த தேர்தலில் குடியரசு கட்சி அதிகாரம் பெற்றது. 1932-ல் அது தோற்று, ரூஸ்வெல்ட் தலைமையில் ஜனநாயகக் கட்சி மீண்டும் பதவி பெற்று, 21 ஆண்டுகள் அரசு புரிந்தது. 1952-ல் ஐசன்ஹோவர் குடியரசு கட்சியின் சார்பில் பிரசிடென்டாகி 8 வருஷம் பதவி வகித்தார். 1960-ல் ஜனநாயகக் கட்சியின் தலைமையில் கென்னடி வெற்றி பெற்றார். அவர் கொல்லப்படவே, லிண்டன் ஜான்சன் அப் பதவியேற்று 1964-ல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவ்வப்போது மதுவிலக்கு, ஒற்றைவரி, சோஷலிஸ்ட் என்ற கொள்கைகளுடன் சிறிய கூட்டங்கள் எழுந்து மறைந்து வந்திருக்கின்றன. அவைகளைக் கட்சிகள் என்று கூறுவது உசிதமாகாது.

அரசியல் முறையைப் போலவே கட்சிகளும் மூன்று படியாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு தேசியக் கமிட்டியும், இராச்சியக் கமிட்டிகளும், ஸ்தலக் கமிட்டிகளுமிருக்கின்றன: பிரசிடென்ட், உப பிரசிடென்ட், செனேட், மக்கள் சபைகளுக்கு அபேட்சகர்களை நியமித்துத் தேர்தலில் போட்டி போடுவது தேசியக் கமிட்டியின் பொறுப்பு. இராச்சிய சட்டசபைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகங்களுக்கும் அபேட்சகர்களை நியமிப்பதும், தேர்தலை நடத்துவதும் இராச்சிய கமிட்டிகளின் வேலை. அதேபோலவே நகரசபைகளின் தேர்தல்களை ஸ்தலக் கமிட்டிகள் நடத்துகின்றன. ஒரே கட்சியைச் சேர்ந்திருப்பினும் இம் மூன்று படிகளிலும் கமிட்டிகள் சுதந்திரமாகப் பணிபுரிகின்றன;

வேண்டும்பொழுது ஒத்துழைக்கின்றன. சாதாரணமாக, தேசியக் கமிட்டி இராச்சியக் கமிட்டிகளுக்கும், இராச்சியக் கமிட்டிகள் ஸ்தலக் கமிட்டிகளுக்கும் உத்தரவிட அதிகாரமில்லை.

பல இராச்சியங்களில் இராச்சியக் கமிட்டிகளின் அமைப்பும் நடைமுறைகளும் சட்டபூர்வமாக விதிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்தலக் கமிட்டியின் பிரதிநிதிகள் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப் படுதல், அல்லது அதற்கான மகாநாடுகளில் (கன்வென்ஷன் களில்) நியமிக்கப்படுதல் போன்ற வெவ்வேறு விதமாக அமைக்கப் படுகின்றன.

ஜனநாயகக் கட்சியின் தேசியக் கமிட்டி ஒவ்வோர் இராச்சியத் திலுமிருந்து ஓர் ஆண், ஒரு பெண் பிரதிநிதி கொண்டது. குடியரசுக் கட்சியின் தேசியக் கமிட்டியில் இவ்விரண்டு பிரதிநிதிகளுடன், பிரசிடென்ட், செனேட், காங்கிரஸ் தேர்தல்களில் பெரும்பான்மை யாகக் கட்சிக்கு வாக்களித்த இராச்சியங்களின் கமிட்டித் தலைவர் களும் அங்கத்தினராவர். தேசியக் கமிட்டி ஒரு தலைவர், பொக்கிஷ தார், பிரசாரக் குழுவை நியமிக்கிறது. பிரசிடென்ட், உபபிரசி டென்ட் பதவிக்கு அபேட்சகர்களை தேசியக் கமிட்டிகள் நியமிப்ப தில்லை. அதற்காகத் தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன் ஒரு பெரிய கன்வென்ஷன் நடைபெற்று, அதில் பெரும்பாலரின் ஆதரவு பெற்றவரே அபேட்சகராக நியமிக்கப்படுகிறார். நான்கு வருஷங் களுக்கு ஒரு முறை இரண்டு கட்சிகளின் கன்வென்ஷன்களும் பெரும் ஆடம்பரத்துடனும் ஆரவாரத்துடனும் நடைபெறு கின்றன. இந்த மகாநாட்டின் பிரதிநிதிகள் வெவ்வேறு முறை களில் நியமிக்கப்படுகின்றனர். குடியரசுக் கட்சியின் கன்வென்ஷ னுக்குமுன் தேர்தலில் அக் கட்சிக்குக் கொடுக்கப்பட்ட வாக்கு களின்பேரில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது. ஜனநாயகக் கட்சிக் கன்வென்ஷனுக்கு ஒவ்வோர் இராச்சியத்திற்கும் காங்கிரஸ் செனேட்டுகளில் அதன் பிரதிநிதிகளைப்போல் இரண்டு மடங்கும், பிரசிடென்ட் தேர்தலில் பெரும்பான்மையளித்த இராச்சியங்களுக்கு 4 அதிகப் பிரதிநிதிகளும் கொடுக்கப்படுகின்றன. 1952-ல் குடியரசுக் கட்சிக் கன்வென்ஷனுக்கு 1,206 பிரதிநிதிகளும், ஜன நாயகக் கட்சிக் கன்வென்ஷனுக்கு 1,652 பிரதிநிதிகளுமிருந்தனர்.

இரண்டு ஆண்டுகளுக்கொரு தரம் காங்கிரஸின் மக்கள் பிரதி நிதி சபையும், செனேட்டின் மூன்றில் ஒரு பங்கு ஸ்தானங்களும், அதேமாதிரி இராச்சிய, மக்கள் செனேட் சபைகளுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், பல உத்தியோகங்களுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடைபெறுவதால், அதைக் கவனிப்பதிலேயே கட்சி

ஸ்தாபனங்கள் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துகின்றன; அரசாங்க அலுவல்களில் தலையிடுவதில்லை.

பாரதத்தில் 1906 வரையில் மக்கள் குறைகளை எடுத்துரைப்பதற்குக் காங்கிரஸ் ஸ்தாபனம் ஒன்றே அரசியலில் ஈடுபட்டு வந்தது. அவ்வாண்டில் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் பிளவு உண்டாயிற்று. சில வருஷங்கள் மிதவாதிகள் அதில் ஓங்கியிருந்தனர். 1909-ல் ஒரு சிறிய அரசியல் சீர்திருத்தம் செய்யப்பட்டது. அதில் மத்திய, மாகாண அரசாங்கங்களுக்கு ஆலோசனை கூறச் சட்டசபைகள் நிறுவப்பட்டன. அவற்றில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள் பெரும்பாலராக இருந்ததாலும், அவைகளுக்கு அதிகாரமில்லாததாலும், அரசியல் முன்னேற்றமொன்றும் உண்டாகவில்லை. ஆனால், முஸ்லீம்களுக்குப் பிரத்தியேகத் தொகுதிகளில் வகுப்புப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. அது முஸ்லீம்கள் அரசியலில் தனிக் கட்சியாவதற்கும் முஸ்லீம் லீக் ஸ்தாபிக்கப்படுவதற்கும் மூலகாரணமாயிற்று.

முதல் உலக யுத்த ஆரம்பத்தில் லோகமான்ய திலகர் தமது 6 ஆண்டுச் சிறைத் தண்டனை முடிந்து பர்மாவிலிருந்து இந்தியா வந்துசேர்ந்தார். மகாத்மா காந்தியும் தமது தென் ஆஃப்ரிக்க சத்தியாக்கிரகப் போரை முடித்துவிட்டு, அங்கிருந்த அரசாங்கத்தோடு ஓர் ஒப்பந்தம் செய்துவிட்டு, தாய்நாடு திரும்பினார். காங்கிரஸ் மகாசபையில் தீவிரவாதிகள் மீண்டும் சேர்ந்தனர். காங்கிரஸ், முஸ்லீம் லீக் தலைவர்கள் அனைவரும் சேர்ந்து 1917-ல் ஒரு புதிய அரசியல் வேண்டுமென்றும், அதன் முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை விடுத்தனர். அப்பொழுது இந்தியா மந்திரியாக இருந்த மான்டேகு, இந்தியா வந்து, இராஜப் பிரதிநிதியான செம்ஸ்போர்டு பிரபுவோடும் இந்தியத் தலைவர்களுடனும் கலந்து ஒரு திட்டம் வகுத்தார். அது சில மாறுதல்களுடன் பார்லிமென்டால் ஆதரிக்கப்பட்டுச் சட்டமாக்கப்பட்டது. அதன்கீழ் மக்கள் பிரதிநிதிகளைப் பெரும்பான்மையாகக்கொண்ட மத்திய, மாகாண சட்டசபைகள் நிறுவப்பட்டன. மாகாணங்களில் சில அரசாங்க இலாகாக்கள் மந்திரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டு, அவர்கள் சட்டசபைக்குப் பொறுப்புள்ளவர்களாக்கப்பட்டனர்.

முதலில் இந்தச் சட்டசபைகளில் புகுந்து மந்திரிசபை அமைக்கக் காங்கிரஸ் மகாசபை விரும்பியது. ஆனால், 1919-ல் ரௌலட் சட்ட சத்தியாக்கிரகத்தை ஒடுக்கப் பாஞ்சாலத்தில் ஜாலியன்வாலாபாக் படுகொலையும் மற்றும் பல அக்கிரமங்களும்

செய்யப்படவே, சட்டசபைகளைக் காங்கிரஸ் பகிஷ்கரித்தது. அப்பொழுது சென்னையில் ஜஸ்டிஸ் கட்சி, உத்தரப் பிரதேசத்தில் ஜமீன்தார் கட்சி—இவைபோன்ற மற்றப் பிற்போக்கான கட்சிகளும் தோன்றி, பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து, அவைகளின் தலைவர்கள் மந்திரி பதவி ஏற்றனர்.

1935-ல் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் ஒரு புதிய அரசியல் திட்டத்தை நிறைவேற்றியது. அதன்படி மாகாணங்களில் ஏறக் குறைய பூரண பொறுப்பாட்சியும், மத்திய அரசாங்கத்தில் சில நிபந் தனைகளுக்குட்பட்டுப் பொறுப்பாட்சியும் அளிக்க ஏற்பாடாயிற்று. மாகாண சட்டசபைகளுக்கு 1936-ல் தேர்தல்கள் நடைபெற்றன. அதில் காங்கிரஸ் போட்டியிட்டுப் பல மாகாணங்களில் பெரும் பான்மையான கட்சியாயிற்று. சில மாகாணங்களில் முஸ்லீம் லீக் கணிசமான பிரதிநிதித்துவம் பெற்றது. மற்றச் சில்லறைக் கட்சி களுக்கு வாக்காளர் ஆதரவளிக்கவில்லை. அக்காலம் முதற் கொண்டு 1947 வரையில் காங்கிரஸ், முஸ்லீம் லீக் இரண்டுமே முக்கிய அரசியல் கட்சிகளாக இருந்தன.

இரண்டாவது யுத்தம் முடிந்து, பிரிட்டனில் தொழிற் கட்சி மந்திரிசபை அமைக்கப்பட்டதும், பாரதத்திற்குச் சுதந்திரமளிக்க நிச்சயிக்கப்பட்டது. முதலில் காங்கிரஸ், முஸ்லீம் லீக் இரண்டும் சேர்ந்து, ஒரு 'பாரத சுதந்திர அரசாங்கம்' ஏற்படுத்த பிரிட்டிஷ் பிரதிநிதிகள் முயன்றனர். ஆனால், நாட்டைப் பிரித்து முஸ்லீம் கள் பெரும்பாலராக இருந்த பிரதேசங்களை ஒரு தனி இராச்சிய மாகச் செய்யவேண்டுமென்று முஸ்லீம் லீக் பிடிவாதம் செய்ததால், வேறு வழியின்றி எல்லைப்புற மாகாணம், சிந்துப் பிரதேசம், வடக்குப் பஞ்சாப், கிழக்கு வங்காளம் பிரிக்கப்பட்டு, 'பாகிஸ்தான்' என்ற பெயருடன் தனி நாடாக்கப்பட்டது.

மீதியுள்ள பாரதத்தில் சுதேச சமஸ்தானங்களனைத்தையும் ஒன்றுகூட்டப் பாரதம் ஒரு சுதந்திர நாடாகி, அரசியல் நிர்ணய சபைமூலம் சுதந்திர இந்திய அரசியல் திட்டம் உருவாகி, 1950 ஜனவரி 26ஆம் தேதி அமலாக்கப்பட்டு, அதன்கீழ் 1952-ல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அப்பொழுது காங்கிரஸ் ஒன்றே முக்கிய அரசியல் ஸ்தாபனமாகவும் பொதுவுடைமைக் கட்சியே அதன் எதிர்க்கட்சியாகவுமிருந்தன. காங்கிரசிலிருந்து அபிப் பிராய பேதத்தால் விலகிய ஆசார்ய கிருபலானி, ஜெயப்பிரகாச நாராயணன் முதலியோர் தனிக்கட்சி ஸ்தாபித்து, அது 1957ஆம் தேர்தலில் சில தொகுதிகளில் வெற்றிபெற்றது. சென்னையில் திராவிட முன்னேற்றக் கட்சி, ஒரிசாவில் கணதந்திரக் கட்சிகள்

தோன்றி அத் தேர்தலில் பங்கெடுத்துக்கொண்டன. ஜனசங்க, பொதுவுடைமைக் கட்சிகளும் சில இடங்களில் போட்டியிட்டன. எதிர்க் கட்சிகள் பிரிந்து, தமக்குள் போட்டியிட்டதாலும், ஜவஹர்லால் நேருவின் தலைமையில் காங்கிரஸ் ஒன்றுபட்டிருந்ததாலும், மத்திய அரசாங்கத்திலும், எல்லா இராச்சியங்களிலும் காங்கிரஸ் கட்சியே மந்திரி சபை அமைத்தது. 1962 பொதுத் தேர்தலில் காங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் (பொதுவுடைமை) ஆக மூன்று அகில இந்தியக் கட்சிகளும், ஜனசங்கம், சோஷலிஸ்ட், சுதந்திரா, இந்துமகாசபா, இராமராச்சிய பரிஷத், குடியரசு, ஜார்கண்டு, முஸ்லீம் லீக், திராவிட முன்னேற்றக் கழகம், குடியானவர், தொழிலாளி, கண தந்திரபரிஷத், அகாலி தளம், ஃபார்வர்ட் பிளாக் என்ற 12 இதர கட்சிகள் ஒன்று அல்லது சில இராச்சியங்களிலும் போட்டியிட்டன.

இப்பொழுது அகில இந்தியக் கட்சிகளில் காங்கிரஸ், சுதந்திரா, ஜனசங்க, சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட், திராவிட முன்னேற்றக் கழகங்களே முக்கிய அரசியல் கட்சிகளாக இருக்கின்றன. பல இராச்சியங்களில் காங்கிரஸ் கட்சி பிளவுபட்டு, பிரிந்தவர்கள் ஒரு புது ஜனகாங்கிரஸ் கட்சியை அமைத்திருக்கின்றனர். அதன் பலம் வருகிற 1967 தேர்தலில்தான் புலப்படும்.

பிரிட்டன், அமெரிக்க அரசியல்கள் திறம்பட நடைபெறுவதற்கு இரண்டு பெருங் கட்சிகள் போட்டியிட்டு, மாறிமாறி அரசியல் நிர்வாகத்தை வகிப்பதே முக்கியக் காரணமாகும். இந்திய அரசியலில் அவ்வாறு இரு கட்சிப் பிரதானியம் சமீபத்தில் ஏற்படாது என்று தோன்றுகிறது. இக் காரணத்தால் காங்கிரஸ் ஆட்சியே தொடர்ந்து நீண்டுவரவேண்டுமென்று காங்கிரஸ் தலைவர்கள் வாதிக்கின்றனர். ஆனால், 20 ஆண்டுகளாகக் காங்கிரஸ் நடத்திவந்திருக்கும் ஆட்சியில் பல கோளாறுகள் ஏற்பட்டு, மக்களிடம் பெரும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. பல இராச்சியங்களில் காங்கிரஸ் கட்சி மிகவும் பிளவுபட்டிருக்கிறது. ஆதலால், எக் கட்சியும் பெரும்பான்மையில்லாமல், பல சிறுபான்மைக் கட்சிகள் கூட்டு அரசாங்கம் அமைக்கும் நிலைமை ஏற்படும்போலிருக்கிறது. அது சீக்கிரம் மாறி, இரு கட்சிப் பிரதானியம் உண்டானால், மக்கள் ஆட்சி நன்கு நடைபெறும்; இல்லையேல், அரசாங்கம் அடிக்கடி மாறிக் குழப்பம் ஏற்படக் கூடும்.

சுதந்திரப் போரின் சமயத்தில் மிகவும் கட்டுப்பாடுள்ள அரசியல் ஸ்தாபனம் தேவையாக இருந்தது. முதலில் காங்கிரஸ்

ஒரு கட்டுப்பாடில்லாத கட்சியாக இருந்தது. ஜில்லா, மாகாணக் கிளைகள் சுதந்திரமாக இருந்தன, வருஷாந்தர காங்கிரஸ் மகா நாட்டில் குறிப்பிட்ட சந்தா கொடுக்கும் எவரும் பிரதிநிதியாகலாம். இவற்றையெல்லாம் மாற்றி, காந்தியடிகள் 1920-ல் அதைக் கட்டுப் பாடுள்ள ஸ்தாபனமாக மாற்றினர். கிராமக் கமிட்டி, தாலுக்கா ஜில்லாக் கமிட்டிகள், மாகாண அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கள் எனப் படிப்படியாக அமைக்கப்பட்டன. ஒவ்வொரு தரத்தி லிருந்தும் மேல்கமிட்டிகளுக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பின்னர் மாகாணக் கமிட்டிக்குக் காங்கிரஸ் அங்கத்தினர் கள் நேரில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் காங்கிரஸ் மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளானுர்கள். மாகாணக்கமிட்டிகள் அகில இந்தியக்கமிட்டிக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தன. அகில இந்திய, மாகாணக் கமிட்டிகளுக்குக் காரியக் கமிட்டிகளும் அமைக்கப்பட்டன. அகில இந்தியக் கமிட்டிகளின் முடிவை மாகாணக் கமிட்டிகள் ஏற்கவேண்டும். மாகாணக் கமிட்டிகளின் தீர்மானங்களை ஜில்லா, தாலுகா, கிராமக் கமிட்டிகள் ஏற்று நிறை வேற்றவேண்டும் என்ற நியமங்கள் ஏற்பட்டன.

சுதந்திரத்திற்குப்பின் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் முக்கிய வேலை பார்லிமெண்டு, இராச்சிய சட்டசபைகளுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்து, தேர்தலை நடத்தி வெற்றி பெறுவதாயிற்று. கிராம, தாலுகா கமிட்டிகள் வலுவிழந்தன. அதிகாரங்கள் அகில இந்தியக் கமிட்டிகளிலும், ஓரளவு மாகாண (பிரதேசக்) கமிட்டிகளிலும் குவிந்தன. இதனுல், காங்கிரஸ் தலைவரும், அகில இந்திய காரியக் கமிட்டியும், பிரதேச காரியக் கமிட்டிகளுமே அரசியல் கட்சியின் முக்கிய அம்சங்களாகிவிட்டன.

இக் காரணத்தால், மத்திய மந்திரிசபைக்கும் அகில இந்திய காரியக் கமிட்டிக்கும், அதேபோல் இராச்சிய மந்திரி சபைகளுக்கும் பிரதேசக் காரியக் கமிட்டிகளுக்கும் போட்டியும் மனஸ்தாபமும் தோன்றின. ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தவரையில் அவர் மத்திய அரசாங்கம், காங்கிரஸ் ஸ்தாபனம் இரண்டிற்கும் தனித் தலைவராக இருந்தார். இராச்சியங்களில் மட்டுமே இந்த அதிகாரப், போட்டி பல சிக்கல்களைத் தோற்றுவித்தன. அவர் இறந்தபின் லால்பகதூர் சாஸ்திரியின் தேர்தலில் காங்கிரஸ் தலைவர்கள், இராச்சிய முதல் மந்திரிகள், பார்லிமெண்ட் அங்கத் தினர்கள் மூவருக்குள்ளும் போட்டியுண்டாகி, கடைசியில் எப் படியோ சமாளித்து, எதிர்ப்பின்றி அவரைப் பிரதமராக்கினர். அவர் திடீரென்று இறந்ததும், இப் போட்டி மிகவும் வலுத்து, முடிவில் பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் வாக்கால் முடிவுபெற்றது

உண்மையில் பிரதம மந்திரி பார்லிமெண்டின் காங்கிரஸ் கட்சித் தலைவர். அக் கட்சியின் அங்கத்தினர்களால் வெளியிலுள்ளோரின் நிர்ப்பந்தமின்றி அவர் தேர்ந்தெடுக்கப்படுவதே நியாயமாகும். இதுவே பிரிட்டிஷ் சம்பிரதாயம்.

இராச்சிய முதல் மந்திரிகளைக் காங்கிரஸ் காரியக் கமிட்டியோ, அதன் தலைவரோ நியமிப்பது வழக்கமாகிவந்திருக்கிறது. இது பிரிட்டிஷ் சம்பிரதாயங்களுக்கு விரோதமாகும்.

வெளியிலிருக்கும் கட்சித் தலைவர்கள் அரசாங்கத்தில் தலையிடு வதும், ஆளுங் கட்சியைச் சேர்ந்த மத்திய, இராச்சிய சட்டசபை அங்கத்தினர்கள் அதிகாரிகளை நிர்ப்பந்திப்பதும் ஜனநாயகத்தைக் குலைக்கும் வழக்கங்கள். துரதிர்ஷ்டவசமாக நம் நாட்டில் அவை காணப்படுகின்றன.

அதிகாரம் உச்சத்திலிருந்து படிப்படியாகக் கீழிறங்கும் நியமங்களை கம்யூனிஸ்ட் முதலிய மற்றக் கட்சிகளும் அனுசரிக்கின் றன. சிறிது காலம் கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சியார் ஆட்சி செய்த காலத்தில் அக் கட்சியின் உயர் அதிகாரிகள் அம் மந்திரி சபைக்கு உத்தரவிட்டதாகவும், அக் கட்சியின் சட்டசபை மெம்பர் கள் ஜில்லா கலெக்டர் முதலிய அதிகாரிகளையும் பல இடங்களில் நியாயாதிபதிகளையும்கூட நிர்ப்பந்தித்ததாகவும் பல குற்றச்சாட்டு கள் பத்திரிகைகளில் பிரசுரமாயின. முடிவில் அக் காரணத்தால் அந்த மந்திரி சபை விலக்கப்பட்டு, இராஷ்டிரபதியின் ஆட்சி சுமத்தப்பட்டது.

ஆதலால், இரு பெரிய அரசியல் கட்சிகள் தோன்றி, மந்திரி சபை அமைப்பதும் அரசாங்கத்தை நடத்துவதும் சட்டசபைக் கட்சியின் ஆதரவில் அதன் தனி உரிமையென்றும், வெளியி லிருக்கும் கமிட்டிகளும் தலைவர்களும் அரசாங்கத்தில் தலையிடக் கூடாதென்ற சம்பிரதாயம் உறுதியாகும் வரையில் பாரத ஜனநாய கத்தில் பலவிதக் கோளாறுகள் ஏற்படுமென்றும் தோன்றுகின்றன.

# 29. தேர்தல்

இக் காலத்திய மக்கள் ஆட்சிக்குப் பொதுத் தேர்தல்களே அஸ்திவாரமாகும். எல்லாச் சட்டசபைகளும் இதர பிரதிநிதி சபைகளும், ஒரு காலவரைக்குப் பின் கலைந்து, மீண்டும் பொது மக்களின் வாக்கால் புதுப்பிக்கப்படும்.

தேர்தல் முறைகள் பலவிதமாக இருக்கின்றன. ஒரு தொகுதிக்கு ஒரு பிரதிநிதி இருக்கலாம். பல பிரதிநிதிகளும் இருக்கக் கூடும். பல பிரதிநிதிகள் இருக்கும்பொழுது வாக்களிக்கும் விதங்களும் பலவாக இருக்கும். ஒரே வாக்கு, பிரதிநிதிகள் கணக்குப்படி வாக்குகள், ஒரே வாக்கைப் பல அபேட்சகர்களுக்கு வரிசையாகக் கொடுத்து, முதல் அபேட்சகருக்குத் தேவைக்கு அதிக வாக்குகள் கிடைத்தால், அதிகப்படியாக வாக்குகளை இரண்டாவது அபேட்சகர்களுக்கு மாற்றும் விதமும் நடைமுறையிலிருந்து வருகிறது.

வாக்களிப்பது வெளிப்படையாகவோ அல்லது இரகசியமாகவோ இருக்கலாம். அமெரிக்காவில் முற்காலத்தில் வாக்குரிமை வெளிப்படையாகவே கொடுக்கப்பட்டது. ஆனால், அப்படிக் கொடுப்பதில் அபேட்சகர்களின் நிர்ப்பந்தங்களும் மனஸ்தாபங்களும் ஏற்படுவதால், அது அநேகமாக எங்கும் கைவிடப்பட்டு, இரகசிய வாக்களிப்பு முறையே வழங்கிவருகிறது.

நாம் ஆராயும் மூன்று அரசியல்களிலும் மத்திய, இராச்சிய, மக்கள் சபைகளின் தேர்தல்களில் அடியிற்கண்ட அம்சங்கள் பொதுவாக இருக்கின்றன :

1. 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்பெண் அனைவருக்கும் வாக்கு.
2. தேர்தலுக்குச் சில காலத்திற்குமுன் வாக்காளர் பட்டியல் உறுதியாக்கப்பட்டு, அதில் பதியப்பட்டவர்களே தேர்தலில் பங்கெடுக்கலாம்.

3. ஒரு பிரதிநிதிக்கு ஒரு தனித் தொகுதி; முதல் இரண்டு தேர்தல்களிலும் பாரதத்தில் பல இரட்டைத் தொகுதிகளும், சில மூன்று பிரதிநிதித் தொகுதிகளுமிருந்தன. பிரிட்டனிலும் சில இரட்டைத் தொகுதிகள் இருந்தன. ஆனால், எல்லாத் தொகுதிகளும் இப்பொழுது தனிப் பிரதிநிதித் தொகுதிகளாக இருக்கின்றன.

4. வாக்காளர்கள் குறிப்பிட்ட தினத்தில் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் நேரில் சென்று, இரகசியமாக வாக்குச் சீட்டைப் பூர்த்திசெய்து, ஓட்டுப் பெட்டிகளில் போட வேண்டும். சைனியம், வெளிநாட்டுத் தூதரகம்போன்ற பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தபால்மூலமாகவோ அல்லது வேறு நபர்மூலமாகவோ வாக்களிக்க வசதிகளுண்டு.

5. வாக்குகளை எண்ணிப் பெரும்பான்மையான வாக்காளர்களின் ஆதரவு பெற்றவர் பிரதிநிதியாகக் கருதப்படுவார்.

இவ்வரசியல்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளையும் கவனிப்போம். பிரிட்டனில் தனி அரசாட்சி இருப்பதால், பார்லிமென்டின் மக்கள் சபை ஒன்றுக்கே தேர்தல் நடைபெறும். ஒரு தேர்தலுக்குப் பின் அச் சபையின் காலம் 5 ஆண்டுகளே. அக் கால இறுதியில் அச் சபை அதிகாரமிழந்துவிடும். ஆனால், அது முன்னதாகவே கலைக்கப்படலாம். 1959, 1964 பொதுத் தேர்தல்களின் விவரங்கள் பின்வருமாறு :

| கட்சிகள் | ஆதரித்த வாக்காளர் எண்ணிக்கை (இலட்சம்) | சதவிகிதம் | தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1959 | | | |
| தொழிற் கட்சி | 122 | 43·8 | 258 |
| கன்செர்வடிவ் | 138 | 49·4 | 365 |
| லிபரல் | 16 | 5·9 | 6 |
| தனி நபர்கள் | 3 | ·9 | 1 |
| 1964 | | | |
| தொழிற் கட்சி | 122 | 44·1 | 317 |
| கன்செர்வெடிவ் | 120 | 43·4 | 303 |
| லிபரல் | 31 | 11·2 | 9 |
| தனி நபர்கள் | 4 | 1·3 | 1 |

இத் தனித் தொகுதி முறையில் வாக்குகளின் ஈவுப்படி பிரதிநிதித்துவமிராது. எல்லாத் தொகுதிகளிலும் ஒரு கட்சி 51%, எதிர்க்கட்சி 49% பெற்ருல், மொத்த வாக்குகளிலும் இதே 51%, 49% ஈவாகும். ஆனால், ஒரு கட்சிக்கே எல்லாப் பிரதிநிதித்துவமும் போய்ச் சேரும். எதிர்க்கட்சிக்கு ஒரு பிரதிநிதிகூட இருக்க மாட்டார். இக் காரணத்தைக்கொண்டு இந்த முறையைப் பல அரசியல் பண்டிதர்கள் எதிர்க்கின்றனர். வாக்குகளின் ஈவுகளுக்குச் சரிசமமாகப் பிரதிநிதித்துவம் அளிக்கும் பல முறைகளிருக்கின்றன. ஆனால், வாக்கெடுப்பதிலும் முடிவு கூறுவதிலும் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அம்முறைகளில் பல சில்லறைக் கட்சிகள் தோன்றி அரசியலில் குழப்பமுண்டாக்க வசதிகள் அளிக்கப்படுகின்றன.

இந்தத் தேர்தல்களை அரசாங்கத்தின் மேற்பார்வையில் ஆங்காங்குள்ள ஸ்தலஸ்தாபன அதிகாரிகள் நடத்துகின்றனர். ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தல்களும் இம் முறையிலேயே நடைபெறுகின்றன. அங்கும் அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. ஆனால், அந்தந்த நகரம் அல்லது பிரதேசத்தின் நலன்களையே நாடும் பல ஸ்தாபனங்களும் அத் தேர்தல்களில் கலந்துகொள்ளுகின்றன. சாதாரணமாக ஸ்தல சபைகளின் காலம் மூன்று வருஷங்களே. பார்லிமென்ட் ஸ்தலஸ்தாபனத் தேர்தல்கள் வெவ்வேறு காலங்களில் நடைபெறுகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மத்திய, இராச்சிய, ஸ்தலஸ்தாபனத் தேர்தல்கள் அனைத்தும் ஒரே தினத்தில் நடைபெறுகின்றன. சில தேர்தல்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையும், மற்றத் தேர்தல்கள் இரண்டு வருஷத்திற்குப் பின்னரும் நடைபெறுகின்றன. பிரசிடென்ட், உப பிரசிடென்ட், பல கவர்னர்கள், உப கவர்னர்கள் நான்கு வருஷம் பதவி வகிக்கின்றனர். மத்தியப் பிரதிநிதிகள் சபை, பல இராச்சியப் பிரதிநிதிகள் சபைகள், செனேட்டின் மூன்றில் ஒரு பாகம், இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இத் தேர்தல்கள் இரட்டைப் படை ஆண்டுகளின் நவம்பர் 3ஆம் தேதி நடைபெறுகின்றன. ஒரு நீண்ட பத்திரத்தில் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளும், ஒவ்வொரு பதவிக்கும் போட்டியிடும் அபேட்சகர்களும் அச்சிடப்பட்டிருக்கும். அதில் வாக்காளர் தமது விருப்பத்தைக் குறிமூலம் குறிப்பிட்டுப் பெட்டியில் போடவேண்டும். பல இராச்சியங்களில் வாக்கெடுக்கும் இயந்திரங்கள்மூலம் வாக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. அதே இயந்திரங்கள் வாக்குகளை எண்ணிவிடுகின்றன. 1960 தேர்தலில் 688 இலட்சம் வாக்காளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர்.

அமெரிக்கத் தேர்தல்களில் மற்றொரு புதிய முறை பல இராச்சியங்களில் கையாளப்படுகிறது. வாக்காளர் பட்டியலில் ஓட்டர்கள் கட்சி குறிக்கப்படும். எந்தக் கட்சியிலும் சேராத வாக்காளர்களுமிருக்கலாம். ஒரே தொகுதியில் ஒரே கட்சியைச் சேர்ந்த பல அபேட்சகர்கள் போட்டிபோட விரும்பினுல், அவர்களுக்குள் ஒரு பூர்வாங்கத் தேர்தல் (பிரைமரி எலெக்ஷன்) நடத்தப்படும். அத் தேர்தலில் அதிக வாக்குகள் பெறுகிறவரே அக் கட்சியின் சார்பில் அபேட்சகராக நிற்கலாம். இம் முறையில் பெரும்பாலான தொகுதிகளில் முடிவில் ஒரு குடியரசுக் கட்சி அபேட்சகர், எதிராக ஒரு ஜனநாயகக் கட்சி அபேட்சகர் போட்டியிட்டுப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

பிரிட்டன், அமெரிக்கா இவ் இரண்டிலும், சட்டமன்றங்களே தமது அங்கத்தினர்களின் தேர்தல்களைப்பற்றிய புகார்களை ஆராய்ந்து முடிவுசெய்கின்றன.

பாரதத் தேர்தல்களும் முக்கிய அம்சங்களில் மேற்கூறிய நாடுகளைப்போலிருந்தாலும் சில வேற்றுமைகள் உண்டு. எல்லாத் தேர்தல்களும் அரசியல் திட்டத்தின்படி நியமிக்கப்பட்ட தேர்தல் கமிஷன்மூலம் நடைபெறுகின்றன. வாக்காளர் பட்டியல் தயார் செய்வது, அபேட்சகர்களின் நியமனம், தேர்தல் தேதி, தேர்தல் நடத்தும் அதிகாரிகள், வாக்கெடுப்பு எண்ணிக்கை முடிவு கூறுதல், கட்சிகளை அங்கீகரித்து அவற்றிற்குச் சின்னம் வழங்குதல் அனைத்தும் அவரது உத்தரவுப்படியே நடைபெறுகின்றன. அவருக்கு வேண்டிய அதிகாரிகளையும் வசதிகளையும் அளிப்பது மத்திய, இராஜ்ய அரசாங்கங்களின் கடமை என்று அரசியல் சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையில் தேர்தல் புகார்களை ஆராய விசாரணை அதிகாரிகளை நியமிப்பது அவரது பொறுப்பாக இருந்தது. சமீபத்தில் இராஜ்ய உயர்தர நீதிமன்றங்களே விசாரிக்கவேண்டும் என்று சட்டமியற்றப்பட்டது.

ஹரிஜனங்கள், மலைப்பிரதேசத்து ஆதிவாசிகள்—இவர்களுக்கு பாரதத்தில் தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில தொகுதிகள் ஒதுக்கப்பட்டு, இக் கூட்டங்களைச் சேர்ந்தவர்களே அபேட்சகர்களாக நிற்க உரிமையுண்டு. ஆனுல், எல்லா வாக்காளர்களும் பங்கெடுத்துக்கொள்ளலாம்.

1962 பொதுத் தேர்தலில் 2,182 இலட்சம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். 16 அரசியல் கட்சிகள் போட்டி

யிட்டன. மொத்தம் 2,38,031 வாக்கெடுக்கும் சாவடிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. பார்லிமென்டின் மக்கள் சபைக்கு 1,985 அபேட்சகர்களும், இராஜ்ய அசெம்பளிகளுக்கு 12,646 அபேட்சகர்களும் போட்டியிட்டனர். மக்கள் சபைக்கு மூவரும், அசெம்பளிகளுக்கு 13 பேர்களுமே போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களனைவரும் காங்கிரஸ் பிரதிநிதிகள்.

லோகசபைத் தேர்தலில் கட்சிகள் வெற்றிபெற்ற ஸ்தானங்கள் பின்வருமாறு:

காங்கிரஸ் 361; கம்யூனிஸ்ட் 29; சுதந்திரா 22; ஜனசங்கம் 14; பிரஜா சோஷலிஸ்ட் 12; திராவிட முன்னேற்றக் கழகம் 7; சோஷலிஸ்ட் 6; இதர சில்லறைக் கட்சிகள் 23; தனிநபர்கள் 20; மொத்தம் 494.

இராஜ்ய அசெம்பிளிகளில் மொத்தம் 2,842 ஸ்தானங்கள்; அதில் காங்கிரசுக்கு 1,759, சுதந்திரா 166, கம்யூனிஸ்ட் 153, பிரஜாசோஷலிஸ்ட் 149, ஜனசங்கம் 116, சோஷலிஸ்ட் 59, திராவிட முன்னேற்றக் கழகம் 50, இதர கட்சிகள் 144, தனி நபர்கள் 246. மக்கள் சபை அபேட்சகர்களில் 6-ல் ஒரு பங்கு வாக்குகள் பெருமல் டெபாசிட் தொகைகளை இழந்தவர்கள் 856, இராஜ்ய அசெம்பிளி அபேட்சகர்களில் 6,337பேர்கள். அதாவது, மொத்தத்தில் பாதிப்பேர்களுக்கு அதிகமானவர்கள் தொகை இழந்தனர். இதில் மக்கள் சபைக்கு எக் கட்சியையச் சேராமலும் தனியாகப் போட்டியிட்ட 480 அபேட்சகர்களில் 379 பேர்கள் வைப்புத் தொகைகளைப் பறிகொடுத்தனர்; அசெம்பிளிகளுக்கு நின்ற 3,888 நபர்களில் 3,074 பேர்கள் இழந்தனர்.

எல்லா அரசியல்களிலும் ஓர் அபேட்சகர் ஒரு தேர்தலில் செலவழிக்கக்கூடிய தொகைக்கு உச்சவரம்புண்டு. ஆனல், பிரிட்டன், அமெரிக்காவில் ஒரு குறிப்பிட்ட தேர்தல் அதிகாரி இல்லாததால், அத் தொகையை மீறியதாகக் குற்றஞ் சாட்டுபவரே அதை நிரூபிக்கவேண்டும். பாரதத்தில் தேர்தல் முடிந்து 30 நாள்களுக்குள் செலவு விவரங்களைத் தேர்தல் கமிஷனுக்கு எல்லா அபேட்சகர்களும் அனுப்பவேண்டும். மக்கள் சபை அபேட்சகர்கள் இராஜ்யங்களில் ரூ. 25,000 வரையிலும், ஐக்கியப் பிரதேசங்களில் ரூ. 10,000-மும் செலவழிக்கலாம். அசெம்பிளிகளுக்கு சென்னை, உத்தரப் பிரதேசங்களில் ரூ. 9,000; பீகார், குஜராத், மகாராஷ்டிரங்களில் ரூ. 8,000; ஆந்திரப் பிரதேசம், கேரளம், மத்தியப் பிரதேசம், ஒரிசா, பஞ்சாப், மேற்கு வங்காளங்களில் ரூ. 7,000; இதர இராஜ்யங்களில் ரூ. 6,000 உச்ச வரம்புகள்

ஆகும். இந்த நியமங்கள் அனுசரிக்கப்படுவதில்லை. அபேட்சகர் தமது கட்சிமூலமோ இதர சங்கங்கள்மூலமோ செலவழிக்கும் தொகைகள் கணக்கில் சேர்க்கப்படுவதில்லை. வரம்புக்குமேல் செலவழிந்த தொகைகளைக் கணக்கில் காட்டாவிட்டால், அதைக் கண்டுபிடிப்பதும் சாத்தியமில்லை.

மக்கள் சபைத் தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து 46 மனுக்களும், அசெம்பிளி தேர்தல்களைப்பற்றி 298 மனுக்களும் கொடுக்கப் பட்டன. இவைகளுக்குத் தனி விசாரணை அதிகாரிகள் நியமித்து, நீண்ட விவகாரங்கள் நடப்பது இந்தியத் தேர்தல் முறையின் பெருங் குறையாக இருந்தது. சில வழக்குகள் அடுத்த தேர்தல் வரையில் முடிவு பெருமலும் இருப்பதுண்டு. இனி, இராஜ்ய உயர்நீதிமன்றங்கள் 6 மாதங்களுக்குள் விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டும்.

## அரசியல் பிரசாரம்

மக்கள் ஆட்சிக்கு அரசியல் பிரசாரம் பிராணவாயு போன்றது. இக் காலத்தில் எதேச்சாதிகாரங்களுக்கும் பிரசாரம் அவசியமே. ஆனால், அந் நாடுகளில் பிரசாரம் மக்களின் அறிவை வளர்த்து, அரசியல் பிரச்சினைகளில் தங்கள் வாக்குமூலம் பங்கெடுத்துக்கொள் வதற்கல்ல. எதேச்சாதிகாரிகளின் பெருமைகளையும் அவர்களை எதிர்ப்போரின் இழிவான தன்மைகளையும் ஓயாமல் அளவில்லாமல் மிகைப்படுத்தி, மக்களின் மனத்தைத் தமது வழியில் பக்குவப் படுத்துவதே பிரசாரத்தின் நோக்கமாகும்.

மக்கள் ஆட்சிக்குப் பேச்சு, கட்சி சேர்த்தல், பிரசாரம் இவை களில் பூரண சுதந்திரம் அடிப்படையானவை என்று இந் நூலின் ஆரம்பத்திலேயே விளக்கப்பட்டது. ஆளுங் கட்சியின் கொள்கை களையும் செயல்களையும் எதிர்க்கட்சிகள் இடைவிடாமல் எதிர்த்தும் குறைகூறியும், மக்களின் மனத்தில் சந்தேகங்களையும் அதிருப்தி யையும் எழுப்புகின்றன. ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவற்றை விளக்க எதிர்வாதங்களின் தவறுகளை எடுத்துக்காட்டி, தமது கட்சியின் சாதனைகளை விளம்பரம் செய்கின்றனர். மக்கள் ஆட்சியின் ஆரம்பத்தில் மக்கள் இவ்விதப் பிரசாரங்களால் மனக் குழப்பமடைவது இயற்கையே. ஆனால், படிப்படியாக இவ் வாதங் களின் தராதரங்களைச் சீர்தூக்க சக்தி பெறுகின்றனர். ஆளுங் கட்சி அரசாங்கத்தைக் கூடியவரையில் திறமையாக நடத்திவந்தால் அதைப் பெரும்பாலர் ஆதரிக்கின்றனர்; இல்லாவிடில், அதை நிரா கரித்து எதிர்க்கட்சிகளுக்கு அவர்கள் திறனைக் காட்டுவதற்கு

அவகாசம் அளிக்கின்றனர். இரண்டாவது யுத்த முடிவில் மிகப் பெரிய வெற்றிக்கு முக்கியத் தலைவராக இருந்த சர்ச்சில் தமக்கும் தமது கன்செர்வடிவ் கட்சிக்கும் பிரிட்டிஷ் மக்கள் பேராதரவு கிடைக்குமென்று பார்லிமென்டைக் கலைத்தார். ஆனால், பிரிட்டிஷ் மக்கள் தொழிற் கட்சிக்கே பெரும்பான்மையான வாக்குகள் கொடுத்து அதை ஆட்சி செய்யக் கட்டளையிட்டனர். சர்ச்சிலின் சேவையை அவர்கள் மறக்கவில்லை. ஆனால், அவர் யுத்தப் பிரியர். ஜெர்மனி தோற்றபின் ருஷியாவுடன் போர் ஆரம்பித்துவிடு வாரோ என்ற பயம். அதனோடு யுத்த காலத்தில் தொழிலாளர் களுக்கும் சாதாரண மக்களுக்கும் பல வசதிகள் செய்யப்பட்டு, முதலாளிகளின்மீது கடுமையான வரிகள் சுமத்தப்பட்டிருந்தன. கன்செர்வடிவ் கட்சி மீண்டும் அதிகாரம் பெற்றால் இவ் வசதிகள் குறைந்துவிடுமோ என்று பயந்தனர். அதற்கு இடங்கொடுக்காமல் தொழிற் கட்சியை ஆதரித்தனர். அதனால், இந்தியாவுக்கும் சிலோன், பர்மா முதலிய நாடுகளுக்கும் சுதந்திரம் சமாதான முறையில் கிடைத்தது. பிரிட்டிஷ் மக்களுக்குச் சமூகப் பாது காப்பும், எஃகு, இரயில் முதலிய தொழில்களில் பொதுவுடைமையும் கிடைத்தன. எல்லாத் தொழில்களையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டால் குழப்பமும் நஷ்டமும் ஏற்படும் என்று எதிர்க் கட்சி நிரூபிக்கவே, அடுத்த தேர்தலில் கன்செர்வேடிவ்களுக்குப் பெரும் பான்மை கிடைத்தது. தொழிற் கட்சி செய்த பெருஞ் சீர்திருத்தங் களை அது ரத்து செய்யவில்லை. முற்போக்கைச் சற்று நிதானப் படுத்தி நிலைமையை வலுவாக்கிற்று.

அவ்வாறே 1928–1932-ல் ஏற்பட்ட கொடிய பொருளாதார மந்தத்தை அப்பொழுது ஆட்சி செய்த குடியரசுக் கட்சி சமாளிக்க முடியவில்லை என்பதற்காக ரூஸ்வெல்ட் தலைமையில் அமெரிக்க வாக்காளர்கள் ஜனநாயகக் கட்சியை ஆட்சியில் அமர்த்தினர். மிகவும் முற்போக்கான கொள்கைகளைக் கடைப்பிடித்துப் பொருளா தார மந்தத்தைப் போக்கியதுமன்றி, அதன் பெருஞ் செல்வப் பெருக்குக்கு ரூஸ்வெல்ட் வழிகோலினார்.

இவ்விதம் மக்களின் நம்பிக்கை வளர்வதும் குறைவதும். கட்சிகள் மாறி மாறி அரசாங்கத்தை நடத்துவதுமே மக்கள் ஆட்சியின் முக்கியச் சிறப்பு. எதேச்சாதிகாரத்தை பலாத்காரப் புரட்சியால் மட்டுமே மாற்றக்கூடும். ஒரு தவறான மக்கள் ஆட்சியைப் பிரசாரத்தால் மாற்றிவிடலாம்.

பிரசாரத்திற்கு முக்கிய கருவி பத்திரிகை. பேச்சுச் சுதந்திரத்தில் பத்திரிகைச் சுதந்திரமும் அடங்கியிருக்கிறது. பலாத்காரத்தைத்

தூண்டாமலும், எதிரிகளுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்காமலும் எவ்வித அபிப்பிராயத்தையும் பத்திரிகை வெளியிடலாம், ஆதரிக் கலாம் என்பது எல்லா மக்கள் ஆட்சிக்கும் பொதுவான கொள்கை.

அமெரிக்காவைத் தவிர, மற்ற எல்லா நாடுகளையும்விட பிரிட்டனில் நபர்வாரிப் பத்திரிகைகள் அதிகம். 100 நபருக்கு 50 தினசரிப் பத்திரிகைகளின் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. 5 தினசரி காலைப் பத்திரிகைகளும், 5 ஞாயிற்றுக் கிழமை வாரப் பத்திரிகைகளும் 10 இலட்சத்திற்குமேல் பிரதிகள் விற்பனை யாகின்றன. மொத்தம் 131 தினசரிகளும் 1,200 வாரப்பத்திரிகை களும் பிரிட்டனில் எல்லாப் பாகங்களிலிருந்தும் பிரசுரிக்கப்படு கின்றன. இவற்றுள் சில கன்செர்வெடிவ் கட்சியையும், சில தொழிற் கட்சியையும் ஆதரித்தபோதிலும், அவை அக் கட்சிகளின் சொத்தல்ல. பெரும் பிரச்சினைகளில் சொந்த அபிப்பிராயங்களைக் கூறுகின்றன. பல பத்திரிகைகள் கட்சிச் சார்பின்றி எப்பொழுதும் நடுநிலைமை வகித்துப் பிரச்சினைகளைப் புத்திபூர்வமாக ஆராய் கின்றன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பிரிட்டனைவிடப் பத்திரிகைகள் பன்மடங்கு. ஒவ்வொரு பத்திரிகையின் பிரதிகளின் பக்கங்களும் அதிகம். ஒவ்வொரு நபருக்கும் தினசரிப் பத்திரிகையும் 3 இதர வார, மாதப் பத்திரிகைகளும் பிரசுரிக்கப்படுகின்றன. நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்கு நூற்றுக்கணக்கான பக்கங்கள். நபருக்கு வருஷத்திற்கு 36 கிலோ பத்திரிகைக் காகிதம் உபயோகிக்கப்படு கிறது. உலகில் உற்பத்தியாகும் காகிதத்தில் பாதிக்குமேல் அமெரிக்காவில் செலவாகிறது.

பரந்த நாடாகவும் ஐக்கிய அரசியலாகவுமிருப்பதால், பிரிட் டனைப்போல் வெகு சில கேந்திர நகரங்களிலேயே பெரும் அமெரிக்கப் பத்திரிகைகள் குவிந்திருக்கவில்லை. எல்லா இராச்சி யங்களிலும் அவை பிரசுரிக்கப்படுகின்றன. சிறிய நகரங்களில் கூட ஒன்றிரண்டு வாரப் பத்திரிகையாவது வெளிவருகின்றன. ஆங்கிலத்தில் 1,754 தினசரி, 8,151 வாரப் பத்திரிகைகள் பிரசுரமாகின்றன. 125 நாடெங்கும் படிக்கப்படும் வெளியீடுகள்; அவற்றுள் 47-க்கு 10 இலட்சத்திற்குமேல் வாசகர்கள்.

பிரிட்டிஷ், பாரதப் பத்திரிகைகளைப்போல் தினசரி, வாரப் பத்திரிகைகளில் அரசியல் செய்திகளுக்கு அதிக முக்கியத்துவ மில்லை. பலவித சமூக, விஞ்ஞான, கலாசாரச் செய்திகளுக்கும்,

கொலை, களவு, விவாக ரத்து போன்ற தீய சம்பவங்களுக்கும் அதிக இடமளிக்கப்படுகிறது. அதிகப் பக்கங்களிருப்பதே அதன் முக்கிய காரணமாகவிருக்கலாம்.

லைஃப், டைம், நியூஸ் வீக், ரீடர்ஸ் டைஜஸ்ட் போன்ற பத்திரிகைகள் இலட்சக் கணக்கில் உலகெங்கும் பரவியிருக்கின்றன. பல இடங்களிலிருந்தும் பிரசுரிக்கப்படுகின்றன.

சுதந்திரத்திற்கு முன் பாரதத்தில் பத்திரிகைத் தொழில் வளர்ச்சிக்குப் பல இடையூறுகள் இருந்தன. அன்னிய ஆட்சிக்கு மக்களிடம் எவ்விதப் பிரசாரமும் அபாயகரமாகத் தோன்றியது. மக்களில் பெரும்பாலோருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. கல்வி வளர்ச்சியில் அரசாங்கத்திற்கு அதிக அக்கறையில்லை. ஆங்கிலமே அரசியல் மொழியாக இருந்ததால் முதலில் ஆங்கிலப் பத்திரிகைகளே தோன்றின. அதன்பின் மிகவும் தயக்கத்துடன் வங்காளி, மராட்டி, தமிழ் முதலிய மொழிகளில் சிறிய பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டன. பத்திரிகைகளில் விளம்பரம் செய்தவர்கள் சிலரே; அவர்கள் ஆங்கிலப் பத்திரிகைகளிலேயே விளம்பரம் செய்தனர்.

பத்திரிகைகள் ரிஜிஸ்டிரார் நியமிக்கப்பட்டு அவரது முதல் அறிக்கை 1956-ல் வெளிவந்தது. அதற்குமுன் பத்திரிகைகளின் விவரம் சரிவரத் தெரியாது. அவ் அறிக்கையில் தினசரி, வார மாதப் பத்திரிகைகள் அனைத்தும்சேர்த்து 2,000 பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டு ,மொத்தம் 90 இலட்சம் பிரதிகள் வெளிவந்தன. 1965-ல் இவற்றின் எண்ணிக்கை 2 கோடியாகப் பெருகியிருப்பதிலிருந்து சுதந்தர இந்தியாவில் பத்திரிகைத் தொழில் வெகு தீவிரமாக வளர்ந்துவருகிறதென்று நிச்சயிக்கலாம்.

20 மொழிகளில் தினசரிகளும், மற்றப் பத்திரிகைகள் இவற்றைத் தவிர, வேறு 23 மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டன.

525 தினசரிகள், 49 வாரம் மும்முறை அல்லது இருமுறை பிரசுரங்கள், மற்ற வார மாதாந்திரப் பத்திரிகைகளையும் சேர்த்து 1965-ல் 7,906 பத்திரிகைகள் இருந்தன.

525 தினசரிப் பத்திரிகைகளில் ஹிந்தியில் 148; உருது 73; ஆங்கிலம் 56 ; மராட்டி 43 ; மலையாளம் 40 ; கன்னடம் 37 ; குஜராத்தி 32 ; தமிழ் 28 ; பஞ்சாபி 17 ; தெலுங்கு 12 ; வங்காளி 8 ; ஒரிசா 4 ; அஸாமிஸ் 1.

13 தினசரிப் பத்திரிகைகளுக்கு 1 இலட்சத்திற்கு அதிகமான பிரதிகள் வெளியிடப்பட்டன. எல்லாவற்றிலும் அதிகப் பிரதிகள் கொண்டது வங்காளி ஆனந்தபஜார் பத்திரிகை. அதற்கு வாசகர்கள் 1,74,014.

தினசரிப் பத்திரிகைகளில் டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை மாநகரங்களிலிருந்து 111-ம், இதர இராஜ்யத் தலைநகர்களிலிருந்து 229-ம், சிறிய நகரங்களிலிருந்து 91-ம் பிரசுரமாயின. 1964-ல் தினசரிகளின் மொத்தப் பிரதிகள் 60 இலட்சம். அதில் 15 இலட்சம் ஆங்கிலப் பத்திரிகைகள், 9 இலட்சம் ஹிந்தி, தமிழ் மலையாளம் 7 இலட்சம், மராத்தி 6 இலட்சம், குஜராத்தி 5 இலட்சம், உருது வங்காளி 3 இலட்சம், தெலுங்கு கன்னடம் 2 இலட்சம், இதர பத்திரிகைகள் 1 இலட்சத்திற்குக் குறைவு.

வார, மாதப் பத்திரிகைகளின் மொத்தப் பிரதிகள் 180 இலட்சம்; அதிலும் ஆங்கிலமே 44 இலட்சத்துடன் முதல் ஸ்தானம் வகித்தது. ஹிந்தி 37 இலட்சம்; தமிழ் 22 இலட்சம்; மலையாளம் 11 இலட்சம்; மராட்டி, குஜராத்தி, உருது, வங்காளி தலைக்கு 10 இலட்சம்.

இவ்வாறு எல்லா மொழிகளிலும், பத்திரிகைகளும் அவற்றின் வாசகர்களும் பெருகிவருகின்றனர். ஆயினும், அமெரிக்காவில் செலவழியும் காகிதத்தில் 100-ல் 1 பங்கே இந்தியாவில் உபயோகிக்கப்படுகிறது என்பதை எண்ணிக்கொண்டால் நமது பத்திரிகைத் தொழில் மிகவும் குறைவு என்பதில் சந்தேகமில்லை. இந் நாட்டில் ஒவ்வொரு பத்திரிகையும் 4, 5 பேர்களால் படிக்கப்படுகிறது. மேலும், அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளையே முக்கியமாகப் பிரசுரித்தும், விவாதித்தும் வருகின்றன. ஆதலால், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்தியப் பத்திரிகைகளின் செல்வாக்கு பிரிட்டன், அமெரிக்கப் பத்திரிகைகளின் செல்வாக்கிற்குக் குறைவில்லை என்று கூறலாம்.

40 வருஷங்களுக்கு முன் தந்திகள்மூலம் கிடைத்த செய்திகளையும், பார்லிமெண்டிலும் பொதுக்கூட்டங்களிலும் நடைபெறும் பிரசங்கங்களையும் பத்திரிகைமூலம் பிரசுரிப்பதே முக்கியப் பிரசார முறையாக இருந்தது. ஆனால், முதலில் வானொலியும், அதன் பின்னர் டெலிவிஷனும் (ரேடியோ படம்) மகத்தான பிரசாரக் கருவிகளாகி விட்டன. பிரிட்டனில் வானொலி பி.பி.ஸி. என்ற அரசாங்க ஸ்தாபனத்தால் பிரசுரிக்கப்படுகிறது. அது 1927-ல் பார்லிமென்டால் ஒரு பொது ஸ்தாபனமாகச் சட்டபூர்வமாக ஸ்தாபிக்கப்

பட்டது. வேறெவரும் அரசாங்க அனுமதி இன்றி வானொலிச் செய்தி அனுப்பக்கூடாது. வானொலிச் செய்திப் பெட்டிகளை வைத்துக் கொள்ளுவதற்கும் சந்தா கட்டி அனுமதி பெறவேண்டும். 1954-ல் டெலிவிஷன் சட்டம் செய்யப்பட்டு அதன்படி பி.பி.ஸி. இரண்டு டெலிவிஷன் சேவைகளை நடத்தவும், மற்றொரு சுதந்தர டெலிவிஷன் அதிகாரி மூன்றாவது சேவையை நடத்தவும் அதிகாரம் அளிக்கப்பட்டது. 1965-ல் பிரிட்டனில் 161 இலட்சம் ரேடியோப் பெட்டிகள் இருந்தன. அதாவது ஒரு குடும்பத்துக்கு ஒன்றாவது இருந்தது. அவற்றில் 134 இலட்சம் வானொலி, படம் இரண்டுக்கும் பொதுவான பெட்டிகள், மீதி வானொலிக்கு மட்டும் பிரயோசனமானது.

பி.பி.ஸி. நீண்ட மத்திம அலைகள் வாயிலாக 57 நிலையங்களிலிருந்தும் 46 சிற்றலைக்கூடங்களிலிருந்தும் வானொலிப் பிரசாரம் நடத்துகின்றது. 106 இடங்களிலிருந்து படப் பிரசாரம் நடைபெறுகிறது. அதன் சிப்பந்திகள் 22,000. 1965-ல் ரேடியோ டெலிவிஷன் பெட்டிச் சந்தாமூலம் 53 இலட்சம் பவுனும். பிரசுரங்கள் வாயிலாக 12 இலட்சமும் போதாமல் சர்க்கார் உதவி 94 இலட்சம் பவுன் பெற்றது. சர்க்கார் ஸ்தாபனமாக இருந்த போதிலும் பி.பி.ஸி. எவ்வித அரசியல் பட்சபாதமின்றி நடைபெற வேண்டுமென்பது அதன் சட்டத்தின் விதி. அதன்மூலம் அதிக அரசியல் கட்சிப் பிரசாரம் நடைபெறுவதில்லை.

சுதந்தர டெலிவிஷன் கம்பெனிக்கு எவ்வித சர்க்கார் உதவியுமில்லை. விளம்பரத்தால் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு அது இலாபகரமாக நடைபெறுகிறது.

பிரிட்டனில் குடும்பத்துக்கொரு ரேடியோ டெலிவிஷன் பெட்டி இருக்கிறது. அமெரிக்காவிலோ 1,000 நபருக்கு 986 பெட்டிகள் இருக்கின்றன. அதாவது. ஆண் பெண் குழந்தைகள் அனைவரும் தனித்தனியாகத் தமது அறைகளில் பெட்டி வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். வானொலியும் டெலிவிஷனும் தனியார் துறையில் கம்பெனிகளால் நடத்தப்படுகின்றன. விளம்பர வருமானத்தைக் கொண்டே நடைபெறுகின்றன. அவை ஐக்கியப் போக்குவரத்துக் கமிஷனிடமிருந்து அனுமதிச் சீட்டுப் பெறவேண்டும். பிரசார வசதிகளைத் தீய வழிகளால் உபயோகப்படுத்தாமலிருப்பதற்குக் கடுமையான நிபந்தனைகளிருக்கின்றன.

அமெரிக்காவில் அரசியல் பிரசாரம் வானொலி, டெலிவிஷன் மூலம் பெயரளவில் நடைபெறுகிறது. முக்கியமாகத் தேர்தல் காலங்

களில் இரண்டு பெரும் அரசியல் கட்சிகளும் கோடிக்கணக்கான டாலர் செலவில் டெலிவிஷன் கம்பெனிகள்மூலம் பிரசாரம் செய்கின்றன. ரேடியோ படத்தில் அபேட்சகர்கள் தோற்றம், குரல் முதலிய அம்சங்கள் வாக்காளர்களின் மனத்தைக் கவர்வதில் பயன்படுகின்றன.

பிரிட்டனில் ஆரம்பமான காலத்திலேயே இந்தியாவிலும் ஓர் இந்திய வானொலி பரப்பும் கம்பெனி தனியார் துறையில் ஏற்பட்டது. ஆனால், அது சீக்கிரம் கலைந்துவிட்டது. 1936-ல் அது ஓர் அரசாங்க ஸ்தாபனமாக அகில இந்திய ரேடியோ என்ற பெயரில் அமைக்கப்பட்டது. 1927-ல் 3,594 பெட்டிகளே அனுமதிச் சீட்டுப் பெற்றன. இது 1963-ல் 37 இலட்சமாகப் பெருகி இருப்பது மகிழ்ச்சிக்கிடமானது. ஆனால், இது 100 நபருக்கு ஒன்றுகூடக் கணக்காகவில்லை. அமெரிக்கா, பிரிட்டனோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மிகவும் குறைவாகவே தோன்றும்.

டெலிவிஷன் பாரதத்தின் தலைநகர் ஒன்றிலேயே ஒரு நிலையத்திலிருந்து சில குடும்பங்களுக்கே பயன்படுகிறது.

வானொலிப் பெட்டிகள் பெரும்பாலும் நகரங்களிலேயே இருக்கின்றன. சமூக வளர்ச்சித் திட்டத்தில் கிராமப் பஞ்சாயத்துகளுக்குப் பொதுச் செலவில் வாங்கிப் பொது இடத்தில் தினம் மாலையில் சில மணி நேரங்கள் மக்கள் கேட்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அகில இந்திய ரேடியோ நேரடியான அரசாங்க ஸ்தாபனமாதலால் மத்திய இராஜ்ய அரசாங்கங்களின் சாதனைகளையும், மந்திரிகள், அதிகாரிகள் இவர்களின் சொற்பொழிவுகளையுமே பெரும்பாலும் ஒலிபரப்புகிறது. செய்திகளும், சட்டமன்றங்களின் தகவல்களும் கூடியவரையில் பட்சபாதமின்றியே தயாரிக்கப்படுகின்றன.

ஆதி முதல் இன்றுவரையில் பொதுக்கூட்டங்கள் முக்கியப் பிரசார சாதனங்களாக இருந்துவருகின்றன. பத்திரிகை, வானொலி, டெலிவிஷன்களால் அவற்றின் முக்கியத்துவம் குறையவில்லை. முக்கியமாகத் தேர்தல் காலங்களில் வாக்காளர்கள் அபேட்சகர்களை நேரில் கண்டு அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க விரும்புவது மனித சுபாவமே. பாரதத்தில் மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்ததிலிருந்து கடற்கரைகளிலும், மைதானங்களிலுமே இலட்சக்கணக்கான மக்கள் தரையில் உட்கார்ந்து பொதுக்கூட்டம் நடத்துவது வழக்கமாகி

விட்டது. பிரிட்டன், அமெரிக்காவில் பெரும்பாலும் நாற்காலிகள் போட்ட கூடங்களிலேயே பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன. பத்திரிகை, வானொலிபோன்ற துறைகளில் உள்ள குறைகளை இத் திறந்தவெளிக் கூட்டங்கள் ஓரளவு ஈடுசெய்கின்றன. ஒலி பெருக்கிச் சாதனங்களைக்கொண்டு இலட்சக்கணக்கான மக்கள் பிரசாரகர்களின் பிரசங்கங்களை எளிதில் கேட்க முடிகின்றது.

# 30. ஒற்றுமை வேற்றுமைகள்

பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பாரதம் இம் மூன்றின் அரசியல்களின் முக்கிய அம்சங்கள் முன் அத்தியாயங்களில் ஆராயப்பட்டன. இந்தக் கடைசி அத்தியாயத்தில் அவற்றின் முக்கிய ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் சுருக்கி ஒப்பிடுவது சரியான முடிவாகும்.

இம் மூன்றிலும் ஜாதி, மத, நிறபேதமின்றி எல்லா வயது வந்தவர்களுக்கும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாக்காளர்களால் குறிப்பிட்ட காலவரையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் அரசாங்கத்தின் முக்கிய அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ், இந்திய பார்லிமெண்டுகளுக்கு ஆயுட்காலம் 5 வருஷம். அமெரிக்கக் காங்கிரசுக்கு 4 ஆண்டுகள். ஆனால், முன்னிரண்டு சட்டமன்றங்களும் 5 வருஷங்களுக்கு முன்னரே கலைக்கப்படலாம். இக் காரணத்தால் எப்பொழுது பொதுத் தேர்தல்கள் நடைபெறுமென்று நிச்சயமாகக் கூற முடியாது. ஐந்தாண்டுகளுக்குள் ஒருமுறையாவது நடைபெறவேண்டுமென்று மட்டுமே சொல்லலாம். யுத்தம்போன்ற நெருக்கடி காலங்களில் இக் காலவரையும் தள்ளிப்போடக்கூடும். அமெரிக்காவிலோ 4 வருஷங்கள் உறுதியாகப் பதவி வகித்து அதன் இறுதியில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். பொதுத் தேர்தல்கள் 4 வருஷத்திற்கு ஒரு முறை குறிப்பிட்ட தேதியில் நடைபெறும்.

மூன்று நாடுகளிலும் மக்களுக்குத் தங்கள் எண்ணங்களைப் பேச்சாலும் எழுத்தாலும் வெளியிடவும், ஒரு கொள்கையுடையவர்கள் கட்சி சேர்ந்து கூடிப் பிரசாரம் செய்து தேர்தலில் பங்கெடுத்துக் கொள்ளவும் சுதந்தரமுண்டு. பிரிட்டன், அமெரிக்காவில் இரண்டு பெரும் அரசியல் கட்சிகள் மாறிமாறிப் பதவி வகித்து வருகின்றன. எவ்வளவு காலம் ஒரு கட்சி பதவி வகிக்குமென்பது வாக்காளர்களின் மனப்போக்கைப் பொறுத்திருக்கிறது. ஒரே கட்சி 20 ஆண்டுகள்

தொடர்ந்து ஆட்சி புரியலாம். அல்லது அமெரிக்காவில் 4 வருஷங்களுக்குப் பின்னரும் பிரிட்டனில் பொதுத் தேர்தலுக்கு ஒன்றிரண்டாண்டுகளுக்குப் பின்னரும் ஆளும் கட்சி பதவியிழந்து மற்றக் கட்சி பதவி ஏற்கக்கூடும். பாரதத்தில் காங்கிரஸ் ஒன்றே பெரிய கட்சியாகவும் மற்றக் கட்சிகள் வலுவில்லாமலும் நாடு முழுதும் செல்வாக்கில்லாமலும் இருக்கின்றன. அடுத்த தேர்தலில் சில இராச்சியங்களில் காங்கிரசுக்குப் பெரும்பான்மையில்லாவிடில் கட்சிக் கூட்டுகள்மூலம் அரசாங்கம் நடைபெறவேண்டும். இரண்டு பெரும் கட்சிகள் ஏறக்குறைய சம செல்வாக்குடன் இயங்கும் வரையில் இந்திய அரசியல் அவ்வப்போது நிலையற்றுக் குழப்பமுள்ளதாகவிருக்கும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பாரதமும் ஐக்கிய அரசாங்கங்கள். அதாவது முடிவான அரசியல் அதிகாரங்கள் மத்திய இராச்சிய அரசாங்கங்களுக்கு அரசியல் திட்டத்தில் எழுத்துமூலம் வரையறுத்து வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த வரம்புகளைப் பாதுகாக்கச் சுதந்தரமான சுப்ரீம் கோர்ட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டன் தனி அரசு. அதாவது அதன் பார்லிமென்டும் நிர்வாகமும் எவ்வித வரம்புகளுமின்றி சட்டமியற்றவும் நிர்வாகத்தை நடத்தவும் அதிகாரமுள்ளன. பிரிட்டனில் கோர்ட்டுகளும் பார்லிமென்டுக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன. எந்தக் கோர்ட்டையும் சாதாரண சட்டத்தால் மாற்றவும் நீக்கிவிடவும் பார்லிமென்டுக்கு அதிகாரமுண்டு.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரசிடென்டும், அதன் இராச்சியங்களின் கவர்னர்களும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர், அவர்கள் நிர்வாகத்தின் தலைவர்கள். பிரிட்டனிலும், பாரதத்திலும் நிர்வாகம் மந்திரிசபையினிடமிருக்கிறது. பரம்பரையான இராஜ வம்சத்தில் வருபவர் பிரிட்டனின் அரசர் என்ற பட்டத்துடன் தலைவர். பாரதத்தின் ஜனாதிபதி மத்திய இராச்சிய சட்டசபைகளின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பிரிட்டிஷ் அரசரும், இந்திய ஜனாதிபதியும் பெரும்பாலும் அலங்கார புருஷர்கள். எந்த முக்கிய அதிகாரமும் அவர்களிடமில்லை.

பிரிட்டன், பாரதங்களில் பொறுப்பாட்சி நிர்வாகம். அமெரிக்காவில் பிரசிடென்ட் ஆட்சி நிர்வாகம். பொறுப்பாட்சியில் ஒரு பிரதம மந்திரியின் தலைமையில் மந்திரிசபை சட்டமன்ற அங்கத்தினர்களைக் கொண்டு பெரும்பான்மைக் கட்சியாலோ, கட்சிகளின் கூட்டாலோ அமைக்கப்படுகிறது. மக்கள் சபையில் நம்பிக்கை

யில்லாத் தீர்மானம் நிறைவேறினுல் அல்லது முக்கியத் திட்டங் களோ, வரி விதிக்கும் யோசனைகளோ நிராகரிக்கப்பட்டால் மந்திரிசபை இராஜிஞமா செய்யவேண்டும். அப்பொழுது சட்ட சபை கலைக்கப்படலாம். அல்லது வேறு மந்திரிசபை அமைக்கப் படலாம். அமெரிக்காவில் 4 வருஷங்களுக்குப் பிரசிடென்ட் தனக்கு இஷ்டமுள்ள நிர்வாகிகளைக்கொண்டு ஆட்சிபுரியலாம். ஆனுல், காங்கிரஸ் செய்யும் சட்டங்களுக்கும், தீர்மானிக்கும் வரவு செலவுத் திட்டங்களுக்கும் கட்டுப்படவேண்டும்.

அமெரிக்காவில் இராச்சியங்கள் மத்திய அரசாங்கத்தைப் போலவே சுதந்தரமுள்ளவை. வரி விகிதங்களைத் தவிர சட்டம் செய்யும் அதிகாரங்கள் மத்திய காங்கிரசுக்கும் இராச்சிய சட்ட மன்றங்களுக்கும் முற்றிலும் பங்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. இராச்சியம் தனது உத்தியோகஸ்தர்களைத் தன்னிஷ்டப்படி நியமிக் கிறது. ஆனுல், சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புகளின்படி காங்கிரசின் அதிகாரம் அதிகரித்தும், இராச்சிய சட்டமன்றங்களின் அதிகாரம் குறைந்தும் வருகிறது. சட்டபூர்வமான நிர்ப்பந்தமில்லாவிடிலும் கல்வி, சமூகப் பாதுகாப்புபோன்ற சேவைகளுக்கு ஐக்கிய அரசாங்கம் ஏராளமான பொருளுதவி செய்கின்றது.

பாரதத்தில் இராச்சியத்திற்கு ஓரளவு சுதந்திரமளிக்கப்பட்ட போதிலும் பல முறைகளில் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் சுமத்தப்பட்டிருக்கிறது. இராச்சியத்திற்கு நிலையான மந்திரிசபை ஏற்படக்கூடாமல் சட்டசபையில் எல்லாக் கட்சிகளும் சிறுபான்மை அங்கத்தினர்களைக்கொண்டிருப்பின், மத்திய அரசாங்கம் இராஷ் டிரபதியின் பேரில் இராச்சிய அரசியல் அமைப்பைத் தாற்காலிகமாக ஒதுக்கிவைத்துவிட்டு இராச்சிய அரசாங்கத்தை மத்திய அரசாங்க அதிகாரிகளால் நடத்தலாம். மத்திய இராச்சிய அரசாங்கங் களுக்குப் பொதுவான இனங்களில் பார்லிமென்டின் சட்டத்திற்குப் பிரதான்யமளிக்கப்பட்டிருக்கிறது. இராச்சியங்களின் வருமானம் பெரிதும் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்திருக்கிறது. இராச்சி யத்தின் முக்கிய நிர்வாக அதிகாரிகளில் பெரும்பாலோர் அகில இந்திய சேவைகளைச் சேர்ந்தவர்கள். அவர்களை நியமிப்பதும் தண்டிப்பதும் மத்திய அரசாங்கத்தின் பொறுப்புகளாவன.

இதுகாறும் ஒரே அரசியல் கட்சி மத்திய இராச்சிய அரசாங் கங்களில் ஆட்சிபுரிந்துவந்திருப்பதால் அவற்றிற்குள்ளும், அவற் றிற்கும் மத்திய அரசாங்கத்திற்குமுள்ள தகராறுகள் கட்சித் தலைவர்கள்மூலம் தீர்க்கப்பட்டன. பல இராச்சியங்களில் ஆளும் கட்சிகள் மத்திய அரசாங்கத்தை நிர்வகிக்கும் கட்சியிலிருந்து

மாறுபட்டால் அவ்விதத் தகராறுகள் உத்தம நீதிமன்றத்தின்மூலம் தீர்க்கவேண்டியிருக்கும்.

அரசியல் அமைப்பைத் திருத்துவதிலும் அமெரிக்காவுக்கும் பாரதத்திற்கும் பெரும் வேற்றுமையிருக்கிறது. அமெரிக்க அரசியல் திட்டத்தை மாற்றுவதற்கு காங்கிரசின் இரு சபைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையும், இராச்சியங்களில் நாலில் மூன்று பங்கின் அங்கீகாரமும் வேண்டும். பாரதத்திலோ, பார்லிமெண்டின் இரண்டு சபைகளின் மூன்றில் இரண்டு பங்கால் பல விதிகள் திருத்தப்படலாம். சில விதிகளுக்குமட்டும் பாதி இராச்சியங்கள் அங்கீகரிக்கவேண்டும்.

நீதி பரிபாலனத்தில் இந்திய ஏற்பாடு மற்ற இரு அரசியல்களிலுள்ள ஏற்பாடுகளைவிட எளிதும் நேர்மையானதுமாகும். அமெரிக்காவில் ஐக்கிய அரசாங்கக் கோர்ட்டுகளும், இராச்சியக் கோர்ட்டுகளும் தனித்தனியாகப் பணி செய்கின்றன. இதனால், பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. பிரிட்டனில் எல்லாக் கோர்ட்டுகளும் ஒரே அரசாங்க அதிகாரத்திற்குட்பட்டிருந்தபோதிலும் சம்பிரதாயத்தை அனுசரித்துப் பலவிதக் கோர்ட்டுகள் இருக்கின்றன. குற்ற விசாரணைகளிலும், சில சிவில் வழக்குகளிலும் ஜூரி முறை அமெரிக்கா பிரிட்டன்களில் அமலில் இருக்கின்றன. இந்தியாவில் மூன்று நகரங்களில் தவிர அது இல்லை.

ஸ்தலஸ்தாபனங்கள் பிரிட்டிஷ், அமெரிக்க அரசியல்களில் சுதந்தரமும் வலுவும் பெற்றிருக்கின்றன. இந் நாட்டில் நகராட்சிகள் ஓரளவு சுதந்தரம் பெற்றிருப்பினும் அவற்றின்மீது இராச்சிய அரசாங்கத்தின் ஆதிக்கம் அதிகம். பஞ்சாயத்து இராச்சிய ஸ்தாபனங்கள் சமீபத்தில் அமைக்கப்பட்டு, பலஹீனமாக இருக்கின்றன.

பாரத அரசியலில் மற்ற இரு அரசியல்களிலுமில்லாத சில தனிச் சிறப்புள்ள அம்சங்களிருக்கின்றன. எல்லாத் தேர்தல்களையும் பட்சபாதமின்றி நடத்த, தேர்தல் கமிஷன் அமைக்கப்பட்டிருப்பது ஒரு புது ஏற்பாடு; மத்திய, இராச்சிய சேவகர்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் கமிஷன்கள் அரசியல் திட்டத்தால் ஏற்படுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. சமூகப் பொருளாதாரக் குறிக்கோள்களைச் சுட்டிக் காட்டி ஓர் அத்தியாயம் அரசியல் திட்டத்தில் புகுத்தப்பட்டிருப்பதும் சிறப்பு அம்சமே.

பிரிட்டிஷ் சாம்ராச்சியம் விலகியபோதிலும், அதனால் இயற்றப்பட்ட 1935 சீர்திருத்தச் சட்டத்திலிருந்து பல பாகங்கள் இந்திய

அரசியல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதில் மத்திய அரசாங்கத்திற்கு இராச்சியங்கள்மீது சாம்ராச்சிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பது முக்கியமானது. இதனால், இந்திய அரசியலை உண்மையான ஐக்கிய அரசியல் அன்று; அரைகுறையானது என்று சிலர் கூறுகின்றனர்.

அதிகாரவர்க்கமும் சிறிதும் மாற்றமின்றி பிரிட்டிஷ் சாம்ராச்சியத்திடமிருந்து ஏற்றுக்கொண்டதுமல்லாமல், தமது சேவகர்களை விலக்கவோ, தண்டிக்கவோ மத்திய இராச்சிய அரசாங்கங்கள் நீண்ட விசாரணை நடத்தவேண்டுமென்று, அரசியல் திட்டத்தில் விதி புகுத்தப்பட்டிருக்கிறது. சுதந்தர இந்தியா தனது பொருளாதாரத்தை விரைவில் வளர்க்கவேண்டுமென்றும், அதில் பல துறைகளில் மத்திய இராச்சிய அரசாங்கங்கள் நேரில் பங்கெடுத்துக்கொள்ளவும், இதர துறைகளில் மேற்பார்வையிடவேண்டுமென்றும் தீர்மானித்து சேவகர்களைப் பன்மடங்கு அதிகரித்தும், புதிய அதிகாரவர்க்கங்களை ஏற்படுத்தியும் அரசாங்கப் பணிகளைப் பெருக்கியபொழுது, தமது சேவகர்களிடமிருந்து திறமையான ஒழுங்கான சேவைகளைப் பெறமுடியவில்லை. நாட்டின் நலத்தைக் காட்டிலும் அரசாங்க சேவகர்களின் உரிமைகள் முக்கியமானதென்று பிரிட்டிஷ் சாம்ராச்சியம் எண்ணியது சகஜமே. அதை நமது அரசியல் திட்டத்தில் விதியாகச் செய்தது தவறு என்று தோன்றுகிறது. இம் மாதிரி நிபந்தனைகள் பிரிட்டிஷ், அமெரிக்க அரசியல்களில் இல்லை.

அரசியல் ஏற்பாடுகளிலுள்ள வேற்றுமைகள் ஒருபுறமிருக்க, இந் நாட்டில் ஒரு கட்சி பிராதான்யத்தாலும், சம்பிரதாயங்கள் சரிவர உறுதிப்படாததாலும், ஜனநாயகம் பூரணமாக ஸ்தாபிக்கப் பட்டுவிட்டதாகக் கருதமுடியாது. அரசியல் அறிஞர்கள் மக்களுக்கு அறிவு புகட்டி, அரசியல் திட்டத்தில் அளிக்கப்பட்ட குடியரசின் உரிமைகளைப் பாரத மக்கள் முற்றிலும் அனுபவித்து சுகப்படுவதற்கு முயற்சி செய்யவேண்டும்.

# கலைச் சொற்கள்

(ஆங்கிலம்—தமிழ்)

A

| | | |
|---|---|---|
| Adjournment | — | ஒத்திவைப்பு |
| Adult franchise | — | வயதுவந்தவருக்கு வாக்குரிமை |
| Appointment | — | நியமனம் |
| Air force | — | விமானப் படை |
| Army | — | சைனியம் |
| Article | — | விதி |
| Autocracy | — | ஏதேச்சாதிகாரம் |

B

| | | |
|---|---|---|
| Bill | — | மசோதா |
| Broadcasting | — | வானொலிப் பரப்பு |
| Budget | — | வரவு செலவு |
| Bureau | — | செயலகம் |
| Bureaucracy | — | அதிகார வர்க்கம் |
| Business Advisory Committee | — | அலுவல் பட்டியல் ஆலோசனைக் கமிட்டி |
| Bye election | — | இடைத் தேர்தல் |

C

| | | |
|---|---|---|
| Cabinet | — | மந்திரி சபை |
| Capital | — | முதல் |
| Century | — | நூற்றாண்டு |
| Citizen | — | பிரஜை |
| Clause | — | பிரிவு |
| College | — | கல்லூரி |
| Communism | — | பொதுவுடைமைக் கொள்கை |
| Confederation | — | கூட்டு அரசியல் |

| | | |
|---|---|---|
| Constituent Assembly | — | அரசியல் நிர்ணய சபை |
| Constitution | — | அரசியல் அமைப்பு |
| Constituency | — | தொகுதி |
| Conveyance | — | வாகனம் |
| Criminal Law | — | குற்றச்சட்டம் |
| Criminal Procedure Code | — | குற்ற இயல் நிர்வாக முறைத் தொகுதி |
| Currency | — | நாணயச் செலாவணி |
| Customs | — | சுங்கவரிகள் |

D

| | | |
|---|---|---|
| Defence | — | பாதுகாப்பு |
| Democracy | — | மக்கள் ஆட்சி, ஜனநாயகம் |
| Department | — | இலாகா |
| Deputy Minister | — | உதவி மந்திரி |
| Dictatorship | — | சர்வாதிகாரம் |
| Directive principle | — | வழிகாட்டிக் கொள்கை |
| Dissolution | — | கலைத்தல் |
| Distribution of powers | — | அதிகாரப் பிரிவினை |

E

| | | |
|---|---|---|
| Economy | — | பொருளாதாரம் |
| Empire | — | சாம்ராச்சியம் |
| Equality | — | சமத்துவம் |
| Estimates Committee | — | மதிப்பீட்டுக் கமிட்டி |
| Excise duty | — | உற்பத்தி வரி |
| Executive | — | நிர்வாகம் |
| Exports | — | ஏற்றுமதி |

F

| | | |
|---|---|---|
| Factory | — | தொழிற்சாலை |
| Federation | — | ஐக்கிய அரசியல் |
| Finance Commission | — | நிதிக் கமிஷன் |
| Fundamental rights | — | அடிப்படை உரிமைகள் |
| Franchise | — | வாக்குரிமை |
| Financial affiairs | — | பண விவகாரங்கள் |

G

| | | |
|---|---|---|
| General election | — | பொதுத் தேர்தல் |
| Grade | — | வரிசை |
| Grant | — | மானியம் |
| Government | — | அரசாங்கம் |

H

| | | |
|---|---|---|
| Hereditary | — | வம்ச பரம்பரையான |
| High Court | — | உயர் நீதிமன்றம் |
| House of Commons | — | மக்கள் சபை |
| House of Lords | — | பிரபுக்கள் சபை |

House of Representatives — பிரதிநிதிகள் சபை
Health — சுகாதாரம்

I

Imports — இறக்குமதி
Income tax — வருமான வரி
Impeachment — பெருங் குற்றச்சாட்டு
Inequality — ஏற்றத்தாழ்வு
Indian States — சுதேச சமஸ்தானம்
Item — இனம்

J

Judiciary — நீதிபதி வர்க்கம்
Judicial system — நீதி பரிபாலன முறை

L

Law — சட்டம்
Legislative — சட்டமன்றம்
Local bodies — ஸ்தல ஸ்தாபனங்கள்
Lord — பிரபு

M

Machine — இயந்திரம்
Machine age — இயந்திர யுகம்
Magna Carta — மாபெரும் உறுதிமொழி
Minister — மந்திரி
Minister of State — துணைமந்திரி

N

Non-cooperation — ஒத்துழையாமை
Nuclear arms — அணுசக்தி ஆயுதங்கள்
Navy — கப்பற்படை

O

Objective — லக்ஷியம்
Observer — பார்வையாளர்

P

Paper currency — காகித நாணயம்
Party — கட்சி
Petitions Committee — விண்ணப்பக் கமிட்டி
Policy — நீதி முறை
Political party — அரசியல் கட்சி
President — ஜனாதிபதி
Presidential government — தலைவராட்சி (பிரசிடென்ட் ஆட்சி)
Primary education — ஆரம்பக் கல்வி
Public Accounts Committee — பொதுக் கணக்குப் பரிசோதனைக் கமிட்டி

Political system — அரசியல் முறை
Penal Code — குற்றவியல் தொகுதி

R

Radio — ஆகாசவாணி
Rate — விகிதம்
Refugee — சரணார்த்தி
Religion — மதம்
Representative — பிரதிநிதி
Registration — ராஜிநாமா
Responsible Government — பொறுப்பாட்சி
Republic — குடியரசு
Revolution — புரட்சி

S

Sales tax — விற்பனை வரி
Science — விஞ்ஞானம்
Senate — செனேட்
Single transferable vote — மாற்றக்கூடிய தனிவாக்குமுறை
Slave — அடிமை
Slavery — அடிமை முறை
Social services — சமூக சேவைகள்
Social science — சமூக இயல்
Sovereignty — அரசுரிமை
Speaker — மக்கள் சபைத் தலைவர்
Standing Committee — நிலையான கமிட்டி
State — இராச்சியம்
Sub-clause — உட்பிரிவு
Sub-Committee — கிளைக்கமிட்டி
Summoning — கூட்டுதல்
Supreme Court — உத்தம நீதிமன்றம்
Spoils system — கொள்ளை முறை

T

Tax — வரி
Technology — தொழில்நுட்பம்
Television — வானொலிப் படம்
Tradition — சம்பிரதாயம்

U

Union — ஐக்கியம்
Union territory — ஐக்கியப் பிரதேசம்
United States of America — அமெரிக்க ஐக்கிய நாடுகள்
University — சர்வகலாசாலை

V

Vice-President — உபஜனாதிபதி
Vote — வாக்கு
Voter — வாக்காளர்

# பொருள் குறிப்பு அகராதி


அடிமை, 36
அதிகாரப் பிரிவினை :
  அமெரிக்க, 148-154
  இந்திய, 154-158
அரசாங்க ஊழிய வகுப்புகள் :
  பிரிட்டிஷ், 119-121
  அமெரிக்கா, 122, 123
  இந்தியா, 123, 124
அரசியல் கட்சிகள் :
  பிரிட்டிஷ், 213, 214
  அமெரிக்க, 214-217
  இந்தியா, 217, 218
அரசியல் பிரசாரம், 228-234
அலெக்சாண்டர், 23

ஆசார்ய கிருபலானி, 218
ஆயூப்கான், 28

இரட்டைத் தொகுதி, 228
இர்வின் பிரபு, 22
இராச்சியங்கள், 71-73
இலாகாக்கள், 111

உப்பு சத்தியாக்கிரகம், 21
உப தலைவர்கள், 75
உலக ஐக்கியநாட்டு சங்கம், 29

ஐக்கிய அரசாங்கம், 144-147
ஐக்கிய பிரதேசங்கள், 169, 170

ஒத்திப்போடுதல், 99

கம்மியூனிஸ்ட் கட்சி, 219
கமிட்டிகள் :
  பிரிட்டிஷ், 94, 95
  அமெரிக்க, 92, 93
  இந்திய, 95, 96
கல்வி :
  பிரிட்டிஷ், 192-194
  அமெரிக்க, 194
  இந்திய, 195-197

கவர்னர் :
  அமெரிக்க, 167
  இந்திய, 168
கன்செர்வடிவ் கட்சி, 213
காங்கிரஸ் லோகசபை, 21, 22, 217, 219, 224
காந்தியடிகள், 21, 22, 24
காபினெட், 14
காமி, 16
காஷ்மீர், 26
கிராம்வெல், 12
கிழக்கு இந்திய கம்பெனி, 19
குற்ற இயல், 111-113
கூட்டாட்சி, 144
கே ள்விகள், 97, 98
கோ ஸிஜின், 28

சட்டசபை நியமங்கள், 76-79
சர்ச்சில், 22
சமூகப் பாதுகாப்பு :
  பிரிட்டிஷ், 204-207
  அமெரிக்க, 208-210
  இந்திய, 217-218
சமூகப் பிரதிநிதித்துவம், 20, 217
சார்லஸ் மன்னர், 12
சிவில் நியாயம், 133-135
சீனு, 28
சுகாதாரம் :
  பிரிட்டிஷ், 198-200
  அமெரிக்க, 200-202
  இந்தியா, 202-204
சுதந்திராக் கட்சி, 219
செனேட் சபை, 70, 71
செம்ஸ்போர்டு பிரபு, 20, 217
சோஷலிஸ்ட் கட்சி, 219

டெமொகிராடிக் கட்சி, 214
டெலிவிஷன், 231

தனித் தொகுதி, 228
திராவிட முன்னேற்றக் கழகம், 219
திலகர், 20, 217
தேர்தல் :
பிரிட்டிஷ், 223, 224
அமெரிக்கா, 224, 225
இந்தியா, 225-227
தேசிய சோஷலிசம், 8
தொழிற் கட்சி, 213
நியாயாலயங்கள் :
பிரிட்டிஷ், 136-137
அமெரிக்க, 138-140
இந்திய, 140-142
நீல கவச திட்டம், 201
நீலச்சிலுவைத் திட்டம், 201
பத்திரிகை, 218-221
படேல் (சர்தார்), 24
பாகிஸ்தான், 23, 24
பாதுகாப்பு சபை, 28
பார்லிமெண்ட், 13, 31, 33
பிரசிடெண்ட், 56-59
பிரசிடெண்ட் ஆட்சி, 110-112
பிரிட்டிஷ் அரச வம்சம், 54, 55
பிரபுக்கள் சபை, 13, 69, 70
பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, 219
பெத்விக் லாரென்ஸ், 23
பேரறிவிப்பு, 17
பொதுக்கூட்டங்கள், 233, 234
பொருளாதாரம் :
பிரிட்டிஷ், 181-183
அமெரிக்க, 183-185
இந்திய, 186-190
பொறுப்பாட்சி :
பிரிட்டிஷ், 104-107
இந்திய, 107-109
மக்கள் சபை :
பிரிட்டிஷ், 65, 66
அமெரிக்க, 66-68
இந்திய, 68-69
மக்கள்சபைத் தலைவர் :
பிரிட்டிஷ், 74
அமெரிக்க, 75
இந்திய, 74
மாக்னுகார்டா, 11
மாண்டேகு, 20, 217
மூல உரிமைகள், 35
முஸ்லிம் லீக், 23
மேல்சபைத் தலைவர், 75
ரிபப்ளிகன் கட்சி, 215
லால்பகதூர் சாஸ்திரி, 28
லிபரல் கட்சி, 213
லோகசபை, 32
வர்ணாசிரமதர்மம், 36
வட்டமேஜை மகாநாடு, 21
வரிகள் :
பிரிட்டிஷ், 89
அமெரிக்க, 90
இந்திய, 90, 91
வரிப் பங்கீடு :
அமெரிக்க, 159, 160
இந்திய, 160-165
வானொலி, 231-234
வாஷிங்டன், 214
விக் கட்சி, 213
ஸ்ரீநகர், 27
ஸ்டாப்போர்டு கிரிப்ஸ், 23
ஜனசங்கக் கட்சி, 219
ஜவஹர்லால் நேரு, 24
ஜனாதிபதி, 32
பிரிட்டிஷ், 52
அமெரிக்கா, 53
இந்தியா, 54, 60-63
ஜான் மன்னர், 11
ஜின்னா, 23
ஜெபர்ஸன், 214
ஜெயப்பிரகாச நாராயணன், 218
ஜேம்ஸ் மன்னர், 12
ஷேக் அப்துல்லா, 27
ஹாமில்டன், 214

# தமிழ் வெளியீட்டுக் கழகம்

## சென்னை-9

### 1966 வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

| | | | |
|---|---|---|---|
| *1. | பொருளாதாரம்—II | சி. வேலாயுதம் | 9—00 |
| 2. | புதுமைப் பொருளாதாரக் கூறுகள் | திருமதி ஆர். தாமரஜாட்சி | 12—00 |
| 3. | பொருளாதாரம் ஓர் அறிமுகம்—I | தி. சி. மோகன் | 12—00 |
| 4. | ,, —II | எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன் | 10—75 |
| 5. | பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு | க. முத்தையன் | 7—00 |
| *6. | பணவியலும் பாங்கியலும்–II | சி. வேலாயுதம் | 11—50 |
| 7. | நவீன பாங்கு இயல் | க. வெற்றிவேல் | 7—50 |
| *8. | இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும் | பி. வி. ஸ்ரீநிவாசன் | 5—50 |
| *9. | அரசாங்க நிதி இயல் | அர. சேஷாசலம் | 4—75 |
| 10. | இந்தியப் பொருளியல்—I | எம். பாலசுப்பிரமணியன் | 10—00 |
| 11. | ,, —II | எம். லூர்துநாதன் | 4—25 |
| 12. | நமது பொருளாதாரப் பிரச்சினை—I | சி. சுந்தரராஜன் | 10—75 |
| 13. | ,, —II | எஸ். குழந்தைநாதன் | 10—50 |
| 14. | இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு—I | கீ. சீ. இராமசாமி | 6—00 |
| 15. | ,, —II | ,, | 6—00 |
| 16. | அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி | தி. சி. மோகன் | 5—50 |

| | | | |
|---|---|---|---|
| 17. | அமெரிக்கப் பொருளாதார வரலாறு-I | மு. க. சுப்பிரமணியம் | 11—00 |
| 18. | ,, II | பி. வி. சீனிவாசன் | 6—00 |
| 19. | ,, III | ,, | 6—50 |
| 20. | அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்—I | மா. குமாரசாமி | 10—00 |
| 21. | ,, II | அர. சேஷாசலம் | 9—50 |
| 22. | இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி—I | தே. வேலப்பன் | 10—00 |
| 23. | ,, II | ஜி. சிதம்பரம் | 8—00 |
| 24. | பணம்—சிறு விளக்கம்... | கோ. இராதாகிருஷ்ணன் | 10—00 |
| *25. | வணிக இயலின் தத்துவங்கள் | கு. ஆளுடைய பிள்ளை | 9—50 |
| 26. | பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி | கு. ரா. கறுப்பண்ணன் | 11—00 |
| 27. | பென்ஹாம் பொருளாதாரம்-I | ஏ. குழந்தை | 11—00 |
| 28. | ,, II | எஸ். குழந்தைநாதன் | 7—00 |
| *29. | வரவு செலவுத் திட்டம் | ஆர். ரங்காச்சாரி | 6—00 |

வரலாறு

| | | | |
|---|---|---|---|
| *30. | பிரிட்டன் வரலாறு—I | கி. ர. அனுமந்தன் | 10—00 |
| *31. | ,, II | ,, | 9—75 |
| *32. | ஐரோப்பிய வரலாறு—I | டி. வி. சொக்கப்பா | 4—50 |
| 33. | ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றுண்டு காலச் சரித்திரம் | வை. விருத்தகிரீசன் | 15—00 |
| 34. | இங்கிலாந்து வரலாறு...I | இரா. அண்ணமலை | 13—00 |
| 35. | ,, II | பா. மாணிக்கவேலு | 13—00 |
| 36. | ,, III | என். ஜே. ராஜகோபால் | 8—00 |
| 37. | ,, IV | ,, | 8—00 |

* மூலநூல் (Original Book)

வரலாறு—தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| 38. | இங்கிலாந்தின் வரலாறு—I ... | க. த. திருநாவுக்கரசு | 15—00 |
| 39. | ,, II ... | எம். எக்ஸ். மிராண்டா | 8—00 |
| 40. | ,, III ... | ,, | 5—00 |
| 41. | இந்தியாவின் சிறப்பு வரலாறு—I ... | தி. வெ. குப்புசாமி | 7—50 |
| 42. | ,, II ... | ஏ. உஸ்மான் ஷெரீப் | 9—00 |
| 43. | ,, III ... | அ. பாண்டுரங்கன் | 11—00 |
| 44. | கிரேக்க நாட்டு வரலாறு-I .. | சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன் | 7—50 |
| 45. | ,, II ... | ,, | 7—00 |
| 46. | ,, III ... | பி. இராமானுஜம் தேவதாஸ் | 7 75 |

அரசியல்

| | | | |
|---|---|---|---|
| *47. | இந்திய அரசியலமைப்பு ... | வீ. கண்ணையா | 4—75 |
| 48. | அரசியலுக்கு ஓர் அறிமுகம் ... | டி. செல்லப்பா | 8—50 |
| 49. | தற்கால அரசியல் அமைப்புகள் ... | மோ. வள்ளுவன் கிளாரன்சு | 8—50 |
| 50. | பன்னாட்டு அரசியல்—I ... | திருமதி நூர்ஜஹான் பாவா | 16—00 |
| 51. | பொதுத்துறை ஆட்சி இயல்—I ... | வீ. கண்ணையா | 9—00 |
| 52. | ,, II ... | அ. ஜெகதீசன் | 7—25 |
| 53. | பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்-I... | வீ. கண்ணையா | 7—50 |
| 54. | ,, II... | டி. செல்லப்பா | 7—50 |

உளவியல்

| | | | |
|---|---|---|---|
| 55. | குழந்தை உளவியல்—I ... | கி. ஏ. அப்புள்ளாச்சாரி | 8—00 |
| 56. | ,, II | ,, | 7—00 |

| | | | |
|---|---|---|---|
| 57. | உட்கவர் மனம் | சி. ந. வைத்தீஸ்வரன் | 7—00 |
| 58. | இளையோர் உளவியல்—I | தி. இரா. அரங்கராசன் | 12—00 |
| 59. | ,, —II | ,, | 9—00 |
| 60. | சமூக உளவியல் | என். வேதமணி மானுவேல் | 9—25 |
| 61. | பிறழ்நிலை உளவியல் | அ. பெசன்ட் கிரீப்பர் ராஜ் | 11—00 |
| 62. | பித்தரின் உள்ளம் | ,, | 3—00 |
| *63. | குமர உள்ளம் | டாக்டர் மு. அறம் | 6—25 |

தத்துவம்

| | | | |
|---|---|---|---|
| 64. | இந்து சமயத் தத்துவம் | ஞா. ராஜாபகதூர் | 5—50 |
| *65. | அறிவு ஆராய்ச்சி இயல் | ஆர் இராமானுஜாச்சாரி | 3—50 |
| *66. | மேலைநாட்டுத் தத்துவம் | ஆர். எஸ். தேசிகன் | 3—50 |
| 67. | அத்துவித தத்துவம் | கோ. மோ. காந்தி | 6—50 |
| 68. | ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர் | மோ. வள்ளுவன் கிளாரன்சு | 5—50 |
| 69. | இந்தியத் தத்துவம் | வ. அ. தேவசேனபதி, பா. நா. சண்முகசுந்தரம் | 3—50 |

அறவியல்

| | | | |
|---|---|---|---|
| 70. | அறவியல்—ஓர் அறிமுகம் | கோ. மோ. காந்தி | 8—50 |

அளவையியல்

| | | | |
|---|---|---|---|
| 71. | அளவை இயல்—தொடக்க நூல் | கி. ர. அப்புள்ளாச்சாரி | 2—50 |

*மூல நூல் (Original Book)

### மானிடவியல்

| | | | |
|---|---|---|---|
| *72. | மானிடவியல் | ம. சு. கோபாலகிருஷ்ணன் | 4—75 |
| 73. | பண்பாட்டுக் கோலங்கள் | கி. பூ. சுப்பிரமணியன் | 5—50 |
| 74. | இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை | எஸ். இலட்சுமி | 3—50 |

### சமூகவியல்

| | | | |
|---|---|---|---|
| 75. | சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் | ஜெ. நாராயணன் | 10—00 |

### புவியியல்

| | | | |
|---|---|---|---|
| 76. | ஆசியா—I | கொ. சேஷ. நரசிம்மன் | 9—50 |
| 77. | ,, II | ,, | 8—75 |
| 78. | ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல் | ஏ. எஸ். நாராயணன் | 8—50 |
| *79. | தென்கிழக்கு ஆசியா | ஜி. கிருஷ்ணமூர்த்தி | 8—50 |
| *80. | வட அமெரிக்கா | குமாரி இரா. அலமேலு | 8—25 |
| *81. | தென் அமெரிக்கா | எம். என். பத்மநாபன் | 9—00 |
| *82. | தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா | திருமதி எச். நியூமன் | 4—00 |
| *83. | ,, —ஆஃபிரிக்கா | எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர் | 3—25 |
| *84. | புவிப்புறவியல்—II | நா. அனந்தபத்மநாபன் | 6—00 |
| *85. | செய்முறைப் புவியியல் | சு. ஜெயச்சந்திரன் | 9—00 |
| *86. | மக்கட் பரப்பியல் | வி. எஸ். அனந்தபத்மநாபன் | 6—25 |
| *87. | சமுத்திரவியல் | கோ. இராமசாமி | 6—50 |
| 88. | காலநிலை இயல்—I | கொ. சேஷ. நரசிம்மன் | 10—00 |
| 89. | ,, II | ,, | 5—00 |

| | | | |
|---|---|---|---|
| 90. | வளியியலுக்கு ஓர் அறிமுகம் | கோ. இராமசாமி | 11—00 |
| *91. | புவி அமைப்பு இயல் | சி. விசுவநாதன் | 4—75 |

புள்ளியியல்

| | | | |
|---|---|---|---|
| *92. | புள்ளியியல்—அறிமுகம் | சு. வைத்தியநாதன் | 10—00 |
| 93. | புள்ளியியல் முறைகள்—I | கோ. சண்முகசுந்தரம் | 10—00 |
| 94 | ,, II | கே. ஆர். இராஜகோபாலன் | 14—00 |
| 95. | நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம் | தி. வி. லட்சுமிநரசிம்மன் | 6—50 |

உயர்கணிதம்

| | | | |
|---|---|---|---|
| *96. | ஆயத்தொலை வடிவகணிதம் | டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை | 12—50 |
| *97. | வகை நுண்கணிதம் | ,, | 8—00 |
| *98. | தொகை நுண்கணிதம் | தி. கோவிந்தராசன் | 9—00 |

விலங்கியல்

| | | | |
|---|---|---|---|
| *99. | விலங்கியல் | பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன் | 12—00 |

பௌதிகவியல்

| | | | |
|---|---|---|---|
| 100. | ஒளிநூல் | ச. சம்பத்து | 10—00 |

*மூலநூல் (Original Book)

**விஞ்ஞானம்**

| | | | |
|---|---|---|---|
| *101. | வானவெளி வெற்றி | டாக்டர் எம். ஏ. தங்கராஜ் | 6—00 |
| *102. | ரேடியோ | ,, பி. திருஞானசம்பந்தம் | 4—75 |
| *103. | எக்ஸ்—கதிர்கள் | பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம் | 4—50 |
| *104. | பாம்புகள் | பெ. மா. அண்ணாமலை | 3—50 |
| *105. | தாவரம்—வாழ்வும் வரலாறும் | டாக்டர் கு. சீனிவாசன் | 8—00 |
| *106. | கரும்பு | கு. பெரியசாமி | 4—00 |

**மருத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| *107. | நீரிழிவு-க்ஷயரோகம் | டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன் | 2—50 |
| 108. | மகப்பேறும் மாதர் நோயும் | டாக்டர் (குமாரி) மணிமேகலை | 8—25 |
| *109. | பாக்டீரியா | சு. சுந்தரம் | 2—50 |

**பொறியியல்**

| | | | |
|---|---|---|---|
| 110. | நீங்களே வீட்டைக் கட்டலாம் | கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம், ஆர். இராமசாமி, கே. வேணுகோபால் | 8—50 |

**சட்டம்**

| | | | |
|---|---|---|---|
| *111. | குற்றவியல் சட்டம் | எம். சண்முகசுப்பிரமணியம் | 10—00 |

**பொது நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| 112. | மகாத்மா காந்தி | சரஸ்வதி தங்கையன் | 3—25 |
| 113. | விவசாயப் புரட்சி | வி. கார்த்திகேயன் | 8—00 |
| 114. | சேமக் கை-நூல் | ஆர். சுப்பிரமணியம் | 2—50 |
| *115. | முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் | எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் | 9—00 |
| *116. | உணவும் ஊட்டமும் | தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார் | 4—50 |

*மூலநூல் (Original Book)

## தமிழ் வெளியீட்டுக் கழகப் புதிய வெளியீடுகள், 1967

### பொருளாதாரம்

பன்னாட்டுப் பொருளாதாரம்–I, II — பி. டி. எல்ஸ்வொர்த்
பொருளாதார ஆய்வு நூல்–I, II — எட்வர்ட் நெவின்
வளர்ச்சியுறாத நாடுகளின் அரசாங்க நிதியியல் — ஏ. ஆர். பிரெஸ்ட்
வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம்பற்றிய சிக்கல்கள் — ராக்னர் நர்க்ஸ்
1939 முதல் இந்தியாவில் பணவீக்க விலைப் போக்குகள் — பிரைட் சிங்
பொருளாதார வளர்ச்சிபற்றிய கட்டுரைகள் — வி. கே. ஆர். வி. ராவ்

### வரலாறு

ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு–I, II, III — வின்சென்ட் ஏ. ஸ்மித்
முகலாயப் பேரரசு–I, II — ஏ. எல். ஸ்ரீவத்ஸவா

### அரசியல்

இந்திய அரசியலமைப்புத் திட்டம் — எம். வி. பைலீ
இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி–I — எச். என். சின்ஹா
பன்னாட்டரசியல்–II — ஃபிரெடரிக் எல். ஷுமன்
மக்கள் ஆட்சி — கே. சந்தானம்
1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும் — எஸ். என். தார்
சமூக, அரசியல் கொள்கையின் அடிப்படைகள் — எர்னஸ்ட் பார்க்கர்

### தத்துவம்

மெய்ப்பொருளியல்–ஓர் அறிமுகம்–I — ஏ. ஜே. பாம்

### புவியியல்

சிஷோமின் வாணிகப் புவியியல்–I, II எல். டட்லி ஸ்டாம்ப்
பௌதிகப் புவியியலும் புவியமைப்பியலும் — எல். டட்லி ஸ்டாம்ப்

### தாவரவியல்

தாவரங்களின் வாழ்வியல் — எஸ். சுந்தரம்

### மருத்துவம்

புற்றுநோய் — ஆர். ஜே. ஸி. ஹாரிஸ்